புலவர்
கா. கோவிந்தன் M.A.

# குறுந்தொகைக் கோவை

இலக்கியப் புதையல்—2

# குறுந்தொகைக் கோவை

புலவர் கா. கோவிந்தன், எம். ஏ.
திருவத்திபுரம்.

நாதன் பதிப்பகம்
சென்னை-35.

முதற் பதிப்பு : செப்டம்பர் '59
புதிய பதிப்பு : ஜனவரி '75
முழுஉரிமையும் பதிப்பகத்தாருக்கே

விலை ரூபாய் 6 - 50

அச்சிட்டோர் :
மலர்விழி அச்சகம், சென்னை-14.

# பதிப்புரை

நிலவுலகின்கண் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து மூத்த குடியினராந் தமிழர்தம் தொன்மையினையும், பண்டையத் தமிழ் மக்களின் பண்பு, மறம், அறிவு, ஆண்மை, காதல்வாழ்வு, மனையறம், போரறம், ஆட்சிநெறி, கலைவாழ்வு, சான்றாண்மை, இலக்கிய மேம்பாடு முதலாம் நாகரிகச் சிறப்புக்களையும், வரலாற்றுச் சான்றுகளையும் இக்காலை நமக்குணர்த்தி நிற்பன மறைவுற்றனபோக எஞ்சி நமக்குக் கிடைத்துள்ள தமிழ்க் கருவூலமாம் கடைச் சங்ககால நூல்களேயாம்.

ஆயினும், இச்சங்க நூல்களை எல்லோரும் எளிதில் கற்றுணர்தலுடன், அவற்றுள் புதைந்து கிடக்கும் ஆழ்ந்த உண்மைகளையும் பொருள் நயங்களையும் காண்டல் அருமையேயாம். எனவே, இந்நூல்களுக்கு முன்னாளில் பழையவுரைகாரர்களால் எழுதப்பெற்றுள்ள பதவுரை பொழிப்புரை விளக்கவுரை முதலாம் உரைகளுடன் இக்காலத்திற்கேற்ற முறையிலும் தக்க ஆசிரியர்கள் வாயிலாக ஆராய்ச்சியுரைகளை வெளியிடுவது, அவற்றைப் படித்துப் பயனடைய விழையும் எல்லா வகையான மக்களுக்கும் உறுதுணையாகும் என்னும் கருத்துடன் இலக்கியப் புதையல் வரிசையினைக் கொணர முற்பட்டோம்.

அவ்விழுமிய நூல்களுள், ஆன்றோர்களால் தொகுக்கப் பெற்று, எட்டுத்தொகை என வழங்கும் தொகை நூல்களைக் குறிக்கும் "நற்றிணை நல்ல

குறுந்தொகை ஐங்குறுநூறு ஒத்த பதிற்றுப்பத்து, ஓங்கு பரிபாடல் கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்றித்திறத்த எட்டுத்தொகை" என்னும் வெண்பாவில் முதலில் வைத்துக் கூறப்பட்ட நற்றிணைக்கு எங்கள் பதிப்பாக புலவர் கா. கோவிந்தன் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் முன்னரே வெளிவந்துளது. அதனைத் தொடர்ந்து இப்போது 'நல்ல குறுந்தொகை' என்று சிறப்பித்துக் கூறப்பட்ட குறுந்தொகைப் பாடல்களைக் கோவையாக, அவர்களால் திறம்படத்தொகுத்து வெளியிடுகின்றோம். இந்நூலினையும் இன்னும் இலக்கியப் புதையல் வரிசையில் வெளிவரவிருக்கும் நூல்களையும், தமிழ்ப் பெருமக்கள் வரவேற்று எங்கள் பணிக்கு ஊக்கம் தருமாறு வேண்டுகின்றோம்.

லெ. இராமநாதன்
பதிப்பகத்தார்.

# முன்னுரை

தமிழ்மொழி இனிமை வாய்ந்தது. நயம்பட உரைக்கும் நாநலம் வாய்க்கப் பெற்றவர் தமிழர்; மக்கள் இன்சொல் கேட்க மகிழ்வரேயல்லது வன்சொல் கேட்க மகிழார் என்ற மக்களின் மனவுணர்வின் உண்மையை உணர்ந்தவர் தமிழர். ஆகவே, அவர்கள் என்றும், எங்கும், கேட்டாரைப் பிணிக்கும் வகையில் சொல்லாடித் தம்மை விரும்பும்வகையில் கேளாரையும் வயப்படுத்தி வெற்றி கண்டு வாழ்ந்தனர். இனிய சொற்கள் இருப்பவும், இன்னாத சொற்களை வழங்குதல், இனிய கனிகள் இருக்கவும், இன்னாத காய்களைத்தேடித் தின்பதற்கு நிகராம் என நினைந்து, இனிய சொற்களையே தேர்ந்தெடுத்து வழங்கினார்கள். நிற்க.

இனிக்கப் பேசி இறவாப் பெருநிலை வாழவேண்டும் என்று விரும்பிய தமிழர்க்கு, அவர் வழங்கும் மொழியும் பெருந்துணை புரிந்தது. இனியவே வழங்கிய அவர்களின் மொழியும், முழுக்க முழுக்க இனிக்கும் ஒலிகளினாலேயே உருவாகித் திகழ்ந்தது. ங், ஞ், ண், ம், ன், போலும் மெல்லொலிக் கலப்பால், தமிழ்மொழி உருவாகத் துணைபுரியும் சொற்களனைத்தும், இன்னொலியுடையவாகவே ஒலித்தன. அதனால், தமிழ் மொழி இனிமை வாய்ந்து திகழ்ந்தது. இனிமையால் இயன்ற இளமகளிர் என்ற பொருள்பட வந்த "தமிழ் தழீஇய சாயலவர்" என்ற தொடரில், தமிழ் எனும் சொல்லே இனிமை எனும் பொருள் உடையதாகும் எனக்கூறித் தமிழ் மொழிக்குப் பெருந்தொண்டு புரிந்து சென்றார், சிந்தாமணி எனும் பெருங்காப்பியப் பேராசிரியர் திருத்தக்க தேவர். "ஒண்தமிழ்" "தேமதுரத் தமிழோசை" "தமிழ் எனும் இனிய தீஞ்சொல்" என்றெல்லாம் பெயர் சூட்டிப், புலவர்கள், தமிழின் இனிமைப் பண்பைப் பாராட்டிப் பரவியுள்ளனர்.

இனிய சொற்களைத் தேர்ந்து, இனிமையாக வழங்க விரும்பிய தமிழர், நாம் கூற விரும்பிய ஒவ்வொரு கருத்தும்

இனிமையுடையதாதல் வேண்டும்; இனிக்கும் வகையில் உரைக்கப்பெறுதலும் வேண்டும் என்றும் விரும்பினார்கள்; அவ்வாறே உரைத்தும் வந்தார்கள். வானத்தில் விளங்கும் வெண்ணிலாத் தோற்றத்தை, 'நீலவான் ஆடைக்குள் உடலைப் போர்த்து, நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தை' என்று கூறும் சொல்லோவியத்தில் எத்துணை இனிமைப் பண்பு திகழ்கிறது காண்மின்.

செந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் இச்சிறப்புடையவாகும். செந்தமிழ் இலக்கியங்களின் சிறப்பு, அவ்விலக்கியச் செல்வங்களைத் தம் அழியாப் பெரு நிதியாகப் படைத்த தமிழ்மக்கள் பெற்றிருந்த பெருஞ்சிறப்பின் விளைவாகும். கரும்பு களர்நிலத்தில் விளையாது; இனிய கருத்தும், இனிக்கும் சொற்களும், தீயொழுக்கம் உடையார்பால் தோன்றுவது இயலாது; உள்ளத்தின் ஒளியே உரையில் புலப்படும்; ஆகவே, தூய உள்ளம் உடையாரிடத்துமட்டுமே தூயசொற்கள் தோன்றும்; அவர் செயலே தூய்மையில் தோய்ந்து திகழும். ஆகவே, இனியவே உரைக்கும் நாநலம் உடையார், இயல்பாலும் இனியரே ஆவர். தமிழ், இனிமைப் பண்பில் தலைசிறந்து விளங்குகிறது என்றால், அம்மொழிக்கு உரியோராகிய தமிழர் தலைசிறந்த நாகரிகம் வாய்க்கப் பெற்றவராதல் வேண்டும். இது உண்மையென்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் படப்பிடிப்பைக் காணும் வாய்ப்பினைப் பெற்றார், அனைவரும் உணர்வர்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த, நம் பழம் பெரும் மூதாதையரின் பண்பாட்டுப் பெருமையினை, இற்றைத் தமிழரும், பிறரும் அறிதல் வேண்டும் என்ற அவாவின் விளைவால் எழும் நூல்களுள் இஃது இரண்டாவதாகும். பழைய தமிழ் இலக்கியங்கள், அகப் பொருள் உணர்த்துவன புறப்பொருள் உணர்த்துவன என இருபெரும் பிரிவாகப் பிரிக்கப்படும்; ஒருவனும், ஒருத்தியும் கலந்து வாழும் அன்பு வாழ்க்கையில் அவர் மனத்திடை நிழலாடும் உயிரோட்டங்

களை உள்ளவாறே புறத்தாரும் உணரும் வகையில் உணர்த்துவன அகப்பாடல்கள்; அம்மக்களின் அகவாழ்விற்குத் துணையாய் அமைந்து, அதை வளப்படுத்த உதவும் பொருளீட்டும் வகை, போராற்றும்வகை, அரசியல் அறம் ஆகியவற்றை உணர்த்துவன புறப்பாடல்கள். இவ்வாறு, அகப்பொருளும், புறப்பொருளும் உடையவாக, எத்தனையோ ஆயிரம் பாக்களை பாடி அளித்தார்கள், அக்காலப் புலவர் பெருமக்கள். ஆனால், அப் பாடல்களை அழியாமல் காக்க வல்ல வாய்ப்பு, இன்று உள்ளதுபோல் அன்று இல்லாமையால், எத்தனையோ ஆயிரம் பாக்கள் மறைந்து அழிந்து விட்டன; இவ் வழிவுநிலை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே வரும்போது, நம் முன்னோர் ஈட்டி வைத்த, அப் பெருநிதியை இறவாமல் காக்க வேண்டும் எனும் கடமையுணர்வு வரப்பெற்ற ஒரு சில பெரியார்கள், முனைந்து, முயன்று, அவ்வகையில் ஓரளவு வெற்றி கண்டனர்.

தம் காலத்தில் கிடைத்த பாக்களையெல்லாம் ஒன்று திரட்டி, ஒருவகையில் ஒழுங்குபடுத்தி, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்ற வரிசையில் தொகுத்து வைத்தார்கள்; அவ் வரிசையில், எட்டுத் தொகை எனும் தொகுப்பில் இடம்பெறுவது, குறுந்தொகை. எட்டுத் தொகை நூல்களுள், "நல்ல குறுந்தொகை" எனும் சிறப்போடு இரண்டாவதாக இடம்பெறும் குறுந்தொகை, அளவுகால் சிறியதே எனினும், அழகால், ஏனைய இலக்கியங்களைக் காட்டிலும் குறைந்தது அன்று; அவற்றினும் ஓரளவு உயர்ந்தது என்றே கூறல் வேண்டும். 'கள்ளனை நம்பினலும் நம்பலாம், குள்ளனை நம்பக்கூடாது' என்பர்; உருவு கண்டு எள்ளாமை வேண்டும்; உருள் பெரும் தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து', சிற்றுளியால் கல்லும் தகரும்'

அரசு நிலையாலும், பொருள் நிலையாலும், பண்டுதான் பெற்றிருந்த சீரும் சிறப்பும் இழந்து இழிநிலை யுற்றிருக்கும் இக்காலத்திலும், தமிழரும், தமிழகமும் உலக மன்றத்தில்

உயர்வாக மதிக்கப் பெறுவதற்கு தமிழ் மொழி பெற்றிருக்கும் தாழாத் தனிச் சிறப்பு வாய்ந்த பழம் பெரும் இலக்கியச் செல்வங்களே காரணமாகும். ஆனால், அப் பேரிலக்கியப் பெரு நிதியைப் படைத் தளித்துச் சென்ற அப்புலவர்களைத் தமிழ்நாடு மறந்து விட்டது. அப்புலவர்களின் வரலாற்றை அறியவும் தவறிவிட்டது. ஆனால் அப்புலவர்களின் வரலாற்றை அறிய மறந்த நன்றி கெட்ட தமிழர்களிடையே, சில நன்றி மறவாத் தமிழர்களும் வாய்ந்துள்ளார்கள். அவர்கள், புலவர் பெரு மக்களின் வரலாற்றினைத் தம்மால் இயலும் வகையால் எல்லாம் தேடிக் காணத் தலைப்பட்டார்கள். புலவர்களின் உண்மை வரலாற்றை உள்ளவாறே உணர முடியாது போயினும், உறையூர் மருத்துவன் தாமோதரன் என ஊரும், தொழிலும் உரிய பெயரும் அறிந்து, அறிவித்தனர் சிலர்க்கு; மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என பிறந்த ஊரும், பேணிய தொழிலும், பெற்ற தந்தையும், பெயரும் அறிந்து, அறிவித்தனர் சிலர்க்கு. வெண்ணிக்குயத்தி என, ஊரும், தொழிலும் மட்டுமே உணர நின்றாரை அறிமுக மாக்கினார்கள். பிறந்த ஊர் ஒன்றே உணர நின்ற பெரியார்களைக் கல்லாடனார் என்பன போலும் பெயர் சூட்டி அறிமுகம் ஆக்கினார்கள். கூறிய இவைதானும் அறிய மாட்டாது மறைந்து மாண்புற்ற புலவர்களும் இருந்தார்கள்; அவர்களையும், ஒருவாறு அறிமுகம் ஆக்கி வைத்தல்வேண்டும் என்று விரும்பிய அந்நன்றி மறவாத் தமிழர்கள், அப் புலவர்கள் பாடிய பாக்களைப் படித்து அப்பாக்களிடையே அவர்கள் ஆண்டிருக்கும் அரிய உவமைகள், அரிய நயம் செறிந்த சொற்றொடர்களைக் கண்டு, சுவைத்து, அவற்றால் இப்புலவர்களுக்குப் பெயர் சூட்டி அமைதி கண்டார்கள்.

அவ்வாறு, அழகிய உவமையாலும், அரிய சொற்றொடராலும் பெயர் பெற்ற புலவர்கள் இருபத்துமூவர்; (உவமையாற் பெயர் பெற்றோர் பதினால்வர்; உரை நடையால் பெயர் பெற்றோர் ஒன்பதின்மர்). இவர்களுள், உவமையாற்

பெயர் பெற்ரேர் பன்னிருவர் பெயர்களையும், உரைநடையால் பெயர் பெற்ரேர் அறுவர் பெயர்களையும் அறியத்துணை புரிந்தது குறுந்தொகை. குறுந் தொகைக்கு இப் பெருமை ஒன்றே போதும்!

பொருளீட்டும் பணிமேற்கொண்டு கடல் கடந்த நாடு சென்ற கணவன் வாராக் கவலையால், தன் இயற்கை நலம் எல்லாம் இழந்து நிற்கும் ஒரு பெண்ணின் நிலைக்கு, மக்கள் வழங்கா இடம் பார்த்தே வாழும் இயல்புடைய அணில்கள் மகிழ்ந்தாடும் முன்றில்களைக் கொண்ட வாழ்வோர் போகிய பாழூரை உவமை காட்டி, அணிலாடு முன்றிலார் எனும் அழகிய பெயர் பூண்ட புலவரை அறிவிப்பது குறுந்தொகை ஒன்றே.

வினை முடித்து மீளும் கணவன், 'சேணெடும் தொலைவில் உள்ள சிற்றூரில், தன் வரவு நோக்கிக் காத்து நிற்கும் காதலியை அப்போதே அடையத் துடிக்கும் தன் நெஞ்சின் நிலை, வாராத மழை வந்து சென்றதாக, அவ்வீரம் புலர்வதற்கு முன்பே, தன் பெரு நிலம் அனைத்தையும் தன் ஒரே ஏரால் உழுதுவிடத் துடிக்கும் உழவன் உள்ளநிலைக்கு ஒப்பாகும் என்று கருதினுன்' எனப் பாடி, ஓரேர் உழவர் எனும் உயர் பெயர் பூண்ட ஒருவரை நமக்கு அறிவிப்பதும் குறுந்தொகையே.

இவைபோலும் பொருள் செறிந்த உவமைகளை ஆண்டு, அணிலாடு முன்றிலார் (செய்யுள் 41), ஓரேர் உழவர் (செ. 131), கயமனுர் (செ. 9), கல்பொரு சிறு நுரையார் (செய்யுள் 290), கவை மகனுர் (செ. 324), காலெறிகடிகையார் (செ. 267), குப்பைக்கோழியார் (செ. 305), கூவன் மைந்தனுர் (செ. 224), செம்புலப் பெயல் நீரார் (செ. 40). மீனெறிதூண்டிலார் (செ. 54), விட்டகுதிரையார் (செ. 74), வில்லகவிரலினுர் (செ. 370), எனும் அரிய பெயர் பெற்ற புலவர்களை, அழியாப் பெரு நிலையில் இருத்த பெருந் துணை புரிகிறது குறுந்தொகை,

ஏற்று உண்பது இழிவே யாயினும் ஏற்கும் தொழிலுடை யார் இயல்பால், அதுவும் உயர்ந்ததாகிவிடும் என்பதைக் காட்டுகிறது குறுந் தொகை; ஏற்பது என்றால், எங்கும் சென்று ஏற்பது, எவரிடத்தும் சென்று ஏற்பது, எதையும் ஏற்பது என்று எண்ணாமல், உயர்ந்த ஒழுக்கம் உடையாரி டத்து மட்டுமே ஏற்பது, நெய் கலந்து ஆக்கிய செந்நெல் சோற்றையே ஏற்பது எனும் உறுதியுடையார் அக்கால ஏற் பவர். அவர் இயல்பறிந் திருந்தமையால், அவர் வயிறார உண்பதற்கு வேண்டும் உணவு அனைத்தும், அவர் பல மனை ஏறி இறங்க வேண்டாவாறு ஒரே வீட்டாரே அளிக்கும் உயர்ந்த உள்ளம் உடையவர் அக்கால இடுவோர் என்ற உண்மைகளை ஓரிற்பிச்சை என்ற உயர்ந்த தொடரால் உணர்த்திய விழுச் சிறப்பால், ஓரிற்பிச்சையார் (செ. 277) என்ற ஒண் பெயர் பெற்றார் ஒருவர். அவரையும் அது போலும் சொற்றொடர்களையே ஆண்டு, கங்குல்வெள் ளத்தார் (செ. 387), குறியிறையார் (394), கோவேங்கைப் பெருங்கதழ்வர் (செ. 134), நெடுவெண்ணிலவினர் (செ. 47), பதடிவைகலார் (செ. 323) என்பனபோலும் அழகிய பெயர் களைப் பூண்ட புலவர்களை நாம் அறியத் துணை புரிவதும் குறுந்தொகையே. நிற்க.

ஒருவனும், ஒருத்தியும் கண்டு, காதல் கொண்டு, மணந்து, மனையற வாழ்வு நடாத்தும் மாண்புகளை விளக்கும் அகப்பாடல்களைப் பாடிய பழந் தமிழ்ப் புலவர் கள், அவ்வாழ்க்கை முறையினை காதலனும், காதலியும் காண்பது முதலாக, அவர்தம் மனையற வாழ்வின் முடிவு நிலை காறும் உள்ள நிகழ்ச்சிகளை ஒன்றன் பின் ஒன்றாகப் பாடி னாரல்லர்; அவ்வாழ்க்கை நெறியில் தாம் விரும்பும் ஒவ்வொரு நிகழ்ச்சியையே தம் பாடல் பொருளாகக் கொண்டு தனிப் பாடல்களாகவே பாடிச் சென்றனர்; ஒருவர், அவ்விருவரும் முதன் முதலாகக் கண்ட நிலையைப் பாடற் பொருளாக்கு வார்; மற்றொருவர், திருமண நிகழ்ச்சியைப் பாடி மகிழ்வார்.

ஆனால், அவருக்குப் பின்வந்த புலவர்கள், அவ்வாறு தனித்தனியே பாடி மகிழ்வதை விடுத்து, அந்நிகழ்ச்சிகளைக் கோர்வையாகப் பாடிக் கோவையார் என்ற புதிய இலக்

கியம் எழ வழி வகுத்தார்கள். இவ்விரு முறையிலும், எது சிறந்தது என்பது பற்றி, இக்காலப் பேராசிரியர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுவதை யானும் அறிவேன்.

தனித் தனியே பாடி மகிழ்ந்த காலம் முற்பட்டது; கோவை எழுந்த காலம் பிற்பட்டது; தனி நிலையில் வைத்துப் பாடுவதிலும், கோவையாக வைத்துப் பாடுவதில் ஓரின்பம் இருந்ததினாலேயே பிற்காலப் புலவர்கள், கோவை பாடும் வழக்கத்தை மேற்கொண்டிருத்தல் வேண்டும் என்பதே என் கருத்து. கோவை முற்பட்டதாகி, தனிநிலைப் பாடல் பிற்பட்டதாயின், முன்னதிலும், பின்னதிலேயே பேரின்பம் கண்டார்கள் புலவர்கள் என்று கொள்ளலாம்; அங்ஙனம் இல்லை! மேலும் அந்நிகழ்ச்சிகளை நிரல்படப் பாடிக் காட்டுவதில், கதைப் போக்கு அமையக் காண்கிறோம்; கதையில் ஆர்வம் காட்டுவது, மக்கள் மனத்தின் இயல்பாகும். ஆகவே, கோவை பாடும் முறை பெரிதும் விரும்பத் தக்கதாம்; இந்த உணர்வுடையேன் ஆதலின், வாழ்க்கையின் பல்வேறு பட்ட நிலைகளைத் தொடர்பற்ற வகையில் தனித் தனியான நிலையில், புலவர் பாடிச் சென்ற பாக்களின் தொகுப்பாகிய குறுந்தொகையிலும் ஒரு கோவை காண விரும்பினேன்; அதனால் முன்னும் பின்னுமாகச் சிதறுண்டு கிடந்த பாக்களை, இயன்ற வகையில், நிகழ்ச்சியால் ஒருமைப்பாடு தோன்றும் வகையில் வரிசை செய்து, குறுந்தொகைக் கோவை எனும் பெயர் சூட்டியுள்ளேன்; பெரு மக்கள் ஏற்றுப் போற்றுவார்களாக.

கா. கோவிந்தன்

# இலக்கியப் புதையல்

## குறுந்தொகைக் கோவை

### 1. களவும் காதலும்

ஒருவனும், ஒருத்தியும், அவர் மக்களும் ஒன்று கூடி வாழும் வாழ்வே ஒரு குடியாம். அத்தகைய குடி பல, சேரின் ஓர் ஊராம். ஊர்கள் பலவற்றைத் தன்னகத்துக் கொண்டதே ஒரு நாடாம்; ஆகவே ஒரு நாட்டின் வாழ்வு, அந்நாட்டு மக்களின் வாழ்விற்கேற்ப அமையும். மக்கள் வாழ்வு, வளம் செறிந்து அமைதி பெற்ற நல்வாழ்வாயின், அந்நாட்டு நிலையும் நன்றும். மக்கள் வறுமையால் வாடி, அதன் காரணமாய் வழுக்கி வீழ்ந்த வாழ்வினராயின், அந்நாடும் வாழ்விழந்து போகும்; "அரசனும் இல்வாழ்வார் இல்வழி, இல்" என நான்மணிக்கடிகை கூறுவதும் காண்க.

பழந்தமிழ் நாடு, பண்டு, பாரெலாம் போற்றும் பெரு வாழ்வு பெற்றுத் திகழ்ந்தது என்றால், அதற்குக் காரணம், அந்நாட்டில், அன்று குடிவாழ்ந்த ஒவ்வொருவரும் தத்தம் கடனறிந்து வாழ்ந்தமையேயாகும்; மக்களைப் பெற்று, அவர் உடலிற்கு உரம் ஊட்டி ஓம்புதல் தன் கடனும் என உணர்ந்திருந்தாள் தாய். அம்மக்களுக்கு அறிவும் ஒழுக்க

மும் ஊட்டி, உயர்ந்தோராக்குதல் தன்கடன் என்பதை உணர்ந்திருந்தான் தந்தை. அம்மக்கள் அறநெறி நிற்கும் ஆன்றோராய் வளர்தற்குத் தன் நல்லாட்சியே காரணமாம் என அறிந்திருந்தான் அரசன்; தாயும் தந்தையும், தம் நாட்டு அரசனும் தத்தம் கடமையில் தவறாது நின்று வளர்க்க வளர்ந்த தாங்கள், அவர் கனவு நினைவாகுமாறு, போரில் புறங்கொடாது, வேழங்களை வெட்டி வீழ்த்தி வெற்றி பெறுதல் முதலாம் தொண்டுகளில் தவறாமை தம் கடனாம் என அறிந்திருந்தனர் அம்மக்கள்; அம்மக்கள், நாடுகாவல் முதலாம் அவர் கடமைகளைக் குறைவற முடித்து வெற்றி பெறுதற்கு வேண்டும் வேற்படை முதலாம் வகை வகையான படைக்கலங்களைப் படைத்தளித்துத் துணை புரிதல் தம் கடமையாம் என அறிந்திருந்தனர், கொல்லன் போலும் அந்நாட்டுத் தொழில்புரி மக்கள் :

"ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."[a]

இவ்வாறு, ஒவ்வொருவரும் தம் தம் கடமை யுணர்ந்து வாழ்ந்தமையால், அவர்களிடையே பகை தோன்றவில்லை, ஒற்றுமை வளர்ந்தது. அனைவரும் அன்பால் கட்டுண்டு கிடந்தனர். ஒன்றுகூடி வாழ்ந்தமை

---

A புறநானூறு : 312. பொன் முடியார்.

ஈன்று-பெற்று; புறந்தருதல்-வளர்த்துவிடுதல்; வடித்து-பண்ணி; நன்னடை-நல்லொழுக்கம்; ஒளிறு-ஒளிவீசும்; அருஞ்சமம்-கொடிய போர்; முருக்கி-அழித்து; எறிந்து-கொன்று; பெயர்தல்-வென்று மீளுதல்.

யால் அவர் குடிநிலை உயர்ந்தது. குடிநிலை உயரவே கோன்நிலையும் உயர்ந்தது. தமிழ்நாடு, உலக நாடுகள் அனைத்திலும் உயர்ந்து விளங்கிற்று. இவ்வாறு தம் நாட்டை உலக மன்றத்தின் உயர்ந்த அரியணையில் இருக்கச் செய்தவர் கணவனும் மனைவியுமாய்க் கூடிக் குடியோம்பி வாழ்ந்தோரே யாதலின், அறிவும், ஒழுக்கமும், காதலும், கடமையும் குன்று அவர் வாழ்க்கை வனப்பினை அறிந்து பயன்கொள் வோமாக.

## தளரினும் மெல்லியள், தழுவுதற்கு இனியள்

இளைஞன் ஒருவன் ஒரு பெண்ணைக்கண்டு காதல் கொண் டான். அவள் ஓர் அழகி; ஒரு பெண்ணிற்கு உடலுறுப்புக் கள் அனைத்தும் ஒருங்கே அழகுடையவாய் அமைதல் வேண் டும்; அவற்றுள் ஒன்று அழகாய் அமைய ஏனைய அழகிழந்து போக வாழ்வாள் ஒருத்தியைக்காட்டிலும், கண்ணும் கையும் பல்லும் முதலாம் உறுப்புக்கள் ஒவ்வொன்றும், ஒன்றைப் போலவே அழகுடையவாக வாழ்வாள் ஒருத்தியே, உலக மக்கள் அனைவராலும், அழகி என ஒரு முகமாகப் பாராட்டுப்பெறுவள். அத்தகைய பேரழகி அப்பெண்.

காந்தள், மலைநாட்டு மலராதலின், மலைநாட்டு மகளிர் காந்தள் மலரைப் பெரிதும் விரும்புவதில்லை. அவர்க்குக் காட்டில் மலரும் முல்லை இடத்தும், வயல்களில் மலரும் குவளையிடத்தும் பேராசை பிறக்கும். அதைப் போலவே, காட்டு நாட்டில் வாழும் மகளிர், தம் நாட்டு முல்லை மலரி னும், காந்தள் மலரையும், குவளை மலரையும் மிகுதியாக விரும்புவதும், மருதநிலத்து மகளிர், தம் நாட்டுக் குவளை மலரினும், காந்தளையும், முல்லையையும் விரும்புவதும் இயல் பாம். மகளிர் மன இயல்பு இது. அதனால், அம்மலர்களைத் தனித்தனியே தொடுப்பின், ஒருவர் விரும்பும் மாலையை ஒருவர் விரும்பார்; அம்மூவரும் ஒருமனப்பட்டு, ஒரு மாலை யிடத்தே விருப்பம் கொள்ளவேண்டுமாயின், அம்மாலை, அம்

மூவகை மலரும் விரவித் தொடுக்கப்பெற்ற மாலையாதல் வேண்டும். மேலும்! செந்நிறக் காந்தள், வெண்ணிற முல்லை, கருநிறக் குவளை இம்மலர்களைத் தனித்தனியே தொடுத்துக் காணும் அழகினும், அவை மூன்றையும் ஒன்றை யடுத்து ஒன்று இருக்குமாறு விரவித்தொடுத்த மாலை, கண்ணைப் பறிக்கும் பேரழகும். நிறங்கலந்து தோன்றும் அக்காட்சியழகோடு, நல்ல பல நறுமணங்களும் ஒன்று கலந்துவிடின், அம்மலர் மாலையின் மாண்பினை, மனத்தால் நினைந்து நினைந்து மகிழ்வதல்லது, வாயால் வரைந்து கூறுதல் இயலாது. மேலும், அப்பன்னிற மலர்களைத் தொடுக்கும் தொழில்வல்ல ஒருவன், தன் கைவண்ணமெல் லாம் காட்டித் தொடுப்பின், அம்மாலையின் அழகும் மாண் பும், மேலும் பன்மடங்கு அதிகமாம்; அழகிய அம்மலர் மாலை போன்றவள் அவள்.

அவள் கை, காந்தள்; அவள் பற்கள், முல்லை முகை; அவள் கண், குவளை; இவ்வாறு அவள் நல்ல அழகியாத லோடு, நல்ல பல இயல்பும் உடையவள்; அந்நல்லோள் மேனி, நனி மிக மென்மை வாய்ந்தது. நிறத்திலும் மென்மை யிலும், மாவின் இளந்தளிரை வென்றது அவள் மேனி; காதல் கொண்டு அணைவார் உள்ளத்தை இன்பக் கடலுள் ஆழ்த்தும் அத்துணை அருமை வாய்ந்தது அம்மேனி. அவள் இத்தகைய பேரழகுடையவளாகவே, அவளைக் கண்ட இளைஞன் உள்ளம், அவளழகிற்கு அடிபணிந்து விட்டது; உணர்விழந்த நிலையில், அவள் உருவு நலனையே பன்னிப் பன்னிப் பாராட்டத் தொடங்கி விட்டான் இளைஞன்.

“ கோடல் எதிர்முகைப், பசுவீ முல்லை,
நாறுஇதழ்க் குவளையொடு இடைப்பட விரைஇ,
ஐது தொடைமாண்ட கோதை போல

நறிய நல்லோள் மேனி,
முறியினும் வாய்வது; முயங்கற்கும் இனிதே."[a]

## அழகி, ஆனால் அடைதற்கு அரியாள் :

அவள் நல்ல அழகி; நற்பண்பும் உடையாள் என அறிந்து அவள்பால் காதல் கொண்ட இளைஞன், அவள் கிடைத்தற்கு அரியள் என்பதை அறிந்திலன்; அவளை அண்மையில் சென்று காண்பதோ, அவள் அன்பைப் பெறுவதோ அவ்வளவு எளிதில் இயலாது; அவள் அவ்வூர்த் தலைவன் மகள்; மகப் பேறின்றி வருந்திய அவன், அரிய தவம் பல ஆற்றிப்பெற்ற ஒரே மகள்; அதனால் அவளைக் கண்ணிமைபோல் காத்து வந்தான்; மேலும் அவள் வீடு, அரிய காவல் உடையது; அக் காவலைக் கடந்து சென்று, அவளைக் காண்பது எளிதில் இயலாது; காவலைக் கடந்து உட்புகினும், அவளோடு பேசிப் பழகுதல் இயலாது; அவளைப் பெற்றதாயும், பேணி வளர்த்த செவிலியும் அவளை இமைப்பொழுதும் பிரியாது, அவளுட னேயே இருப்பர்; வீட்டைவிட்டு வெளிவரும் அவளை, அவள் விளையாட்டுத் தோழியர் சூழ்ந்து கிடப்பராதலின், அவளைத் தனித்துக் காண்பது அந்நிலையிலும் இயலாது. இத்தனைக்கும் மேலாக, அவள் வனப்பும், அவள் பெற்றோர் வாழும் மிக மிக உயர்ந்தனவாமாதலின், அவளை, அவள் பெற்றோர் தம்மையொத்த வளமார்குடியில் வந்தோனுக்கே மணம் செய்து தர இசைவர்.

இவையெல்லாம் உணராது, இளைஞன் உள்ளம், அவள் பால் சென்றுவிட்டது; அவள் அன்பைப் பெற்று, இன்புற்று வாழத்துடித்தது; அத்துடிப்பின் மிகுதியால், அவன் நனிமிக

---

a குறுந்தொகை 1 62. சிறைகுடியாந்தையார்.

கோடல்–காந்தள்; எதிர்; தோன்றிய; வீ–மலர்; முகை–அரும்பு; நாறு–மணம் வீசும்; விரைஇ–கலந்து; ஐது–அழகாக; தொடைமாண்ட – மாட்சிமைப்படத் தொடுக்கப்பெற்ற; கோதை–மாலை; முறி–மாந்தளிர்; வாய்வது–நிறமும் மென்மையும் வாய்ந்தது; முயங்கற்கு–தழுவுதற்கு.

வருந்தினுன்; தொடக்கத்தில், அவள் அழகில் மயங்கி அறி விழந்து போனமையால், அவள் தகுதியை அறியாதே காதல் கொண்ட அவன் நாட்கள் செல்லச் செல்ல, அவள் அரியள் என்பதை அறிந்து வருந்தினுன்.

தமிழ் நாட்டின் கிழக்குக் கடற்கரையில் வாழ்ந்திருந் தது ஒரு கிழ நாரை; ஆண்டின் முதிர்வால் அதன் சிறகுகள் உதிர்ந்து போயின; பறக்கும் ஆற்றலை இழந்துவிட்டது; தன் கண்ணெதிரில் கிடக்கும் மீனையும் பற்றித் தின்னவுமாட் டாது வருந்திக் கிடந்தது. ஆனுல் அதன் ஆசையோ பெரிது! அயிரை மீன் உணவில், அதற்கு அளவிருந்த ஆசை; அயிரை மீன் கிடைத்தற்கு அரியது; எளிதில் கைப்பற்றக் கூடிய தன்று; உற்று நோக்கி, ஓடிவிடாவாறு விரைந்து குத்தவல்ல பறவை இனத்தாலும் பற்றுதற்கு அரியது அயிரை; அத்த கைய அயிரை மீனின்பால் ஆசை கொண்டுவிட்டது அக்கிழ நாரை; அதிலும் தான் வாழும் கீழ்க்கடல் நீரில் கிடைக்கும் அயிரைபால் ஆசை கொள்ளாது, தமிழ் நாட்டின் மேற்குக் கடற்கரையில், வரணியம் கருதி வரும் வங்கங்கள், இரவு பகல் எப்பொழுதும் இடைவிடாது வழங்கும் தொண்டி நகர்த் துறைமுக நீரில் வாழும் அயிரைபால் ஆசை கொண் டது; அவ்வயிரை மீன் கிடைத்தற்கு அரியது என்பதை எண்ணிப் பாராது, எண்ணிப் பார்த்து அவ்வாசையைக் கைவிடக் கருதாது, அம்மீனை நினைந்து நினைந்து வருந்தி வாடிக் கிடந்தது; அவ்வாறு வருந்திக் கிடப்பதல்லது, அந்தோ! அந்நாரையால் வேறு என்ன செய்ய இயலும்!

அந்நாரையின் நிலைபோன்றதே தன்னிலையும் என்ப தறிந்து வருந்தினுன் இளைஞன்; "அவளோ செல்வத்திற் சிறந்தவள்; ஊர்த்தலைவன் மகள்; என்னுல் எளிதில் அடைய மாட்டாப் பெருநிலையில் வாழ்பவள்; அவளை அடையத் துணை புரியவல்ல நண்பர்களும் எனக்கில்லை; இந்நிலையில் அவள் அழகிற்கு மனைவியாக வாய்த்தற்கேற்ற மாண்புடை

யாள் என்பதைமட்டும் கொண்டு, என்னிலை மறந்து அவள் பால் காதல் கொள்வதோ, அவள் காதலைப் பெறமாட்டா மையால் கண்ணீர் சொரிந்து கலங்குவதோ அறிவுடைமை யாகாது; இதையெல்லாம் அறியாது வருந்துகிறது என் மட நெஞ்சம்; ஏ நெஞ்சே! என்னே நின் மடமை! அவள் அரியள் என்பதை அறியாது, 'அவள் நல்லள்; அவள் நல்லள்' எனக் கூறி வருந்துவது ஏனோ?" எனக் கூறி வருந்தினான் இளைஞன்.

" குணகடல் திரையது பறைதபு நாரை,
திண்தேர்ப் பொறையன் தொண்டி முன்துறை
அயிரை ஆரிரைக்கு அணவந்தாங்குச்
சேயன், அரியோள் படர்தி,
நோயை நெஞ்சே! நோய்ப் பாலோயே;"[a]

அம்மட்டோ! இன்பத்தின் இயல்புணர்ந்தவன் இளைஞன். மெய் வாய் கண் மூக்கு காது என்ற ஐம்பொறிகளுள் எது இன்பத்தை விரும்பினும், அது பொருளின் துணையின்றி இயலாது. பணம் இல்லாதவன் பிணம் என்பர் உலகோர். எவ்வின்பத்தையும் பிணத்தால் நுகர முடியாது. அதைப் போல் இன்பத்தை நுகர்வது பணம் இல்லாதவனாலும் இயலாது. இன்ப நுகர்வு பொருளின் துணையின்றி இயலாது என்பதை, 'பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்', 'வறிய வன் இளமைபோல் வாடி', 'பொருள் இலான் இளமைபோல்

---

[a] குறுந்தொகை : 128. பரணர்.

குணகடல்-கிழக்குக் கடல்; திரையது-அலைவீசும் கரைக் கண் வாழ்வது; பறை தபு-பறக்கும் சிறகு இழந்தது; பொறையன்-சேரனுக்குரிய; ஆரிரை-அரிய உணவு; அண வந்தாங்கு-ஆசையால் தலைதூக்கிக் கிடந்ததுபோல்; படர்தி-பெற நினைந்தாய்; நோய்ப் பாலோய்-துன்பம் தரும் தீவினை உடையாய்,

புல் என்ருன்' என்ற தொடர்களால் புலவர்கள் தெளிவாக உணர்த்தியுள்ளார்கள். அதையெல்லாம் அறிந்திருந்தும், இன்ப நுகர்விற்குரிய வாய்ப்பு எதுவும் இல்லாத ஓர் ஏழை, பேரின்பப் பெருவாழ்வைப் பெற விழைதல் கூடுமோ? அவ் வின்ப வாழ்வை எண்ணி எண்ணிப் பெருமூச்செறிவது தவிர்த்து அவனுல் வேறு என்ன செய்ய இயலும்? அவன் அறிவுடையனுயின், அடைதற்கு அரிது இன்பம் என்பதை உணர்ந்து, தன் ஆசையை அடக்கிக்கொள்வான். இல்லை யேல், ஆசைக்கு அடிமையாகி அல்லல் பல அடைந்து இறுதி யில் அழிவது தவிர ஆவது ஒன்றும் இராது.

இன்ப உலகிற்கு இட்டுச் செல்லும் பாதையின் இப்பண் பினை உணர்ந்திருந்த இளைஞன், தன்னிலையும் இப்போது அன்னதே என்பதை அறிந்து வருந்தினுன். காதலி எல்லா வகையாலும் நல்லள்; இணையிலா அழகுடையாள்; இனிய இளமை நலம் உடையாள்; ஈடில்லாச் செல்வ வாழ்வுடை யாள்; ஆழ்ந்த அறிவுடையாள்; ஆனுல் தன்னுல் அடைய லாகா அத்துணைப் பெருநிலையினள். எல்லாம் இருந்தும் என்ன? அவளை அடையத்தக்க வாய்ப்பு எதுவும் தன்பால் இல்லை; ஓர் ஊரினள் என ஊரால் உரிமை கொண்டாடு வதோ, ஓர் இனத்தாள் என இன ஒற்றுமை காட்டுவதோ, பல நாள் பழகியவள் எனப் பழந்தொடர்பை நினைவூட்டு வதோ எதுவும் தன்னுல் இயலாது. இவற்றையெல்லாம் உணர்ந்தும் அவளை அடையத் துடிக்கும் தன் உள்ளத்தின் நிலை குறித்து நாணினுன். இன்பம் நல்லது என அறிந்தவன், அது அடைதற்கு அரிது என்பதையும் அறிந்து, ஆசையை அடக்கிக்கொள்ளக் கருதவேண்டும். அதுதான் தக்கதாகும். அவ்வாறின்றி, 'காதலி நல்லள்; கட்டழகி; கவின்மிகு பண்பு டையாள்' எனப் பலப்பல கூறிப் பிதற்றும் என் பேதை நெஞ்சம், அவள் அடைவதற்கு அரியள் என்பதை அறிந்து, அவ்வாசையை அடக்கிக்கொள்ளாது, அவள்பின் அலைகின் றதே, என்னே இந்நெஞ்சின் மடமை!' என்று எண்ணி வருந் தினுன். வருந்தியவன் வாளா இருந்துவிடாது, அவ்வாசை

அடைதற்கு அரிது; ஆகாது; அடாது என்பதை அந்நெஞ்சிற்கு உணர்த்தவும் விரும்பினான். உணர்த்தவும் செய்தான்.

"இல்லோன் இன்பம் காமுற்றாஅங்கு
அரிது வேட்டனையால்; நெஞ்சே! காதலி
நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியாதோயே."[a]

அவள் அழகு என்னை அழித்துவிட்டது :

பெண்ணின் காதலைப் பெற முடியவில்லையே என்ற கவலை பெரிதாயிற்று இளைஞனுக்கு. அதனால் அவன் நலம் கெட்டது; உடல் தளர்ந்தது; தோள்கள் மெலிந்தன; ஆண்மையும் ஆற்றலும் அவனைவிட்டு அகன்றன; பித்துப் பிடித்தவன் போலவும், பேயறைந்தவன் போலவும் தோன்றினான். அவனை அந்நிலையில் கண்டான் அவன் ஆருயிர் நண்பன்; தொலைவில் வரும் அவனைக் காணும்பொழுதெல்லாம், கரிய பெரிய காட்டு யானை பெருமித நடை நடந்து வருகிறதோ என எண்ணி மகிழ்ந்தவன் அந்நண்பன்; அத்துணைப் பருத்த உடலும், அவ்வுடலமைப்பிற்கேற்ற ஆண்மையும் உடையவன் அவ்விளைஞன்; அவனை வென்று அடக்குவாரை, அந்நண்பன், அன்றுவரை கண்டிலன்; அம்மட்டோ! "அவன் உடலைப் போன்றே அவன் உள்ளமும் உறுதி வாய்ந்தது; அவ்வுறுதியை உலகில் உள்ள எந்த உணர்வாலும் அழிக்க இயலாது; அவன் அறிவு ஆசைக்கு அடிமையாகாதது; ஒரு பொருளின் பால் ஆசை கொண்டு, அதற்கு அடிமையாகி அழிந்துவிடும் அவ்வளவு ஆற்றலிழந்ததன்று அவன் அறிவு. மாறாக, ஆசை தவறான நெறியில் செல்லுமாயின், அதை

---

[a] குறுந்தொகை : 120. பரணர்.

இல்லோன் – வறியவன்; காமுற்றாஅங்கு – விரும்பியது போல். அரிது – அடைதற்கு அரிய ஒன்றை; வேட்டனை – விரும்பினாய். அறிந்தாங்கு – அறிந்ததுபோல்.

அடக்கி ஆளவல்ல ஆற்றல் வாய்ந்தது அவன் அறிவு" என எண்ணி இறுமாந்திருந்த அந் நண்பன், இளைஞன் உடல் தளர, உள்ளம் சோர்ந்து வந்து நிற்கும் நிலைகண்டு கலங்கினன். அவனை அணுகி, "அன்ப! தளரா உன் உடலும், நிலை பிறழா நின் உள்ளமும் இவ்வாறு தளர்ந்து நிலை பெயரக் காரணம் யாது? அவற்றை இவ்வாறு வருத்தும் உன் நோய் யாது? அந்நோய் வந்தது எவ்வாறு? நீ கலங்கி அழியக் காரணமானவர் யாவர்?" எனக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கலங்கினன்.

அது கேட்ட இளைஞன், "நண்ப! கட்டுக்கடங்காது திரிந்து, கண்ணில் படும் மாக்களையும், மரங்களையும், மலைப் பாறைகளையும் உருட்டி அழித்து ஓடும் காட்டு யானையை, ஒரு சிறு பாம்புக்குட்டி அழித்து விடுவதும் உண்டு; அதைப் போல், எதற்கும் அஞ்சாத என்னை, இவ்வாறு நோய் செய்து விட்டாள் ஒரு பெண்; அப்பெண் நனிமிக இளையவள்; நாணல் முனைபோல் முளைத்திருக்கும் வெண்பற்களை வரிசையாகப் பெற்றிருக்கும் அவள் வாய்; வளையல் ஒலிக்கும் அவள் கைகளில்; அவள் வாயின் சிறு முறுவலைக் கண்டேன்; கைவளையின் ஒலியினைக் கேட்டேன்; அவ்வளவே; யான் இவ்வாறு நிலை குலைந்து விட்டேன்."

"சிறு வெள் அரவின் அவ்வரிக் குருளை,
கான யானை அணங்கி யாஅங்கு,
இளையள், முளைவாள் எயிற்றள்,
வளையுடைக் கையள் எம் அணங்கி யோளே."[a]

"நண்ப! அதோ தெரிகிறதே ஒரு மலை, அதுதான் அவள்

---

a குறுந்தொகை : 119. சத்தி நாதனார்.

அவ்வரி – அழகிய கோடுகளை உடைய; குருளை : குட்டி; கானயானை – காட்டுயானை; அணங்கி யாஅங்கு–வருந்தினாற் போல்; முளை – நாணல் முளைபோன்ற; வாள் – ஒளியுடைய; எயிற்றள் – பற்களை உடையவள்,

அவள் வாழிடம்; அம்மலையினின்றும் வீழ்கிறதே தூய வெள்ளிய அருவி தெரிகிறதா நினக்கு? அவ்வருவி, கீழே உள்ள பாறைகள்மீது வீழ்வதால் எழும் ஒலியும், அதோ கேட்கிறதே; அந்த மலைச்சாரலில், அவ்வருவியின் கரையில் உளது ஒரு குறவர் பாடி; அப்பாடியில் வாழும் குறவர்களுக்குத் தலைவன் ஒருவன் உளன்; அவன் மகளே என்னை இவ்வாறு ஆக்கியவள்; நல்ல அழகி அவள்; அவள் சாயல், தண்ணெனக் குளிர்ந்த நீர்போல், காண்பதற்குப் பேரின்பம் தரும்; அவளைக் கண்டேன் ஒரு நாள்; கண்ட அப்பொழுதே, அவள் சாயல் என்னை அழித்துவிட்டது; நெருங்கிய எப்பொருளையும் எதிர்த்துப் பாழாக்கும் பெரு நெருப்புப் போன்ற என் உள்ள உரத்தை, அவள் சாயல் அழித்துவிட்டது; ஆசைகள் அணுக அஞ்சும் என் உள்ளத்தை அவள் அழகு அடக்கி அடிமையாக்கிக் கொண்டது; அவளைக் கண்டேன்; காதல் கொண்டேன்; அதுவே என் நோய்க்கு வித்தாய் அமைந்துவிட்டது; அன்றே என் நிலை குன்றிற்று!"

> "மால்வரை இழிதரும் தூவெள்ளருவி
> கல்முகைத் ததும்பும் பன்மலர்ச் சாரல்
> சிறுகுடிக் குறவன் பெருந்தோள் குறுமகள்
> நீர் ஓரன்ன சாயல்
> தீ ஓரன்ன என் உரன் அவித்தன்றே"*

"நண்ப! மறுநாள் அங்குச் சென்றேன்; மலைச் சாரலில், பருத்தி கலந்து விதைத்த தினைப் புனத்தில் குருவிகளை ஓட்டிக் காவல் புரிந்துகொண்டிருந்தாள் அப்பெண்; அவளை அங்குக் கண்டேன்; கவண் வீசும் அவள் தோளழகைக் கண்டேன்;

---

* குறுந்தொகை : 95. கபிலர்.

மால்வரை - பெரியமலை; இழிதரும் – வீழும்; கல்முகை - பாறைகளின் வெடிப்புக்களில்; ததும்பும்– வீழ்ந்து ஒலிக்கும்; சிறுகுடி-சிற்றூர்; குறுமகள்-சிறு பெண்; நீரோரன்ன - நீரை ஒத்த ; உரன்– உள்ள உறுதி; அவித்தன்று - அழித்தது.

குருவி ஓட்டும் அவள் குரலின் இனிமையைக் கேட்டேன்; செயலிழந்தேன்; சிறிது அணுகச் சென்றேன்; அவள் பார்வை என்மீது பட்டது; அம்மம்ம! அக்கண்ணின் அழகைத்தான் என்னெனச் சொல்வேன்! கருநீல மலரை வென்றது அக்கண்; மான்விழி போலும் மருட்சி நிறைந்தது; அப்பார்வையில் இனிமையும் குளிர்ச்சியும் இருக்கக் கண்டேன்; ஆனல், அதன் தோற்றத்தில் இருந்த இனிமை, அதன் தொழிலில் இல்லை; வளைந்த வில்லினின்றும் விரைந்து பாயும் அம்புபோல், அஃது என் உள்ளத்தில் ஆழப் பாய்ந்து ஆருத்துயர் செய்தது. அன்று, அவள் அம்புக் கண்விளைத்த அந்நோய், இன்று ஊரெல்லாம் உணருமாறு, என் உடல் நலனையே அழித்து விட்டது; நான் என் செய்வேன்!" என்று கூறி வருந்தினன்.

"பூ ஒத்து அலமரும் தகைய; ஏ ஒத்து
எல்லாரும் அறிய நோய் செய்தனவே
தேமொழி, திரண்ட மென் தோள், மாமலைப்
பரீஇ வித்திய ஏனல்
குரீஇ ஓப்புவாள் பெருமழைக் கண்ணே." 1

காதல் ஒரு கற்பனை :

இளைஞன், "ஒரு பெண்ணின்பால் கொண்ட காதலால் கவின் இழந்து, கருத்திழந்து வாடுகிறேன்" எனக் கூறக் கேட்டான் நண்பன். நண்பனின் தவறிய நிலைகண்டு நகுதல் நட்பாகாது; தவறு காணின், அதை எடுத்துக் காட்டித்

1 குறுந்தொகை 1 72. மள்ளனர்.

அலமரும் - சுழலும்; தகைய - அழகுடைய; ஏ - அம்பு; தேமொழி - இனியமொழி; பரீஇ - பருத்தி; ஏனல் - தினை; குரீஇ - குருவி; ஓப்புவாள் - ஓட்டுவாள்.

திருத்துவதே நட்பிற்கு அழகு எனும் நட்பின் இலக்கணம் அறிந்தவன் அந் நண்பன்; அதனால் இளைஞனை அருகில் அழைத்து, "ஆருயிர் நண்ப! காதல், கண்டாரை வருத்தும் கொடுமையுடையது என்றும், காதல் துயர் விளைக்கும் தீமை யுடையது என்றும் கூறுவார் அறிவற்றவராவர்; காதலுக்கு அப்பண்பு இல்லை; உண்மையைக் கூற வேண்டுமாயின், காதல் என்பதொரு பொருளே உலகத்தில் இல்லை; காதல் அவரவர் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சியின் விளைவே; காதலென ஒரு பொருள் உண்டு என உணர்வார்க்கு, அது தோன்றித் துயர்தரும்; அவ்வியல்புடைப் பொருள் எதுவும் உலகத்தில் இல்லை என உணர்வார்க்கு, அக்காதலால் துயர் உண்டாதல் இல்லை; நண்ப! பற்களெல்லாம் தேய்ந்துபோன ஒரு கிழமாட்டினால், நிலத்தில் சிறிதே தலைகாட்டி நிற்கும் இளம்புல்லைக் கடித்துத் தின்ன இயலாது எனினும், அது, அப்புல்லை நாவால் தடவிப் பார்த்தாயினும் இன்புற எண்ணும். புல்லைத் தின்ன இயலாத அது, அப்புல்லை நாவால் நக்குவதையே அப்புல்லைத் தின்றாற்போல் கருதிச் சுவைத்து மகிழும்; அதைப் போலவே, மக்களில் ஒருசிலர், காதல் என ஒரு பொருள் இருப்பதாக எண்ணி, அக்காத லால் துயர் உறுதல்போல் தளர்ந்து மெலிவர்; இதுவே காதலின் இயல்பு; ஆகவே நண்ப! காதல் என்பதொரு பொருள் உலகில் இல்லை; அது அவரவர் கருத்தின் திரிபே; கலங்கா உள்ளம் உடையார், அக்கற்பனையால் கலங்குவ தில்லை; உண்மை இதுவாகவும், காதல் எனும் அக் கற்பனைப் பொருளைக்கண்டு கலங்குவது நின் பேராண்மைக்கு அழ கன்று" என அன்பு கலந்த அறவுரையினை, இனிமையாக எடுத்துக் கூறினான்.

நண்பன், "காதல் ஒரு கற்பனை; அக்காதலால் கலங்கு வது அறியாமை" எனக் கடிந்துரைப்பது கேட்ட இளைஞன்,

"காமம் காமம் என்ப; காமம்
அணங்கும் பிணியும் அன்றே; நினைப்பின்
முதைச் சுவல் கலித்த முற்றா இளம்புல்

முதா ஐதவந்தாங்கு
விருந்தே காமம்; பெருந்தோ ளோயே!" a

**காதல் பொறுத்தற்கு அரியது:**

"என் தவறு கண்டு இடித்துக் கூறித் திருத்த முன் வந்த நண்பரே! உன் நல்லெண்ணத்திற்கு நன்றி; நண்பன் நல்லுள்ளம் கண்டு மகிழ்கிறது என் உள்ளம்; ஆனால், நண்ப! இடித்துக் கூறித் திருத்த முயலும் உன்னால், என்னைப் பற்றிவருத்தும் இக்காதல் நோயைப் பெருகவிடாமல் தடுத்து நிறுத்த இயலுமேல் நன்று; பெருகித் துயர் செய்யும் அதைத் தடுத்து நிறுத்துவது என்றால் இயலாது; நண்ப! கோடை ஞாயிறு, தன் முழுக் கதிர்களையும் விட்டுக் காய்கிறான்; அஞ்ஞாயிற்றின் ஒளியால் வெம்மையுற்று வெடித்துக் கிடக்கிறது ஒரு கற்பாறை; அக்கறபாறைமீது வெண்ணெயைக் காய வைத்து, அதைக் காக்குமாறு ஒருவனை நிறுத்தியுள்ளார்கள் அவ் வெண்ணெய்க்கு உரியார். ஆனால் காக்கக் கடமை மேற்கொண்டவனோ, இருகைகளையும் இழந்த ஒரு முடவன்; வாய் திறந்து பேச முடியாத ஊமை; அதனால், வெண்ணெய்க்குக் கேடு வந்தால், கையால் எடுத்துக் காப்பதோ, பிறரைக் கூவி அழைத்து அறிவிப்பதோ அவனால் இயலாது; வெய்யிலில் வைக்கப்பட்டுள்ள வெண்ணெய அத்தகையான் காத்துக் கிடக்கிறான்; வெய்யில் வெப்பத்தால் வெண்ணெய் உருகிக் கீழே ஒழுகி ஓடத் தொடங்கிவிட்டது. அது பரவிப் பாழாவதை அவனும் பார்த்துவிட்டான். பார்த்து என்ன பயன்; அது பரவிப் பாழாவதைக் கைகளால் தடுக்

---

a குறுந்தொகை : 1 04. மிளைப் பெரும் கந்தன்

அணங்கு-வருத்தம்; நினைப்பின் - ஆராய்ந்து நோக்கினால்; முதைச் சுவல்-பழைய கொல்லை மேடு; கலித்த-முளைத்த; மூதா-(முதுமை + ஆ) கிழப்பசு; ஐதவந்தாங்கு-நாவால் தடவி இன்புற்றாற்போல்; விருந்து-புதுமையாகத் தோன்றி நிற்கும் ஒரு நிலையிலா இன்பம்.

கவோ, பிறர்க்கு அறிவிக்கவோ முடியாது. பார்த்துப் பார்த்துக் கண்ணீர் விட்டுக் கலங்கி நிற்கிருன்; நண்ப! அக் கையில்லா ஊமை காக்கும் வெண்ணெய் போன்றது என் காதல் நோய்; வெண்ணெய் உருகிப், பரவி ஓடுவதைப் பார்த்துக்கொண்டிருப்பதல்லது, வேறு எதுவும் செய்ய இய லாத அவ்வூமை முடவன் போல், காதல் நோய் பெருகி வருத்துவதைப் பார்த்துப் பார்த்து வருந்திக் கிடப்பதல்லது, அதைத் தடுத்து நிறுத்துவதோ, உன் போலும் நண்பர் களுக்கு உணர்த்தி வழி காண்பதோ என்ருல் இயலவில்லை; நான் யாது செய்வேன்!" என உள்ளம் உருக உரைத்து வருந்திஞன்:

"இடிக்கும் கேளிர் நுங்குறையாக
நிறுக்கல் ஆற்றிஞே நன்று மன்தில்ல;
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்,
கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய், நோன்று கொளற்கு அரிதே"[a]

இவளே தோழி:

காதல் நோயால் வருந்திஞன் இளேஞன்; அவன் நண்பன், காதல் நோயால் கருத்திழந்து போதல் கூடாது என அறி வுரை கூறினனே யல்லது, அந்நோய் தணியத் துணை புரிந் திலன். அதனுல், அந்நோய் தீர்க்கும் வகையறியாது வருந்

---

[a] குறுந்தொகை: 58. வெள்ளி வீதியார்.

இடிக்கும்–குற்றம் கண்டு கடிந்து உரைக்கும்; குறை யாக செயலாக; நிறுக்கல் ஆற்றின்–தடுத்தலைச் செய்தால்; நன்று மன்தில்ல–மிக நல்லது; அதை நானும் விரும்புகிறேன்; வெவ்வறை–வெப்பம் மிக்க கற்பாறை; மருங்கில் இடத்தில்; கண்ணில் – கண்களால்; உணங்கல் – உலர்த்தவைக்கும் பொருள்; நோன்று கொளற்கு – பொறுத்துக்கொள்வதற்கு.

திஞன் இளைஞன். தான் காதலித்த அப்பெண்ணைப் பெற்றுப் பேரின்பம் நுகர்தல் பிறர் துணையின்றி இயாலது என்பதை அறிந்தான்; அதனுல், அப்பெண்ணின் உயிர்த்தோழி யாவள் என்பதை அறியத் துடித்தது அவன் உள்ளம்; அவ்வார்வமிகு தியால், அப்பெண்ணைத் தேடிச் சென்ருன்.

மலைச்சாரலை அடுத்து ஓடிய காட்டாற்றில், அவளும் அவள் தோழியரும் ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டான்; ஆற்றுப்புனலில் அவர்கள் ஆடி மகிழ்வதைக் காணக் கூடிய தொலைவில், மறைவான ஓரிடத்தே இருந்து அவர் ஆடலைப் பார்த்து மகிழ்ந்தான்; தெப்பம் ஒன்றின் துணைகொண்டு அவர்கள் ஆடிக்கொண்டிருந்தனர்; புனலில் மூழ்கி மூழ்கி எழுவதால், நீர்த்துளிகள் நிறைந்து தோன்றும் தன் காதலி யின் மேனி, மழை பெய்ய, மாசு நீங்கி, அம்மழைத்துளி ஏற்று மாண்புற்ற மாந்தளிர் போல் காட்சி தரும் அழகைக் கண்டு களித்திருந்த அவன், அப்பெண், தன்னோடு ஆடும் தோழியர் பலராகவும், அவருள் ஒருத்தியைமட்டுமே, இமைப் பொழுதும் பிரியாது பின்தொடர்ந்து திரிவதை உணர்ந் தான்; அத்தோழி, தெப்பத்தின் தலைப்பகுதிக்கண் சென்ருல், இவளும், அத்தலைப் பக்கமே சென்ருள்; அவள், தெப்பத்தின் கடைப் பகுதிக்கண் சென்ருல், இவளும், அக்கடைப் பகுதிக்கண்ணே சென்ருள்; தோழி, புணை கைநழுவப் புனலோடு அடித்துச் செல்லப்பட்டால், இவளும் புணையைக் கைவிட்டு, அப்புனலோடு சென்று அவளை அடைந்தாள்; இவற்றை உற்று நோக்கிய இளைஞன், இவ்வாறு, இவள் இமைப்பொழுதும் பிரியாது இணைந்து வாழுமாறு இவள் பால் பேரன்பு கொண்ட அவளே, இவள் உயிர்த்தோழி போலும் எனக் கருதிஞன்; அவன் கருதியதை, அப்பெண் ணின் கண்களும் உறுதி செய்தன; மாரிக்காலத்தில் மலரும் இயல்புடைய பிச்சியின் செந்நிறப் புற இதழ்களையுடைய மலர்கள் மழைநீர், ஏற்று நிற்கும் காட்சி போல், நீராட லால் சிவந்து, நீர் வடிய விளங்கும் காதலியின் கருவிழிகள், அத்தோழியை ஓயாது நோக்கி நோக்கி, "அவளே, நான்

விரும்பும் உயிர்த்தோழி" எனக் கூறாமல் கூறி உறுதி செய்தன; அதனால், அவளே இவள்தோழி, என்பதைத் தெளிவாக உணர்ந்துகொண்டான்; காதலியின் தோழியைக் கண்டு கொண்டதைத் தன் காதல் நிறைவேறினாற்போல் கருதி மகிழ்ந்தான்; "இனி, அவள் துணையால், இவளைப் பெற்று மகிழ்வேன்" எனும் மனநிறைவோடு மனைபுகுந்தான்.

"தலைப்புணைக் கொளினே, தலைப்புணைக் கொள்ளும்;
கடைப்புணைக் கொளினே, கடைப்புணைக் கொள்ளும்
புணை கைவிட்டுப் புனலோடு ஒழுகின்,
ஆண்டும் வருகுவள் போலும்; மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரிந் உறழும் கொழுங்கடை மழைக்கண்
துளிதலைத் தலைஇய தளிர் அன்னோளே" a

தோழி ஒரு பேதை:

காதலியின் தோழியை அறிந்துகொண்ட அவன் அவளை ஒருநாள் தனிமையில் கண்டு, தான் காதலியைக் கண்டது, அவளும் தானும் காதல் கொண்டது ஆய நிகழ்ச்சிகளை அறிவித்து, அக்காதல் வளரத் துணைபுரியுமாறு வேண்டினான்; அவள், அவர் காதல் உறவை, அவன் கூறுமுன்பே அறிவாளாயினும், அதைக் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. அவர்கள் காதல் எத்தகையது? உள்ளன்பு வாய்ந்ததா? அல்லது ஒரு சில நாளில் அழிந்து போகக் கூடியதா என்பதை

---

a குறுந்தொகை: 222: சிறைக்குடி ஆந்தையார்.

புணை: தெப்பம்; தலைப்புணை: தெப்பத்தின் தலைப் பக்கம் கொளினே: பற்றிக் கொண்டால்; கடைப்புணை: தெப்பத்தின் கடைப் பகுதி; ஒழுகின்: அடித்துச் செல்லப் பட்டால்; மாண்ட: மாண்புமிக்க; மாரிப்பித்திகம்: மாரிக் காலத்தே மலரும் பிச்சிமலர்; நீர்வார்: நீர் ஒழுகும்; கொழுமுகை: பெரிய அரும்பு; செவ்வெரின் உறழும்: சிவந்த மேற் புறத்தை ஒக்கும்; தலைத்தலைஇய: தன்னிடத்தே பெற்ற; தளிர் அன்னோள்: மாந்தளிரை ஒத்தவள்,

யும், அவன் யார்? தன் தோழியை மணந்து வாழத் தக்க மாண்புடையன் தானு என்பதையும் அறிந்துகொள்ள விரும்பினுள்; அதனுல், அவர் காதலுறவை அறிந்தும், அறியாதாள்போல் நடந்து கொண்டாள்; அதனுல், இளைஞன் கூறியனவற்றைக் கேட்டும் கேளாதாள்போல் போய்விட்டாள்; ஆனுல், அவன் அவளை விட்டிலன்; மறுநாளும் கண்டு குறை கூறி நின்றுன்; அன்றும், அவள் வாய் திறந்து விடையளித்திலள்; அவனும் விட்டானல்லன்; அவன் உறுதிப்பாடு கண்ட அவள், ஒருநாள், "நீ கூறும் பெண், நனிமிக இளையவள்" என்றும், பிறிதொரு நாள், "அவள் பெற்றேர் கொடியவர்; அதனுல் அவளை அடைதல் அவ்வளவு எளிதன்று" என்றும், மற்றெரு நாள், "நீ மிக உயர்ந்த குடியில் பிறந்தவன்; ஆதலின் இவள் உனக்கு ஏற்றவள் அல்லள்" என்றும்; இவ்வாறே ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பொய்க்காரணம் கூறி, அவன் வேண்டுகோளை மறுத்து வந்தாள்.

இளைஞன் பொறுமை இழந்தான்; தோழியை வெறுத்தான்; வெறுத்த அவன் வாயினின்றும் வெடித்தன சில கடுஞ்சொற்கள்; அவளை நோக்காது, எதையோ நோக்கியிருந்து, அவள் கேட்குமாறு, "மூங்கில் போலும் பருமையும் மென்மையும் வாய்ந்த தோள்களையுடைய அவ்வினையாள் விரும்பினுளாக, நான் அவளுக்குப் பாவை பண்ணி அளித்தேன்; அப்பாவை பண்ண உதவும் பஞ்சாய்க் கோரையைத் தேடி, நீர் நிறைந்துவழியும் பள்ளங்களில் அலைந்தேன்; தொய்யில் குழம்பால், அவள் மார்பில் அழகிய ஓவியம் பல வரைந்தேன்; அவளைக் காக்கும் கடமைபூண்டு, இரவு பகலாக, இமைப் பொழுதும் பிரியாதிருந்து காத்து நிற்பார் எவரும், இவற்றுள் எதையும் அறிந்திலர்; எம் இருவர்க்குமிடையே உண்டான அவ்வுறவு, அவ்வளவு பெருகி வளரவும், அதைச் சிறிதும் அறிந்துகொள்ளாத இவர்காவல் நனிமிக நன்று! அத்தகையார், இன்று நான் அவர் துணை வேண்டி நின்றுல், அதை ஏற்றுத் துணைபுரிய விரும்பாது, என்னை விரட்டுகின்றனர்! என்னே இவர் அறியாமை! இந்நாட்டாளும்

அரசன் தனிமிக நல்லவன் என்ப; அவன் அமைத்துள்ள அறங்கூறு அவையில் இருந்து அறம் வழங்கும் ஆன்றோரும், நடுவு நிலைமை பிறழா நல்லோர் என்ப; அவ்வவைக்குச் சென்று, எனக்கும் என் காதலிக்கும் உண்டான உறவுகளை எடுத்துக் கூறி முறை வேண்டி நின்றால், இவள் நிலைமை என்னாம்; அந்நிலையில், இவள் நிலை பெரிதும் இரங்கற்குரிய தாகிவிடுமே! இதை அறிந்து கொள்ள மாட்டாத இவள், உறுதியாக அறிவற்றவளேயாவள்'' என்று கூறிக்கொண்டே நடந்தான்.

''பனைத்தோள் குறுமகள் பாவை தைஇயும்,
பஞ்சாய்ப் பள்ளம் சூழ்ந்தும் மற்றும் இவள்,
உருத்து எழுவனமுலை ஒளிபெற எழுதிய
தொய்யில், காப்போர் அறிதலும் அறியார்,
முறையுடை அரசன் செங்கோல் அவையத்து
யான் தன் கடவின் யாங்காவது கொல்?
பெரிதும் பேதை மன்ற!
அளிதோ தானே இவ் வழுங்கல் ஊரே'' [a]

பழி அஞ்சுகிறது என் நெஞ்சம்:

தோழி அவன் கூறியன கேட்டு அஞ்சினாள்; அவன் கூறியவாறே மடலேறத் துணிந்துவிடுவனோ என எண்ணி நடுங்கிற்று அவள் உள்ளம்; அதை அவள் முகக் குறிப்பால் அறிந்துகொண்டான் அவ்விளைஞன்; அதனால், அவளை மேலும் நடுங்கப் பண்ணுதல் நன்றன்று என நினைந்தான்; காதலியின் அமிழ்தம் ஊறும் வாய், எக்காலத்தும் இறந்தனவே வழங்கும் அவள் நாநலம், அந்நாவையும் அஞ்சப் பண்ணி அடக்கும் கூரிய பற்கள்; சில சொற்களால்

---

[a] குறுந்தொகை 276. கோழிக் கொற்றனார்.

பனை – மூங்கில்; பாவை-விளையாட்டுப் பொம்மை; தைஇயும்–பண்ணியும்; பஞ்சாய்ப் பள்ளம்–பஞ்சாய்க் கோரைகள் வளரும் பள்ளம்; உருத்து–திரண்டு-தொய்யில்; தொய்யிலை; கடவின்-நிறுத்தி வினவினால்; யாங்காவது–என்னாவது; பேதை-அறிவின்மை; மன்ற-உறுதியாக; அழுங்கல் ஊர்–வருத்தம் மிக்க ஊர்.

பல பொருளை விளக்கும் அவள் பேரறிவு முதலாயின அவன் மனக் கண் முன் தோன்றி மகிழ்ச்சி ஊட்டின; "இத்துணை நல முடையாளை, நான் பெறத் துணைபுரிவாள், இவளே யன்றோ" என்ற எண்ணம் எழ, அவள் அச்சத்தை அகற்றத் துணிந்தான். அதனால், அவள் கேளா முன்பே, தானே தனக் குள்ளாகவே, மீண்டும் பேச்செடுத்து, "நான் விரும்பினால், பிறர் எவர் துணையும் இல்லாமலே, என் காதலியை என்னால் அடைதல் இயலும். அதை, இவ்வூரில் வாழ்வார் அனைவரும் அறிவாராக. ஆனால், அவ்வாறு அடைய முன் வந்தால் மடலேறுதல்வேண்டும்; பனை மடலால் குதிரை பண்ணி, அதன் கழுத்தில் மணி, மாலைகளைப் பூட்டுதல் வேண்டும்; திருநீறு அணிந்து ஆவிரம், எருக்கு ஆகிய மலர்களால் ஆய மாலையை நான் சூட்டிக்கொள்ளுதல் வேண்டும்; என் உருவமும், அவள் உருவமும் தீட்டிய திரையைக்கையில் ஏந்தி, அம்மடலேறி மன்றம் புகுதல் வேண்டும்; அவ்வாறு மடலேறி மன்றம் சென்றால், நான் கருதிய என் காதலியை அடைதல் உறுதி; ஆனால் ஆங்குக் கூடியிருக்கும் அனை வரும், "தன் காதல் ஒழுக்கத்தைக் கண்டோர் அறிய அம்பலமாக்கும் இக்கயவனே, இந்நல்லாளுக்குக் கணவனாக வந்து வாய்க்கத் தகுந்தவன்" எனக் கூறி எள்ளி நகைப்பரே என எண்ணிச், சிறிதே நாணி நடுங்குகிறது என் நெஞ்சம் என்று கூறி, "நாண் மிக்க நல்ல குடியில் வந்தவன் இவன்; என் தோழியின் நலமறியு மளவு, அவளோடு நெருங்கிப் பழகியும் உளன்; ஆகவே, இனியும் மறுத்தல் மாண்பாகாது" என்ற எண்ணம் அத்தோழியின் உள்ளத் தில் தோன்றுமாறு பண்ணினான்! (மறைமொழி கிளவி களால் தன் மனக்கருத்தை வெளிப்படுத்தும் அவள் மாண்பு தான் என்னே!)

"அமிழ்து பொதி செந்நா, அஞ்ச வந்த
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி அரிவையைப்
பெறுகதில் அம்ம யானே; பெற்றாங்கு
அறிகதில் அம்ம இவ்வூரே; மறுகில்

நல்லோள் கணவன் இவன் எனப்
பல்லோர் கூற யாம் நாணுகம் சிறிதே.'' a

**வந்து வந்து வருந்துகிறான் :**

இளைஞன் இனிய இயல்புடையவன்; தன் தோழியை வாழ்க்கைத் துணையாய் வரைந்துகொள்ளத் தக்க விழுமியோன் என்பதை அறிந்தாள் தோழி; அதனால், அவ்விருவர் தம் காதல் வாழ்க்கைக்குத் துணைபுரிவதாக அவனுக்கு வாக்களித்தாள்; பின்னர் பெண்ணின்பால் சென்றாள்; அவள், நாண் மிகுதியால், தன் காதல் வாழ்வைத் தோழியும் அறியாவாறு காத்து வந்தாள்; அதனால், அவள் காதலையும் அவள் காதலனையும் அறிந்து வந்த தோழி, அவனை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டியபோதும், அவள் ஏதும் அறியாதாள்போல் நடந்துகொண்டாள்; அவள் இயல்பறிந்த தோழியும், அவனைப் புதிதாக அறிமுகம் செய்வாள்போல் "பெண்ணே! ஓர் இளைஞன் நம் சேரிக்கு நாள்தோறும் வருகிறான்; தன் வருகையை யாரேனும் உணர்ந்துகொள்வரோ எனும் அச்ச மிகுதியால், எவரும் அறியாவாறு, மெல்ல மெல்ல, மறைந்து மறைந்து வருகிறான்; வந்து, தன் குறைகளைத் திடுமெனக் கூற அஞ்சி, நெடிது நேரம் வாளா இருந்து, பின்னர், மெல்லத் கூறுகிறான்; அவன் சொற்கள் காதிற்கு இனிமையாதலோடு, அவன் கூறும் அச்செய்தி கருத்திற்கு இனிமை பயப்பதாகவும் உளது. அவன் அவ்வாறு நாள்தோறும் வந்து, குறை கூறி வருந்தவும், நாம் அவனுக்கு விடையேதும் அளித்திலம்; அதனால் அவன் உள்ளம் வருந்த, அவன் உடலும் தன் ஒளியிழந்து தளர்ந்தது. அவ்வாறு வருந்துவான் வாட்டத்தைப் போக்க வேண்டும் எனும் உணர்வு, உனக்கோ அல்லது

---

a குறுந்தொகை : 14. தொல்கபிலர்.

அமிழ்து – அமிழ்துபோல் இனிய உமிழ்நீர்; பொதி – நிறைந்த; வந்த–முளைத்த; வார்ந்து–வரிசைப்பட்டு; இலங்கு– விளங்குகின்ற; வை எயிறு – கூரிய பற்கள்; சின்மொழி – சில சொல் வழங்கும்; தில் – விருப்பத்தைக் குறிக்கும் ஓர் உரிச் சொல்; பெற்றாங்கு – பெற்ற பின்பு; மறுகில் – தெருவில்,

எனக்கோ உண்டாகவில்லை; அவன் நிலை கண்டு வருந்துகிறது என் உள்ளம்; பெண்ணே! அவன் இவ்வாறு வந்து வந்து, வறிதே மீண்டு போவது ஒரு நாள் அன்று; இரு நாள் அன்று; பல நாள். பல நாளாக வந்து, தன் குறைகளைப் பணிந்த மொழிகளால் புலப்படுத்தி நிற்கும் நிலை என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துவிட்டது; அவன் பால் இரக்கங் கொண்டு விட்டேன் நான்; ஆனால், நான் இரக்கங்காட்டி என்ன பயன்? அவன் துயர் போக்கித் துணை புரியவல்லார் அவன் பால் இரக்கம் கொண்டாரலர்; அவர் உள்ளத்தைக் கவரும் ஆற்றல் அவன் சொற்களுக்கு இல்லை; அதனால் அவன் சொற்கள் பயனற்றுப் போயின; எவரும் ஏறமாட்டாத மலையுச்சியில் கட்டப்பெற்ற தேனடை, தன்பால் உள்ள தேன் எவர்க்கும் பயன்படாது வீணாகுமாறு, கொன்னே முதிர்ந்து அழிதல் போல், அவனும், தன் வேண்டுகோள் கேட்பாரற்றுக் கெட்டுப்போக, அவன் வறிதே மீண்டு சென்றான்; அவன் நிலை கண்டு இரங்குகிறேன் நான்'' என்று கூறினாள் தோழி. அத்துணை கூறியும், அப்பெண் அவள் சொல் கேட்டு, அவனை ஏற்றுக்கொண்டிலள்.

தன் இன்சொல் பயன் தராது போனது கண்ட தோழி, வன்சொல் வழங்கி அவளை வழிப்படுத்தக் கருதினாள்; அதனால், அவளைப் பார்த்து, "பெண்ணே! நாள்தோறும் வரும் வழக்கமுடைய அவன், சின்னாட்களாக வந்திலன்; அது எனக்குப் பெரிதும் கவலையைத் தருகிறது; நம்மை மறந்து வராதிருக்கும் அம்முடிவை, அவன், தானே மேற்கொண்டிருப்பானல்லன்; அவன் நம்பால் கொண்டுள்ள அன்பு, அவ்வளவு எளிதில் அழிந்து போகக்கூடியதன்று; நான் அறியாமையால் செய்த செயல் ஒன்றே, அவன் வாரமைக்குக் காரணம் போலும்; அவன் அன்பின் ஆழத்தை உணர்ந்து கொள்ளும் அறிவு இல்லாமையால், அவனை வராது விலக்கி விலக்கி, அவனை மனம் நோகுமாறு செய்துவிட்டேன்; அதனாலேயே அவன் வந்திலன்; ஆனால், நான் மறுத்தது ஒன்றையே கொண்டு அவன் நின்று விடுவானல்லனே; அவன் வரும் வழி,

கொடிய சுறு மீன்கள் கூட்டமாக வாழும் கழிகளைக் கொண்டது எனக் கூறக் கேட்டுளேன்; அதுவே என்னைப் பெரிதும் கலக்கத்திற்கு உள்ளாக்குகிறது. நம்மை நினைந்து வரும் அவனுக்கு, இடைவழியில் அச்சுறுக்களால் யாதேனும் ஏதம் உண்டாகியிருக்குமோ? அதனால்தான் அவன் வந்திலனோ என எண்ணி ஏங்குகிறது என் உள்ளம்'' என்று கூறி, "நான் மறுப்பதால், என் காதலனுக்கு அத்தகைய கேடுண்டாதலும் உண்டு கொல்'' என்ற எண்ணம் அப்பெண்ணின் உள்ளத்தில் எழத் தூண்டி, அவளை, அவனை ஏற்றுக்கொள்ளுமாறு செய்து வெற்றி கண்டாள் தோழி.

"சேரி சேர மெல்ல வந்து வந்து
அரிது வாய்விட்டு, இனியகூறி
வைகல்தோறும் நிறம்பெயர்ந்து உறையுமவன்
பைதல்நோக்கம் நினையாய், தோழி!'' [a]
'ஒருநாள் வாரலன், இருநாள் வாரலன்,
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றி, என்
நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை,
வரைமுதிர் தேனிற் போகி யோனே!'' [b]
"அம்ம! வாழி தோழி! கொண்கன்
தான் அது துணிகுவன் அல்லன்; யான்என்
பேதைமையால் பெருந்தகைகெழுமி
நோதகச் செய்ததொன் றுடையேன் கொல்லோ?
வயச்சுறு வழங்குநீர் அத்தம்
சின்னாள் அன்ன வரவு அறியானே.'' [c]

---

[a] குறுந்தொகை: 298. பரணர்.

அரிது - அருமையாக; வாய்விட்டு- வாய் திறந்து; வைகல் தோறும் - நாள்தோறும்; நிறம் பெயர்ந்து - உடல் நலம் கெட்டு; உறையுமவன் - வாழ்பவன்; பைதல் - துன்பம்;

[b] குறுந்தொகை: 176. வருமுலையாரித்தி

பணிமொழி -பணிவுடைமையை உணர்த்தும் சொற்கள்; பயிற்றி - பலமுறை கூறி; நன்னர் - நல்ல; நெகிழ்த்த -இரங்

உள்ளத்தால் ஒருவர் ஆனோம் :

தோழி கூறிய அறிவுரை கேட்டு, அவள் அவனை ஏற்றுக் கொள்ள இசைந்தாள்; அவ்வாறே தோழியின் துணையால் இருவரும் ஒன்று கூடினர்; அவன் உள்ளம் உருகி அவள் உள்ளத்துட் புகுந்தது; தன் இயல்பு கெட்டு, அவள் இயல் பானான் அவன்; தன் இயல்புகெட்டு அவன் இயல்பினாள் அவள் ஆண்மைத்; தன்மையை முழுதும் உடையனாக அவன் தோன்றிலன்; பெண்மைத் தன்மையை முழுதும் உடைய ளாக அவள் தோன்றிலள்; ஆண்மையில் சிறிது குறைந்தான் அவன்; பெண்மையில் சிறிது குறைந்தாள் அவள்; ஆண்மை யும் உரனும் அவனை விட்டகன்றன; நாணும் மடனும் அவளை விட்டகன்றன; இவ்வாறு, இருவரும் தம் தம் இயல்பிற் குறைந்தும், ஏனையோர் இயல்பை ஏற்றும் இரண்டறக் கலந்து இன்புற்றனர்.

சிறிது நாழிகை கழிந்தது; இளைஞன் பிரிந்து விடுவனோ? நம் இன்பத்திற்கு இடையூறு வந்து நேருமோ என்ற அச்சம் அவளுக்கு உண்டாயிற்று. அவள் உள்ளக் குறிப்பினை உணர்ந்துகொண்ட இளைஞன், அவளைப் பார்த்து "அன்பே! என் தாயும், உன் தாயும் ஒருவரையொருவர் அறிந்த வரல்லர்; என் தந்தைக்கும் உன் தந்தைக்கும் இதற்குமுன் யாதேனும் உறவு உண்டா? இல்லையன்றோ? நாம் இருவரும்

---

கப் பண்ணிய; பின்றை - பிறகு; வரை -மலையுச்சியில்; முதிர்- முதிர்ந்த; தேனின் - தேன் இறால் போல்; போகியோன்- போனவன்;

c குறுந்தொகை : 230. அறிவிடை நம்பி.

அம்ம-ஒன்று கூறுகிறேன் கேள்; கொண்கன் - தலைவன்; தான் - தானே, அது - அங்ஙனம் வாரதிருத்தலை; துணிகு வனல்லன் - முடிவு செய்யான், பெருநகை கெழுமி - பெரிய தகுதிப் பாட்டுரிமையால், நோதக -வருந்துமாறு? வயச் சுற- கொடிய சுற மீன், வழங்கும் - வாழும், நீர் அத்தம் - நீர் நிறைந்த வழி.

தான், இதற்குமுன், ஒருவரையொருவர் கண்டு பழகிய துண்டா? இல்லை; இவ்வாறு நம் புறத்தொடர்பில், நம் இருவரிடையே எத்தகைய உறவும் இல்லையெனினும், உண்மை அன்புடைய நம் உள்ளங்கள் இரண்டும் ஒன்றுகலந்துவிட்டன; நல்ல மண்ணும், அம்மண்ணில் ஊற்றிய நீரும் சேர்ந்து உண்டான கலவைபோல் ஆயின நம் உள்ளங்கள்; மண்ணும் நீரும் ஒன்று கலக்கும் கலவைக் கண், இரண்டுமே ஒன்று கலக்கும்; இரண்டுமே தம் இயல்பு இழக்கும்; அங்கே, தனி மண்ணும் இராது; தனி நீரும் இராது; மண்ணின் திண்மையும் ஆண்டு இராது; நீரின் ஓடுந்தன்மையும் ஆண்டு இராது; மண்ணும் நீரும் மறைய சேறு என்ற புதுப்பொருள் தோன்றும்; அச் சேற்றில் மண்ணின் இயல்பும் இருக்கும்; நீரின் இயல்பும் இருக்கும் அவ்விரு பொருள்களும், அவற்றின் இரு இயல்புகளும் இரண்டறக் கலந்து ஒன்றாகும்; இவ்வாறு, என் தனி ஆண்மையும், உன் தனிப் பெண்மையும் அழிய, என் ஆண்மையும் உன் பெண்மையும் ஒன்று கலக்கத் தோன்றிய ஒரு புது நிலையைப்-பிரிவறியாப்பெருநிலையைப்பெற்றுவிட்டோம்; ஆதலின் 'பிரிவேமோ' என்று எண்ணித் துயர் கொள்ளுதல் பொருந்தாது'' என்று கூறித் தேற்றினான்.

> "யாயும் ஞாயும் யாராகியரோ?
> எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
> யானும் நீயும் எவ்வழி அறிதும்?
> செம்புலப் பெயல்நீர் போல
> அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே!"

---

௨ குறுந்தொகை: 40. செம்புலப் பெயல் நீரார்.

யாய்–என் தாய்; ஞாய்–உன் தாய்; யார் ஆகியர்; ஒருவருக்கொருவர் எத்தகைய உறவுடையர்; எந்தை–என் தந்தை; நுந்தை–உன் தந்தை; எம்முறை–எவ்வகையில்; கேளிர்–உறவுடையர்; அறிதும்–அறிந்தோம்; செம்புலம்–செம்மண் நிலம்; பெயல் நீர்–மழைநீர்.

## கணவன் கொடியன் அல்லன்

தோழியின் துணையால், அவர் காதல் வளர்ந்தது; இளைஞன், நாள்தோறும் வந்து, தன் காதலியைக் கண்டு மகிழ்ந்து செல்வதை வழக்கமாகக் கொண்டான்; இந்நிலையில் நாட்கள் சில கழிந்தன. "உன்னைப் பிரியேன்; பிரிந்தால் அறம் அல்லன செய்தவன் ஆவேன்" எனச் சூளுரைத்துப், பிரிவு நேருமோ என அஞ்சிய அவள் அச்சத்தைப் போக்கிய இளைஞன், சின்னாட்களாக வந்திலன்; அவன் வாராமையால் அவள் வருந்தினாள்; அவ்வருத்த மிகுதியால் அவள் தோள் தளர்ந்தது; அவள் நெற்றி ஒளி இழந்தது.

ஒரு நாள், ஆடி முன் அமர்ந்து தன்னை நோக்கியவள், தன் உடலில் உண்டான இம்மாறுபாடுகளைக் கண்டாள்; இம்மாறுபாட்டிற்குக் காரணம், காதலன் தன்னை மறந்து வாராதிருக்கும் கொடுமையே என உணர்ந்தாள்; அந்நினைவு உண்டாகவே, அவளை வேறோர் அச்சம் பற்றி அலைக்கத் தலைப்பட்டது; காதலன், தன்னைக் கண்டு, தன்னோடு உறவு கொண்ட அன்று, மன்றக் கடவுள் முன்நின்று, பிரியேன் என்று ஆணையிட்டது அவள் நினைவிற்கு வந்தது; அந்நினைவைத் தொடர்ந்து, "அன்று அவ்வாறு ஆணையிட்டவன், இன்று பிரிந்து சென்று மறந்து வாழ்கிறான்; அவன் பிரிவால் என் உடல் தளர்ந்துவிட்டது; இவ்வாறு என் உடல் தளருமாறு தன் ஆணையை மறந்த கொடியோன் என்பதை, அன்று அவன் உரைத்த ஆணையைக் கேட்டிருந்த அக்கடவுள் அறியுமாயின், அவனைத் துன்புறுத்தும்; கடவுள், அவன் பிரிவால் வருந்தும் என் தளர்நிலை கண்டே, அவன் கொடியன் என்பதை உணரும்; ஆதலின் கடவுள் என் காதலனைத் தண்டித்தற்கு நானே காரணமாவேன்; காதலனுக்குக் கேடு சூழ்வாள் காதலி ஆவளோ?" என இவ்வாறு சென்றது அவள் சிந்தனை. உடனே, அவள் "உன் உடல் தளர்ந்தது ஏன்?" என எவரும் கேளா முன்பே, "நான் அவர்பால் பெருங்காதல் கொண்டேன். அது நிறைவேறவில்லை; அக்குறையால் என் நுதல் பசந்தது; என் உள்ளம் அவன் அன்பிற்கு உருகிவிட்டது;

ஆனால் அவ்வன்பு கைகூடவில்லை; அதனால் என் தோள் தளர்ந்தது; ஆகவே, என் நுதல் பசப்பிற்கும், தோள் தளர்ச்சிக்கும் நான் கொண்ட ஆசையே காரணமாவதல்லது அவர் காரணமாகார்; என் தளர்ச்சி அவரால் வந்ததன்று; அவர் அதைச் செய்யார்; அவர் அத்துணைக் கொடியரல்லர்; ஆகவே, மன்றத்தில் நிற்கும் மரத்துறையும் தெய்வமே என் மனம் விரும்பும் அவரைக் கொடுமை செய்யற்க, இது, என் உள்ளம் உருக நான் விடுக்கும் வேண்டுகோள்" எனக் கூறினாள்; அவள் காதலின் தூய்மைதான் என்னே?

"மன்ற மராஅத்த பேஎம் முதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப; யாவதும்
கொடியர் அல்லர் எம் குன்றுகெழு நாடர்;
பசைஇப் பசந்தன்று நுதல்;
நெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே"[a]

காட்டாற்றங்கரைக்கு வருக:

அவளும் அவனும்கொண்ட தொடர்பினைத் தோழி ஒருத்தியே அறிவாள், அதைப் பிறர் அறியின் கேடாய் முடியும்; அதனால் அவளும் அவனும், ஒருவரையொருவர் கண்டு மகிழ்தலைப் பிறர் எவரும் அறியாவாறு மறைத்தே மேற்கொள்ள வேண்டியதாயிற்று. அதில் பெரிதும் விழிப்பாய் இருந்தாள் தோழி; அதனால், அவர்கள் ஒருநாள் சந்தித்த இடத்திலேயே மறுநாளும் சந்திப்பதை அவள் விரும்பாள்;

---

[a] குறுந்தொகை: 87. கபிலர்

மன்றம்—ஊர் நடுவே உள்ள பொதுவிடம்; மராஅத்த—செங் கடம்பு மரத்தில் வாழும்; பேஎம் முதிர்—பிறர்க்குக் கொடுமை செய்வதில் மிக்க; தெறூஉம்—துன்புறுத்தும்; யாவதும்—சிறிதும்; குன்று கெழு—குன்றுகள் நிறைந்த; பசைஇ—அவரை விரும்பியதால்; பசந்தன்று—ஒளி இழந்தது; ஞெகிழ—என் உள்ளம் உருகியதால்; ஞெகிழ்ந்தன்று—தளர்ந்தது; தட—பருத்த.

சந்திப்பிற்கான இடத்தை நாள்தோறும் மாற்றிக்கொண்டே வந்தாள். இன்று வரும் இளைஞனிடம், நாளைக்குச் சந்திக்கும் இடம் இது என்பதைக் குறிப்பால் அறிவித்துவிடுவாள் அவ்வாறு அவள் இடம் குறிக்கும் வகை, அறிந்து மகிழ்தற்கு உரியதாம்.

ஒருநாள், இளைஞன் வழக்கம் போல் வந்து, சிறிது மகிழ்ந்திருந்து, பின்னர் ஊர் திரும்பினன்; அந்நிலையில், அவனை இடைமறித்து, "அன்பே' எம் ஊர்க்கு அண்மையில் ஒரு பொய்கை உளது; அப்பொய்கைக்கு அப்பால், ஒரு சிறிய காட்டாறு ஓடுகிறது; அப்பொய்கைக்கு மிகவும் அண்மையில் உளது அக்காறு; அக்காற்றங்கரையில் ஒரு சாலை உளது; மரங்கள் நெருங்க வளர்ந்தது அச்சோலை; அதனால், சோலைக்கு இருபாலும் உள்ள காற்றிலும் பொய்கையிலும் இரை தேடித் திரியும் நாரைகள் அல்லது வேறு எவரும் அதனுட்புகார்; நாங்கள், ஆங்குள்ள பொய்கைக்கு, எங்கள் கூந்தலுக்கு இட்டுப் பிசைதற்கு வேண்டும் களிமண் கொண்டு வருவதற்குச் செல்லும் வழக்கம் உடையேம்; அவ்வாறு செல்லும் எங்களைத் தொடர்ந்து உன் காதலியும் வருவள்" என்று கூறினள்.

ஊர்க்கு அண்மையில் உளது பொய்கை; பொய்கைக்குச் சேய்மைக்கண் எல்லை காறு என்றமையால், அவர்கள் ஆங்கு வருதல் எளிது என்பதையும், பொழிலுள் தாரை அல்லது பிற எவையும் புகா என்றமையால், ஒருவரும் காணுவாறு, காதலியைக் கண்டு மகிழ்தற்கேற்ற மறைவிடங்கள் ஆங்கு நிறைய உள என்பதையும், கூந்தலுக்கு வேண்டும் களிமன் கொணர்தற்கே மகளிர் ஆங்கு வருவர் என்றமையால், அவர்களும், அது கிடைக்குப் பொய்கைக் கரையிலேயே நிற்பதல்லது, பொழில் வரையும் வாராராதலின், தம் காதல் ஒழுக்கத்தை அவரும் கண்டுகொள்ளார் என்பதையும், இளைஞனை உணரப் பண்ணி, மறுநாள் ஆண்டுவந்து நிற்குமாறு செய்த தோழியின் அறிவுடைமை பாராட்டதற்கு உரித்து.

"ஊர்க்கும் அணித்தே பொய்கை; பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே, சிறு கான்யாறே;
இரைதேர் வெண்குருகு அல்லது, யாவதும்
துன்னல் போகின்றால் பொழிலே; யாம் எம்
கூழைக்கும் எருமண் கொணர்கம் சேறும்;
ஆண்டு வருகுவள் பெரும் பேதையே." [a]

## தூதுரைக்க வல்லார் வருவரோ?

*கானாற்றங்கரை, காவற்சோலை, கடற்கரை, தினைப்புனம் போன்ற இடங்கள் தனக்கும் தோழிக்கும் மட்டும் தனியுரிமை உடையனவாகா; ஊரார் அனைவர்க்கும் உரிய பொதுவிடங்கள் அவை. அதனால், ஆங்கெல்லாம், ஒருவர் மாறி ஒருவர் ஓயாது வந்து கொண்டேயிருப்பராதலின், காதலனோடு களித்துத் திரிவதற்கு அவ்விடங்கள் ஏற்றன வாகா என்பதை அறிந்துகொண்டாள் அப்பெண். ஆனால், வாய்ப்புடைய இடங்கள் வாய்க்கவில்லையே என்றதால், காதலனை வாராதே என்று கூறவோ, அவனைக் காணதிருக்கவோ அவள் விரும்பவில்லை; அது அவளால் இயலாது. அதனால் காதலனை வரவேற்று, அவனோடு இடையீடின்றி நெடும் பொழுது இருந்து இன்புறற்கேற்ற இடமும் காலமும் வாய்க்காவோ என வருந்திக் கிடந்தாள் அப்பெண். பிறர் கண்ணில் படாது, காதலனோடு களித்திருக்க வேண்டுமாயின், அதற்குத் தன் மனையொன்றே ஏற்புடைய இடமாம்; ஆனால், ஆங்குத் தாயும் தந்தையும் தன்னை ஓர் இமைப்பொழுதும் தனித்திருக்க விடுவதில்லை; மேலும், மீனினத்தின் மன்னன் என மதிக்கப்பெறும் கொடிய சுறுமீன் வேட்டையில் விருப்புடையனாகிய தந்தை, அத்த*

---

[a] குறுந்தொகை: 113. மாதிரத்தனார்.

*அணித்து - அண்மையில் உளது; சேய்த்தும் அன்று—தொலைவில் இல்லை; கான்யாறு—காட்டாறு; வெண்குருகு—நாரை; யாவதும்—வேறு எந்த உயிரும்; துன்னல்—நெருங்குதல்; போகின்று-இல்லையாம்; கூழைக்கு-கூந்தலுக்கு; எருமண்—களிமண்; கொணர்கம்—கொண்டுவருதற் பொருட்டு.*

கைய வேட்டையொன்றில், சுறுவால் தாக்குண்டு, அதன் கோடுகள் குத்திப் பண்ணிய பெரும் புண் பெற்றுச் சின்னுட்களாக வீட்டோடே வாழ்கின்றுன். உப்பங்கழியருகே உப்புப் பாத்திகள் அமைத்து, உப்பு விளைவிப்பதும், விளைந்த உப்பை உள் நாடுகளுக்குக் கொண்டுசென்று விற்று, நெல் வாங்கி வருவதும் ஆகிய தொழில்கள் மேற்கொண்டு, பகற் போதின் பெரும்பகுதி வீட்டிற்கு வாரா இயல்புடைய தாயும், புண்பெற்றுப் படுத்திருப்பவனுக்குப் பணி புரிய வேண்டி. வீட்டிலேயே தங்கி விட்டாள். அதனுல் ஏற்ற இடம் கண்டும், ஏற்புடைய காலத்தைக் காணமாட்டாமல் கலங்கிஞள். சின்னுட்கள் சென்றன. தந்தைக்குப் புண் ஆறிவிட்டது. அவன் கடல்மேற் சென்றுவிட்டான். தாயும் தன் தொழில்மேற் சென்றுவிட்டாள். வீட்டில் அவள் தனித்து விடப்பட்டாள். மேலும், சில நாட்களாகச் செய்யாதிருந்த தொழிலையெல்லாம் சேர்த்து முடித்து வருவதையே, தந்தையும் தாயும் விரும்புவராதலின், அவர்கள் வழக்கம்போல் வாராது, அன்று சிறிது காலம் கழித்தே வருவர். ஆகவே, அவள் எதிர்நோக்கியிருந்த இனிய காலம் வாய்த்துவிட்டது. இந்நிலையில் காதலன் வந்தால், தங்கு தடையில்லாமல் களித்து மகிழலாமே என எண்ணி மகிழ்ந்தது அவள் மனம்; அது பெற, அது துடித்தது; ஆனுல் அவனே, நனிமிகச் சேய நகரில் வாழ்பவன். ஆங்குச் சென்று அவனை அழைத்து வருதல் வேண்டும்; அதைத் தன்னுல் செய்ய இயலாது. அதற்குப் பிறர் துணையையே நாட வேண்டும்; என் வேண்டுகோள் ஏற்றுத் துணை புரிய வருவார் மெல்லச் செல்பவராதல் கூடாது; தாயும் தந்தையும் வினை முடித்து வீடு வந்து சேர்வதற்குள், காதலனோடு நெடும் பொழுது இருந்து இன்புறுதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவனை இவண் விரைந்து கொண்டுவருவாரே செல்லுதல் வேண்டும்; அதற்கு நடந்துசென்ருல் இயலாது; குதிரைமீதே செல்லுதல் வேண்டும்; ஆகவே, என் விருப்பம் அறிந்து, விரைந்தோடவல்ல குதிரைமீது அமர்ந்து, இயல்பாகவே விரைந்தோடும் அதை, மேலும் முடுக்கி விரைந்தோட்டிச்

செல்ல வல்லராதல் வேண்டும். என்பால் அன்பு கொண்டு, ஆங்குச் சென்று, என் காதலனைக் கண்டு, "அன்ப! உன் காதலியைக் கண்டு களிக்க இது நேரம்; இப்போதே சென்றால், அவளைக் காண்பதும், களிப்பதும் எளிதில் கிட்டும்; ஆகவே, இந்நிலையே ஆங்குச் செல்" எனத் தூதுரைக்கவல்லார் துணை கிடைப்பின் எத்துணை நன்றாம் எனக் கூறிப் பெருமூச்செறிந்தாள்.

"சேயாறு சென்று, துனைபரி அசாவாது
உசாவுநர்ப் பெறினே, நன்றுமன், தில்ல;
வயச்சுரு எறிந்த புண் தணிந்து, எந்தையும்
நீல்நிறப் பெருங்கடல் புக்கனன்; யாயும்
உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்புவிளை கழனிச் சென்றனள்; அதனால்
பனிஇரும் பரப்பின் சேர்ப்பற்கு
இனிவரின் எளியள்' என்னும் தூதே."

அவன் எவ்வாறு வருந்தினனோ?

அவர் காதலை ஒருவரும் அறியாதவாறு காப்பதில், தோழி எவ்வளவோ விழிப்பாயிருந்தும், ஓரிருவர் அதை அறிந்துகொண்டனர்; ஊருக்குப் புதியவனாய இளைஞனைத் தம் ஊரில் தொடர்ந்து கண்ட சிலர், அவர் காதல் ஒழுக்கத்தை மெல்ல அறிந்துகொண்டனர்; அது தோழிக்குத் தெரிந்தது; அதனால், இவன் இவ்வாறே பகற் காலத்தே தொடர்ந்துவரின், நாளடைவில் இவர் உறவினை ஊரார்

---

உ குறுந்தொகை : 269. கல்லாடனார்.

சேயாறு-நெடுந்தூரம்; துனைபரி-விரைந்தோடும் குதிரை; அசாவாது-வருந்தாமல்; உசாவுநர்-துணைபுரிவார்; நன்றுமன்-நன்றாம்; தில்ல-விருப்பத்தைப் புலப்படுத்தும் ஓர் இடைச்சொல்; வயச்சுறா-வன்மை மிக்க சுறாமீன்; மாறி-விற்று; தரீஇய-கொண்டுவர. பனி இரும்பரப்பு-குளிர்ந்த பெரிய கடல்; சேர்ப்பன்-நெய்தல் நிலத் தலைவன்; இனி-இப்போது.

அனைவரும் அறிந்துகொள்வரே என அஞ்சினாள்; அதனால், வழக்கம்போல் வந்த இளைஞனை ஒருநாள் கண்டு "அன்ப! இனி ஈங்குப் பகலில் வராதே; இரவில் எல்லோரும் உறங்கிய பின்னர், எம் வீட்டிற்கு வருக" எனக் கூறி அனுப்பினாள்.

அவனும், அவ்வாறே, அன்று முதல் இரவில் வரத் தொடங்கினான்; ஆனால் அது அவ்வளவு எளிய செயலாகத் தோன்றவில்லை; இரவுச் சந்திப்பிற்கு எத்தனையோ இடையூறுகள் உண்டாயின; ஒருநாள், ஊரில் காவல் கடுமையாக இருந்தது; அதனால் ஊருள் நுழைய முடியாமலே திரும்பிவிட்டான்; மற்றொரு நாள், அவன் அவ்வூருக்குப் புதியவன் ஆதலின், அவ்வூர் நாய்கள் அவனைக் கண்டதும் குரைத்துத் துரத்தத் தொடங்கின; அதனால், தன் வருகையை ஊரார் அறிந்துகொள்வர் என அஞ்சி அகன்றுவிட்டான்; ஒருநாள், காவலர் காவலையும் கடந்து, ஊர் நாய்கள் உணர்தலினின்றும் தப்பி வீடுவரை வந்துவிட்டான்; அந்நிலையில் நிலவு வெளிப்பட்டு, பேரொளி பரப்பிக் காயத் தொடங்கிற்று; களவு வாழ்க்கைக்கு நிலவொளி தகுதியுடையதன்று எனக் கருதி ஊர் திரும்பிவிட்டான்; ஒருநாள் இரவு, நல்ல இருட்டு; மேலும் பெரு மழை பெய்துகொண்டிருந்தது; விழித்த கண் விழித்தவாறே வாழும் இயல்பினவாய பேய்களும், தம் கண்ணிமைகளை மூடிமூடித் திறக்குமாறு, கொடிய புயல் கடுமையாக வீசிற்று; வெளியுலக நிலையோ அது; அப்பெண்ணின் வீட்டின் அகத்தே, மழையின் கொடுமை கண்டு அஞ்சும் மகளை அணைத்துக் கொண்டு படுத்திருந்தாள் தாய்; அவளுக்கு உறக்கம் வரவில்லை; தன் அருகில் படுத்திருக்கும் மகளும், மழைக்கு அஞ்சி, உறங்காது விழித்துக்கொண்டுள்ளளோ என்பதை அறிய, அவ்வப்போது, அன்னாய்! அன்னாய்! என அழைத்துக்கொண்டிருந்தாள்;

அந்நிலையில் அங்கு வந்து சேர்ந்தான் இளைஞன்; மழையைப் பொருட்படுத்தாது வந்தவனாதலின், மழையால் நனைந்த யானைபோல் வந்து நிற்கும் அவனைக் கண்டு வருந்தினாள் அப்பெண்; மேலும் வந்தவன் மார்பில் பூசிய சந்தனத்

தின் மணம் கம்மென வீசிற்று; புது மணம் திடுமென வீசக் காரணம் யாது என ஆராயுமாறு, தாயை அது எழுப்பி விடுமோ என அஞ்சினாள்; வந்து நிற்பான்பால் சென்று, "அன்னை உறக்கம் கொண்டிலள்; ஆகவே, அவள் உறங்கும் வரை சிறிது காத்திருப்பாயாக" என்றோ, "இன்று போய் நாளை வருக" என்றோ கூறமாட்டாது வருந்தினாள்; நான் அவன்பால் சென்ற சமயத்தில், தாய் என்னை விளிக்க, நான் குரல் கொடுக்காமையால், என் பாயலைநோக்க, நான் ஆங்கு இல்லாமை அறிந்து, என்னைத் தேடிக்கொண்டு, நானும் என் காதலரும் இருக்கும் இடத்திற்கு வந்துவிட்டால் என் நிலை என்னாம்" என எண்ணினாள்; தன் களவு வெளிப்பட்டு விடுமே என அஞ்சினாள், அதனால், மழையின்கொடுமை கண்டும் அஞ்சாது வந்துள்ளான் என்பதை அறிந்தும், அவள் அவன்பால் சென்றிலள்.

காதலியின் வரவினை எதிர்நோக்கி நின்ற இளைஞன், நெடிது நேரம் கழியவும் அவள் வாராளாகவே, வருந்தி வறிதே வீடு திரும்பினான்; தாய் அறிந்துகொள்வள் என அஞ்சி, அவனைக் காணச் செல்லாத அவள், அவன் சென்ற பின்னர், "அந்தோ! நான் வாராமையால், அவன் எவ்வாறு வருந்தினனோ? என்ன என்ன எண்ணினனோ? யாது செய்யத் துணிந்தனனோ" எனப் பலப்பல எண்ணி வருந்தினாள்.

"பொழுதும் எல்லின்று; பெயலும் ஓவாது
கழுது கண்பனிப்ப வீசும்; அதன்தலைப்
புலிப்பல் தாலிப் புதல்வன் புல்லி
அன்னா! என்னும் அன்னையும்; அன்னோ!
என் மலைந்தனன்கொல்தானே, தன்மலை
ஆரம் நாறும் மார்பினன்
மாரி யானையின் வந்து நின்றனனே." [a]

---

[a] குறுந்தொகை ௧௬௧, நக்கீரர்.

எல் இன்று – ஒளி இழந்தது; ஓவாது – ஒழியாது; கழுது பேய்; பனிப்ப – இமைக்குமாறு; அதன் தலை – அதற்குமேல்;

தோழி! என் நெஞ்சு நடுங்குகிறது:

இளைஞன் இரவில் வந்து செல்வதற்கு இடையூறு பல உண்டாதல் ஒருபுறம் இருக்க, அவன் இரவில் வருதலை, அப் பெண்ணும் விரும்பவில்லை! அவன் ஊருக்கும், அவள் ஊருக் கும் இடையில் உள்ள வழி, காடுகளையும், மலைகளையும் கொண்டது; காட்டாறுகள் பல உடையது; அவ்வழியைக் கடந்து வருவார், காட்டுக் கொடு விலங்குகளால் கேடுறுது வருதல் இயலாது; காட்டாறுகளைக் கடத்தலும் எளிதன்று; அவை பெருக்கெடுத்து ஓடுங்கால், பெரிய யானைகளையும் அடித்துச் செல்லும் ஆற்றல் உடைய அக்கொடிய வழியைப் பகலில் கடத்தலே இயலாது என்றால், அவ்வழியில் இரவில் வருவார்க்கு எத்துணைப் பெருங்கேடு உண்டாமோ! காட்டு வழியின் இயல்பு இது என்பதை அவள் அறிவாள்; அதனால் தன்னைக் கண்டு, தனக்கு இன்பம் ஊட்டுவதற்காக, இளைஞன், கொடுமை மிக்க அவ்வழியில் இரவில் வருவதை அவள் விரும் பவில்லை. அவ்வாறு வருவதால், அவனுக்கு ஏதேனும் ஏதம் உண்டாய்விடின் என் செய்வது என எண்ணி நடுங்கிற்று அவள் உள்ளம்.

ஒருநாள் தோழியை அழைத்தாள்; "தோழி! இயல்பா கவே அஞ்சும் இயல்புடையது என் நெஞ்சம்; ஆந்தை மலையில் ஒலிக்கக் கேட்டாலும், நம் மனைக்கு எதிரே உள்ள பலாமரத் தில், குரங்குகள் பாய்வதால் ஒலி எழுந்தாலும் அஞ்சி நடுங் கும் இயல்புடையது என் நெஞ்சம்; ஆனால், அவ்வாறு அஞ்சும் நிலையை, அது இப்பொழுது கடந்துவிட்டது; இப் பொழுதெல்லாம், அது, நம் காதலன் வரும் காட்டின் கொடு மைகளை மனக் கண்முன் கண்டு, நடுங்கி நடுங்கி அழியத் தொடங்கிவிட்டது; அதனால் அது, முன் அஞ்சியன கண்டு, இப் பொழுது அஞ்சுவதில்லை; அதனினும் பெரிய அச்சம் அதைப்

---

புல்லி – அணைத்துக்கொண்டு; அன்றோ – அந்தோ; என் மலைந் தனன் கொல் – எதைச் செய்ய மேற்கொண்டானோ; ஆரம் – சந்தனம்; மாரி யானையின் – மழையில் நனைந்த யானைபோல்,

பிடித்து அலைக்கத் தொடங்கிவிட்டது; தோழி! அதன் நிலை மிகவும் இரங்கத்தக்கதாகிவிட்டது" என்று கூறி, "அஞ்சக் கூடாதன கண்ட வழியும் அஞ்சும் இயல்புடைய என்னுல், காதலன் வரும் காட்டின் கொடுமையைக் கண்டு நடுங்கா திருத்தல் இயலாததாயிற்று; அந்நடுக்க மிகுதியால், என் உயிர் இழந்து போதலும் உண்டாம்; ஆகவே, தோழி! அவர் இரவில் வருதலைத் தடை செய்வாயாக" என மறைமுகமாக வேண்டிக் கொண்டாள்.

"குன்றக் கூகை குழறினும், முன்றில்
பலவின் இருஞ்சினைக் கலைபாய்ந்து உகளினும்
அஞ்சுமன்; அளித்து என்னெஞ்சம், இனியே
ஆர்இருட் கங்குல் அவர்வயின்
சாரல் நீள்இடைச் செலவு ஆனுதே." [a]

நள்ளிரவில் வாரற்க :

இளைஞன், தன் காதலியால் கொண்ட பேரன்பால், கடத்தற்கரிய காட்டு வழிகளைப், பேயும் உறங்கும் நள்ளிரவில், அஞ்சாது கடந்து வரலாயினன்; ஆனால் அவளோ, அவன் அவ்வாறு வருதலை விரும்பவில்லை. வரும் வழியில் அவனுக்கு ஏதம் உண்டாயின், தன் உயிர் நில்லாது என அஞ்சினுள்.

பெண்ணின் இவ்வுள்ளத்தை அறிந்தாள் தோழி; ஒரு நாள் ஆங்குவந்த இளைஞனைக் கண்டு "அன்ப! நீ வரும்வழி ஏதம் மிக உடையது; அவ்வழிவரும் உனக்கு, ஆங்கு வாழும் விலங்குகளாலும், அணங்குகளாலும், உயிர்க்கேடு உண்டாதலும் கூடும்; அவ்வாறு உண்டாயின், நின் காதலி உயிர்

---

[a] குறுந்தொகை : 153. கபிலர்.

கூகை – ஆந்தை; குழறினும் – ஒலித்தாலும்; இருஞ்சினை– பெரியகிளை; கலை – ஆண் குரங்கு; உகளினும் – பாய்ந்தாலும் மன்–அது கழிந்தது; அளித்து – இரங்கத் தக்கது; செலவு – செல்லுதலை; ஆனுது – நீங்காது.

வாழாள்; கணவர் இறந்தால் அவரோடு தாமும் உயிரிழந்து போகாது, அவர் இறந்த பின்னரும் உயிர்வாழ்ந்து, கைம்மை நோன்பு நோற்றுக் காலங்கழிக்கும், கற்பின் மாண்பறியா மகளிர் போன்றவள் அல்லள் உன் காதலி; நீ இறந்தால், அவளும் உயிரிழப்பாள்; ஆகவே அன்ப! அக்காட்டு வழியை இரவிற் கடந்து வருதலை அஞ்சுகிறேன்'' என்று கூறினாள்.

ஒரு பெண், தன் தோழியின் காதலன்முன் நின்று, ''அன்ப! உன் காதலிபால் கொண்ட அன்பின் மிகுதியால் நீ இறந்து போவாய்; அவ்வாறு நீ இறந்தால், உன் காதலியும் உயிர் இழப்பாள்'' என்பன போன்ற சொற்களைக் கூறல் மங்கலமுறையோ, மரபு நெறியோ ஆகாது என்பதைத் தோழி அறிவாள்; ஆதலின், இளைஞனுக்குத் தான் கூறக் கருதிய அக்கருத்துக்களை, அவ்வாறே, அச்சொல்லுருவில் கூறினாளல்லள்; தான் கருதிய அக் கருத்து, அவன் உள்ளத்தில் தானே தோன்றத் துணை புரியவல்ல மறைமொழிகளால் உணர்த்த விரும்பினாள்; அதனால், ''இரவில் வாரற்க'' என்று கூறுவதன் முன்னர், ''அன்ப! உன் நாடு, தன்பால் அன்பு மிகக் கொண்ட ஆண்குரங்கு இறந்து போக, அதன்பால் பிரிவறியாப் பேரன்புகொண்ட பெண் குரங்கு, அது இறந்த பின்னர் இருந்துவாழ விரும்பாது, மரமேறுதலும், வரை பாய்தலும் ஆகிய தன் இனத்தொழிலைக் கற்றுத் தெளியாத இளம் பருவம் உடைய தன் குட்டியைத் தன்னோடு வாழும் தன் இனக் குரங்குகளிடத்தே ஒப்படைத்துவிட்டு, உயர்ந்த ஒரு மலையுச்சியை அடைந்து, ஆங்கிருந்து, கீழே உருண்டு வீழ்ந்து உயிர்விட்டு உயர்வடையும் சிறப்புடையது'' எனப் பாராட்டினாள்; இவ்வாறு அவன் நாட்டைப் பாராட்டுமுகத்தான், உன் நாட்டு விலங்குகளிடத்தே காணப்பெறும் இவ் விழுமிய பண்பு, எங்கள் நாட்டுப் பெண்களிடத்தும் உண்டாகும் என்பதை உணர்வாயாக என அறிவுறுத்தினாள், எவரும் வெளிப்படக் கூறத்தகாத ஒரு பொருளை, மங்கல மரபால் மாண்புறக் கூறிய தோழியின் அறிவுமாட்சி அறிந்து மகிழ்தற்குரியதன்றோ!

"கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி,
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர்செகுக்கும்
சாரல்நாட! நடுநாள்
வாரல், வாழியோ! வருந்துதும் யாமே"௨

ஓடி ஆடித்திரிந்து மகிழ்ந்த மகள் மணப்பருவம் பெற்றமை அறிந்ததாய், வீட்டைக்கடந்து, அவள் வெளிச் செல்லாவாறு காப்பதில் கருத்துடையளானாள்; அதனால் காதலனைப் பகற்காலத்திலும் காண்பது இயலாதுபோயிற்று; இரவில் வருதல் இன்னல் நிகழ்தற்கு ஏதுவாம் என அவள் அஞ்சுவதாலும், ஏதம் பாராது வரினும், காவல்மிகுதியால், அவளைத் காண இயலாது வறிதே மீண்டு அவன் வருந்துவதாலும், அப்பெண்கள் இருவரும்கூடி, இளைஞனைப், "பகலில் வாரற்க; இரவில் வருக" என்றும், "இரவில் வாரற்க, பகலில் வருக" என்றும் மாறிமாறிக் கூறி, இறுதியில், "இனி எக்காலத்தும் வாரற்க" எனக் கூறிவிட்டனராயினும், அவன் வாராமையால், அவள் பெரிதும் வருந்தினாள்; அவனைக் காணாக் கலக்கம் பெரிதாயிற்று; அதனால், அவன்வரினும் ஏதமாம், வாராதிருப்பினும் ஏதமாம் என அறிந்தனர்; காதலனோடு இணைபிரியாது வாழ்தலும் வேண்டும்; அவ்வாழ்க்கையால் அவன் உயிர்க்கும், அவள் நாணிற்கும் கேடின்மையும் வேண்டும் என விரும்பினர்; அவ்வாறு விரும்பிய அப்பெண்கள், அதற்கு, இக்களவு வாழ்க்கை ஏற்றதன்று; பலரும் அறிய மணந்து வாழ்

---

௨. குறுந்தொகை: 69. கடுந்தோட்கரவீரன்.

தாக்கலை–தாவும் தொழில்வல்ல ஆண்குரங்கு; பெரும்பிறிது–இறப்பு; உற்றென–அடைந்ததாக; கைம்மை–கைம்மை நோன்பு நோற்பதால் உளதாம் துன்பம்; உய்யா–போக்கமாட்டாத; காமர்–அன்புமிக்க; மந்தி–பெண்குரங்கு; கல்லா–தம் தொழில் அறியா; வன்பறழ்–இளங்குட்டி; செகுக்கும்–மாய்த்துக்கொள்ளும்; வாரல் வாராதே.

தலே ஏற்றதாம் என்பதும் அறிந்தனர்; ஆனால், இளைஞனே விரைவில் மணந்துகொள்பவனாகத் தோன்றவில்லை; மணந்து கொள்ளும் எண்ணமே அவனுக்கு உண்டாகவில்லை; அவ்வெண்ணத்தைப், பிறரே அவனுக்கு ஊட்டுதல் வேண்டும்; ஆனால், அதைச் செய்ய அவர் பெண்ணுள்ளம் நாணிற்று; பெண் ஒருத்தி, தன்னைக் காதலிப்பான் முன் நின்று, "என்னை மணந்துகொள்வாயாக" எனத் தானே கூறுதல் அவள் பெண்ணியல்பிற்கே இழுக்காமெனினும் அவ்விழுக்கினை எண்ணிக்கூறாதுவிடுதலும் ஏதமாம்; அதனால் அதைத் தாமே கூறத் துணிந்தனர். ஆனால், அதை வெளிப்படக் கூறக் கருதாது, "இப்பெண்கள் எண்ணம் மணத்தின்கண் உளது" என்பதை, அவன்" தானே உணர்ந்துகொள்ளும் வகையில், அதற்கு ஏற்றவாறு கூற வேண்டும் எனத் துணிந்தனர்.

அவ்வாறு துணிந்த அவர்கள், அவன், தம்மைக் காணும் விருப்போடு, தம் மனைக்குவந்து, தம் வரவை எதிர் நோக்கி ஓரிடத்தே மறைந்திருக்கும் காலத்தே, அவர்கள் அவன் வருகையை அறிந்தும், அறியாதார்போல் சென்று தம் குரல் அவனுக்குத் தெளிவாகக் கேட்கும் தொலைவில் இருந்து, அவனைக் காணாமையால் தமக்குண்டாகும் கலக்கம், தம்மைக் காணவருவதால் அவனுக்கு நேரவிருக்கும் கேடுகள், அக்கேடறிந்து தாம் படும்துயரம், தம் களவொழுக்கத்தை அறிந்துகொண்ட தாயின் கொடுமை, அதை அறிந்து கொண்ட ஊரார் கூறும் அலர் ஆகியவற்றை மாறி மாறி உரைத்துத் தமக்குள்ளே வருந்துவதை வழக்கமாகக் கொள்ளலாயினர்.

அவர் அவ்வாறு வருந்திக் கூறுவனவற்றை நாள் தோறும் கேட்கும் அவன் உள்ளத்தில், அவர் இவ்வாறு வருந்துவதற்குக் களவு வாழ்க்கையில் தான் கொண்டுள்ள ஆசையே காரணம் என்ற எண்ணம் மெல்லத் தலைதூக்கும்; இறுதியில், "இக்களவு நெறியை மேலும் விரும்பினால், இவள் உயிர்க்குத்

கேடாம்; ஆகவே மணத்திற்காம் முயற்சிகளை இன்றே மேற்கொள்வேன்" எனும் துணிவுபிறக்கும்; அப்பெண்கள், தம் முயற்சி வெற்றி பெறத், தாம் கருதியது கைகூடக் கண்டுகளிப்பர்; பழந்தமிழ்ப் புலவர்கள், இம்முறைக்குச் சிறைப்புறமாக வரைவு கடாவல் எனும் பெயரிட்டுப் பாராட்டியுள்ளனர். அவற்றுள் ஒரு சில:

**இன்று வாராராயின் நன்று:**

தினை அறுவடையாகும் காலத்தில், தினை அறுப்பார் இரவில் உறங்கார்; முற்றிய தினை ஒருநாள் கழியினும் உதிர்ந்து வீணும்; அதனுல் அதை அதற்குரிய பருவத்திலேயே அறுத்துவிடுதல் வேண்டும்; ஆனால், ஊரைச் சுற்றியுள்ள எல்லாப் புனமும் ஒரே காலத்தில் முற்றிவிடுவதால் அறுவடைக்கு ஆள் கிடைப்பது அரிது! அதனுல், இரவிலும் உறங்காதிருந்து அறுத்தெடுப்பர்; அப்பொழுது புனத்தில் ஒலி ஓயாது; அப்புனத்தில் எழும் ஒலிபோல், அன்று ஊரிலும் ஒலி ஓயவில்லை; ஊர்க்காவலர் உறங்கவில்லை; இரவின் இடை யாமம் ஆகியும், அவர் எழுப்பும் தொண்டகப்பறை ஓயாது ஒலித்துக்கொண்டேயிருந்தது.

காதலன் நினைவால் உறக்கம் ஒழிந்து கிடந்தாள் அப்பெண்; அவள் அருகில், அப்பறையொலி கேட்டு நடுங்கிய வாறே வீற்றிருந்தாள் தோழி; "இந் நிலையில் இளைஞன் வந்துவிடுவனே? வருவானை ஊர்க்காவலர் கண்டுவிடுவாரோ? அதனுல் என்னென்ன விளையுமோ" என எண்ணி எண்ணி அஞ்சிற்று அத்தோழி உள்ளம்; அந்நிலையில் அவன் வந்துவிட்டான்; அவனைத் தோழியும் பார்த்துவிட்டாள்; உடனே, அவன் வருகையை அறியாதாள்போல், அவன், கேட்குமாறு, அப்பெண்ணை நோக்கித் "தோழி! காவலர் கண்ணுறங்காது காவல் புரிகின்றனர்; அவர் எழுப்பும் தொண்டகப் பறை ஒலித்தவாறே உளது. இந்நிலையில் காதலர், நம் துயர் துடைக்க வருவதினும், வாராமையே நன்று; வந்து அவர் அளிக்கும் இன்பத்தினும், வரும் அவ ரைக் காவலர் கண்டுகொள்வதால் வரும்துன்பம் பெரி

தாம்; ஆகவே, அவர் வாராமையை விரும்புகிறது என் உள்ளம்'' என்று கூறினாள்.

''அம்ம! வாழி தோழி! இன்று அவர்
வாரார் ஆயினோ நன்றே; சாரல்
சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்து
இரவு அரிவாரின் தொண்டகச் சிறுபறை
பானாள் யாமத்தும் கறங்கும்
யாமம் காவலர் அவியாமாறே.''a

மணத்திற்கு இது காலம்:

காதலன் இன்று வாரானாயின் நன்று எனத் தோழிகூறக் கேட்ட அப்பெண், ''தோழி! அவர் வரவிற்கு, ஒவ்வொரு நாளும், இவ்வாறே இடையூறு நேர்ந்துவிடுகிறது; அதனால் அவரைக் காணாக் கலக்கம், பெரிதாகிறது; அக்கலக்க மிகுதியால், என் உடல் பசலை படர்ந்து பாழுற்றுக் கெட்டது; எனினும், அவர்மீது கொண்ட காதல் குறைந்திலது; அது அவர்பால் சென்று, அவர் உள்ளத்தையே சுற்றிச் சுற்றி அலைகிறது; ஆனால் அவர் உள்ளத்தில், என்பால் அன்பு பிறந்திலது; அதனால், பெண்களுக்கு அணியாய் அழகு தரும் அடக்கம் முதலாம் பெண்மைக் குணங்கள் என்னைவிட்டு எங்கோ சென்று மறைந்தன; அறிவு ஒன்றே என்பால் உளது. ஆனால் அதுவும், வாளா இருக்கவில்லை; ''காதலர் தாமே வந்து வரைந்து கொள்ளார்; ஆகவே, அவர்பால் நாமே சென்று வரைவிற்கு வழிகாணுவோம் வருக ஆங்கே'' என இயலாத ஒன்றை ஓயாது கூறி என்னை வருத்துகிறது. ஆகவே ''உங்கள் நலம் யாது?'' என்று வினவி, நம்மை

---

a குறுந்தொகை: 375

வியன்கண் - அகன்ற இடம்; இரும்புனம் - பெரிய கொல்லை; அரிவாரின் – அரிவாரைப்போல்; தொண்டகம்– மலைநாட்டுப் பறைவகையுள் ஒன்று; பானாள்-இடை இரவு; கறங்கும்-ஒலிக்கும்; அவியாமாறு-உறங்காமையால்; உறங்காமையால் ஒலிக்கும்.

மணந்து, துயர் தீர்க்கும் நல்லுள்ளம் அவர்க்கு உண்டானல், அதற்கு இதுவே ஏற்ற காலமாம்; தோழி! அவர் அதைச் செய்வாரா?" என்றுகூறி, மணக்கத் துடிக்கும் தன் மன நிலையை எடுத்துக் காட்டினாள்.

"பயப்பு, என்மேனியதுவே; நயப்பு, அவர்
நார்இல் நெஞ்சத்து ஆர்இடையதுவே;
செறிவும் சேண் இகந்தன்றே; அறிவே
ஆங்கண் செல்கம் எழுக என, ஈங்கே
வல்லா கூறி இருக்கும்; முள்இலைத்
தடவுநிலைத் தாழைச் சேர்ப்பர்க்கு
இடம் மன் தோழி! எந் நீரிரோ எனினே." [a]

## வெறியாடல் காணக் காதலர் வருக!

"காதலர் வரைந்துகொள்ள வருவாரா" என்று அப்பெண் தன் வேட்கையைப் புலப்படுத்த, அது கேட்ட தோழி, "பெண்ணே! அவர் வரைந்துகொள்ள வரினும் வாராராயினும்; வெறியாடல் காண வருதலை நான் மிகவும் வேண்டுகிறேன்; "தோழி! நம்மைப் பேணிக் காக்கும் பேரன்பினளாய தாய், நம் வாட்டத்திற்காம் காரணம் இது என்பதை எளிதில் அறிந்து கொள்வாள்; அவள் அஃது அறியின், நம் களவொழுக்கத்திற்குக் கேடாம்; ஒரே வழி, அவள் அதை அறியாளாய், அதற்குக் காரணம் யாதென வேலனைக் கேட்

---

[a] குறுந்தொகை 1 219. வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார்.

மேனியது—மேனிக்கண் உளது; நயப்பு—காதல்; நார்இல்—அன்பு இல்லாத; ஆர் இடையது—புகுதற்கு அரிய இடத்தின் கண் உளது; ஆங்கண் - அத்தலைவர்பால்; வல்லா—நம்மால் செய்யமாட்டாத ஒன்றை, தடவுநிலைத் தாழை -பருத்த அடிகளையுடைய தாழை; சேர்ப்பன்-நெய்தல் நிலத்தலைவன்; இடம்மன்-இதுவே காலமாம்; எந்நீரிரோ - எந்நிலையில் உள்ளீர்; எனினே—என்று கேட்கும் எண்ணம் உண்டாயின்.

பின் அவன், 'உன் மகள்நோய் முருகனால் வந்தது; அது அவனைக் குறித்து வெறியெடுக்கத் தணியும்' என்றே கூறுவன்; தாயும், அவன் கூறியதே உண்மையென்று கொண்டு, வெறியாட்டெடுக்கத் துணிவள்; மகள் உற்ற நோய், மனநோய் என்பதை அறியும் மாண்பிழந்து, நம் பெற்றோர் மேற்கொள்ளும் அறிவிலாச் செயல்கள் இதுபோல் பலவாம். அதனால் நாம்படும் துயரும் பலவாம், நம் பெற்றோர் செய்யும் அறிவிலாச் செயல்கள் பலவற்றுள் ஒன்றாகிய அவ்வெறியாடல் காண நம் காதலர் வருவாராக; வந்து நம் துயர்நிலை அறிவாராக" என்று கூறினாள். இவ்வாறு தாயின் அறியாமை கண்டு நகைப்பாள்போல் கூறினும், "காதல்! நீ வரைந்து கொள்ளாமையால் நின் காதலிபடும் துயர்நிலை இத்தகைத்து அதை எங்கள் தாயும் அறிந்துகொண்டாள்; அவள் அது வேலனால் வந்தது என எண்ணாமல், தன் மகள் விரும்பும் ஒருவனால் வந்தது என அறிந்தால் இன்னல் பல உண்டாம்; ஆகவே, அவள் அஃது அறியாமுன்னர் இவளை வரைந்து கொள்வாயாக" என இளைஞனை நோக்கிக் கூறியதேயாம்; அவனும், அது தன்னை நோக்கிக் கூறியதென்றே கருதுவன்.

"மென்தோள் நெகிழ்த்த செல்லல், வேலன்
வென்றி நெடுவேள் என்னும்; அன்னையும்
அது என உணருமாயின், ஆயிடைக்
கூழை இரும்பிடிக் கைகரந்தன்ன
கேழ் இரும்துறுகல் கெழுமலை நாடன்
வல்லே வருக, தோழி! நம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே." ௧

---

௧ குறுந்தொகை: 111. தீன்மிதி நாகனார்.

நெகிழ்த்த-மெலிவித்த; செல்லல்-துன்பம்; நெடுவேள் - முருகனால் வந்தது; கூழை-குறுகிய; இரும்பிடி-கரிய பெண் யானை; கைகரந்தன்ன - கைமறைத்துத் தோன்றினாற்போல் கேழ் இரும்துறுகல்-கரிய நிறம் பொருந்திய பெரிய குண்டுக் கல்; கெழு-நிறைந்த; வல்லே-விரைந்து; பெருநகை-பெரிய நகைப்பிற்கு இடமாய செய்கையை.

## அவன் அது காண வாரானாகுக!

"தாய் வெறியாடல் புரிய, அதனால் நாம் வருந்தும் துயர்நிலையினைக் காணக், காதலன் வருக!" எனத் தோழி கூறக் கேட்ட அப்பெண்ணுள்ளத்தில் ஒரு புதிய அச்சம் குடி கொண்டது; "தாய், என் நோய் இளைஞன் ஒருவன் பால் நான் கொண்ட காதலால் வந்தது என்பதை அறிந்து கொள்ளமாட்டாது, அது முருகனால் வந்தது எனக்கொண்டு, அவனுக்கு விழா எடுக்க விரும்புகின்றாள்; இந்நிலையில், காதலன், தோழியின் சொல் கேட்டு இவண் வருவனாயின், அவன் வந்து காட்டிய அன்பால் என் நோய் நீங்கும்; நோய் அவனால் வந்தது என அறியாது, முருகன் சுணங்கியதால் வந்தது என எண்ணும் இவ்வறிவிலாத் தாய், என் நோய் நீக்கம், காதலன் வந்து காட்டிய அன்பின் விளைவாம் என அறியமாட்டாது, அது, அவள் முருகனுக்குச் செய்த விழா வின் விளைவாம் என்றே எண்ணுவள்; அதனால், என் நோய்க் குரிய உண்மைக் காரணத்தை உசாவி அறிந்து, என் திருமணத் திற்கு ஏற்பாடு செய்தல் இல்லாது போம்; ஆகவே, அவன் இன்று வாராதிருத்தல்வேண்டும்; அவன் இன்று வாரானா யின், என் நோய் என்னைவிட்டு நீங்காது; தான் வெறியாடல் புரிந்தும் தன் மகள் நோய் நீங்காமை காணும் தாய், இது அணங்கால் வந்ததன்று; ஓர் ஆண்மகனால் வந்தது என அறிந்து, அவ்வாண் மகன் யார் என வினவி, அவனுக்கு என்னை மணம் செய்துதர முனைவள்; ஆகவே, அவன் வாரா மையால், இன்று ஒரு நாள் நான் வருந்தினும், அது நிறைந்த இன்பத்திற்கு வழி செய்யுமாதலின், அவன் இன்று வாராதிருத்தலையே விரும்புகின்றேன்" என இவ்வாறு சென் றது அவள் சிந்தனை; அதனால், தோழிபால் தன் கருத்தை யெல்லாம் விளங்க உரைத்துவிட்டு, "தோழி! என் நோய் வேல்முருகனால் வந்தது என்று கூறிய அவ்வேலன், அந் நோயைத் தீர்க்கும் வகையறியான் என்பதை நம் தாய் அறிந்துகொள்ளுதற் பொருட்டு, நம் காதலர் இன்று வாராராதலை நான் விரும்புகின்றேன்; அவன் வாராமையால்,

என் நோய் மிகினும் நான் பொறுத்துக்கொள்வேன்" என்று கூறினள்.

இவ்வாறு கூறிய அவள் கூற்று, தான் விரும்பிய காதலனைத் தாயும் தந்தையும் தரத் திருமணம் கொண்டு அன்பு கலந்த இன்ப வாழ்க்கை மேற்கொள்ள விரும்பும் அவள் உள்ளத்தை அவன் அறியத் துணை புரிந்தது.

"வெறி என உணர்ந்த வேலன், நோய் மருந்து
அறியான் ஆகுதல் அன்னை காணிய
அரும்படர் எவ்வம் இன்று நாம் உழப்பினும்
வாரற்க தில்லை தோழி!...
இலங்கு மலை நாடன் இரவினானே." ௨

## இன்னும் வாழ்கிறேன் தோழி!

தாய் எடுக்கும் வெறியாட்டின் கொடுமையினை இளைஞன் அறியமாட்டான்; அவன் மனத்தை மணவினைக்குத் தூரத்த, அதைக் கூறுவது ஒன்றுமட்டுமே போதாது; நாம் எதையும் செய்ய மாட்டாது, செயலற்றுக் கிடக்கிறோம்; எதற்கும் அவன் துணையையே எதிர்நோக்கி நிற்கிறோம் என்பதை அவன் உணர்தல்வேண்டும்; அதன் பின்னரே அவன் மனம் மணத்தை நாடும் என எண்ணிற்று அப்பெண்ணின் பேதை உள்ளம்; எண்ணியதோடு நில்லாது, அதைக் கூறவும் துணிந்தது; உடனே, தன் எதிரில் இருக்கும் தோழிக்குக் கூறுவாள் போல், வந்து மறைந்து நிற்கும் காதலன் கேட்கும் வண்ணம் கீழ்வருமாறு கூறத் தொடங்கினள்:

---

௨ குறுந்தொகை: 360. ஈழத்துப் பூதன் தேவனார்.

வெறி என் – நோய் தீர்க்கும் மருந்து; வெறியாடலாம் என; காணிய – அறிதற் பொருட்டு; அரும் – தாங்குதற்கரிய; படர் எவ்வம் – காதலன் நினைவால் உண்டாகும் துன்பம்; உழப்பினும் – அனுபவித்தாலும்; தில்ல – விருப்பம் குறிக்கும் ஓர் இடைச்சொல்,

"தோழி! நம் ஊர்ப் பெண்கள் அனைவருமே அழகில் சிறந்தவர்; மலைச்சாரல் மலரும் தழையும் கொண்டு, ஆடை போல் தொடுத்து அணிந்து செல்லும் அழகை, நாளெல்லாம் கண்டு மகிழலாம்போல் தோன்றும். அம்மகளிர் அனைவரினும் சிறந்த அழகுடையவள் நான்; அவரெல்லாம் பார்த்துப் பொறாமைப்படவல்ல பேரழகு, என் அழகு. ஆனால், தோழி! அவ்வழகு இன்று என்பால் இல்லை; அது என்னைவிட்டு, நம் காதலர்பால் சென்றுவிட்டது; அழகிழந்து அழிகிறேன் நான்; என் பேரழகு கண்டு என்னை அன்று பாராட்டிய இவ்வூரார், இன்று என் அழிநிலை கண்டு பழி தூற்றுகின்றனர்; அத்துயர் பொறுக்கமாட்டாது என் உடல் தளர்ந்தது; வளைகள் கழன்று ஓடலாயின; ஆனால், நான் இந்நிலை உற்றும், என் உயிர் இன்னமும் வாழ்கிறது; அது தான் வியப்பிற்குறியது; தோழி! செயலற்றுப் போன என்னால் எதையும் செய்ய முடியவில்லை; காதலர், தாமே வந்து மணங் கொண்டாலல்லது, நம் வாழ்வில் மகிழ்ச்சி மலராது; ஆனால், அவரோ, நம் நிலையை அறிந்தவராகத் தோன்றவில்லை; பண்டு, பறந்தும், பாய்ந்தும் தான் விரும்பும் இரைகளைப் பெற்று மகிழ்ந்த நாரை, முதுமையுற்றுப் போனமையால், பறந்து இரைதேட மாட்டாது கடல் அருகே வளர்ந்த மரத்தில், கடல் நீரில் படியுமாறு தாழ்ந்த கிளையில் இருந்து, கரையை நோக்கி வீசும் அலை, தனக்கு வேண்டும் இரைகளைக் கொண்டு வராதா என எதிர்நோக்கி ஏங்கிக் கிடக்கும் நம் நாட்டுக் கடற்கரைக் காட்சிகளைக் காணும் அவர் உள்ளத்தில், செயலற்றுக் கிடப்பாரின் துன்ப நிலை புலப்பட்டிலதே! நான் என்ன செய்வேன்? அலைகொண்டு அளித்தாலல்லது, தானே இரைதேடித் தின்னமாட்டாது, ஏங்கிக் கிடக்கும் அவர் நாட்டு நாரைபோல், நானும் அவரையே எதிர் பார்த்து வாழ்கிறேன்; தோழி! என் துயர் நிலையை அவர் என்று அறிவாரோ?"

"இலங்குவளை நெகிழச் சாய், யானே
உளனே! வாழி தோழி! சாரல்

தழை அணி அல்குல் மகளிருள்ளும்
விழவு மேம்பட்ட என்நலனே, பழவிறல்,
பறைவலம் தப்பிய பைதல் நாரை,
திரைதோய் வாங்குசினை இருக்கும்
தண்ணம் துறைவனொடு கண்மாறின்றே.'' a

நான் உரையேன்; அவனே அறிக!

அவள் அவ்வாறு வருந்தக் கண்ட தோழி, அவளை நோக்கி, "பெண்ணே! வருந்தி வாய்மூடிக் கிடப்பதால் பயனில்லை; காதலரைக் கண்டு, உன் துயர் நிலையைக் காட்டி, உன்னை மணந்துகொள்ள வேண்டிய அவர் கடமையை அவருக்கு விளங்கக் கூறுதல் உன் கடனும்; அவ்வாறு கூருது, 'அவரே வருக என எதிர்நோக்கி வாளாக்கிடப்பின், நம் பெற்றோர், உன்னைப் பிறன் ஒருவனுக்கு மணம் செய்துவிடுவர்; உன் மணம் குறித்து, அவர்கள் பேசவும் தலைப்பட்டுவிட்டனர்; ஆகவே, காதலரைக் கண்டு கூறுவாயாக என்றாள்.

அது கேட்ட அப்பெண், "தோழி! மலையில் வளரும் மூங்கில் போன்ற அழகுடையவாய் அன்று விளங்கி, இன்று, அவ்வழகிழந்து தளர்ந்துபோன என் தோள்களை அணைத்து, நம்மோடு நட்புக்கொண்டு, என் உள்ளத்தைக் களவாடிய அன்று, "இனி என்றும் உன்னைப் பிரியேன்" எனச் சூள் உரைத்தவர் அவர்; ஆகவே, அச்சூளுரையைப், பொய்யாகாவாறு காக்கும் கடமை, அன்று சூள் உரைத்த அவருக்கே உண்டு; மேலும், அவர்பால் காதல்கொண்டு, அதனால் நலன் இழந்துபோன நமக்கு இனி, பற்றுக்கோடு அவனே; தம்மைப்

---

a குறுந்தொகை : 125. அம்மூவனார்.

இலங்கு—விளங்குகின்ற; நெகிழ—கழல; சாஇய்—மெலிந்து; விழவு மேம்பட்ட—திருவிழாப்போல சிறந்த அழகுடைய பழவிறல் பண்டு ஆற்றல் வாய்ந்த; பறைவலம்—பறக்கும் ஆற்றல்; தப்பிய—இழந்த; பைதல்—துயர்மிக்க; திரைதோய்—அலைகள் படுமாறு; வாங்குசினை—வளைந்த கிளை; கண்மாறின்று—இடம் பெயர்ந்தது.

பற்றுக்கோடாக அடைந்தாரைக் காக்கும் பொறுப்பு அவரையே சாரும்; ஆனல், அவரோ, இன்று தம் கடமை மறந்து வாழ்கிறார்; 'வேற்றுவரைவு நேருமே; அதனால், காதலி வாழ்விழந்து போவளே' என அறியும் அறிவின்றித் திரிகிறார்; மணம் செய்துகொள்ளும் கருத்து அவருக்கு இருப்பதாகத் தோன்றவில்லை; அக்கருத்து, அவருக்கு இருப்பினும், இல்லையாயினும் நான் அவருக்கு அதை எடுத்துக் கூறுதல் பொருந்தாது. அதை, அவர், தாமே உணர்தல் வேண்டும்; உணராத அவருக்கு, நான் சென்று உரையேன்" என்று கூறினாள்.

"துறைவன்
குறியான் ஆயினும், குறிப்பினும், பிறிதுஒன்று
அறியாற்கு உரைப்பலோ யானே? எய்த்த இப்
பணை எழில் மென்தோள் அணைஇய அந்நாள்
பிழையா வஞ்சினம் செய்த
கள்வனும், கடவனும், புணைவனும் தானே." [a]

நம் இருவர் குறித்தும் இரங்குகிறது என் உள்ளம்:

தன் காதலியும் அவள் தோழியும் கூறிய அனைத்தையும் கேட்டான் இளைஞன்; அவர், தமக்குள்ளே கூறிக் கொண்டாராயினும், அது, தன்னை நோக்கிக் கூறியதே என்பதையும் அறிந்தான்; அறிந்தும் தன் போக்கினை மாற்றிக் கொண்டானல்லன்; களவொழுக்க இன்பத்தில், அவன் உள்ளம் அவ்வளவு ஆழமாகப் பதிந்துவிட்டது; அதனால், எவரும்

---

[a] குறுந்தொகை: 318, அம்மூவனார்.

துறைவன்-நெய்தல் நிலத்தலைவனாய காதலன்; குறியான்-மணங்கொள்ள நினையான்; பிறிதுஒன்று-வேற்று வரைவு; உரைப்பலோ-சொல்லுவேனோ? எய்த்த-இளைத்த; பணை எழில்-மூங்கில் போன்ற அழகு; அணைஇய-தழுவிய; கடவனும்-கடமை உடையானும்; புணைவனும்-பற்றுக் கோடாவானும்.

அறியாவாறு வந்து, இன்பம் துய்த்துச் செல்வதையே அவன் விரும்பினான்.

அவன் கருத்து இது என்பதை அறிந்தாள் தோழி; அதனால், "இதுகாறும் நம் பெண்மையை மதித்து அவன்பால் நேரில் சென்று, நம் குறையைக் கூற அஞ்சியதுபோல் இனியும் இருப்பின் கேடாம்; ஆகவே, அவனை நேரில் கண்டு நம் நிலையை நன்கு விளக்கி, விரைந்துவந்து வரைந்து கொள்ளுமாறு வற்புறுத்த வேண்டும்" எனத் துணிந்தாள்.

அந்நிலையில், அவனும் வழக்கம்போல் வந்து, காதலி வருகைக்காகக் காத்திருந்தான்; அதைக் கண்டாள் தோழி. உடனே அவன்பால் சென்று, "அன்ப! நம் இரண்டூர்க்கும் இடைப்பட்ட வழி, இரவில் வருவதற்கேற்ற, இடையூறில்லா இனிய வழியன்று; கழிகள் பலவற்றைக் கொண்டது அவ்வழி; அக்கழிகளில் முதலைகள் கூட்டங் கூட்டமாய் வாழும்; வளைந்த கால்களால் வழிவருவாரைக் கவ்வி ஈர்த்துக் கொன்று அழிக்கும் கொடுமை உடையன அம்முதலைகள்; அதனால், அவ்வழியிற் செல்ல எவரும் அஞ்சுவர்; ஆனால் நீயோ, கொடுமை மிக்க அவ்வழியை இரவில் கடந்து வருகின்றனை; நீ, உன் காதலிபால் கொண்டுள்ள பேரன்பே இதற்குக் காரணம் என்பதை உணர்கிறேன் நான்; அதனால், அத்தகைய அன்புடைய உன்னை, 'வாரற்க' என்று கூறித் தடுக்க அஞ்சுகிறது என் நெஞ்சம்; ஆனால், அவ்வாறு தடை செய்யாது விடினோ, நீ இரவில் வருதலை வழக்கமாகக் கொண்டுவிடுவை; ஆற்றலில், ஆண்மையில் சிறந்தவன் நீ என்பதை நான் அறிவேன்; என்றாலும், யானைக்கும் அடி சறுக்கும் என்பவாதலின்' ஒரோ வழி உனக்கு இடையூறு உண்டாயினும் உண்டாம்; அதனால், இரவில் வருதலை, உன் 'தலி விரும்பவில்லை; உன் அன்பின் பெருமையை உன் ற்றலின் சிறப்பை அவளுக்கு அறிவுறுத்தி, உன்வருகையை ர்க்குமாறு செய்யலாமென்றால், அவள் நீவரும் வழியின் தும் அறிந்தமையால் கொண்ட அச்சம் தவிர, வேறு தையும் உணரும் நிலையில் இல்லையாதலின், அது இயலாதா

யிற்று; அதனால், 'வருக' என வரவேற்கவும் அஞ்சுகிறேன்; அன்ப! இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுப் பேணி வளர்க்கும் ஒருதாய், அவ்விரு குழந்தைகளும், ஒரே காலத்தில் நஞ்சுண்டவிடத்து, இந்தக் குழந்தையைக் கவனிப்பதா? அந்தக் குழந்தையைக் கவனிப்பதா? நஞ்சு தீர்க்கும் மருந்தை இந்த குழந்தைக்கு முதலில் அளிப்பதா? அந்தக்குழந்தைக்கு முதலில் அளிப்பதா? அறியாது துடிப்பது போலாகிவிட்டது என் நிலை. அன்ப! அவளைக் காணமாட்டாமையால் உனக்குமட்டுமே வருத்தம் உண்டு என எண்ணற்க; உன்னைக் காணாது வருந்தும் வருத்தம் அவளுக்கும் உண்டு; உன்னைக் காணாது நெடுநாள் வாழ்தல் அவளாலும் இயலாது; உன் வருகையை அவள் விரும்பாமைக்குக் காரணம், உன்பால், அவளுக்கு அன்பில்லாமையால் அன்று; நீ வரும் வழியின் கொடுமை அறிந்து அஞ்சுவதினாலேயே, அவள் உன் வருகையை விரும்பவில்லை. வாராதிருந்தால், காதலியைக் காண இயலாது போகுமே; அவளைக் காணாது எங்ஙனம் வாழ்வேன்' எனக் கலங்கும் உன் கலக்கமும், 'ஏதம் மிக்க வழியில் இரவில் வரும் அவர்க்கு, இடையூறு நேர்ந்தால், நான் எங்ஙனம் வாழ்வேன்' என எண்ணி வருந்தும் அவள் வருத்தமும், நீ இரவில் வருதலை விடுத்து, அவளை விரைந்து வந்து வரைந்து கொள்வையாயின், ஒருங்கே அழியும்; இருவர் நிலை கண்டு கலங்கும் என் கலக்கமும் அழியும்; நீவிர் இருவீரும் ஒன்றிய அன்பினராய் ஒருங்கிருந்து வாழ்வீர்; ஆகவே அன்ப! வரைவிற்காம் முயற்சிகளை விரைந்து மேற்கொள்வாயாக" என வேண்டிக்கொண்டாள்.

'கொடுங்கால் முதலைக் கோள்வல் ஏற்றை
வழி வழக்கு அறுக்கும் கானலாம் பெருந்துறை
இனமீன் இருங்கழி நீந்தி, நீ நின்
நயன் உடைமையின் வருதி; இவள், தன்
மடன் உடைமையின் உயங்கும்; யான் அது

கவைமக நஞ்சு உண்டாஅங்கு
அஞ்சுவல் பெரும! என் நெஞ்சத்தானே."[a]

உயிர் சிறிது; காதல் பெரிது:

"காதலியைக் காணவும் முடியவில்லையே என்று நீ வருந்துகிறாய்; 'காதலர் கொடுமைகள் நிறைந்த வழியை இரவில் கடந்து வருங்கால் அவருக்குக் கேடு நேரின் என் நிலை என்னாவது' என அவள் வருந்துகிறாள்; உங்கள் இருவர் நிலைகண்டு நான் வருந்துகிறேன்' எனக் கூறக் கேட்டும் இளைஞன் உள்ளம்; திருமணத்தில் கருத்தைச் செலுத்தாமையினைக் கண்டாள் தோழி. அதனால், "அன்ப! இனியும், இந்நிலை நீடித்தால், அவள் உயிர் வாழாள்; அவள் உயிர் வாழாளென்பது ஒருபுறம் கிடக்க, உங்கள் காதலை அறியாத அவள் பெற்றோர் அவளை வேறு யாருக்கேனும் மணம் செய்து தந்துவிடுவர்" என உண்மை நிலைகளைக் கூறி, அவன் உள்ளத்தை மாற்றத் துணிந்தாள்.

உடனே இளைஞனை நோக்கி "அன்ப! வேர்ப்பலா வளர்க்கும் உங்கள் ஊரார், அம்மரங்களைச் சூழ வேலி அமைத்துப் பேணிக் காக்கின்றனர்; அதனால், அம்மரங்களை, எவரும் எளிதில் அணுகுதல் இயலாது; மேலும், அம்மரங்களெல்லாம் வேர்ப்பலா மரங்கள்; பழங்கள் வேரிலேயே பழுக்கும்; அதனால், நனிமிகப் பழுத்தாலும், காம்பற்றுக் கீழே விழுந்து பாழாவதில்லை; ஆகவே உங்கள் நாட்டில், பலாப்பழங்கள் கள்வர்களால் கவரப்படுவதோ, தாமே வீழ்ந்து பாழாவதோ இல்லை; ஆனால்; எங்கள் நாட்டு நிலையோ வேறு; எங்கள் நாட்டில் வேர்ப்பலா இல்லை' மேலும் தாம் வளர்க்கும் பலா

---

[a] குறுந்தொகை: 324. கவை மகனார்.

கொடுங்கால்—வளைந்த கால்; கோள்வல்—பற்றிக்கொள்ளுதலில் வல்ல; ஏற்றை—ஆண்; வழக்கு அறுக்கும்—வழங்குவதை அழிக்கும்; நயன்—அன்பு; மடன்—அறியாமை; உயங்கும்—வருந்துவாள்; கவைமக—இரட்டைப்பிள்ளைகள்; நஞ்சு உண்டாங்கு—நஞ்சு உண்டவிடத்து வருந்தும் தாய்போல்; அஞ்சுவல்—வருந்துவேன்.

மரங்களைச் சூழ வேலியிட்டுக் காக்கும் அறிவும், அப்பலா வளர்ப்பார்க்கு இல்லை; அதனால், பலாப் பழுத்திருக்கக் காணும் எவரும் அப்பழத்தை எளிதில் கவர்ந்து சென்று விடுவர்; மேலும், பழங்கள் நனிமிகப் பருக்கும்; பழங்களின் பருமையைத் தாங்கமாட்டாது கிளைகள் தாழ்ந்து ஒடியும்; பழங்களை, அவை பழுக்கத் தொடங்கும்வரை தாங்கியிருப்பதே அரிதாம்; அப்பழங்கள், சாறு நிறைய மேலும் பழுக்கட்டும் என விட்டுவைத்தால், அக்கிளைகள் ஒடியப் பழங்கள் பாழாம்; அம்மட்டோ? பழங்கள் மிகப் பருத்துப் பக்குவமாகிய நிலைகண்ட எவரேனும் அதைப்பறித்துச் சென்றுவிடுவர்; அதனால், பழங்கள் பழுக்கும்வரை காவல் புரிந்து, பறிக்கும் பக்குவம் அடைந்தவுடனே பறித்துக்கொள்ள வேண்டிய கவலை, எங்கள் நாட்டுப் பலா வளர்ப்பார்க்குப் பெரிது; வேர்ப்பலா வளர்க்கும் நாட்டாராகிய உமக்கு, எங்கள் நாட்டுப் பலா வளர்ப்பாரின் கவலை தெரியாது; அதனால், அவர் கவலையைக் கருதாது, கண்டு எள்ளி நகைக்கின்றனை" என, இருவர் நாட்டுப் பலா வகைகளின் இயல்புகளை எடுத்துக் கூறுவாள்போல் கூறி, "அன்ப! காதலி உனக்கே உரியவள்; பிறர் எவரும் அவளை மணந்து கொள்ளுதல் இயலாது; அவளும், அவள் காதல் நோய் எவ்வளவு பெருகினும், அதை எவ்வளவு காலம் வேண்டுமானாலும் தாங்கிக்கொள்வாள் என்று எண்ணிக் கவலையற்றிருப்பது கூடாது; உன் காதலி காப்பற்றவள்; அவள் அழகும், குணமும் காணும் எவரும், அவளை மணந்துகொள்ள விரும்புவர்; அவள் உன்னைக் காதலிக்கிறாள்; அதனால், அவள் உனக்கே உரியவள் என்பதை உணராத பெற்றோரும், அவளை எவருக்கேனும் மணம் செய்து கொடுத்துவிடுவர்; அது ஒருபுறம் இருக்க, அவள் உயிர் மிக மிக மென்மை வாய்ந்தது; அவ்வுயிரைத் தாங்கிய உடல், அவள் உயிரினும் மெல்லிது; ஆனால், அவள் உன்பால் கொண்டிருக்கும் காதலோ, அளவிடற்கரிய பெருமை வாய்ந்தது; அக்காதற் பயன் கிட்டாமையால், அவள் கொள்ளும் துன்பம், அவள் காதலினும் நனிமிகப் பெரிது; அந்நோயைத் தாங்கி, அவள் உயிர் இதுவரை அழியாது வாழ்ந்ததே அரியசெய

லாம்; அந்நோய் மேலும் பெருகினால், அதை அவளால் தாங்கிக்கொள்ளுதல் இயலாது; அதைப் பொறுத்து உயிர் வாழும் வன்மை அவள் உடலிற்கு இல்லை; அவள் உயிரும், உடலும் ஒருங்கே அழிந்து பாழாம்; ஆகவே, மணத்திற்கு ஏற்ற காலம் இதுவென அறிந்து, விரைந்து வந்து வரைந்துகொள்வாயாக" என வேண்டிக் கொண்டாள்.

"வேரல் வேலி வேர்க்கோள் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி;
யார் அஃது அறிந்திசினோரே! சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள்
உயிர் தவச்சிறிது; காமமோ பெரிதே"[2]

**கள்வி நம் காதலி :**

காதலியும், அவள் தோழியும், தன்னைக் காணாதார் போலக் கூறியவற்றைக் கேட்ட, இளைஞன் உள்ளம் ஓரளவு மண முயற்சியின்பால் சென்றது; தோழி முன்னின்று கூறிய சொற்கள். அதை மேலும் உறுதி செய்தன; இவை அனைத்திலும் மேலாக, தன்னைக் கண்டு மீளும் காதலி, தம் காதல் ஒழுக்கத்தை, அவள் தமர் அறியாவாறு மறைத்து வாழும் தடுமாற்ற வாழ்க்கை, திருமண முயற்சியை விரைந்துகொள்ளத் தூண்டிற்று.

ஒருநாள் இரவு; அவன், வழக்கம்போல் காதலியைக் காணச் சென்றிருந்தான்; அவள், அவன் விரும்பும் ஆடை அணிகளால் தன்னை அழகு செய்துகொண்டு, நல்ல மணம் தரும் மலர்களைக் கூந்தலில் சூடிக்கொண்டு வந்தாள்; அவன் மனம் மகிழும், வண்ணம், அவனோடு உளங்கலந்து உரையாடி

---

[2] குறுந்தொகை: 18. கபிலர்.

வேரல் வேலி-சிறு மூங்கிலால் ஆகிய வேலி; வேர்க்கோள்-வேரில் பழுக்கும்; செவ்வியை ஆகுமது-அவளை மணந்துகொள்ளும் அறிவுடையான் ஆகுக; அறிந்திசினோர்-அறிந்தவர்; கோட்-கிளையில்; தூங்கியாங்கு-தொங்கியது போல; தவச்சிறிது-மிகவும் சிறிது.

யிருந்தாள்; பொழுது புலரத் தொடங்குவது கண்டு தன் மனைக்கு மீண்டாள்; காலையில், அவள் மனைக்கு அயலான் போல் சென்ற இளைஞன், ஆங்குக் கண்ட காட்சி, அவனை வியப்பிற்குள்ளாக்கிற்று; அதுவே மண முயற்சியைத் தூண்டும் தூண்டுகோலுமாய் அமைந்தது. இரவு தான் சூட்டிய மலர்கள் அவள் கூந்தலில் இல்லை; அவற்றை எடுத்து எறிந்து விட்டு, இரவுப் புணர்ச்சியால் கலைந்த கூந்தலுக்கு எண்ணெய் இட்டு, வாரி முடித்திருந்தாள். அவளை அந்நிலையில் கண்டவர் எவரும், அவள் காதல் நோயால் வருந்துகிறாள்; இரவு காதலன்பால் சென்று, அவனோடு மகிழ்ந்து வந்துள்ளாள் எனக்கூறார்; தன் தோற்றத்தை அந்த அளவு மாற்றிக் கொண்டிருந்தாள்; மாற்றம் அவள் தோற்றத்தில்மட்டும் இல்லை; அவள் செய்கையிலும் அம்மாற்றம் காட்சிஅளித்தது. இரவு மனங் கலந்து மகிழ்ந்த காதலனைத் தன் மனையில் கண்ட அவள் அவன்பால், புதியான் ஒருவன்பால் பழகுவது போன்றே பழகினாள்; அவள் அவனோடு பழகியதைக் காணும் எவரும், அவளும் அவனும், காதலியும் காதலனுமாவர் எனக் கூறார்; அந்த அளவு, தன் செய்கையையும் மாற்றிக் கொண்டாள்; இதைக் கண்ணுற்றான் இளைஞன்; கண்டு, காதலியின் அறிவாற்றல் அறிந்து ஒருபால் மகிழ்ந்தானேனும், அவள், இவ்வாறு, இரு வேறு வாழ்க்கையினளாய், இருவேறு சூழ்நிலையில் வாழ்பவளாய் நடந்துகொள்ள, எத்துணைப் பாடுபடுதல் வேண்டும் என எண்ணினான்; அந்நிலை காண இரங்கிற்று அவன் உள்ளம்; இத்துணைப் பாடும் என் பொருட்டன்றோ? என் பொருட்டு இவ்வாறு வருந்துவாளை, மேலும் வருத்துதல் கூடாது; ஆகவே இவளை விரைந்து வந்து வரைந்துகொண்டு இவள் துயர்துடைத்தல் வேண்டும்'' எனத் துணிந்தான்.

"இரண்டு அறி கள்வி நம் காதலோளே;
முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நாற வந்து,

நள்என் கங்குல் நம் ஓரன்னள்;
கூந்தல் வேய்ந்த விரவு மலர் உதிர்த்துச்
சாந்து உளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி,
அமரா முகத்தள் ஆகித்,
தமர் ஓரன்னள் வைகறை யானே'' a

இளைஞன், களவொழுக்க வாழ்க்கையைக் கைவிட்டு, காதலியை அவள் பெற்றோர் கொடுக்க, ஊர் அறிய மணந்து, மனையற வாழ்க்கை மேற்கொண்டு வாழ விரும்பினான். ஆனால், அவ்வரைவு முயற்சியை, விரும்பியவுடனே மேற்கொள்ள அவனால் முடியவில்லை. திருமணத்தின்போது, மணவீட்டார், பரிசாகப் பெரும் பொருள் வேண்டுவதும் மணமகன் வீட்டார், மணப்பரிசாகப் பெரும்பொருள் அளிப்பதை தம் குடிப்பெருமையாகக் கருதுவதும், அப்பெரும் பொருளை எளிதில் அளிக்கவல்ல செல்வக் குடியில் வந்த இளைஞர்களும், தம் மனத்தில், தம் மனைவியர்க்கு அளிக்கும் பரிசப் பொருள்கள், தாமே தம் முயற்சியால் ஈட்டிய பொருளாதல் வேண்டும் என விரும்புவதும் அக்கால வழக்கமாம். முயன்று பெற்ற கூழுணவு, இரந்து பெற்ற அமிழ்தினும் சிறந்தது எனக் கருதும் உயர்வுடையது அவர்கள் உள்ளம். தம் உழைப்பால் வாழ எண்ணாது, தம் முன்னோர் ஈட்டிய பொருள் உண்டு வாழ்வார் வாழ்வு, வாழ்வாகாது எனக் கருதும் வளமார் உள்ளம் அவர்கள் உள்ளம். அவ்விழுமியோரர் வழியில் வந்த

---

a குறுந்தொகை: 312, கபிலர்.

இரண்டு-இருவகை ஒழுக்கம்; முரண்-மாறுபாடு; துப்பின்-ஆற்றல் வாய்ந்த; செவ்வேல்-இரத்தக் கறை படிந்த வேல்; மலையன்-மலையமான் எனும் அரசன்; முள்ளூர்-அவனுக்கு உரிய ஓர் ஊர்; கானம்-காட்டின் மணம்போல்; நாற-மணம் வீச; கங்குல்-இரவு; நம் ஓரன்னள்-நம்மோடு ஒத்தவள் ஆனாள்; வேய்ந்த-அணிந்த; விரவு மலர்-கதம்ப மலர்; சாந்து-மயிர்ச்சாந்து இட்டு; உளர்-கோதிய; கதுப்பு-கூந்தல்; அமராமுகத்தள்-காதலனோடு பொருந்தா முகம் உடையளாய்; தமர் ஓரன்னள்-உறவினரோடு ஒத்தவளானாள்.

இளைஞன், செல்வக் குடியில் பிறந்தவன் என்றாலும், ஊக்கமும், உயர்ந்த நோக்கமும் வாய்ந்த அவன் உள்ளமும், தன் மணவினைக்கு வேண்டும் பொருளைத் தானே ஈட்டிக் கொணர்தல் வேண்டும் என விரும்பிற்று; அதனால், அப்பொருளீட்டி வரும் கருத்தோடு, வெளிநாடு செல்வதற்கு வேண்டும் முன்னேற்பாடுகளில், அவன் முனைந்திருந்தான்.

**உள்ளது உயிர் ஒன்றே :**

இளைஞன் எண்ணம் இது என்பதை அறிந்தாள் அப்பெண்; உயிரினும் நாண் சிறந்தது; நாணின் பெருமையுணர்ந்த நல்லோர், அந்நாணைக் காத்தற் பொருட்டு, உயிரையும் இழக்கத் துணிவர்; உயிரைக் காத்தல் கருதி, நாணை இழக்க அவர் உள்ளம் ஒவ்வாது. ஆனால் நற்குல மகளிற்கு, நாணினும் கற்பே சிறந்தது. அவர்கள் நாணைத், தம்மைப் பெற்ற தாயினும், பெறுதற்கரிய உயிரினும் சிறந்ததாகக் கருதுவர் என்றாலும், அதைத் தம் கற்பினும் சிறந்ததாகக் கருதார்; அதனால், தம் கற்பைக் காத்தற் பொருட்டு, நாண் இழந்து வாழவும் துணிவர். அத்தகைய நற்குல மகளிர் வழிவந்தவளாதலின் அப்பெண், காதலன் வரையாது வந்து செல்வதால், ஊரார் அலர் கூறக் கேட்டு, அதனால், தன் நாண் அழிந்து போகவும், கற்பைக் காக்கும் கருத்தோடு உயிர் வாழ்ந்திருந்தாள்; அந்நிலையிலும் அவன், அவளை வரைந்துகொள்ளும் கருத்தின்றி, பொருள் தேடற் குறித்துப் புறநாடு செல்லத் துணிந்தான் என்பதை அறியவே, அவள் உள்ளம் பெரிதும் துயர் உற்றது. தன் அருகிருக்கும் தோழியை நோக்கித் "தோழி! காதலர் வரைந்துகொள்ளும் கருத்தின்றிக் காலங்கடத்துவது காண, நான் சிறிதும் கவலை கொண்டிலேன்; அவர் வெளிநாடு செல்வதால், நாம் இழக்கக்கூடிய அரும்பொருள் எதுவும் இல்லை. நலன் நாண் முதலாம் நம் பெண்மைக் குணங்கள் அனைத்தையும், நாம் எப்பொழுதோ இழந்துவிட்டோம். நம்மிடம் இப்போது இருப்பது நம் உயிர் ஒன்றே. அது, கற்புக் காலத்துக் கவின் மிக்க வாழ்வைக் கருதி, இன்னமும் நம்மைப் பிரியாமல் வாழ்

கிறது. காதலர் பிரிவால் கற்பு வாழ்வு கிட்டா தாயின், அந் நிலையில் அதுவும் நம்மைவிட்டு அகலும்" எனக்கூறிக் கலங் கினுள். காதலன், தன்னைத் தனியே விடுத்துப் பிரிந்து போகத் துணிந்துவிட்டான் என்பதை அறிந்து கலங்கும் அந்நிலையிலும், "நாம் இழக்கக் கூடியது உயிர் ஒன்றே; சிறந்த பொருள் வேறு எதுவும் இல்லை"; எனத் தன் இழப்புப் பெரிதன்று எனக் கருதுவாள்போல் கூறிய அவள் சொல் திறம் மகிழ்தற்கு உரியது.

> "விரிநீர்ச் சேர்ப்பன், நீப்பின், ஒருநம்
> இன்னுயிர் அல்லது பிறிது ஒன்று
> எவனே, தோழி! நாம் இழப்பதுவே" [a]

அவன் ஞாயிறு, நான் நெருஞ்சி :

பொருள் ஈட்டும் கருத்துடையனுய்க் காதலன் பிரியத் துணிந்தான் எனக் கேட்ட காதலி, தொடக்கத்தில் கலங் கினுள் என்றுலும், கணவன் மனைவியர்க்கிடையே இருக்க வேண்டிய உறவுமுறை நினைவு வரப்பெற்றதும் அக்கலக்கத் தைக் கைவிட்டாள். கணவன் மனைவியர்க்கிடையே கருத்து வேறுபாடு இருத்தல் கூடாது; மனைவி தனக்கெனத் தனிக் கருத்துடையளாதல் கூடாது. அவன் கருத்து ஒன்றுக, அவள் கருத்து வேறுக வேறுபடுதல் கூடாது. அது ஒன்று பட்ட உள்ளமுடைமைக்கு ஊறுவிளைவிக்கும். கணவன் கருத்தே அவள் கருத்தாதல் வேண்டும்; அவன் எதை நினைக் கிருனே, அதையே அவளும் நினைத்தல் வேண்டும். அவன் ஆசை எதுவோ, அதுவே அவள் ஆசையாதலும் வேண்டும். இவ்வுறவு முறையை உணர்ந்தவள் அவள். அதனால் காதல்

---

[a] குறுந்தொகை : 334. இளம்பூதனர்.

விரிநீர்-பரந்த நீர்நிலை, கடல்; சேர்ப்பன்-நெய்தல் நிலத் தலைவன்; நீப்பின்-பிரிந்தால். நாம் இழப்பது பிறிதொன்று வன் என மாற்றுக.

மிகுதியால் மறந்துபோன அதை உணர்ந்துகொண்டதும், காதலன் பொருள் தேடிவரப் போய்விட்டமை கண்டு கலங்குவதைக் கைவிட்டாள். அவன் கருதியவாறே பிரிந்து போய்ப் பொருள் ஈட்டுக. போனவன் அவன் வேண்டும் போது வந்து வரைந்துகொள்க. பிரியக் கருதியவனைப்போய் வருக எனப் போக்கி, அவன் வந்து வரையுங்காறும், அவன் வரவினை எதிர்நோக்கிக் காத்துக் கிடப்பேன் நான். அதை விடுத்துப்போகக் கருதுவானைப்போகற்க,எனத் தடுப்பதோ, என்னைவிட்டுப்பிரிந்தவழிக் கலங்குவதோ,பொருளீட்டிவந்து பின்னர் வரையக் கருதுவானை இன்னே வரைந்துகொள்க என வற்புறுத்துவதோ செய்யேன்; அது மனைவியர்க்கு மாண்பளிக்காது என்ற நல்லுணர்வு வரப்பெற்றாள். அவ்வுணர்வு வரப்பெற்ற அவள், "காதலன் பிரியின் இவள் துயர் பெரிதாமே; அதை இவள் எவ்வாறு தாங்கிக்கொள்வாள்? அவனைப் பிரிய விடுத்து இவள் உயிர் வாழ்வளோ?" எனும் கவலை வருத்த, தன் பொருட்டுவருந்தி நிற்கும் தோழிபால் சென்றாள். கவலை தோய்ந்த அவள் முகத்தைக் கண்டாள்; "தோழி! நெருஞ்சி மலரை நீ பார்த்துள்ளனையன்றே? ஞாயிறு கீழ்த் திசையில் தோன்றும் காலைப்பொழுதில், அது அக்கிழக்கு முகமே நோக்கி மலரும்; ஞாயிறு உச்சியை அடையும் நண்பகற் பொழுதில்,அது வானத்தை அண்ணாந்து கிடக்கும்; ஞாயிறு மறையும் அந்திப் பொழுதில், அது மேற்கு முகம் நோக்கும். இவ்வாறு, ஞாயிறு தோன்றி மறையுங்காறும் அது செல்லும் திசைதோறும் திரும்பி அதையே நோக்கிக் கிடப்பதை நீ கண்டுள்ளனையன்றே? தோழி! அந் நெருஞ்சி மலர்போன்றவள் நான்; என் உள்ளமலரை மலர்விக்கும் ஞாயிறு நம் காதலன். அவன் கருதுவதையே கருதும் என் உள்ளம். என்னைவிட்டுப்போன அவன் கொடுமை கண்டு அது கலங்காது. அவன் கருத்து அது வாதல் அறிந்து, அதற்குத் தானும் உடன்பட்டு அடங்கி ஆற்றியிருக்கும். காலையில் தான் மலரத் துணைபுரிந்த ஞாயிற்று வெப்பம், மாலையில் தன்னை வாட்டச் செய்யும் என்பதை அறிந்தும், நெருஞ்சி அதன்பின் திரிவதுபோல்

தன் காதலால் நம்மை மகிழ்வித்த காதலர், பிரிவால் நம்மை வருத்துவர் என்பதை அறிந்தும், என் உள்ளம் அவர் பின் செல்லும்; அவர் எண்ணியதையே எண்ணும்; ஆகவே, தோழி! அவர் பிரிவு பொருது துயர் உற்று வருந்துவேன் எனும் கவலை உனக்கு வேண்டாம்" என்று கூறி, அவளைத் தேற்றினள்.

தேற்றவேண்டிய நான் வருந்திக் கிடக்கத் தன்னைத் தேற்றும் தெளிவு இவளுக்கு எவ்வாறு பிறந்தது என வியந்தாள் தோழி. அவள் வியப்புணர்ந்த அப்பெண், "தோழி! கல்லும் மரமும் நிறைந்தமையால் நீல நிறம் வாய்ந்த அவன் மலையில் வெண்ணுரை தெரிக்க வீழ்ந்தோடும் அருவியைக் கண்டவர்க்கு, நீல நிறக் கடலில் தோன்றும் பிறைத் திங்களின் பேரழகுக் காட்சி நினைவுண்டாதல் போல், நெருஞ்சி மலர் இயல்பறிந்த என் அகக்கண்முன், மனைவியர்க்குரிய மாண்பு புலனாயிற்று; அதனால் அவர் பிரிவறிந்து புலம்புவது கைவிட்டேன்" எனத், தனக்கு அத்தெளிவு பிறந்த வழியினைக் கூறிவிட்டு, "தோழி! இந் நல்லறிவு தந்த அந் நெருஞ்சி நெடிது வாழ்க" என வாழ்த்தினள்.

"எழுதரு மதியம் கடல்கண் டாஅங்கு
ஒழுகுவெள் அருவி ஓங்கு மலைநாடன்
ஞாயிறு அனையன்; தோழி;
நெருஞ்சி அனைய என்பெரும் பணைத்தோளே" a

**உரம்செத்தும் உளென்:**

காதலன் பிரிவால் உண்டான கடுந்துயரைக்; காதல் மனையாளின் கடமையை நினைந்து ஆற்றிக் கொள்வதும்

---

a குறுந்தொகை: 315, மதுரை வேளாதத்தன்.

எழுதரு மதியம்- தோன்றும் பிறைத்திங்கள்; ஒழுகு-ஓடி வரும்; பணைத் தோள்-மூங்கில் போன்ற தோள்கள்; நாடன் ஞாயிறு அனையன்; தோள் நெருஞ்சி அனைய; அனைய-போன்றன,

கடமையுணர்வால் காதலன் பிரிவுத் துயரை அடக்கி வாழ்தலும் நெடிது நாள் நிற்கவில்லை. அவள் அவன் மீது கொண்ட காதல் அளவிடற்கரியது. அதனால் அவன் பிரிவால் அவள் உற்ற துயர், அவளுடைய கடனறி உள்ளத்தின் உரத்தை அழித்து விட்டது. தனித்து வாழும் நாள் வளர வளர, அவள் துயரும் வளர்ந்தது. அது அவள் அகத்தை நிரப்பிப் புறத்தார்க்குப் புலனாகுமாறு பெருகிற்று; அவள் வாய்விட்டுப் புலம்பத் தொடங்கினாள். நாணை மறந்தாள்; நிறையைக் கைவிட்டாள்; அவள் உள்ளம் உரம் அற்றுப் போய்விட்டது. பெண்டிர்க்கு ஆக்கம் அளிப்பன, அவர் உள்ளத்திற்கு உரம் ஊட்டுவன, நாண், நிறை முதலாம் பெண்மைக் குணங்களே அப்பெண்மைக் குணம் அழிய வாழும் வாழ்வு வாழ்வாகாது. ஆதலின், நாணும் நிறையும் அவளை விட்டுப் போன அன்றே, அவள் தன் உயிரையும் இழந்திருத்தல்வேண்டும். ஆனால் அவள் அவற்றை இழந்தும் உயிர் வாழ்கிறாள்.

அவள் உடலைவிட்டு உயிர் பிரியவில்லை; அது ஒன்றே, அவள் உடலில் எஞ்சி உளது. ஆனால் அதுவும், இப்பொழுதோ, அல்லது இன்னமும் சிறிது பொழுதிலோ அவளை விட்டுப் போய்விடும். பிரியுமுன் அவன் காட்டிய பேரன்பை நினைந்து, அது இது காறும் பிரியாது வாழ்கிறது. அந்நினைவற்றுப் போயிருப்பின், அவன் பிரிந்த அன்றே, அவன் பிரிவால் மகிழ்ச்சி, அவள் மனத்தைவிட்டு மறைந்த அன்றே, அதுவும் அவளை விட்டுப் பிரிந்திருக்கும். அந்நினைவு ஒன்றே அவ்வுயிரை வாழவைத்துளது. அதுமட்டுமன்று; அக்காதல் நினைவோடு, காதலன் விரைந்து வந்து வரைந்துகொள்வன் என்ற நம்பிக்கையும் சேர்ந்து அவளை வாழவைத்துள்ளன. ஆனால் அந் நம்பிக்கையும் அவளை நெடிது நாள் வாழ வைக்காது. அவன் விரைந்து வந்து சேர்ந்தால் அவள் வாழ்வாள். வாழ்வது மட்டுமன்று; அவள் வாழ்வு வளமும் வனப்பும் பெற்று விளங்கவும் செய்யும்.

அந்நிலையில் செயலற்றுக் கிடந்தவள், காதலன் பிரிவால் தனக்குற்ற கேடு, அக்கேடுற்றும் தன் உயிர் வாழ்தற்காம்

காரணம் ஆகியவற்றைத் தன் தோழியிடம் கூறவிரும்பினுள்; தன் துயர் மிகுதியைப் பிறரிடம் கூறுவதால், அத்துயரளவு குறையும் என்ற எண்ணம் ஒரு பால் தூண்ட, தன் துயர் அறியும் தோழி அத்துயர் போக்கும் வழி காண்பள் எனும் துணிவு ஒரு புறம் தூண்டத் தோழிபால் சென்றுள். "தோழி தினைப்புனம் காத்திருந்த காலத்தில் நான் ஓர் அரிய காட்சியைக் கண்டேன். அதன் உண்மை இன்றுதான் புலனுயிற்று. தோழி! புனத்தில் தினைக்கதிர் பொன்னிறம் பெற்று முற்றத் தொடங்கியதும், கிளிகள் கூட்டங் கூட்டமாய் வந்து அக்கதிர்களைக் கொய்து சென்றன. தினைத்தாளுக்கு அது ஈனும் கதிரே இன்றியமையாப் பயனும்; அதை இழந்த பின்னர், தாள் மடியாது வாழ்தலில் பொருள் இல்லை; ஆனுல், கிளிகள் கொய்துகொண்டு போய்விட்டமையால், தம் பயனை இழந்த பின்னரும், தாள்கள் மடிந்து போகாது உயிர் வாழக் கண்டேன். அவை அவ்வாறு உயிர் வாழ்ந்தது, அவை பண்டு பெற்ற மழை நீரால். அம்மழை நீர், அறவே வற்றிப் போகாமல் இன்னமும் சிறிது உண்மையால் மடிந்து போகாது, மாருகப் புதிய தளிர் ஈன்று தலை நிமிர்ந்து நின்ற தாள்கள், பின்னர்ப் பெருமழை பெய்தமையால், மீண்டும் கதிர் ஈன்று பயன் பெற்றன. அக்காட்சியை அன்று கண்டேன். அத்தினைத் தாள்பால் அன்று நான் பெற்ற அறிவு, இன்றுஎன்னை வாழச் செய்கிறது. தோழி! நாட்டவர் போற்றும் பெருமையுடையது என்நலம்; அந்நலத்தைக் காதலர் நுகர்ந்துவிட்டார்; அதனுல் நாணம் நிறை முதலாம் பெண்மைக்குரிய பண்புகளை இழந்துவிட்டேன். அவற்றை இழந்தும் இறவாது உயிர் வாழ்கிறேன் நான். நம் காதலர் நம்மீது பண்டு சொரிந்த அன்பின் நினைவால், அந்நினைப்பு என் நெஞ்சில் இன்னமும் மறையாது நிற்பதால் நான் உயிர் கொண்டு உலாவுகிறேன். தோழி! என்னை வாழ்விப்பது அந்நினைவு ஒன்று மட்டுமன்று. பண்டுபெற்ற மழை நீரால், கதிர் இழந்தும் உயிர் வாழ்ந்த தினைத்தாள், பெருமழை பெய்யும் எனும் நம்பிக்கையால் பொறுமை காட்டி, அம்மழையை எதிர் நோக்கி வாழ்ந்தமையால், மீண்டும் கதிர் ஈன்று பெருமை

யுற்றதுபோல், பண்டு அவர் அளித்த அன்பை மறவாது, பிரிந்துசென்ற அவர் மீண்டுவந்து பேரன்பு காட்டுவர்; அதனால் இழந்த என் நலங்களை மீட்டும் பெறலாம் எனும் நம்பிக்கையே, என்னை இந்நிலையிலும் வாழச் செய்கிறது" எனக் கூறினாள்.

காதலர் பிரிவால் தான் உற்ற கடுந்துயர், அத்துயருறும் காலத்தும் கணவன் அன்பை நம்பி உயிர் வாழும் நற்பண்பு ஆகியவற்றைப் புலப்படுத்திடப் பெருமையுற்றவள், "தோழி! என் உயிர் வாழ்வது, அவன் மீண்டுவரும் விரைவைப் பொறுத்துளது; ஆகவே அவர் விரைந்து மீள வழிகாணுவாராக" எனக் கூறுமற் கூறிப் பணித்த பெருமை பாராட்டற்குரியது.

"புனவன் துடைவப் பொன்போல் சிறுதினை
கிளி குறைத்து உண்ட கூழை இருவி
பெரும்பெயல் உண்மையின் இலை ஒலித்தாங்கு என்
உரம்செத்தும் உளெனே தோழி! என்
நலம் புதிது உண்ட புலம்பினானே." [a]

## அவன் பொய்ப்பின் நான் என் செய்வேன்?

"மணத்திற்கு வேண்டும் மாநிதி ஈட்டச் செல்வேன்; வேண்டும் பொருள் சேர்ந்ததும் விரைந்து வந்து வரைந்து கொள்வேன்" எனக் கூறிச் சென்றவன், நாள்பல ஆகியும் வந்திலன். வருவான்; வரைந்து கொள்வான்; வரையா

---

[a] குறுந்தொகை: 133 உறையூர் முதுகண்ணன் சாத்தன்.

புனவன்–குறவன்; துடவை–தினைப்புனம்; குறைத்து–ஒடித்து; கூழை–மொட்டையான; இருவி–தினைத்தாள்; பெரும்பெயல்–பெருமழை; ஒலித்தாங்கு–தழைத்தாற்போல்; உரம்–நாணம், நிறை முதலாம் பெண்மைக் குணங்கள்,

இன்பம் தருவான் எனும் நம்பிக்கையால் உயிர்கொண்டு வாழ்ந்த அவள் நம்பிக்கையும் நாளடைவில் தளர்ந்து விட்டது. அவன் வாராதே நின்று விடுவனோ எனும் ஐயம், அவள் உள்ளத்தில் மெல்ல இடம்பெறத் தொடங்கிற்று. அதனால் அவள் உள்ளம் அஞ்சிற்று; கண்டு காதல் கொண்டு, அன்பு காட்டிப், "பிரியேன்; பிரியின் உயிர் வாழேன்" என வன்புரை வழங்கிய அவன், தன்னைக் கைவிட்டால் தன்நிலை என்னும் என எண்ணி நடுங்கிற்று அவள் உள்ளம். "தன் காதலைப் பொய்க்கும் கள்வனாய், கயவனாய் அவன் மாறி விடின், அவன் செய்த கொடுமையை ஆன்றோர் அவையில் எடுத்துக் கூறி அறம் கேட்க எண்ணின், அந்நிலையில் தனக்குச் சான்று கூறித் துணைபுரியும் நல்லவர் எவரும் இலரே; இதற்கு என் செய்வேன்" எனக் கலங்கினாள்.

அவ்வாறு கலங்கியவள், கலங்கி வாளாக் கிடப்பதால் பயன் இல்லை; தோழிபால் கூறி இதற்கு ஒரு வழி காணுதல் வேண்டும் எனக் கருதினாள்; தோழியை அழைத்தாள். "தோழி! காதலர் என்னை முதன் முதலாகக் கண்டு காதல் கொண்டபோது, அங்கு வேறு யாரும் இல்லை. அங்கு இருந்தவர், என் உளம் கவர்ந்த கள்வராய அவர் ஒருவரே; என் காதல் உறவிற்குச் சான்று பகர வல்லவர், அவர் ஒருவரைத் தவிர வேறு எவரும் இல்லை. நாங்கள் நின்றிருந்த இடத்திற்கு அருகே உள்ள ஒரு நீர்நிலையில் நாரை ஒன்று இருந்தது; ஆனால், அதுவும் நாங்கள் உறவு கொண்டதைப் பார்க்கவில்லை. தன் உணவைத் தேடும் கருத்தால், ஆரல்மீன் ஓடி வாராதா என அந்நீரையே நோக்கிக் கொண்டிருந்தது அது. அதனால், அது எங்கள் உறவினை அறியும் சான்றாகாது. தோழி! வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுக்கும் அந்நிலையில், அந்நிகழ்ச்சிக்குச் சான்றளிக்கவல்ல சான்றோர் சிலர் உடன் இருத்தல் வேண்டும் என்பதை, நான் அப்போது அறியாது போனேன். இரைதேடும் ஆர்வ மிகுதியால், தனக்கு ஊறு தேடுவார் எவரேனும் வருவரோ எனும் எண்ணம் அற்று, அதனால், அது வாழும் நீர்நிலைக்கு அணித்தாக,

நாங்கள் காதல் விளையாட்டு நிகழ்த்துவதையும் காணுது, நீர்நிலையையே நோக்கிக் கிடந்த அந்நாரையின் செயல்கண்டு நானும் அறிவிழந்து போனேன். காதல் மிகுதியால், இன்று அன்பு காட்டும் இவர், பின்னர் அறவே கைவிட்டுப் போத லும் உண்டாம்; அந்நிலை ஏற்படுங்கால், நமக்குச் சான்றளிக் கவல்ல சிலர் உடனிருத்தல் வேண்டும் என்பதை மறந்து போனேன், தோழி! அன்று, என்னை இமைப்பொழுது பிரிய நேரினும் பெரிதும் கலங்கும் அவர், இன்று சென்று இத்தனை நாளாகியும் வாராமை கண்டு, அவர் நம்மை மறந்து கைவிட் டாரோ என எண்ணிக் கலங்குகிறது என் உள்ளம். அவ் வாறு அவர் கைவிட்டால், தோழி! நான் என் செய்வேன்? எவ்வாறு உயிர்வாழ்வேன்?'' எனக் கூறிக் கலக்கிக் கண்ணீர் சொரிந்தாள்.

"யாரும் இல்லை; தானே கள்வன்;
தான் அது பொய்ப்பின், யான் எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால,
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே" [a]

நாணும் நன் னெஞ்சு உடையான் நின்தலைவன் :

காதலன் காதல் உறவை மறந்து கைவிடுவனே என அவள் கலங்குவதைக் கண்டாள் தோழி. அவன் எத்தகை யன் என்பதைத் தோழி அறிவாள்; அவன் நல்லன் என்பதை அறிந்த பின்னரே, அவர்கள் காதல் உறவு வளரத் துணை

---

a குறுந்தொகை: 25. கபிலர்.

அது—அக்காதலை; எவன்—யாது; செய்கோ—செய்யவல் லேனோ; சிறுபசுங்கால—சிறிய பசிய கால்களை உடைய; சிறு பசுங்கால குருகு, ஆரல் பார்க்கும் குருகு எனத் தனித் தனியே கூட்டுக. ஆரல்—ஒருவகை மீன்; மணந்த ஞான்று— மணந்த காலத்தில்,

புரிந்தவள் அவள். அதனால், "அவன் நல்லன், நீ நினையு மாறு உன்னை நிலைகெடக் கைவிடுவானல்லன்; குறைகூறு முன்பே குறிப்பால் அறிந்து அக்குறை போக்கும் குணம் உடையவன்" என்பதை அவளுக்கு அறிவிக்க விரும்பினாள்.

"பெண்ணே! உன் காதலன் உயர்ந்த பண்புடையவன்; தன் கடனறிந்து நடந்துகொள்ளும் தகுதி வாய்ந்தவன்; அவன் நெஞ்சம் என்றும், எவர்க்கும் நல்லதையே எண்ணும் நல்ல நெஞ்சம்; நல்லன் எனப் பாராட்டற்குரிய பண்புகளை யெல்லாம் ஒருங்கே பெற்றவன். களவொழுக்க வாழ்வில் உனக்கு உண்டாம் ஏதங்களை, ஒருநாள் அவனுக்கு எடுத் துரைத்தேன். அதைக் கேட்டு அவன் உள்ளம் வருந்தியதை நான் என்னென்று கூறுவேன். 'எனக்குப் பேரின்பம் நல்கு கிறது எனும் நினைவால் பிறர் துயரை அறியாது போன என் இழிவு கண்டு உள்ளம் நாணுகிறது. இதை இன்றே கைவிட் டேன், களவொழுக்க வாழ்க்கை எத்துணைப் பேரின்பம் நல்கு வதாயினும் இனி அதை விரும்பேன்; அவள் இடர் நீங்கி இன் புறும் வண்ணம், வரைவினை விரைந்து மேற்கொள்வேன்; இனி அதுவே குறியாய் இருந்து முயல்வேன்; என உறுதி யளித்தான். அளித்த உறுதியை அழியாது காக்க, அன்றே வரைபொருள் சேர்க்க வெளிநாடு சென்றான்; அவ்வாறு நாணும், நற்பண்பும், நல்ல உள்ளமும் உடையானை ஐயுறல் அழகாகாது; அவன் அத்தகையன் அல்லன்" எனக் கூறி, அவளை ஆற்றுவித்தாள்.

அவ்வாறு அவன் பெருமையைப் பாராட்டி, அவள் துயரைப் போக்குவாள். அவன் மலைநாட்டு மாண்பினைக் கூறு வாள்போல், அவன் மாண்பினை இனிது எடுத்துக் கூற விரும் பினாள். அதனால், "அவன் நல்லன்; நாணும் நெஞ்சுடையன்" எனக் கூறியதோடு நில்லாது, "பெண்ணே! அவன் மலைநாடு காந்தட் செடிகளை நிறையக் கொண்டது. அக்காந்தளுக்கு ஏனைய செடிகளுக்கில்லாச் சிறப்பு ஒன்று உண்டு. மலரும் பருவம் வந்ததும் தாமே மலரும் அதன் பேரரும்புகள், சில

காலங்களில், தம்மிடம் உள்ள தேனைக் குடிக்கும் ஆர்வ மிகுதியால், தாம் மலரும் காலம்வரை காத்திருக்கமாட்டாத வண்டுகள், தாம் மலர்வதற்கு முன்பே வந்து தம்மை மொய்க்கத் தொடங்கிவிடும் வண்டுகளின் வேட்கை அறிந்து தாம் மலரவேண்டிய காலத்திற்கு முன்பே மலர்ந்து மணம் நாறும். சான்றோர் எனத் தம்மால் மதிக்கத்தக்க மாண்புடையாரைக் கண்டவுடனே, கடமை நெறி நிற்கும் நல்லோர், அவரை வரவேற்று, அவர் வேண்டுவனவற்றை, அவர் கூறு முன்பே அறிந்து, அவர் எதிர்நோக்கும் காலத்திற்கு முன்பே, அவர்க்குத் துணைபுரிவர்; அந்நல்லோர் செயலை நினைப்பூட்டும் பெருமையுடையதன்றோ அக்காந்தள்; அத்தகைய காந்தள் மலரை நிறையக் கொண்டது நம் காதலன் நாடு" என அவன் நாட்டு மலர் மாண்பு கூறுவாள்போல், "பெண்ணே! பருவம் வந்ததும் அவன் தானே மணக்க முன் வருவன்; அப்பருவம் வரும்வரையும் காத்திருப்பதே நம் கடமை; அதை நாம் கைவிட்டோம்; அப்பருவம் வாரா முன்பே, விரைந்து வந்து வரைந்துகொள்க என அவனை வற்புறுத்தினேம். அவனால் காதலிக்கப்பெற்ற நாம், களவொழுக்க வாழ்வால் நம் துயர் பெருகுகிறது எனக் கூறியதும், நம் கருத்துத் திருமணத்தின் பால் சென்றுளது என்பதைக் குறிப்பால் அறிந்து, அம்மணப் பருவம் வருதற்கு முன்னரே, அதற்காவன மேற்கொள்ளத் துணிந்துவிட்டான்; என்னே அவன் பெருமை" என அவன் மாண்பினைப்பாராட்டி. ஆகவே, "பெண்ணே! அவன் அன்பை ஐயுறற்க; விரைந்து வந்து வரைந்து கொள்வன்; வருத்தம் ஒழிக" என வற்புறுத்தி ஆற்றுவித்தாள்.

" காந்தள் அம் கொழுமுகை காவல் செல்லாது
வண்டு வாய்திறக்கும் பொழுதில், பண்டும்
தாம் அறிசெம்மைச்சான்றோர்க் கண்ட
கடன் அறி மாக்கள் போல இடன்விட்டு
இதழ் தளைஅவிழ்ந்த ஏகல் வெற்பன்,
நன்னர் நெஞ்சத்தன்; தோழி! நின்னிலை

யான் தனக்கு உரைத்தனென் ஆகத்
தான் நாணினன், இஃது ஆகாவாறே'' [a]

அன்னை அறியின்?

"நானும் நல் உள்ளமும் வாய்ந்த நல்லவன் உன் காதலன்; ஆதலின், அவன் காதலை ஐயுறற்க'' எனத் தோழி கூறிய தெளிவுரையால், அவள் சிறிதே உளம் தேறினாள்; ஆனால் அத்தெளிவுரை நீண்டு பயன் அளிக்கவில்லை. பொருள் தேடிப் போனவன் இன்னமும் வந்திலன்; விரைவில் வருவதாகவும் தோன்றவில்லை. அதனால் அவள் துயர் பெருகிற்று; "நான் இத்துணை கூறியும் துயர் உறுகின்றனையே'' எனத் தோழி கழறுவள் எனும் அச்சத்தால், புறத்தார்க்குப் புலனாகுமாறு புலம்புவதில்லை என்றாலும் அவள் உள்ளத்தில் துயர் தணியவில்லை, உள்ளம் ஓயாது வருந்திற்று. உள்ளத்தில் துயர் மிகவே, அது அவள் உடல் நலனைக் கெடுத்தது. தோள் முதலாம் உறுப்புக்கள் தளர்ந்தன, கைவளைகள் தாமே கழன்றோடலாயின. சோர்வு அவளைப் பற்றிக்கொண்டது; அவள் உடல் அறவே உரம் இழந்துவிட்டது. இதை உணர்ந்தாள் அவள். இந்நிலை நீளின், தன் காதல் வாழ்விற்கு, அதைத்தொடர்ந்து மேற்கொள்ளவிருக்கும் தன் கற்பு வாழ்விற்குப் பெருங்கேடு விளையுமே என அஞ்சினாள்.

அவளைக் கண்ணிமையெனக் கருத்தோடு வளர்த்து வருபவள் அவள் தாய்; தன் மகள் உடல் நலத்தில், ஒரு சிறு

---

[a] குறுந்தொகை: 265. கருவூர்க்கதப்பிள்ளை.

கொழுமுகை-பெரிய அரும்பு; காவல் செல்லாது-மலரும் காலம்வரை காத்திராது; வாய்திறக்கும்-மலர்விக்கும்; செம்மைச் சான்றோர்-நடுநிலை முதலாம் நற் பண்புகளின் நிலைக்களமாய சான்றோர்; இடன்விட்டு-வண்டுகளுக்கு இடம் கொடுத்து; தலையவிழும்-மலரும்; ஏகல்-உயர்ந்த மலை; வெற்பன்-குறிஞ்சி நிலத் தலைவன்; நன்னர்-நல்ல; இஃது-இக் களவொழுக்கம்.

மாற்றம் நிகழக் காணினும், அது நிகழக் காரணம் யாதோ என எண்ணி எண்ணிக் கலங்குவாள். அத்தகையாள், தன் மகளின் இன்றைய தளர் நிலையைக் காணின், பெரிதும் கலுழ்வள்; மருத்துவனையும், மந்திரம் வல்லானையும் அழைத்து, அது போக்க விரைவள்; ஆனால் இத்தளர்ச்சி மன நோயை அடிப்படையாகக்கொண்டு வந்தது ஆதலின், அதை அவர் போக்க அறியார்; மருந்தாலும், மந்திரத்தாலும் போக்கமாட்டாத நோய் எது என்பதைத் தாய் அறிவாள். அதனால், மகள் மணத்திற்கு அடிகோல முற்படுவள். மகள் காதலையோ, அவள் காதலனையோ அறியாளாதலின், அவளைப் பிறன் ஒருவனுக்கு மணம்செய்து கொடுக்கவும் நேரும்.

தன் தாயின் இயல்பறிந்த அப்பெண், அப்படியும் ஒரு நிலை வாய்த்துவிடுமோ என அஞ்சினாள். அவ்வச்சம், தோழியின் வன்சொற்கு அஞ்சும் அச்சத்தினும் பெரிதாயிற்று. அதனால், துணிந்து தோழிபால் சென்றாள். உள்ளத் துயரால் உடல் உரமிழந்து போவதை, அஞ்சாது அவளுக்குக் காட்டி, "தோழி! இத்தளர்ச்சியைத் தாய் அறியின், அவள் அறிவதன் விளைவாய் வந்து வாய்ப்பனவற்றை ஏற்று உயிர் வாழ்தல் என்னால் இயலுமோ? அந்நிலை வந்துற்றவிடத்து, இறவாது இருத்தல் என்னால் ஆமோ? இருத்தல்தான் நன்றோ?" என வாய்விட்டுக் கூறி வருந்தினாள்.

> "ஆய்வளை ஞெகிழவும், அயர்வு மெய்நிறுப்பவும்
> நோய்மலி வருத்தம் அன்னை அறியின்
> உளெனோ? வாழி தோழி!" a

---

a குறுந்தொகை; 316. தும்பி சொகினனார்.

ஆய்வளை–தாய் ஆராய்ந்து அணிந்த அழகிய வளை; ஞெகிழ–கழல; அயர்வு–தளர்ச்சி; நோய்மலி–நோய் மிகுவதற்குக் காரணமான.

காதல் இன்றேல் சாதல் :

காதலர் விரைந்து வாராமையால், தன் உயிர் இழக்கும் நிலையும் வந்துறும் எனக்கூறி வருந்திய அப்பெண், "காதலர் வினை முடித்து மீண்டு வந்து வரைந்து கொள்ளும்வரை காத்திருத்தல் இயலாதோ? விரைந்து வந்திலர் என்பதற்காக வருந்தி உயிரிழத்தல் வேண்டுமோ" எனத் தோழி இடித்துரைத்தாலும் கூடும் என எதிர்நோக்கினாள். அதனால், அவள் அவ்வாறு கூறி அறிவூட்டுவதற்கு முன்பே, "அது இயலாது; காதல் காத்திருக்கக் கூடியதோ, காணாதிருக்கக் கூடியதோ அன்று" என்பதை அவளுக்கு அறிவுறுத்த விரும்பினாள்.

தோழியை மீண்டும் நோக்கினாள். "தோழி! யாமைப் பார்ப்பு, தாயின் முகம் நோக்கி வளரும் இயல்புடையது; தாய் முகம் நோக்கும் வாய்ப்பு அற்றுப் போமாயின் அது வளராது; வாழாது. தாய்ப் பறவை இட்ட ஒரு முட்டை, அப்பறவை அதை, இடைவிடாது அடைகாத்துக்கிடந்து பாதுகாப்பதினாலேயே குஞ்சாகி உயிர்பெற்று உலாவும். தாய்ப் பறவை அவ்வாறு அடைகாவாது விடின், குஞ்சு உருப் பெறாது; முட்டை அழுகி அழிந்துபோகும். இவ்வுயிரியல்பைத், தோழி! நீ அறிவை. தோழி! யாமைப் பார்ப்பு, தாய் முகம் நோக்கி வளர்வதே போல், காதலும், காதலரை இடைவிடாது கண்டு மகிழ்வதால் வளருகிறது. தாய் முகம் நோக்காத வழிப், பார்ப்பு அழிவதேபோல், காதல், காதலரைப் பார்ப்பதின்றேல் குன்றிக் குறைந்து மறைந்து போம். தாய்ப் பறவை இடைவிடாது இருந்து அடைகாப்பதால் முட்டை குஞ்சாகிப் பயனடைகிறது. அதுபோல், காதலர் இருவரும் மணந்து, பிரிவின்றி இடைவிடாது இருந்து வாழ்வரேல், காதலும், மேன்மேலும் வளர்ந்து இல்லறமாம் நல்லறப் பயனை நல்கும். அவர்க்கு, இடையீடு இன்றி வாழும் வாய்ப்பு இன்றாயின் தாயின் காவலைப் பெறாத முட்டை அழிவதுபோல், அவர் காதல், இல்லறப் பயன் தாராது அழிந்து பாழாம்; ஆகவே தோழி! நானும் அவரும்

கொண்ட காதல், மேலும் மேலும் வளர்ந்து, பயனளித்தலை வேண்டுவையாயின், அவரும் நானும், ஒருவரை விட்டு ஒருவர், இமைப் பொழுதும் பிரியாது கூடி வாழ்தல் வேண்டும்; அந்நிலை எம் திருமணம் ஒன்றினாலேயே உண்டாம்; அத்திருமணம் எத்துணை விரைவில் நடைபெறுகிறதோ அத்துணையும் நன்று; அது விரைவில் நிகழாதேல், எம் காதல் அழிவது உறுதி; காதலை அழியவிட்டு யான் மட்டும் உயிர் வாழ்தல் இயலாது. யானும் இறந்து போவேன்; இதையெல்லாம் உணராது, பிரிந்து போய் மறைந்து வாழும் அவரை என்னென்பேன்! குறையுடையார் அவர் என உணராது, 'காத்திருத்தல் வேண்டும்' என எனக்கு அறிவுரை கூறும் உன் அறிவுத் திறனை என்னென்பேன்'' என வெறுத்துக் கூறினாள்.

''தாய் இல் முட்டை போல உள் கிடந்து
சாயின் அல்லது பிறிது எவன் உடைத்தோ!
யாமைப் பார்ப்பின் அன்ன
காமம், காதலர் கையற விடினே,'' [a]

## அவர் நட்புப் பகையாயிற்று :

ஓர் ஆண் மகன், ஒரு பெண்ணை, அவளை ஈன்றதாய் தந்தையர் அறியா நிலையில் காதலித்துச் சின்னாள்வரை சிறிது பொழுதும் பிரியாதிருந்து பேரின்பம் தந்து, பின்னர்த் ''திருமணத்திற்குத் தேவைப்படும் இருநிதி சேர்த்துக்கொண்டு விரைவில் வந்துவிடுகிறேன்'' எனக் காரணம் காட்டிப் பிரிந்து போய், நாள் பல ஆகியும் வாரானாயின், அந்நிலையில் அப்பெண்ணின் துயர் எத்துணை கொடிதாம் என்பதை தோழி அறிவாள். அவன் உண்மையில் நல்லவன், நம்புதற்கு

---

[a] குறுந்தொகை ; 152. கிள்ளிமங்கலங்கிழார்.

சாயின் அல்லது-அழிதல் அல்லது; பிறிது எவன் உடைத்து-வேறு என்ன உறுதி உடைத்து; யாமை-ஆமை; பார்ப்பு-அதன் குஞ்சு. காமம், கையறவிடின், சாயினல்லது பிறிதெவன் உடைத்து என மாற்றிப் பொருள் கொள்க.

உரியவன் என்றாலும், அதைத் தான் அறிந்திருந்தது போன்றே அப்பெண்ணும் அறிவாள் என்றாலும், அவள் உள்ளம், அவன் வாராதிருக்கும் நாட்கள் வளர வளர, நிலை கொள்ளாது நெடுந்துயர் கொள்ளும்; அந்நிலையில் எதைக் கூறினும் அவள் உள்ளம் ஏற்றுக் கொள்ளாது; காதல் பொய்த்துப் போமானால் தன்னிலை என்னும் என எண்ணிப் பார்க்கும் அவள் உள்ளத்துயர்க்கு ஓர் எல்லை காணல் இயலாது என்பதையும் அறிந்தவள் தோழி. அதனால், அவள், "நான் கூறிய அத்தனை அறவுரையும், அளித்த அத்தனை உறுதியும் பயனிலவாயின; இவள் அவை கேட்டும் அடங்கினாளல்லள்; இனி, இவளுக்கு ஏதும் கூறேன்; இவளை ஆற்றியிருக்கப் பண்ணுவதும் என்னால் ஆகாது" என வெறுத்துக் கூறி ஒதுங்கிவிட்டாள். அது, அவள் தோழியாம் தகுதிக்கும் இழுக்காம்.

காதல் பயன் தாராது எனக்கொண்டமையால், சாகத் துணிந்து நிற்கும் அந்நிலையிலும், அவ்வுயர் குடிப் பெண், தன் காதலனைப் பிறர் பழிக்கப் பார்த்திராள். அவர் அவனைப் பழிக்கக் காரணமாயது யாது எனக் கண்டு, அதை அகற்ற முன் வருவள்; அம்முயற்சியில் வாராதிருந்து வருத்தும் அவன் கொடுமையைச் சிறிதே மறப்பதும் செய்வள் என்பதைப், பிறந்த நாள் தொட்டு அப்பெண்ணோடு சேர்ந்து பழகிய தோழி அறிவாள். அதனால், அளித்த உறுதிகளும், அறிவித்த அறவுரைகளும் பயனற்றுப் போனதும், புதுமுறையொன்றைத் தேர்ந்துகொண்டு அவள்பால் சென்றாள்.

சென்றவள் "பெண்ணே! யானைக் கன்றுகளை நீ பார்த்திருக்கின்றாய் அல்லவா" எனத் திடுமென ஒன்று வினவினாள். தன் காதல், காதலன், அவன் செய்யும் கொடுமை ஆகியவற்றுள் எது குறித்தும் பேசாது, யானைக் கன்றுகள் குறித்துப் பேசஎடுப்பது கண்டு, தோழி கூறத் தொடங்குவது, தன் காதலோடு தொடர்பிலாத, யாதோ ஒரு புது நிகழ்ச்சி போலும் என எண்ணி, அப்பெண், "ஆம்; பார்த்திருக்கி

றேன்" என்றாள். உடனே தோழி, "யானைக் கன்றுகள், தம் இளமைப் பருவத்தில், தாம் வாழும் காட்டில் வாழ்பவராய குறவர்களின் குழந்தைகளோடு ஆடி மகிழ்வதையும், ஆண்டு சில கழிந்த பின்னர், அன்று குறச்சிறுவர்களோடு ஆடி மகிழ்ந்த அதே யானைக் கன்றுகள், வளர்ந்து பெரியவாகி விடவே, அச்சிறுவர்கள் காத்து நிற்கும் தினைப்புனத்துள் புகுந்து, தினைகளைப் பாழாக்குவதையும், தம் இளமைப் பருவத்து இனிய தோழராய் விளங்கிய யானைகள், இன்று தம்புனத்துள் புகுந்து கேடு செய்வதைக் காணும் சிறுவர்கள் கவண்கல் எறிந்து அடித்து விரட்டுவதையும் பெண்ணே! நான் பார்த்திருக்கிறேன்; நீ பார்த்துள்ளனையோ!" எனக் கேட்டாள்; அப்பெண் "ஆம்" எனத் தலையாட்டினாள். உடனே தொடர்ந்தாள் தோழி. "பெண்ணே! 'இந்த யானைக் கன்றுகள், பிறிதொரு காலத்தில் நாம் காக்கும் தினைப்புனத்துட் புகுந்து பாழ் செய்யும்' எனக் குறச் சிறுவர்கள், விளையாடும் சிறு பருவத்தில் அறிந்திருப்பாராயின், அன்று அவற்றோடு ஆடி, அவற்றிற்கு மகிழ்ச்சி அளித்திருப்பார்களா. அதை உணர்ந்துகொள்ளும் அறிவுத் திறம், அன்று அவர்கள் பால் இல்லை. அதனால், அவற்றோடு ஆடி மகிழ்ந்தார்கள். இன்று அவை தமக்கு அழிவு தருகின்றன. அது கண்ட அவர்கள், கவண்கல் எறிந்தும், எரிகொள்ளி வீசியும் அவற்றை விரட்டுகின்றனர்; 'அன்று நம்மோடு ஆடி மகிழ்ந்த யானைகள் இவை; இவற்றை அடித்து ஓட்டுவதா? கூடாது; இப்போதும் அவற்றோடு ஆடி மகிழ்வோம்; மகிழ்ச்சி கெடாவகையில், வேண்டுமளவு தினைக்கதிர்களைத் தின்னட்டும்' என எண்ணி அடித்து விரட்டாது விடுவதில்லை. பெண்ணே! குறக்குலச் சிறுவர்கள்பால் காணலாம் இப் பேரறிவு, நாகரிக வளம் மிக்க நகர மக்கள்பால் அமையவில்லையே! அவ்வறிவு உன்பாலும் அமையவில்லை போலும். காதலர், அன்று தம்மோடு கூடி ஆடி மகிழ்ந்தார்; அது, குறச்சிறுவர்களோடு யானைக்கன்று ஆடி மகிழ்ந்ததை ஒக்கும்; இன்று பிரிந்து போய் தமக்குத் துயர் தருகின்றார்; யானைக் கன்றுகள் வளர்ந்து பெரிய

வான பின்னர், தினைப்புனத்தை அழிப்பதை ஒக்கும் அது. இளமையில் ஆடுவதும், முதுமையில் அழிப்பதும் யானைக்கு இயல்பாதல்போல் முன்னர் இன்பம் அளித்துப் பின்னர்த் துன்பம் தருவது அவர் இயல்பு. ஆனால் உன் அறிவு என்னாயிற்று; ஆடி மகிழ்ச்சி அளித்த யானை, கேடுதரக் கண்டதும் அடித்துத் துரத்தத் துணியும் அக்குறக் குலச் சிறுவர்பால் காணலாம். அவ்வறிவு உனக்கு வாராது போனது ஏன்? காதலித்துக் களிப்பூட்டிய அவர், பிரிந்து போய்ப் பெருந் துயர் தரக்கண்டு அவரை வெறுத்து ஒதுக்கத் தவறியது ஏன்? அதற்கு மாறாகக், கொடுமை செய்யும் அவரை நினைந்து கண்ணீர் விட்டுக் கலங்குகின்றனையே; அது நின் அறிவுண்மையைக் காட்டுவதாமோ? பெண்ணே! உன் காதலன் கடிந்து ஒதுக்க வேண்டிய கொடுமையுடையவன்; அவனை மறந்துவிடுவதே மாண்புடைத்து'' என, யாதோ ஒரு புது நிகழ்ச்சி கூறுவாள்போல் தொடங்கி அப்பெண்ணின் உள்ளத்தில் புரட்சிக் கனலைப் புகுத்திவிட்டாள்.

''முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற
குறி இறைப் புதல்வரொடு மறுவந்து ஓடி
முன்னாள் இனியதாகிப், பின்னாள்
அவர்தினை மேய்தந் தாங்குப்
பகை ஆகின்று, அவர் நகை விளையாட்டே.'' a

குறிப்பு: இவ்வாறு கூறியதால், காதலனை விரட்ட வேண்டும் என்பதே தோழியின் கொள்கை போலும் எனக்

---

a குறுந்தொகை: 394. குறியிறையார். தோழியின் இவ்வுள்ளம் தோன்ற, குறச் சிறுவரைக் 'குறியிறையார்' எனப் பெயரிட்டு வழங்கிய சிறப்பால், புலவர்க்கு அது பெயராயிற்று.

இரும்-கரிய; கயந்தலை-மெல்லிய சிறிய தலை; நறவுமலி பாக்கம்-கள் நிறைந்த மலைச்சாரல் ஊர்; குறிஇறை-குறுகிய முன்கை; மறுவந்து-சுற்றிச்சுற்றி வந்து; மேய்தந்தாங்கு-மேய்ந்ததுபோல்.

கருதுதல் கூடாது; துயர் மிகுதியால் கலங்கியிருக்கும் அப்பெண்ணைத் தேற்ற, அப்போது, சிறிதாவது வன்சொல் வழங்கவேண்டும் எனக் கருதியதால் அவ்வாறு கூறினுள். என்றாலும், குறவர் செயலை அறம் என அவள் ஏற்றுக் கொள்ளவில்லை. அது, அக் குறவர்களைக் குறிக்க அவள் வழங்கிய குறியிறைப் புதல்வர் என்ற தொடரால் இனிது விளங்கும். பேரறிவு உடையார்க்கு முன் கைகள் மிக நீண்டிருக்கும். ஆனால் அவள் காட்டும் குறவர்க்கு, முன் கைகள் குறுகியுள்ளன; அதனால் அக்குறவர், குறுகிய அறிவுடையர்; அவர் செயல் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று என்பதைக் குறிப்பால் உணர்த்தினுள் என்க.

**யான் சினந்தால் நீ என்னுருவை?**

தோழி கருதிச் செய்தது பயன் தரத் தொடங்கிவிட்டது. "காதலனோடு அன்று நாம் கொண்ட நட்பு, இன்று பகையாகிவிட்டது. அவன் நட்புக் கோடற்குரிய நல்லவனல்லன்" எனத் தோழி கூறக் கேட்டாள் அப்பெண். அவள் ஒரு நல்ல பெண்மணி. கணவனுக்கு ஏற்ற காரிகை. "தகை சான்ற சொல்காத்துச் சோர்வு இலாள் பெண்" என்ற திருவள்ளுவர் பாராட்டைத் தனக்கே உரிய தனி உடைமையாக்கிக்கொண்டவள். தன்னையும் தன் காதலனையும் இவ்வுலகம் புகழ்ந்து பாராட்டவேண்டும் என விரும்பி, அப்புகழ் கெடாது காத்தலைத் தன் தலையாய கடமையாகக் கொண்டவள். தன்னைப் பழித்துரைப்பதை, ஒருவாறு தாங்கிக் கொள்ளினும், தன் காதலனைப் பழிப்பதைத் தாங்கிக்கொள்ளாது அவள் உள்ளம். அதனால், தன் காதலனைத், தன் முன், தான் கேட்கத், தோழி பழிக்கக் கேட்டதும், அவள் துன்பம் அவளை விட்டு அகன்றது. அதற்கு மாறாகத், தன் காதலனைப் பழித்த தோழி மீது கடுஞ்சினம் மூண்டது. "பிறர் பழி கூறுமளவு பண்பு கெட்டவரல்லர் என் காதலர்; அவ்வாறே, அவர் பழியுடையர் என்பது ஏற்றுக் கொள்ளப் பெறினும், என் காதலரை பழி கூற இவள் யார்?" என எண்ணங்கள் அலை அலையாக எழுந்தன அவள் உள்ளத்தில்.

சினத்தோடும் சென்று தோழியைக் கண்டாள். கண்டு, "தோழி! என் காதலர் தனி மிக நல்லவர். அடைந்தாரை ஆதரிக்கும் அருள் உள்ளம் உடையவர் அவர். அவர்பால் காணலாம் அப்பண்பு, அவர் நாட்டு இயற்கைப் பொருள்களி டத்தும் பொருந்தியுளது. அவர் நாட்டு மலையருவி, தன் கரைவளர் மரங்களுக்கு நீர் அளித்துப் புரப்பதில் தவறு வதில்லை; அதைப் போலவே, அவர், தன்னை அடைந்தவர்க்கு அவர் வேண்டுவன எல்லாம் அளித்துப் புரப்பர். அவ்வருவிக் கரையில் வளரும் வேங்கை மரம் அவ்வருவி நீர் உண்டு தழைத்தல்போல், அவரால் காதலிக்கப்பெற்ற நான், அவர் அன்பை நிறையப் பெற்று நல்வாழ்வு வாழ்வேன். மலையில் மழை குறைவதால், அவ்வருவி சில காலம் நீர்வற்றிப் போக, அதன் கரைவளர் வேங்கை சிறிதே வாடுவதும் உண்டு; அதனால் அவ்வருவி பழிக்கப்படுவதில்லை. அதைப் போலவே, வரை பொருள் சேர்க்கும் வேட்கை, அவரைச் சேணெடும் தூரம் துரத்திவிட்டதால், அவர் அன்பைப் பெறமாட்டாது நான் சிறிதே வருந்தியது உண்மை. அதனால், அவர் பழித்தற் குரியரல்லர். இவற்றுள் எதையும் உணராது, தோழி! 'அவன், இவளை இங்கே வருந்த விடுத்து வேற்றூர் சென்று வாழ் கிறான். அவன் வாராமைக் கண்டு வருந்தும் இவளை, யான் எவ்வாறு ஆற்றவல்லேன்? என்னே அவன் கொடுமை! அவன் நட்பும் ஒரு நட்பா?' எனக் கூறி அவரைப் பழிக்கத் தொடங்கிவிட்டனை; என்னே நின் நெஞ்சத் துணிவு! தோழி! இளமை முதல் என்னோடு ஆடிப் பழகியவள் நீ; அதனால், அவரைப் பழித்துக் கூறியதை விளையாட்டு மொழி என மதித்து வாளா விடுத்தேன்; அவ்வாறு கொள்ளாது, உன்னைச் சினப்பது என்று கொண்டால் உன் நிலை என்னாம்! அதைச் சிறிதேனும் எண்ணிப் பார்த்தனையோ?" எனப் பலப்பல கூறித், தோழியைக் கண்டிக்கும் கருத்தால் தன் துயரை ஒரு சிறிது மறந்தாள்.

"அருவி வேங்கைப் பெருமலை நாடற்கு
யான் எவன் செய்கோ என்றி, யான் அது

நகை என உணரேனாயின்,
என்னாகுவைகொல் நன்னுதல்! நீயே"[உ]

## அழுதேன் அறியாமையால் :

குணம் என்னும் குன்றேறி நின்றவள் அப்பெண். அதனால், தோழியால் கொண்ட அச்சினம் அப்போதே மறைந்துவிட்டது. தன் காதலனைப் பழித்தாள் என்றமையால் கடுஞ்சினம் கொண்ட அவள், அச்சினம் சிறிது ஆறியதும் சிந்திக்கத் தொடங்கினாள். "என்மீது அன்புடையவள் தோழி, என் நலத்தில் நாட்டம் உடையவள்; அதனால், என் துயரைக் காணல் அவளால் இயலாது போயிற்று. அதனால் அதற்குக் காரணமாய காதலனைக் கடிந்துகொண்டாள். அவள் என் துன்ப நிலையைக் கண்டிலளேல், காதலனை அவ்வாறு பழித்திராள். அதைக் கண்டுவிட்டாள்; அவன் கொடுமையைப் பழித்தாள். ஆகவே அவனைப் பழிக்குமாறு அவளைத் தூண்டியது என் துயர் நிலையே; அவள் காணுமாறு நான் துயருற்றிருத்தல் கூடாது. காதலன் கொடுமையே புரிந்திருப்பினும், அதைப் பிறர் அறியாவாறு தாங்கிக்கொண்டிருத்தல் வேண்டும்; அதில் நான் தவறிவிட்டேன்; தவறு என்னுடையதே. அதை அறியாது அவளைச் சினப்பதில் பயன் இல்லை. ஆகவே, காதலனைக் கொடுமையுடையவனாகக்கொண்டு வருந்தியதும், அதனால் அவனைக் கடிந்துரைத்த அவளைச் சினந்ததும் என் அறியாமையே என்பதை அவளுக்கு அறிவித்தல் வேண்டும்; காதலன் கொடியவன் அல்லன்; நிரம்பவும் நல்லவன்; அதை அறிந்துகொள்ளாதது என் அறிவின் பிழை என உரைத்துக் காதலன் மீது ஏற்றிய குற்றத்தையும் மறைத்து அவள்பால் மன்னிப்பும் பெறுதல் வேண்டும்" என்பது அவள் சிந்தனையின் முடிவாயிற்று.

---

உ குறுந்தொகை : 96. அள்ளூர் நன்முல்லையார்.

நாடற்கு-நாடன் செய்யும் கொடுமைக்கு; என் செய்கோ-என்ன செய்வேன்; என்றி-என்று சொல்லிப் பழிக்கின்றாய்.

தன் இனைந்த முகம் கண்டு சிறிதும் வருந்தாது, மாருகச் சிறிதே முறுவல் தோன்ற மலர்ந்த முகத்தோடு மகிழ்ந்திருக்கும் தோழியை அணுகி, "தோழி! நம் காதலர்க்குரிய மலை நாட்டில், அந்நாட்டு விலங்குகளும் மனம் நிறைந்த வாழ்வு பெற்று வாழும்; அத்தகைய மாண்புடையது அவன் மலைநாடு எனப் பலரும் பாராட்டிக் கூறுகின்றனர். அவன் நாட்டு மலைகளில் வருடை எனும் ஒருவகை மான் வாழ்கின்றதாம். அதன் குட்டி, தன் தாய் மடியினின்றும் பெருக்கெடுத்துப் பாயும் பாலை வயிருர உண்டு மகிழ்ந்து, மர நிழலில் துள்ளி விளையாடுமாம். தோழி! அதை ஏன் இப்பொழுது கூறுகிறேன் என்ருல், இவ்வாறு மனம் நிறைந்த வாழ்வு பெற்று மகிழ்ந்து ஆடும் விலங்கினங்கள் வாழ்தற்கிடமாய நல்ல நாட்டில் பிறந்த அவரும், நாம் விரும்புமாறு, வேண்டிய பொருளோடு விரைவில் வந்து, நம்மை மணம் செய்து கொண்டு மகிழ்ச்சி அளிப்பர் என்பதை நான் அறிந்து கொண்டதை உனக்கு அறிவித்தற்கே ஆகும். தோழி! அவர் உள்ளம் அசைக்க முடியாத உறுதிப்பாடுடையது. எத்தகைய இடர்ப்பாடு வரினும், தான் கூறிய உறுதிப்பாட்டில் தளராது நிலைத்து நிற்கவல்ல உரம் வாய்ந்தது. மலை கலங்கினும் கலங்கும், அவர் மனம் நிலைகலங்காது. மலையினும் உறுதிப்பாடுடையது அவர் மனம். தான் உரைத்த சூளுரை தப்பிப் போகாவாறு விரைந்து வந்து வரைந்துகொள்வது உறுதி. அதை அவர் நாட்டு விலங்குகள் விளங்க உணர்த்துகின்றன. தோழி! அவர் உறுதிப்பாட்டினை, உரம் மிக்க அவர் உள்ளத்தின் உயர்வை, வருத்த மிகுதியால் உணராது போயிற்று என் நெஞ்சு. அதனால் அது நெகிழ்ந்து விட்டது. நானும் ஆற்ருது அழுதுவிட்டேன்; உன்னையும் இனைந்துகொண்டேன்; என் அறியாமையினை என்னென்பேன்?" என்றெல்லாம் கூறித் தன் மனத்துயர் மறைத்து, மகிழத் தலைப்பட்டாள்;

"செவ்வரைச் சேக்கை வருடை மான்மறி
சுரைபொழி தீம்பால் ஆர மாந்திப்
பெருவரை நீழல் உகளும் நாடன்

கல்லினும் வலியன் தோழி!
வலியன் என்னாது, மெலியும் என் நெஞ்சு" a

தன் துயர் நிலையைத் தாய் அறிந்தால், தன் திருமணத்திற்கு விரைவள்; அது வேற்று வரைவிற்கு வழி செய்யும்; தோழி அறிந்தால் காதலனைக் கடிந்துரைப்பள்; அது அவன் புகழிற்குக் கேடாம்; ஊரார் உணர்ந்தால் அலர் கூறித் தூற்றுவர்; அது தன் ஒழுக்கத்திற்கு இழுக்காம் என்ற எண்ணம் எழுந்தமையால், காதலன் விரைந்து வந்திலனே என்ற ஏக்கத்தால் தன் இதயத்தில் எழுந்த வருத்தத்தைப் பிறர் எவரும் அறியாவாறு, அகத்துள்ளே அடக்கிக் கொண்டு, அவன் வருகையை ஆர்வத்தோடு எதிர் நோக்கிக் கிடந்தாள் அப்பெண்.

## அவிழ்த்தற்கு அரிது அவர் நட்பு :

காதலன் வந்து கடிமணம் செய்துகொள்ளும் வரை, அகத்து எழுதுயரைப் பிறர் அறியாவாறு மறைத்துக் கொள்ள வேண்டும் என்னும் உறுதி பூண்ட அப்பெண், அதற்காக எவரோடும் எதுவும் பேசாது வாய்மூடிக்கிடப்பின், அதுவே தன் துயரைக் காட்டிவிடுமோ, அதுகாணும் தோழி, தனக்கு அறிவுரை கூறவும், துயர்க்குக் காரணமான காதலனைப் பழிக்கவும் நேருமோ என்று அஞ்சினள். அதனால் விரைந்து வந்து வரைந்துகொள்ளாமையால் காதலன்மீது வருத்தம் இருக்கவும், அதை மறைத்துக்கொண்டு, அவனையும் அவன் நட்பையும் வாயாரப் புகழ்ந்துகொண்டேயிருக்க வேண்டும்; அது, தன் அகத்துயரைப் பிறர் அறியாவாறு மறைக்கத் துணைபுரியும்; தோழியின் வாயும் அடங்கும் என்று

---

a குறுந்தொகை : 187. கபிலர்.

செவ்வரை–செங்குத்தான மலைச்சாரல்; சேக்கை–இடமாகக்கொண்டுவாழும்; மறி-குட்டி, சுரை-தாய் மடி; ஆர-நிறைய; மாந்தி-குடித்து; உகளும்–துள்ளி விளையாடும்; கல் மலை; வலியன்–உறுதிப்பாடு உடையன்,

கருதினள்; அதனால் தோழியை அருகில் அழைத்து, "தோழி! யானும் அவரும் உள்ளத்தால் ஒன்றுபட்டு விட்டோம்; காதல், எங்கள் இருவரையும் நன்றாகப் பிணைத்துவிட்டது; அவ்வன்புத் தளையைக் கட்டவிழ்த்து விடுவது, இனி எவராலும் ஆகாது. பிரிவின்றி ஒன்றுபட்டுவிட்டது எம் காதல்; இந்நிலையில் நாங்களே விரும்பினும் அப்பிணைப்பிலிருந்து விடுபட்டு வெளியேறுவது ஆகாது. ஆகவே, பொருள் தேடிப் போயிருக்கும் அவர் வந்து மணப்பது உறுதி; அவர் எவ்வளவுதான் உயர்ந்த நிலையில் வாழ்பவராயினும், நம்மால் அணுகலாகா உயர் வாழ்வுடையராயினும், நம் காதல் இன்பத்தை நுகர நம் வீடு தேடி வந்தேயாதல் வேண்டும்; வந்து நம்மை வரைந்துகொண்டு, வற்றுப் புகழ் மணத்தைப் பாரெங்கும் பரப்பும் பெருமை வாய்ந்த இல்லற நல்வாழ்வை மேற்கொள்ள வேண்டும்; இது தவறாது. அவர்க்கு அவ்வுள்ளம் உண்டு. ஏற்றுச் சென்றுள்ள கடமையுணர்வால் அதை சிறிதே மறப்பினும், அவர் நாட்டு இயற்கைக் காட்சிகள், அதை அவர்க்கு நினைப்பூட்டிவிடும் தோழி! காக்கையினத்தில் சிறந்தது என்று கருதப்படும் வெண் காக்கை, பெரிய கடற் பரப்பில் வாழும் பெருமையுடைதே எனினும், அது, தனக்கு வேண்டிய உணவைப் பெற, கரிய நீர் நிறைந்து வழியும் உப்பங் கழியையே தேடிச் செல்லும். ஆங்கு இரை உண்டு முடிந்ததும் கழிக்கருகே யிருக்கும், மலர் மணம் கமழும் மலர்ச் சோலைக்கே சென்று உறங்கும். அக்காக்கையின் வாழிடமாகிய அக்கடற்கரைக்கு அணித்தாகவே நம் காதலன் ஊர் உளது. ஆதலின், அவ்வெண்காக்கையின் வாழ்க்கை முறைகளை, அவர் நாள்தோறும் காண்பர். காணும் அவர்க்குத் தம் வாழ்க்கை முறையினையும் அவ்வழியில் வகுத்துக்கொள்ள வேண்டும் என்ற உணர்வுதோன்றும். அவ்வுணர்வு அவர் உள்ளத்தைவிட்டு ஒரு சிறுபொழுதும் அகலாது. ஆகவே, வரைவு முயற்சியில் விரையும் அவ்வுள்ளம். ஆகவே, வந்து வரைவாரோ? வாராதே நின்றுவிடுவரோ என்ற ஐயம் எனக்கு இல்லை. ஆகவே நான் வருந்தேன்" என்று கூறினள்,

"பெருங்கடற்கரையது சிறுவெண் காக்கை,
நீத்துநீர் இருங்கழி இரை தேர்ந்து உண்டு
பூக்கமழ் பொதும்பில் சேக்கும் துறைவனோடு
யாத்தேம்; யாத்தன்று நட்பே;
அவிழ்த்தற்கு அரிது; முடிந்து அமைந்தன்றே." [a]

**நாடன் கேண்மை தலைபோகாது :**

காதலன் நட்பு அவிழ்த்தற்கு அரிது என்று கூறித் தோழியை வாயடங்கப் பண்ணிவிட்டதாக எண்ணி ஆறுதல் கொண்டாள்; ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம், அவள் உள்ளத்தில் மீண்டும் ஓர் அச்சம் குடி புகுந்தது; தோழி ஒருத்தி; அவள் வாயை மூடி விடலாம்; ஆனால் அலர் கூறித் திரியும் ஊர்ப் பெண்கள் இருக்கின்றார்களே, அவர்கள் வாயை மூடிவிட முடியுமா? தோழியின் வாயைமட்டும் அடக்கிப் பயன் இல்லை; அவர்கள் வாயையும் அடக்க வேண்டும். அப்பொழுதுதான் தன் உள்ளத்திற்கு ஓய்வு பிறக்கும் என்று அறிந்தாள். அந்நிலையில், அவ்வூர்ப் பெண்டிர் அரங்கிற்குத் தலைவியர் என மதிக்கத் தக்கார் சிலர், அவளும் அவள் தோழியும் நிற்கும் இடத்திற்கு அணித்தாக வரக் கண்டாள். உடனே, அவர்கள் காதில் படும்படி, "தோழி! காதலனோடு கலந்து பழகியவள் நான்; அவன் அன்பு ஆழம் உடைத்து; அவன் நற்பண்பு கடல்போல் பரந்தது. ஆதலின் அவன் என்மீது கொண்டிருக்கும் காதல்

---

[a] குறுந்தொகை: 313.

கரையது-கரையில் வாழ்வது; நீத்து-வெள்ளம்; இரும்-கரிய; கழி-உப்பங்கழி; பொதும்பில்—பூஞ்சோலையில்; சேக்கும்—தங்கும்; யாத்தேம்-கட்டுண்டோம்; யாத்தன்று—நன்றாகக் கட்டப்பட்டது; முடிந்து அமைந்தன்று-பொருந்த முடிக்கப்பட்டுள்ளது.

அறியாது. அது அறியப் பார்த்திருக்காது அவன் நற்பண்பு என்பதையெல்லாம் நான் அறிந்திருக்கிறேன். அவன் உள்ளத் திரையில் உருப் பெற்றுவிட்ட என்னை, மணந்து மாண்புறுது போகும் மக்கட்பதடி அல்லன் அவன். என்னை மணந்தே தீருவன். இவ்வுறுதியுள்ளம், அவனோடு பழகி அவன் இயல்புகளை அறிந்ததால் மட்டும் உண்டாகவில்லை. அவன் மலைநாட்டு இயற்கை வனப்பினை அவன் கூறக் கேட்டு அறிந் துள்ளமையாலும் உண்டாயிற்று. தோழி! காதலன் நாடு, ஒரு மலைக்காட்டு நாடு; அக்காட்டில் வாழும் யானைகள், ஆடி மகிழும் கருத்தோடு ஆழம்மிக்க நீர் நிலைகளைத் தேடிச் சென்று, மலையருவிகளை அடையுமாம்; அருவிகளில் புகுந்து ஆடிக்கொண்டிருக்கும்போது, அவ்வருவிகள் அடித்துக் கொண்டுவரும், காலத்தில் விளைந்து முற்றிய கொறுக்காந் தட்டைகள் அவற்றின் கண்ணில் படுமாம். ஆடி மகிழ வந்த இடத்தில் வயிறுர உண்ணத்தக்க அவை கிடைக்கவே, அவற்றைக் கவர்ந்து உண்டு தம் பசி போக்கிக்கொள்ளுமாம். ஆடி மகிழத்தானே வந்தோம்; ஆட வந்த இடத்தில் உணவு கிடைத்தால் அதை உண்பதா என்று எண்ணி, அவற்றை அடித்துக்கொண்டுபோக விடுவதில்லையாம்; மாறுக, அன்று முதல், அக்கொறுக்காந்தட்டைகள் விளைந்து மலிந்து கிடக் கும் அவ்வழிக் கரையையே வாழிடமாகக் கொண்டுவிடுமாம்; அக்காட்சியை நம் காதலன் நாள்தோறும் கண்டு களிப் பானும்; தோழி! நீயே கூறு, அக்காட்சியைக் காணும் அவன் உள்ளத்தில், "வேட்டை விருப்போடு காட்டில் அலைந்து கொண்டிருந்தோம். அப்போது, நம் கண்வழி நுழைந்து கருத்தில் நிறைந்துவிட்டாள் ஒரு காரிகை; அவளைக் காத லித்து, அன்பால் பிணைத்துக்கொண்டு ஆரா இன்பம் அடைந் தோம்; இனி அவள் வாழும் இடத்தைவிட்டு அகல்வது கூடாது. அவள் மனையே நம் மாளிகை; அதற்குத் திருமணம் ஒன்றே வழி. ஆகவே, அத்திருமணத்திற்காம் முயற்சிகளை இப்போதே மேற்கொள்வேன் என்ற எண்ணம் எழாதோ? அது எழ, விரைந்து வந்து வரைந்துகொள்ளானோ? இதை அறிந்து கொள்ளும் வாய்ப்பிலாதார் அல்லவோ வாயில்

வந்தன எல்லாம் கூறுவர். அவர்கள் எதுவேண்டுமானாலும் கூறிக்கொள்ளட்டுமே; அதனால் நமக்கென்ன? அறிவிலாதார் கூறுவது கேட்டு நான்சிறிதும் கலங்கேன்" என்று கூறி, அவர்கள் வாயையும் அடக்கிவிட்டதாக எண்ணி ஆறுதல் அடைந்தாள்:

"பலரும் கூறுக, அஃது அறியாதோரே;
அருவி தந்த நாட்குரல் எருவை
கயம் நாடு யானை கவளம் மாந்தும்
மலைகெழு நாடன் கேண்மை
தலைபோகாமை நற்கு அறிந்தனென் யானே." a

**பாக! காதலி ஊர் காட்டின் கண்ணது;**
**கடிதின் ஓட்டு தேரை :**

இவள் நிலை இதுவாயின் பொருள் தேடிப்போன அவன் நிலை யாது? அவன் எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணியனாதலின், விரும்பிவந்த பெரும் பொருளை விரைவில் சேர்த்துவிட்டான். பெரும் பொருள் ஈட்டவேண்டும்; அதையும் குறித்த காலத்திற்குள் விரைந்து ஈட்டவேண்டும் என்ற எண்ணமே இடைவிடாது ஊக்க, அதுவே கருத்தாய்ச் செயல் புரிந்துகொண்டிருந்தமையால், அதுகாறும் மறைந்திருந்த காதல் உணர்வு, கருதிவந்த காரியம் கைகூடியவுடனே, உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பெருகிற்று. அதனால் விரைந்து வீடடைந்து, காதலியைக் கண்டு களிக்கவேண்டும்

---

a குறுந்தொகை: 170. கருவூர்கிழார்.

தந்த—அடித்துவந்த; நாள்குரல்—காலத்தில் விளைந்த; குரல்—கொத்து; எருவை—கொறுக்காந்தட்டை; (நாணல் தண்டு) கயம்—ஆழம் மிக்க நீர்நிலை; நாடி—தேடிச்செல்லும்; கவளம்—உணவாக; மாந்தும்—உண்ணும்; கெழு—பொருந்திய; தலைபோகாமை—அழியாமை; நற்கு—நன்கு.

எனும் வேட்கை அவனைப் பிடர்பிடித்து விரட்டிற்று. அதனால், விரைந்து ஓடவல்ல குதிரைகள் பூட்டிய தன் தேரில், தன் கருத்தறிந்து ஓட்டவல்ல பாகன் செலுத்த ஏறி ஊர்நோக்கிப் புறப்பட்டான்.

குதிரைகள் காற்றெனப் பறந்து ஓடிக்கொண்டிருந்தன. இயல்பாகவே விரைந்தோடும் அவற்றைப் பாகன் மேலும் முடுக்கிக்கொண்டிருந்தான். அதனால் அவை தம் ஆற்றலினும் அதிகமாக விரைந்துகொண்டிருந்தன. தேரில் அமைந்திருப்போன் உள்ளம் அங்கில்லை; அது, அக்குதிரைகளினும் விரைந்து ஓடி, அவன் காதலி வாழும் ஊரை அடைந்து, அவள் மனையின் உட்புகுந்து, அவளை வலம் வரத் தொடங்கிவிட்டது. அவள் ஊர், கொன்றை மரங்கள் மலிந்த குறுங்காட்டின் நடுவே இருந்தது. கவலைக் கிழங்கிற்காக முல்லை நிலத்து மக்கள் தோண்டிய குழிகளில், பொன்னிறக் கொன்றை மலர்கள் உதிர்ந்து நிறைந்திருக்க அன்று கண்ட அக்காட்டின் காட்சி, அவன் கண்முன் வந்து நின்றது. வாணிகம் புரிந்து வளம்பெற்று வருபவன் அவன்; தான் கொண்டு சென்ற பண்டங்களை விற்று, அவற்றிற்கு விலையாகப் பெற்ற பொற்காசுகள் நிறைந்த பெட்டிகள் பல அவன்பால் இருந்தன. அப்பெட்டிகளைப் பலமுறை திறந்து திறந்து மூடிய அவன் கண்முன், காதலியின் காட்டு நாட்டில் கொன்றைமலர் நிறைந்த குழிகளின் காட்சி தோன்றியதும், அவனுக்கு அப் பணப்பெட்டிகள் நினைவிற்கு வந்தன. உடனே பெட்டியைத் திறந்தான்; அதனுள் நிறைந்திருக்கும் பொற்காசுகளைக் கண்டான்; 'என் காதலியின் மணத்திற்கு ஆகும் மாண்புடையவை இக்காசுகள்' என அவற்றைப் பாராட்டினான். தான் பாராட்டியதோடு நின்றானல்லன். பெட்டிகளையும், பெட்டிகள் நிறையக் கிடக்கும் பொற்காசுகளையும் தேர்ப்பாகனுக்குக் காட்டினான்; அப்பொற்காசுகள் அவனுக்கு அளிக்கவிருக்கும் மண நிகழ்ச்சியை எடுத்துக் கூறினான். கூறிப், "பாக! பொற்காசு மலிந்த இப்பெட்டிகள்போல் தோன்றுமாறு, கவலைக் கிழங்கு அகழ்ந்த குழிகள்

கொன்றை மலர்களால் நிறைந்து காட்சியளிக்கும் குறுங் காட்டின் இடையே உளது நம் காதலி ஊர்'' என்று அவனூர் இருக்கும் இடத்தை அவனுக்கு அறிவித்தான்.

ஊரைக் கூறியவன், அவ்வூரில் அவன் காதலி வாழும் வீடு எது என்பதையும் எடுத்துக் கூற விரும்பினான். அவள் வீட்டிற்குச் சிறப்பளிப்பன எத்தனையோ உள; ஆனால், அந் நிலையில் அவற்றுள் எதுவும் அவனுக்குப் புலப்பட்டிலது. இயல் இசை நாடகம் எனும் முத்தமிழிலும் வல்லவராய் வந்து தன் புகழ் பாடுவார்க்கு அவர் விரும்பும் பெரும் பொருளும், வறியராய் வந்து தன் வாயிற்கண் நிற்பார்க்கு அவர் வயிற்றுப்பசி போக்கும் பெருஞ்சோறும் அளிக்கும் அவள் தந்தையின் மனையற மாண்பு ஒன்றே அவன் மனக்கண்முன் வந்து நின்றது. தேர்ப்பாகனுக்கு அவள் மனையின் அடையாளமாக அதையே கூறினான்;

"காதலியின் காடு பொற்பேழைகளை நினைப்பூட்டும்; அவள் மனை விருந்தோம்பும் விழுச் சிறப்புடையது'' எனக் கூறக் கேட்ட தேர்ப்பாகன், "பாக! காதலியைக் கடிமணம் புரிந்து, அவளோடு கூடி, வருவார்க்கு வழங்கி வாழும் விழுமிய வாழ்வில் சென்றுளது என் வேட்கை; அதற்கு வேண்டும் விழுப்பொருளோடு வீடு திரும்புகிறேன் நான்; ஆகவே, என்னை விரைவில் கொண்டு சென்று, அவண் சேர்ப் பாயாக'' என அவன் கூறுமல் கூறுவதாகக் கொண்டான். தேரை விரைந்து ஓட்டி, அவன் எதிர் நோக்கிய காலத்திற்கு முன்பே, அவனை அவன் ஊர்க் கண் கொண்டு சேர்த்தான்;

"கவலை கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி
கொன்றை ஒள்வீ தாஅய்ச், செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன
கார்எதிர் புறவி னதுவே, உயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்

வரைகோள் அறியாச் சொன்றி:
நிரைகோல் குறுந்தொடி தந்தை ஊரே'' [a]

## அவன் அன்பு, இன்றும் என்றும் ஒன்றே :

பொருளீட்டும் கடமை முடிந்த பின்னரும், இளைஞன், திருமண முயற்சியை விரைந்து மேற்கொண்டிலன். தன் காதல் உறவைத் தன் பெற்றோர்க்கும், தன்னூர்ப் பெரியோர்க்கும் அறிவித்து, அவரை மண முயற்சி மேற்கொள்ளச் செய்வதில் சிறிது காலம் கழிந்தது. அதற்கிடையில் அப்பெண்ணின் மனையில், நிகழ்ச்சிகள் வேறு வடிவம் எடுக்கத் தொடங்கின.

பெண்ணைப் பெற்றவர்கள் தம் பெண் மணப் பருவம் அடைந்தமை கண்டு, அவளுக்கு மணம் செய்து வைக்க விரைந்தனர். அவள் பெருமையும், அவள் பிறந்த குடிப் பெருமையும் அவளை மணக்க வருமாறு வேறு சிலரையும் தூண்டின. அவர்களுள் சிலர், அவள் மனை புகுந்து மணம் பேசினர்; அவள் பெற்றோர் அவள் காதலை அறியார் ஆதலாலும், அவள் காதலன் மண முயற்சி மேற்கொண்டு முன் வந்திலன் ஆதலாலும், அவளைப் பெற்றவர்கள், மணம் பேசி வந்தாருள், தகுதியுடையான் எனத் தாம் மதித்த ஒருவனுக்கு அவளை மணம் செய்து தர இசையும் ஒரு நிலை ஏற்பட்டு விட்டது. அஃதறிந்தாள் தோழி. அவர் அவ்வாறே இசைந்து விடுவரோ என எண்ணினாள்; நடுங்கிற்று அவள் உள்ளம்; அந்நிலை வாய்த்துவிடின், இவள்

---

[a] குறுந்தொகை : 233, பேயனார்.

கவலை—வள்ளிக் கிழங்கு போலும் ஒரு வகைக் கிழங்கு; கெண்டிய - அகழ்ந்த; ஒள்வீ-பொன் போல் ஒளி வீசும் மலர்; தாஅய் – பரவி; பொன் பெய் பேழை – பொற்காசுகளைப் போட்டுவைக்கும் பெட்டி– மூய் - மூடி; புறவு – குறுங்காடு; உயர்ந்தோர் – இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் வல்ல பெரியோர்; மிச்சில் – மிகுதி; வரைகோள் - தடை செய்தலை; சொன்றி – சோறு.

காதல் என்னும்? கற்பு என்னும்? இவள் உயிர்தான் என்னும் என எண்ணி எண்ணி அஞ்சினாள். உடனே விரைந்து ஓடி அப்பெண்ணைக் கண்டு மனையில் நிகழ்வன கூறி மனம் கலங்கினாள்.

தோழி கலங்கினாள்; ஆனால் தோழி கூறிய செய்தி கேட்ட அப்பெண் சிறிதும் கலங்கவில்லை. திருமணம் தனக்கு தான் இல்லாதவிடத்தில் தனக்குத் திருமணம் நிகழ்வது இயலாது. தான் ஒருவன்பால் அன்புகொண்ட பின்னர்த் தன்னைப் பிறர் மணக்க வருவதோ தன் பெற்றோர் தன்னைப் பிறர்க்கு மணம் செய்து தருவதோ இயலாது என உறுதியாக நம்பியதால், அப்படியும் நிகழ்ந்துவிடுமோ என நினைத்துப் பார்க்கவும் மறுத்தது அவள் உள்ளம். மேலும், காதலன் அன்பு நிலையானது. அதை அழித்தல் எவராலும் ஆகாது; அது அழிய அவன் பார்த்திரான். அதை அழிக்க முற்படுவாரை அவன் அழித்து ஒழிப்பன்; அவன் அத்தகையனாதலின், தன்னை மணக்கும் கருத்துடையராய்ப் புதியோர் எத்தனை பேர் வரினும் கவலையில்லை; அவர்கள், தன்னை அணுகாவாறு, அனைவரையும் விரட்டித், தன்னைத் தனக்கே உரியளாக்கிக்கொள்வன்; அவன்பால் அன்று கண்ட இவ்வன்பும், உறுதிப்பாடும் இன்றும் அவ்வாறே உள என்று எண்ணி இறுமாந்தது அவள் உள்ளம். அதனால் தோழி கூறியன கேட்டு நிலைகுலைந்து நடுங்குவதற்கு மாறாக நகைக்கத் தொடங்கினாள்.

"தோழி! நீ கூறிய செய்தி, கேட்டு நடுங்குதற்கு உரியதன்று. நகைத்தற்கு உரித்து" எனத் தொடங்கிப், பின்னர்க் காதலன் தன்னை மணக்க வருவாரையெல்லாம் விரட்டித் தானே மணந்துகொள்வன் என்பதை அவளுக்கு உணர்த்த விரும்பினாள். விரும்பியவள் அதை வெளிப்படைச் சொற்களால் விளங்க உரைக்காது, அவன் நாட்டின் மீது ஏற்றிக் கூற விரும்பினாள். அதனால், "தோழி! நம் காதலர்க்குரிய காட்டு நாட்டின் இயல்பினை நீ அறிவையோ? அவர் நாட்டுக் கானவர்க்குப் பலாக் கனி என்றால் பெரு விருப்பம்; அதனால் அவர்கள் பலா மரங்களை நிறைய வைத்துப் பேணி வளர்ப்

பர். அரும் பாடுபட்டு வளர்க்கும் தம் பலா மரங்கள் நன்கு பழுத்து நிறைபயன் அளிக்கும் பருவத்தை எதிர்நோக்கிக் காத்துக் கிடப்பர். அந்நிலையில், அக்கனியிடத்தே ஆசை கொண்ட குரங்குக் கூட்டமும் பலா மரங்களை அணுகும். அது காணும் கானவர் தம் வில்லை வளைத்துத் தப்பாது பாய வல்ல கணைகளை எய்யக் கையில் எடுப்பர். கானவர் கணையெடுப்பக் கண்டவுடனே குரங்குகளுக்குக் குலை நடுக்கம் உண்டாய்; போர்க் குதிரைகள்போல் விரைந்து ஓடி, அருகே வளர்ந்திருக்கும் மூங்கில் புதருள், அம்மூங்கில்கள் ஒடிந்து பாழாகுமாறு பாய்ந்து மறையும். பலாக கனியைக் கானவர் தாமே உண்டு மகிழ்வர். அத்தகைய கானவர் மலிந்த நாடு நம் காதலர்க்குரிய மலைநாடு" என அவன் மலைநாட்டு மாண்பினை கூறுவாள்போல், ""தோழி! தங்கள் தோட்டத்துப் பலாக் கனியைக் குரங்குகள் கொண்டுபோகவிடாது தாமே உண்டு மகிழும் மக்கள் மலிந்த மலை நாட்டிற்குரிய நம் காதலர் மட்டும், தாம் காதலித்த என்னை, தம் வாழ்க்கைத் துணையாக வரைந்துகொள்ள வேண்டிய என்னை, பிறர் வரைந்துகொள்ள விடுவரோ? விடார்; இது முக்காலும் உறுதி" எனத் தன் உள்ள உறுதியை மெல்ல வெளிப்படுத்தினள். இறுதியாகத், தோழி பெண்ணைப் பெற்றோர், தாமே வலியவந்து தருக என எதிர்நோக்கி, அவர் இதுகாறும் வாளா இருக்கின்றனர். வரைவுக் கருத்தோடு பிறரும் வருகின்றனர் என அறிந்தால், இனி வாளா இரார்; வருவாரை விரட்டித் தாமே வரைந்துகொள்ள விரைவில் வருவர். அவர் அன்பும் ஆற்றலும் அறியாது வந்த அவர்களும அவர்களோடு மணப் பேசப் பேசும் நம பெற்றோரும் நகைத்தற்குரியரல்லது சினத்தற்குரியரோ? தோழி! நீயே கூறு" எனக் கூறி அவளைத் தேற்றினள்.

"பலவில் சேர்ந்த பழம் ஆர் இனக்கலை
சிலைவில் கானவன் செந்தொடை வெரீஇச்
செருவுறு குதிரையின் பொங்கிச், சாரல்
இருவெதிர் நீடமை தயங்கப் பாயும்

பெருவரை அடுக்கத்துக் கிழவன், என்றும்
அன்றை அன்ன நட்பினன்;
புதுவோர்த்து அம்ம! இவ்வழுங்கல் ஊரே." [a]

## மீன்வலையுள் நீர் நாய் :

வெளியார் வந்து வரைந்துகொள்வது இயலாது; முடிவில் அவர் முயற்சிகளை முறியடித்துக், காதலனே வரைந்துகொள்வன் என வற்புறுத்திக் கூறியும் தோழியின் நடுக்கம் நீங்கவில்லை. அவள் அழகிற்கு அடிமையாகி, அவள் குடிப்பெருமைபால் பேராசை கொண்டு, வந்த அவர்கள், அவளை அத்துணை எளிதில் மறந்து மீளார்; தம்மால் ஆவன எல்லாம் முயன்று, அவள் தந்தையின் இசைவினைப் பெற்று, அவளை மணம் முடித்தே மீள்வர் என எண்ணி நடுங்கிற்றுத் தோழி உள்ளம். அவள் உள்ள நடுக்கத்தை அவள் முகத்தில் கண்டாள் அப் பெண்; அவளுக்கு மேலும் ஆறுதல் கூறத் தொடங்கினாள்.

"தோழி! ஒருவர் எண்ணிய காரியம் அனைத்தும் அவர் எண்ணியவாறே முடிந்துவிடுவதில்லை. ஒன்று தொடங்கினால், வேறு ஒன்று வந்து வாய்க்கும். ஒருவர் எத்துணையோ அரும்பாடுபட்டு ஒரு காரியத்தைத் தொடங்குகின்றனர். கடைகியில் அதில் வெற்றி பெறாது போவதுமட்டுமன்று; அதன் தொடர்பாய் வேறு பல தோல்விகளையும் அடைகின்றனர். உலகியல் உணர்த்தும் உண்மை இது. தோழி! ஒன்று பார். குளத்தில் வலைஞன் வலை வீசுகிறான். எதைக் கருதி வீசுகிறான்,

---

[a] குறுந்தொகை, 385. கபிலர்.

பலவில்—பலாமரத்தில்; ஆர்—உண்ணும்; இனக்கலை—குரங்குக் கூட்டம்; சிலைவில்—சிலை எனும் ஒருவகை மரத்தால் பண்ணியவில்; செந்தொடை—தப்பாது பாயவல்ல அம்பு; வெரீஇ—அஞ்சி; செருவுறு—போர்க்களம் அடைந்த; இரு—பெரிய; வெதிர்—மூங்கில்; தயங்க—அசைய; புதுவோர்த்து—புதியோர் தனை உடைத்து; அழுங்கல்— ஆரவார ஒலிமிக்க,

பெரிய மீனைக் குறி வைத்து வீசுகிறான். வீசிச் சிறிது நேரங் கழித்து வலையை வலித்து இழுக்கிறான். வலை கனக்கிறது. கருதியதினும் பெரிய மீன் சிக்கிக்கொண்டது எனக் கருதுகிறான். அவன் மகிழ்ச்சி எல்லை கடந்து எழுகிறது. இம் மீனைக் கொண்டு என்ன என்னவோ பெறத் திட்டமிடுகிறான். உள்ளம் அத்திட்டத்திற்கு உருவு அமைத்துக் கொண்டிருக்க, அவன் கைகள் வலையை வலித்துக் கரை சேர்க்கின்றன. வலையை விரித்து நோக்குகிறான். அந்தோ! அவன் ஆசைக் கோட்டை அடியோடு தகர்ந்து போகிறது; பெரியதோர் ஏமாற்றம் அவனை எள்ளி நகைக்கிறது. மீனைக் குறி வைத்து வீசிய வலையினின்றும் ஒரு பெரிய நீர் நாய், வலையைக் கிழித்துக் கொண்டு வெளிப்பட்டு ஓடுகிறது. தோழி! அப்படியும் நிகழ்வது உண்டு. வலைஞன் அதை எதிர்பார்த்திருப்பானோ? ஆயினும், அவன் வலையுள் அது வந்து அகப்பட்டுக் கொள்கிறது. அதுபோல், வந்தவர் என்னை மணந்துகொள்ளவே விரும்புகின்றனர். தாம் கருதியதை அடைய, அவர்கள் அரிய பெரிய முயற்சிகளை மேற்கொள்கின்றனர் என்பதெல்லாம் உண்மை. ஆனால், தோழி! அதனாலேயே அவர்களை மணக்க வேண்டி நேரிடும் என மனம் கவலற்க; மீன் வலையுள் நீர்நாய் அகப்பட, மீன பிழைத்துப் போதல்போல், அவர் மண முயற்சிக்கு நான் அகப்படாது போதலும் நிகழும். ஆகவே, வேற்று வரைவு குறித்து நீ சிறிதும் வருந்தாதே" எனக் கூறித் தேற்றினாள்.

"காண் இனி, வாழி தோழி! யாணர்க்
கடும்புனல் அடைகரை நெடுங்கயத்து இட்ட
மீன்வலை மாப்பட்டா அங்கு
இதுமற்று எவனோ நொதுமலர் தலையே?" a

---

a குறுந்தொகை 171. பூங்கணுத்திரையார்.

யாணர் – புதிது புதிதாகவரும்; கடும்புனல் – நிறைந்த நீர்; அடைகரை – நாற்புறமும் அமைந்த கரை; நெடுங்கயம்–

**என் நோய் களைவார் எவரும் இல்லை :**

"என்னைப் பிறர் மணந்து செல்ல அவன் பார்த்துக் கொண்டிரான்; வந்தாரை விரட்டிவிட்டுத் தானே மணந்து கொள்வன்; ஆதலின் வரைவு பேசி வந்துள்ள வெளியார் முயற்சி வீணும்" என்றெல்லாம் கூறி, உள் உறுதியுடையாள் போல் காட்டிக்கொள்ளினும், அவ்வாறும் நிகழ்ந்துவிடுமோ' என்ற அச்சம் அவள் உள்ளத்தையும் பற்றி வாட்டியது. புறத் தோற்றம், அவள் அது குறித்துச் சிறிதும் கவலை கொண் டிலள்; இதற்கெல்லாம் அஞ்சுவாள் அவள் அல்லள் எனக் காட்டினும் அவள் அகம், அச்செய்தி கேட்டு நடுங்கிவிட்டது; அக்கவலை அவ்வுள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அவ் வுள்நோய், அவள் உடல் எலும்புகளை மெல்ல மெல்ல உருக்கத் தலைப்பட்டுவிட்டது. அந்நிலை நீண்டால், அவள் உயிர் வாழாது. ஆகவே, உடனடியாக அவன் அவளை மணந்துகொள்ளுதல்வேண்டும். அது எவ்வளவு விரைவில் முடிகிறதோ அவ்வளவும் நன்று என அறிந்து வருந்திளுள்.

இந்நிலையை அவனுக்கு அறிவித்தல்வேண்டும்; ஆனல் அது அவளால் இயலாது; தாய், அவளைப் புறத்தே போக விடாது விழிப்பாய் இருந்து காத்து வருகிருள். அவள் காவலைக் கடந்துபோவதும் இயலும் என்ருலும், காதல் நோயால் தனக்குற்ற கேட்டினைத் தன் காதலனுக்குத் தானே எடுத்துரைத்தல் அவளால் இயலாது; அவ்வாற்றல் அவள் பெண்மைக்கு இல்லை. எடுத்துக்கூறின் பெண்மைக்கு இழுக்காம். "உடம்பும் உயிரும் வாடியக்காலும், என்னுற்றன கொல் இவையெனின் அல்லது, கிழவோற சேர்தல் கிழத் திக்கு இல்லை" எனப் பெரியோர் விதித்த விதியைப் பேணிக்

---

ஆழமான குளம்; மா- நீர்நாய்; பட்டாஅங்கு - அகப்பட்டது போல்; இது – திருமணம் பேசிவந்த நிகழ்ச்சி; எவனே-என்ன பயன் தரும்; பயன்தராது; நொதுமலர் – அயலார்.

காப்பவன் அவன். அதனால் அவள் அவன்பால் சென்று, தன் நிலையை எடுத்துக் கூறி விரைவில் வந்து விரைந்துகொள்ளுமாறு வேண்டிக் கொள்வது இயலாது.

வேற்று வரைவு வந்துள்ளது என்பதை அவன் அறிந்தால், விரைந்தோடி வருவான். ஆனால் அது அவனுக்குத் தெரியாது; அதனால் விரைந்துவந்து வரைந்து கொள்ளும் எண்ணம் அவனுக்கும் இல்லை. "இருவர் உள்ளமும் ஒன்றுபட்டு விட்டன; இனி எம்மைப் பிரிப்பவர் எவரும் இல்லை" என்ற துணிவால், வரைவு முயற்சியில் விரைவு காட்டிலன்.

இந்நிலையில், அப்பெண்ணின் துயர் போக்கித் துணை புரிவது தோழி ஒருத்தியினாலேயே ஆகும்; வேற்று வரைவு வந்திருப்பதை அவனுக்கு அறிவித்து, அவனை மண முயற்சியை விரைந்து மேற்கொள்ளச் செய்வதோ, தாய்க்கு மகள் காதலை உணர்த்தி, வேற்று வரைவினை மாற்றுவதோ அத்தோழி ஒருத்தியால் மட்டுமே இயலும்; ஆனால், அவள் அதைச் செய்திலள். "அவள் அதைச் செய்து என் துயர் துடைத்துத் துணைபுரிய மாட்டாளா" எனத் துடித்தது அவள் பெண் உள்ளம்; ஆனால், "தோழி! துணைபுரிக" என வேண்டிக் கொள்ள நாணிற்று அவள் நல் உள்ளம். மேலும், வெளியார் மணம் பேசவந்து விட்டனரே எனத் தோழி அஞ்சியபொழுது, அவளுக்குத் தான் காட்டிய போலி உறுதி, இப்போது தன் துயர்கூறி அவள் துணை வேண்டலை இடைநின்று தடுத்தது. அதனால் செய்வதறியாது வருந்தினாள். செய்வது யாது எனச் சிந்தித்தாள். வாளாக் கிடத்தல் கூடாது; வாய் திறந்து அவளை வேண்டிக்கொள்ளுதல் வேண்டும் எனத் துணிந்தாள்.

---

1 தொல் - பொருள் 1 பொருளியல் 1 9

அவள் உள்ளம் துணிந்துவிட்டது; ஆனால் அவள் பெண்மை, தன் காதல் நோயைத் தானே உரைக்க நாணிற்று. அதனால், தன் பெண்மையும் கெடாது, தன் எண்ணமும் நிறைவேறவல்ல ஒரு வழியைக் கண்டாள்; தன் சொல் கேட்கும் தொலைவில், தோழி வந்து நிற்கும் காலத்தை எதிர்நோக்கியிருந்தாள். அவளும் வந்தாள். உடனே அவளைப் பாராதவள்போல், ஆனால் அவள் காதுகளில் படுமாறு, "காதலனை அன்று கண்டதால், என் அகத்தில் குடிகொண்ட காதல்நோய், இன்று என் உள்ளுறுப்புக்களை அழிக்குமளவு உரம் பெற்று விட்டது. அந்நோய் தீர்க்கும் ஆற்றல் என் திருமணம் ஒன்றிற்கே உண்டு. ஆனால், அதற்கும் இப்போது கேடு வந்துளது. அதை உணர்ந்து விரைந்து வந்து வரைந்து கொள்ள அவனும் முன் வந்திலன். வந்துள்ள கேட்டினை அவனுக்கு உரைத்து வருவோம் என்றால், அதை, என் பெண்மை முன் நின்று தடை செய்கிறது. என்னைப் பற்றி வருந்தும் இக்காம நோயின் கொடுமை கண்டு, அதைப் போக்கித் துணைபுரிவாரையும் பெற்றிலேன்; அந்தோ! யான் என் செய்வலோ! என்னைப்பற்றி வருத்தும் இக்காம நோய் என்னை விட்டு எளிதில் போகாது. அதைப் போக்குவாரும் இல்லை.

"குப்பை மேட்டினைக் கிளறி, ஆங்குக் கிடைக்கும் புழுப் பூச்சிகளைக் கொத்தித் தின்னும் கோழிகளுக்கிடையே சில சமயம் சண்டை உண்டாகிவிடும்; அக்குப்பைக் கோழிகளின் சண்டை, சேரிக் கோழிகளின் சண்டைபோல் சிறப்பிக்கப் படுவதில்லை. போருக்கு என அவற்றைப் பேணிவளர்ப்பவரும் இல்லை; அவற்றினிடையே போரை உண்டாக்குவாரும் இல்லை; அவற்றின் சண்டையைச் சிறிது பொழுது நின்று கண்டு மகிழ்வாரும் இல்லை; இறுதியில் அச்சண்டையை இடைநின்று போக்குவாரும் இல்லை. அவை தாமே போர் தொடங்கிப், பிறர் கண்ணில் படாவாறு தாமே போரிட்டுத் தம் ஆற்றல் இழந்ததும், பிறர் தலையீடில்லாமல் தாமே ஓய்ந்து போகும். அக்குப்பைக் கோழிகளின் சண்டையைப்

போல், என் காதல் நோயும், அன்று, தானே வந்து பற்றிக் கொண்டதுபோல், இன்று அது, என்னைத் தானே கைவிட்டுப் போக வேண்டும் போலும்! என் அகப்புற உறுப்புக்களையெல்லாம் அறவே அழித்து, இனி அழிப்பதற்கு எதுவும் இல்லை எனக் கண்டு, அதனால் அது தன் அழிக்கும் ஆற்றலை இழந்து தானே அழிய வேண்டுமேயல்லது, அதை அழிப்பவர், அதை அழித்து, அதனால் என்னைக் காப்பவர், எவரும் இல்லை போலும்" எனக் கூறி வருந்தினாள்.

" கண்தர வந்த காம ஒள்எரி
என்பு உற நலியினும், அவரொடு பேணிச்
சென்று நாம் முயங்கற்கு அருங்காட்சியமே;
வந்து அஞர் களைதலை அவர் ஆற்றலரே;
உய்த்தனர் விடாஅர், பிரித்து இடைகளையார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியி னல்லது
களைவோர் இலை, யான் உற்ற நோயே" [a]

அவனோடு சென்றுவிடு; அதுவே சரி;

அப்பெண் கூறியன கேட்ட தோழி, "இவள் கூறுவன அனைத்தும் என்னை நோக்கி; வேற்று வரைவு வரக் கண்டு, வெளித் தோற்றத்திற்குக் கலங்காதவள்போல் தோன்றினும் உண்மையில், என்னைப் போலவே இவளும் கலங்குகிறாள். தன் காதலைப் பெற்றோர்க்கு உணர்த்தியோ, பிறவழியால்

---

[a] குறுந்தொகை 305; குப்பைக் கோழியார்.

கண்தர—கண்கள் காதலனைக் கண்டதால் வந்த; கள்எரி—கொடிய நோய்; என்பு—எலும்பு; உற—நன்றாக; நலியினும்—வருந்தினும்; முயங்கற்கு—கூடுதற்கு; அருங் காட்சி—அருமையாம்; அஞர்—துன்பம்; உய்த்தனர்விடாஅர்—செலுத்தி விடப் பெறுமல்; விளிவாங்கு—தானே அழியும் பொழுது;

முயன்றே, தன் திருமணத்தை முடித்து வைக்கும் பெரும் பணியை நான் மேற்கொள்ளுதல் வேண்டும் என விரும்பு கிருள்' என உணர்ந்தாள்.

வீட்டிற்கு வந்திருக்கும் வேற்று வரைவினை மாற்றுதல் வேண்டும்; ஆனால் அவ்வரைவிற்கான பேச்சு வீட்டில் நடை பெற்றுக் கொண்டிருக்கும் இந்நிலையில் அதை மாற்றுவது எவ்வாறு? இவள் காதல் உறவைச் செவிலியின் துணையால் தாய்க்கும், அவள் வழியாகத் தந்தைக்கும் அறிவித்தால், அவர்கள், இப்போது நிகழ்த்தும் மணப்பேச்சைக் கைவிட்டு இவள் விரும்பும் அவ்விளைஞனுக்கு மணம் செய்துதர இசை வரோ என்றால், அதை இந்நிலையில் உறுதியாக நம்புவதற் கில்லை. தந்தையும், தமையன்மாரும் சினம் மிக்கவர்; தம் குடியில் பிறந்தவள், தம்மை அறியாது, தான் விரும்பும் ஒருவனை மணக்க மனம் இசைந்து விட்டாள் எனக் கேட்பின் கடும் கோபம் கொள்வர். இவள் கருத்திற்கு மாறாக இவளைத் தாம் விரும்பும் பிறன் ஓர் இளைஞனுக்கே மணம் செய்து விடுவதும் செய்வர். ஆகவே, வெளியார் வந்து மணப் பேச் சுப் பேசிக் கொண்டிருக்கும் இந்நிலையில், இவள் காதலை அவருக்கு அறிவித்து அவர் ஒப்புதல் பெற்று இவள் திருமணத்தை முடித்தல் இயலாது. மேலும், அவர் கோபத் தின் கொடுமை, 'இவள் நம் கருத்தறிந்து தன் காதலனோடு அவனூர்க்குச் சென்று விடவும் துணிவள்; ஆகவே, அவள் அவ்வாறு செல்லத் துணிவதற்கு முன்பே, இத் திருமணத்தை முடித்து விடுதல் வேண்டும்' எனத் துணிந்து துணிந்தவாறே விரைந்து முடிக்கவும் முனையும்; ஆகவே, இவள் ஈண்டிருக்கும் ஒவ்வொரு நாழிகையும் இவளுக்குக் கேடாய் முடியுமாதலின், இவள் இன்றே, தன் காதலனோடு அவனூர்க்குச் சென்றுவிடல் வேண்டும் எனத் துணிந்தாள்.

துணிந்த தோழி, துயரமே உருவாய், உள்ளம் உடைந்து ஓய்ந்து கிடக்கும் அப்பெண்ணை அணுகினாள். "தோழி! நம் ஊர்க்கும் நம் காதலர் ஊர்க்கும் இடையே உள்ள வழி,

இடையூறு அற்றதாம்; இனிமை வாய்ந்ததாம். நிழலோடு நல்ல சுவை மிக்க கனிகளையும் தரும் நெல்லி மரங்கள் நிறைய வளர்ந்திருக்குமாம். அவ்வழியில் காட்டு யானையின் கால்கள் புதைதலால் உண்டான பள்ளங்களிலும் நீர் கறைந்து கிடக்குமாம். வழிச் செல்வார், அக்கனிகளைத் தின்று, அந்நீரைக் குடித்து நிழலில் தங்கி மகிழ்ந்து செல்வராம் தோழி! அவ்வின்பம் உனக்கும் வாய்க்க வேண்டும்; அதுவும் இன்றே வாய்க்க வேண்டும் என்பது என் விருப்பம். வீட்டில் நிகழும் நிகழ்ச்சிகளை நோக்கினால், காதலனோடு அக்காட்டு வழியைக் கடந்து சென்று, அவனூர் அடைதல் ஒன்றே உய்யும் வழியாம்; என் பெண் அறிவிற்குப் புலனான பொன்னான வழி அது ஒன்றே.

"தோழி! வீட்டை விட்டு வெளியேறிவிடின், ஊர் மக்கள் அலர் கூறிப் பழி தூற்றுவர்; அதுவல்லது அவரால் வேறு என்ன செய்ய முடியும்? நம் சேரியில் வாழும் நம் உறவினர் சீறி விழுவர், வாழ வழி காட்டத் தெரியாத அவர்கள் வாய் வலிக்க, வேண்டு மட்டும் வசைமாரி பொழியட்டும்; தாய் தனியே கிடந்து புலம்புவள். மகள் மனம் அறிந்து மணம் முடிக்கும் அறிவுள்ளம் அற்றவள் நம் தாய். 'தான் பெற்ற மகளுக்கு அவள் மனம் விரும்பும் மணாளனோடு மணங்கண்டு மகிழாது, அவளைப் போக விடுத்துப் புலம்புகிறாள்' என ஊரார் கூறும் பழிச் சொல் அவளுக்கு வேண்டும்.

"ஊரார் அலர், சேரியார் சினம், தாய் அன்பு ஆகியவற்றிற்கு அஞ்சி அடங்கியிருத்தல் இனியும் கூடாது. அந்நினைவு ஆற்றொணாத் துயர் தரும் என்பதை அறிவேன். பிறந்த ஊரைப், பெற்ற தாயை, ஆடிமகிழ்ந்த தெருவை மறந்து போவது பெருந்துயராம் என்றாலும், பின்னர்ப் பெறலாகும் பேரின்ப வாழ்வை எண்ணி, இடையே உண்டாம் இச் சிறு துயரைப் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். பின்னர்ப் பேரின்பம் வேண்டுவார், முன்னர்ச் சிறிது துன்பம் நுகர்தலும் வேண்டும். இவ்வுண்மையைச் செல்லும் வழியில்

நீயே உணர்ந்து கொள்வாய், தோழி! நெல்லிக்கனி, தின்னுங்கால் துவர் மிகுந்து, தின்பதற்கு விரும்பாது போயினும், அதைத் தின்று பின்னர்க் குடிக்கும் நீர், பெரிஞ் சுவை பயத்தலை உணர்வை. ஊரார் அலர் கூறச், சேரியார் சினக்கத் தாய் வருந்தப் பிரிந்து வந்த நம் செயல், நாம் விரும்பும் மணத்தைக் கொடுத்துப் பேரின்பம் அளித்தது என்பதை அப்போது உணர்ந்து மகிழ்வை. ஆகவே, அவனோடு போவதற்கு இசைந்து, அதற்காவனவற்றை விரைந்து மேற்கொள்வோம் வா" எனக் கூறி, அவள் கைகளைப்பற்றி அழைத்துச் சென்றாள்:

"ஊர் அலர் எழச், சேரி கல்லென,
ஆனாது அலைக்கும் அறன்இல் அன்னை
தானே இருக்கத் தன் மனை யானே,
நெல்லி தின்ற முள் எயிறு தயங்க
உணல் ஆய்ந்திசினால் அவரோடு செய்நாட்டு
விண்தொட நிவந்த விலங்கு மலைக் கவாஅன்
கரும்பு நடு பாத்தி அன்ன
பெருங்களிற்று அடிவழி நிலைஇய நீரே" ௨

அந்தோ நாணே: நீ அளியை:

"ஊரையும், உற்றாரையும் விட்டு, உன் காதலனோடு ஓடிவிடு; அது ஒன்றே உய்யும் வழி" எனத் தோழி கூறக்கேட்ட

---

௨ குறுந்தொகை: 262. பாலை பாடிய பெருங்கடுங்கோ.

கல்லென—ஆரவாரிக்க; ஆனாது-ஓயாது; தன்மனையான் தானே இருக்க என மாற்றுக; முள் எயிறு-முள்போல் கூறிய பற்கள்; தயங்க-விளங்க; ஆய்ந்திசின்—ஆராய்ந்து முடிவு செய்தேன். எயிறு தயங்க, நீர் உணல் ஆய்ந்திசின் என மாற்றுக. விலங்குமலைக்கவா அன்-குறுக்கே நிற்கும் மலையின் அடிவாரத்தில்; நிவந்த-உயர்ந்த.

அப்பெண்ணின் உள்ளம் பெருந்துயர் உற்றது. மகளிர்க்கு மாண்பளிக்கும் அருங்குணங்களுள் நாண் தலையாயது; நங்கையர்க்கு அழகு தருவது நாண். நற்குல மகளிர்க்குத் தாயினும் சிறந்த தனிச் சிறப்புடையது நாண். உயர்குடிப் பிறந்தோரால் தம் உயிரினும் சிறந்ததாக மதிக்கப் பெறும் மாண்புடையது நாண்; அத்தகைய நாணை இழந்து உயிர் வாழ்தல் நற்குடிமகளிர்க்கு இயலாது; நாணின் பெருமை குறித்து வழங்கப் பெறும் இப்பாராட்டுரைகளை நன்கு உணர்ந்தவள் அவள்; அதனால் தோழி கூறியன கேட்டுக் கலங்கினாள். "உற்றாரும் உறவினரும் அறியா வண்ணம், தான் காதலிக்கும் ஒருவன் பின் ஓடி விடுதல் நாணுடைய மகளிர்க்கு அழகல்லவே. அவ்வாறு ஓடக்கருதும் அன்றே, நாண் அவளைவிட்டு அகன்று விடுமே; என் நிலையும் அது தானோ? நாண் என்னையும் கைவிட்டு விடுமோ? நாண் அற்ற மகளிரும் மகளிரோ? அந்தோ! நாணை நான் எவ்வாறு இழப்பேன்? இழந்து எவ்வாறு உயிர் கொண்டு வாழ்வேன்?" என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கினாள்.

சிறிது நாழிகை கழிந்தது; சிந்தனை வேறு திக்கில் சென்றது. "நாணைக் காத்தற் பொருட்டு, இன்று வீட்டை விட்டு வெளியேற மறுத்தால், மனம் விரும்பும் மணத்தைப் பெறுதல் இயலாது; தாயும் தந்தையும் தாம் விரும்பும் ஒருவனுக்கு என்னை மணம் செய்து கொடுத்து விடுவர். அந்நிலை உண்டாயின் என் காதல் என்னும்? என் கற்புதான் என்னும்? நாண் உயிரினும் சிறந்ததே; ஆனால் கற்பு உயிரேயன்றோ? நாண் இழந்து வாழ்தலும் இயலும்; ஆனால் கற்பிழந்த காரிகையர்க்கு வாழ்வு இல்லையே; ஆகவே, என் கற்பு வாழ வேண்டின், நாணைக் கைவிடுதல் வேண்டும்" என்ற முடிவிற்குக் கொண்டு சென்றது அவள் சிந்தனை.

நாணைக் கைவிட வேண்டும் என்ற முடிவு, மீண்டும் அவளை நடுங்கப் பண்ணிற்று; அந்நாணின்பால் அவளுக்கு இரக்கம் பிறந்தது. "நாணைக் கைவிடும் இந்நிலை எதனால்

உண்டாயிற்று; என்னோடு பிறந்து, என்னோடு வளர்ந்து, என்னோடு இரண்டறக் கலந்துபோன நாணே நானே கைவிடும் இந்நிலை உண்டாகக் காரணம் யாது? நான் அவரைக் காதலித்தேன்; காதல் நோய் என் உள்ளத்தை உரமாகப் பற்றிக் கொண்டது; அக்காதல் என் உள்ளத்தில் வளர வளர, என் உள்ளத்தை அது முற்றிலும் கவர்ந்து கொள்ள, அதன் தாக்குதலைத் தாங்க மாட்டாது, நாண் அழிந்தது; என்னைக் கைவிட்டு அகன்றது. தண்ணீரின் தாக்குதலைத் தாங்கும் அளவும் தாங்கி, அது தாங்க இயலாவாறு பெருகிய விடத்து, மெல்ல மெல்லக் கரைந்து, இறுதியில் அறவே அழிந்து போகும் மண் அணை போல், நாணும், என் காதல் நோயைத் தாங்கு மளவும் தாங்கி, இன்று அது தாங்கமாட்டா அளவு பெருகி விட்டதால், அழிந்து என்னை விட்டு அகன்றது; அந்தோ! நாணே! நீ மிகவும் இரங்கத் தக்காய்! உன் நிலை கண்டு நின்று வருந்துகிறேன்" எனக்கூறி நாண் அழிவு கண்டு கண்ணீர் விட்டுக் கலங்கினாள்.

"அளிதோ தானே நாணே; நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே; இனியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணல் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீந்து உக்கா அங்குத்
தாங்கும் அளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைநில்லாதே." [a]

## காதலன் உடன்வரின் காடும் இனிக்கும்:

காதலனோடு அவனூர்க்குச் செல்ல அவள் இசைந்து விட்டாள்; ஒப்புதல் பெற்ற தோழி, இளைஞனைக் கண்டு

---

[a] குறுந்தொகை: 149. வெள்ளிவீதியார்.

அளிது-இரங்கத் தக்கது; நனிநீடு-நெடுங்காலம்; உழந்தன்று-உடன் இருந்து வருந்திற்று; சிறை-கரை; நெரிதர-பெருகி மோதுவதால்; வீந்து-அழிந்து; உக்காங்கு-வீழ்ந்தது போல்; கைந்நில்லாது-என்பால் நில்லாது.

தன் முடிவைக் கூறி அவளைக் கொண்டு செல்லுமாறு வேண்டிக் கொள்ள, அவனைத் தேடிச் சென்றாள்; அவனைக் கண்டாள்; வீட்டு நிலையை விளங்கக் கூறித், தான்கொண்ட முடிவையும், அதற்கு அப்பெண் இசைந்ததையும் அறிவித்து, "அன்ப; இவளை இன்றே அழைத்துச் செல்க" என வேண்டிக் கொண்டாள்.

இளைஞன், தோழி கூறிய அனைத்தையும் அமைதியாக இருந்து கேட்டான். அந்நிலையில் அது வல்லது வேறு வழியில்லை என்பதை அவனும் உணர்ந்தான். அவ்வாறே உடன் கொண்டு செல்லவும் துணிந்தான்; ஆனால் சிறிது அஞ்சினான். "கடந்து செல்ல வேண்டிய காட்டு வழி கொடுமை மிக்கது; ஆடவரும் அவ்வழி செல்ல அஞ்சுவர்; அத்தகைய வழியில், வீட்டை விட்டு வெளியே வந்து பழகாத இவளை—தாய் அருகில் கிடந்து உறங்கும் போதும் அஞ்சும் அத்துணை மெல்லியலாளாகிய இவளை—எவ்வாறு அழைத்துச் செல்வது? ஆங்கு வந்து தளர்ந்து வருந்துவளே! வருந்தும் அவள் நிலைகண்டு யானும் வருந்துவதல்லது அவள் துயர்தீர்த்தல் இயலாதே" என்ற அச்சம் அவன் உள்ளத்தை அலைத்தது; அதனால் உடன் கொண்டு செல்லச் சிறிது தயங்கினான்.

இளைஞன் மனநிலையைத் தோழி உணர்ந்து கொண்டாள். உடனே அவனை அணுகி, "அன்ப! உடல் இன்பத்தினும் சிறந்தது உயிர் இன்பம்; உடலுக்கு இன்பம் தரும் பொருளினும், உயிருக்கு இன்பம் தரும் பொருளே சாலச் சிறந்தது. உடலுக்கு இன்பம் தரும் ஒரு பொருள், உயிருக்குத் துன்பம் தருமாயின் அப்பொருளை அனைவரும் வெறுப்பர். அது உடலுக்கு இன்பம் தருவதற்காக அதைப் பாராட்டார்; அதைப் போலவே, உயிருக்கு இன்பம் தரும் ஒரு பொருள், உடலுக்குத் துன்பம் தருமேனும், அதையே

அனைவரும் விரும்புவர்; அது தருவது ஒன்றைக் கொண்டே அதை எவரும் வெறுக்கார். மேலும் அன்ப! உயிர் இன்பத்தில் திளைத்திருக்குங்கால் தன்னை வருத்தும் துன்பத்தை உடல் பொருட்படுத்தாது. உயிர் இன்பத்தில் உடல், அத்துன்பத்தை மறந்துவிடும்; உயிர் துன்பத்தில் உழலும்போது, உடல் தன்னை வந்து அடையும் எவ்வளவு பெரிய இன்பத்தையும் இன்பமாகக் கொள்ளாது; உயிர் படும் துன்பத்தில் உடல் அப்பேரின்பத்தை மறந்துவிடும். அன்ப! இவ்வுண்மைகளை நன்கு அறிந்தவன் நீ; எம்வீடு வளத்தால் நிறைந்துளது; நாங்கள் வேண்டியதை அளிக்கிறது; தாயும் தந்தையும் தம் அன்பு முழுவதையும் எம்மீது சொரிகின்றனர்; ஆனால், நாங்கள் விரும்பும் ஒருவருக்கு எம்மை மணம் செய்து தரும் மனம் அவர்களுக்கு இல்லை. அதனால் வளம் கொழிக்கும் எம் வீட்டு வாழ்வு எமக்கு வெறுத்துவிட்டது. காடு கொடுமை மிக்கது என்பது உண்மை; என்றாலும், அது எமக்கு வாழ்வளிக்கும் எம் காதலனோடு சென்று அவனை மணந்து வாழும் மாண்பு நிறை வாழ்வைப் பெறத் துணைபுரிகிறது. தன் கொடுமையால் சிறிது துயர்தருமேனும், அது காதலனோடு கலந்து வாழும் கவின் மிக்க வாழ்வை அளிப்பதால், எம் கருத்திற்குப் பேரின்பப் பொருளாய் மாறிக் காட்சி அளிக்கிறது. ஆகவே, அக்காட்டு வாழ்வையே விரும்புகிறது எம் உள்ளம். அன்ப! நீரில் வளர்வது குவளை; தன் தாளில் நீர் நிறைந்திருக்க மலர்ந்த குவளை மலர், வறண்ட மேல்காற்று வீசுவதால் வாடிவிடுவதில்லை. கோடைக் காற்றின் கொடுமையைத் தாளில் தேங்கி நிற்கும் தண்ணீர் மாற்றிவிடும்; அதுபோல் உன் அன்பால் உயிர் வாழ்பவள் இவள்; அவள் பால் பேரன்புடைய நீ, உடன் இருப்பின், செல்லும் வழியின் கொடுமை இவளை வருத்தாது, நீ காட்டும் பேரன்பு, காட்டின் கொடுமையை மாற்றிவிடும்; காதலன் உடன்வரின் காடும் களிப்பூட்டும்; ஆகவே, அன்ப! காட்டின் கொடுமை கண்டு அஞ்சாது, இவளை உடனழைத்துச் செல்வாயாக" எனப் பலப் பல கூறி வேண்டிக் கொண்டாள்.

"நீர் கால்யாத்த நிரை இதழ் குவளை
கோடை ஒற்றினும் வாடாதாகும்;...
கானமும் இனியவாம் நும்மொடு வரினே." [a]

## நீ அல்லது வேறு துணை இல்லை :

காடும் களிப்பூட்டும் காதலன் உடன் இருப்பின் எனத் தோழி உரைத்த உரையால் உள்ளம் தேறிய இளைஞன், உடன் கொண்டுபோகத் துணிந்தான். ஒருநாள், ஊரார் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் விடியற் காலை, இளைஞன் முன்னேற்பாட்டின்படி, ஓரிடத்தே வந்து காதலியை எதிர்நோக்கி இருந்தான். சிறிது நாழிகைக் கெல்லாம், தோழி அவளை மெல்ல அழைத்து வந்தாள். அவளை அவன் பால் ஒப்படைத்தாள். இருவரும் போகத் தொடங்கினர். அக் காட்சியைக் கண்டாள் தோழி; கண் கலங்கிற்று; இளமை முதல் தன்னோடு ஆடிப் பழகியவள் தன்னைவிட்டுப் போகிறாள்; அவள் நல் வாழ்வில் நாட்டம் உடையவள் அத்தோழி; சிறக்க வாழ்ந்தவள் செல்லும் இடத்திலும் சிறுமை உறாது வாழவேண்டுமே என்ற ஏக்கம் அவள் உள்ளத்தை அரித்தது. இளைஞன் நல்லவன்; இனியவன் என்பதை அவள் அறிவாள். அறிந்தும் அவள் பால் கொண்ட பேரன்பு, அவனுக்குச் சில அறிவுரை கூறத் தூண்டிற்று.

முன் நிற்கும் பெண்ணின் இரு கைகளையும் பற்றி இளைஞன் கையில் ஒப்படைத்தாள்; அவன் கைகளைத் தன் இரு கைகளாலும் பற்றிக் கொண்டவாறே, "அன்ப! 'பேரன்புடையேன், பிரியேன்' என்று, நீ அன்று கூறிய அச் சொல் ஒன்றையே உயிர்த்துணையாய் நம்பி உன்னோடு

---

[a] குறுந்தொகை: 388, ஔவையார்.

கால்யாத்த—அடியில் நிறையப்பெற்ற; கோடை—மேல் காற்று. கோடைக்காலத்தில் வீசுவது; ஒற்றினும்—வீசினாலும் நும்மொடுவரின் கானமும் இனியவாம் என மாற்றுக.

வருகிருள் இவள். பெரிய மனையையும், பெற்ற தாய் தந்தையையும், பேணி வளர்த்த செவிலியையும், உடன் வளர்ந்த என்னையும் துறந்து வருகிருள்; இனி இவளுக்கு நீ அல்லது வேறு துணை இல்லை. அன்ப! அன்புகாட்டி அணைக்கும் தாய், கோல்கொண்டு தாக்கித் துன்புறுத்தும் போதும், குழந்தை, அம்மா! அம்மா! எனக் கூவி அவளையே சுற்றிச் சுற்றிவரும். அதுபோல், இனி நீ இவளுக்கு இன்பமே தரினும், துன்பமே தரினும், உனைவிட்டு இமைப் பொழுதும் பிரியாள்; உன் காலடியிலேயே வீழ்ந்து கிடப்பாள்; இன்பத்திலும், துன்பத்திலும் துணையாவான் நீ ஒருவனே; ஆகவே, இவளை இமைப் பொழுதும் கைவிடாது காப்பாற்றுவாயாக. அன்ப! மற்றும் ஒன்று. பெருமளவில் துணைபுரிவார் ஒருவரைப் போற்றி வழிபடாதவர் உலகில் எவரும் இரார்; அவரை, அப்பாது போற்றுதல், அரிய செயலும் ஆகாது. ஆனல், இவரால் எவ்விதப் பயனும் இல்லை; பயன் அற்றவர் இவர் என்பதை அறிந்தும், அவர்க்கு வேண்டுவன அளித்து விரும்பிப் பேணுவதே பெரிது. அந்நற்பெரும் தொண்டினை எல்லோரிடத்தும் எதிர் பார்த்தல் இயலாது. செயற்கரிய செய்யும் பெரியோர் சிலரிடத்து மட்டுமே அதைக் காணலாம்; அன்ப! இவள் இன்று பேரின்பப் பொருளாய் விளங்குகிருள்; இன்பத்தை வாரி வழங்குகிருள் இன்று. அதனல், இன்று அவள்பால் அன்பு காட்டுவதில் வியப்பில்லை. இன்பக் களஞ்சியமாய் இன்று காட்சி அளிக்கும் இவள், தன் இளமை கழிந்து, முதுமையடைந்து அழகிழந்து நிற்கும் அந்நிலையிலும் இவளைக் கைவிடுதல் கூடாது. அந்நிலையிலும் இவளைப் போற்றிக் காப்பது உன் கடன்; இவளை, இன்றேபோல் என்றும் அன்பு காட்டி ஆதரிக்க வேண்டுகிறேன்" என வணங்கி வேண்டிக் கொண்டு வழி அனுப்பினுள்; என்னே அத் தோழி அன்பு!

"தாய் உடன்று அலைக்கும் காலையும், வாய்விட்டு
அன்ன! என்னும் குழவி போல,
இன்னு செயினும், இனிது தலைஅளிப்பினும்

நின்வரைப்பினள் என்தோழி;
தன்னுறு விழுமம் களைஞரோ இலளே."a

"பெருநன்று ஆற்றின் பேணாரும் உளரே;
ஒருநன்று உடையளாயினும், புரிமாண்டு
புலவிதீர அளிமதி............
நன்மலைநாட நின்னலது இலளே." b

## செல்லும் வழி கொடிது; இனிச் செல்லாதே.

"இன்பத்திலும் துன்பத்திலும் இவளுக்கு நீயே துணை; இடரினும் தளரினும் இவளைக் காத்தல் உன் கடன்" என இளைஞனுக்கு அறிவுரை கூறுவாள்போல், அவ்வாறு காக்குமாறு வேண்டிக் கொண்டு, தோழி விடைபெற்றுக் கொண்டாள். நம்பியும் நங்கையும் வாயிலைக் கடந்து வெளியேறினர். காதலிக்குக் காட்டின் கொடுமை தோன்றுவாறு, ஆங்காங்கு காணலாம் இயற்கைக் காட்சிகளைக் காட்டியும், இனிக்கும் சதை பல கூறியும் மெல்ல அழைத்துச் சென்றான் இளைஞன். இருவரும், இடையிடையே மரநிழல் காணின் இருந்து இளைப்பாறியும், மணல் மேடு காணின் மகிழ்ந்து சிறிது விளையாடியும், நெல்லி போலும் நல்ல கனிகளைத் தின்றும், நறுநீர்ச் சுனைகளில் நீர் பருகியும் மகிழ்ந்து சென்று கொண்டிருந்தனர்.

---

a குறுந்தொகை: 397. அம்மூவனார்.

உடன்று—சினந்து; அலைக்கும்—அடித்துத் துன்புறுத்தும்; வாய்விட்டு—வாய் திறந்து; அன்னா—அம்மா! தலைஅளிப்பினும்—காப்பாற்றினாலும்; நின்வரைப்பினள்—உன்னால் காப்பாற்றப்பட வேண்டியவள்; உறு—மிக்க; விழுமம்—துன்பம்; களைஞர்—போக்குவார்.

b குறுந்தொகை: 115. கபிலர்.

நன்று—நன்மை; ஆற்றின்—செய்தால்; உளரே—ஏகாரம் வினா; எதிர்மறைப் பொருளில் வந்துளது. ஒரு நன்று—சிறிதளவான நன்மை; புரிமாண்டு—அன்புகாட்டி; புலவிதீர—துன்பம் நீங்க; அளிமதி—காப்பாற்றுவாயாக.

அந்திப் பொழுதாயிற்று. அன்றே ஊர் அடைதல் வேண்டும் எனும் ஆர்வத்தால் இருவரும் விரைந்து நடக்கத் தொடங்கினர்; நடப்பதில் உள்ள வேகத்தால் வழியில் குறுக்கிட்ட ஒரு சிற்றூரையும் அவர்கள் கண்டிலர். ஆனால் அச்சிற்றூர் மக்கள், காதல் வேகத்தால் வழியில் தம் ஊரை ஏறெடுத்தும் நோக்காது ஏகும் அவ்விருவரையும் கண்டனர். காதலில் சிறந்தன காட்டு யானைகள். பிடி நிகர்க்கும் அந் நங்கையையும் காதற் பிடிக்குப் பிற கொடுவிலங்குகளால் கேடு வந்துறாவண்ணம் காத்து, அதன் பசித்துயர் போகத் தழையும் தண்ணீரும் கொடுத்துப் புறக்கும் களிற்றினை நிகர்க்கும் நம்பியையும் கண்ணுற்ற அச்சிற்றூர் மக்கள், அவர் அழகையும் அன்பையும் கண்டு அகம் மகிழ்ந்தனர். அவர்கள் நல்வாழ்வு பெற்று நெடிது வாழ்க எனத் தமக்குள்ளே வாழ்த்தினர்.

வாழ்த்திய மக்கள், அவ்விருவரும் தம் ஊர் எல்லையைக் கடப்பதற்கு முன், ஞாயிறு மறைந்துவிடும் என அறிந்தனர்; இனிக் கடந்து செல்ல வேண்டிய காட்டின் இயல்பையும் அவர்கள் அறிந்திருந்தனர். அவர் செல்லும் வழி வாழும் ஊர்களை அற்றது; ஆறலை கள்வரும், ஊறு விளைக்கும் விலங்கினங்களும் நிறைந்தது என்பதை அறிந்த அம்மக்கள், அத்தகைய கொடுமை மிக்க வழியில், மாலை கழிய மையிருள் பரவும் அந்நேரத்தில், தனிமிக இளையளாய நங்கையை உடன் கொண்டு, நல்லதுணையேதும் இன்றித் தனித்துச் சேறல் செவ்விதன்று என உணர்ந்தனர்; உடனே அவ்வூராருள், ஆண்டாலும், அறிவாலும் முதிர்ந்தோர் சிலர், முன்சென்று இருவரையும் தடுத்து நிறுத்தினர். இளைஞனை நோக்கி, "அன்ப! பொழுதும் போய்விட்டது; இனிப் போக வேண்டிய வழியோ பொல்லாங்கு மிகுந்தது. வழிச் செல்லும் வணிகர்களை, இடைவழியில் மறித்து, அவர்க்கு இடையூறு விளைத்து, அவர் பண்டங்களைக் கொள்ளையடித்து உயிர் வாழும் கொடியோர் பலர் வாழ்கின்றனர் ஆங்கே; அவர்கள் யாரோ சிலரை வழியிற் கண்டு, அலைத்தற்கேற்ற இடம் நோக்கி அவரைப் பின்தொடர்ந்து வந்து, அவர்களை எதிற்

றூருள் புகுந்து விட்டமையால், அவர்களை ஏதும் செய்யமாட்டாது வறிதே மீளுங்கால் எழுப்பும் அவர் பறையொலி, எம் ஊர் எல்லையில், எம் ஊரைச் சூழ உள்ளகாவற் காட்டிற்கு அணித்தாக அதோ ஒலிப்பது நினக்குக் கேட்டிலதோ? அவ்வாறு அலைகள்வர் அண்மையில் இருக்கும் இந்நிலையில், இரவில், இடையூறு மிகுந்த இவ்வழியில் இனிப் போவது பொருந்தாது; இது உங்கள் ஊர்; இரவை ஈண்டுக் கழித்து, இனிது செல்வீராக" எனக் கூறி, இருவரையும் அழைத்துச் சென்றனர்.

> "எல்லும் எல்லின்று; பாடும் கேளாய்;
> செல்லா தீமோ, சிறுபிடி துணையே!
> வேற்றுமுனை வெம்மையின் சாத்துவந்து இறுத்தென
> வளை அணி நெடுவேல் ஏந்தி
> மிளைவந்து பெயரும் தண்ணுமைக் குரலே." [உ]

**காட்டைக் கடக்க எங்ஙனம் கற்றனள்!**

இவ்வாறு இருந்தும், இளைப்பாறியும், ஏற்ற இடங்களில் இரவைக் கழித்தும் இருவரும் இளைஞன் ஊர் அடைந்து, அவன் மனை புகுந்து மகிழ்ந்தனர். நிற்க, பொழுது புலர்தந்து மகள் உறங்கும் இடத்தில் அவள் இல்லை; அவள் படுக்கை வறிதே இருப்பது கண்டு கலங்கினாள் தாய்; உடனே, தன் மகளை உறக்கத்திலும் பிரியாது பழகும் அவள் உயிர்த் தோழியை அழைத்து உசாவினாள். மகள், யாரோ ஓர் இளைஞன் பின் ஓடிவிட்டாள் என அறிந்து பெருந்துயர் உற்றாள் அத்தாய். மகள் பிரிவு மாற்றொணாத் துயர் அளித்தது. பெற்ற தாயும் பெரிய சுற்றமும், மனையும்,

---

[உ] குறுந்தொகை: 390. உறையூர் முதுகொற்றனார்.

எல்-ஞாயிறு; எல்லின்று-ஒளிஇழந்தான்; பாடு-ஒலி; செல்லாதீம்-போகாதீர்கள்; பிடி-பிடியானை போன்றவள்; வேற்றுமுனை-போர்க்களம்; வெம்மையின்-பகைமைபோல; சாத்து-வணிகர் கூட்டம்; இறுத்தென- வந்து தங்கிற்றாக; மிளை-காவற்காடு; தண்ணுமை-பறை.

மாநிதியும் இருக்கவும் ஏதிலான் ஒருவன் பின் சென்ற தன் மகள் செயல் நினைந்து அழுதாள்; அரற்றினாள்; அலறினாள். உலகியல் உணர்ந்தவள் அத்தாய்; அதனால், தன் மகள், மணப் பருவம் பெற்ற மகளிர்க்குரிய பொதுவொழுக்கத்தையே கைக்கொண்டாள் என உணர்ந்தாள்; அதனால், சென்ற அவள் செயலில் சிறிதும் தவறு இல்லை. தன் காதலையும் கற்பையும் காத்துக்கொள்ள அவள் மேற் கொண்ட செயல் சாலவும் நன்று என உணர்ந்தது அந்நற்றாய் உள்ளம். என்றாலும் பெற்ற மகள்பால் கொண்டிருந்த பேரன்பு, அவள் பிரிவினைப் பொறுக்க மாட்டாது பெரிதும் வருந்திற்று. மகளின் இளமையும் மென்மையும், அவள் சென்ற காட்டு வழியின் கொடுமையும் அருமையும் அவள் மனக்கண் முன் மாறி மாறித் தோன்றி அவளை மருட்டின.

வெற்றி பல கண்டு அவ்வீரம் விளங்கக் கட்டிய கழல் காலில் ஒலிக்க அவ்விளைஞன் அவளைக் காத்துச் செல்கிறான்; காட்டு வழியில், எங்கும் நிழலே இல்லை; நிழல் தரும் மரம் ஒன்று கூட இல்லை; நீர் நிலைகள் எல்லாம் வறண்டு வெடித்துக் கிடக்கின்றன; அவ்வழி நடக்க நடக்க நீண்டு செல்கிறது. அவ்வழியில்வெப்ப மிகுதியாலும், காதலன் ஊரை விரைந்து அடைய வேண்டும் என்னும் வேட்கை மிகுதியாலும், மகள் கால்கள் மண்ணில் படாவாறு விரைந்து நடக்கிறாள்; நீர் வேட்கை மிகுந்து விடுகிறது; ஒவ்வொரு சுனைக்கும் ஓடுகிறாள்; நீரின்மை கண்டு வறிதே மீளுகிறாள். இறுதியில் ஒரு சுனையில் சிறிதே நீர் தேங்கியிருக்கக் காணுகிறாள்; காட்டு விலங்குகள் உண்டு சென்றதால் கலங்கியுளது அது வும்; மேலும் ஞாயிற்றின் வெப்பம், அதைச் சுடு நீராக்கியுள்ளது; அவள் தண்ணீர் வேட்கை, நீரின் கலக்கத்தையோ, வெப்பத்தையோ பொருட்படுத்தவில்லை; மட மட வெனும் ஒலி எழக் குடிக்கிறாள். இக் கொடுங்காட்சி கண் முன்வந்து நிற்கக் கலங்கிற்று அத் தாய் உள்ளம்.

தன் தோழியரோடு மனைமுற்றத்தே ஆடிக்கொண்டிருக்கிறாள்; பொற் கிண்ணத்தில், பொரி கலந்து சுவை மிக்க

பாலை வார்த்துக் கொண்டுவருகிறாள் செவிலி; அழகிய சிறு வளைகள் ஒலிக்கும் தளிர் போன்ற அவள் இளங் கைகளை மெல்லப் பற்றிப் பாலை ஊட்டுகிறாள்; பால் கிண்ணம் நிறைய இருப்பதைப் பார்த்து விடுகிறாள் அச்சிறுமி; உடனே "இது அதிகம்; இவ்வளவு பால் வேண்டாம்; இவ்வளவையும் என்றால் உண்ணல் இயலாது" என மறுத்து உரைத்துக், கைகளை ஈர்த்துக் கொண்டு ஓடி மறைந்து விடுகிறாள். அக் காட்சியும் அவள் மனக் கண்முன் வந்து நிற்கிறது; அவ்விரு காட்சிகளையும் மாறி மாறிக் காணும் அத்தாயின் உள்ளம் மருளுகிறது; "அத்துணை இளமையும், அறியாமையும் வாய்ந்த அவள், இத்துணை அறிவும், தெளிவும், ஆற்றலும் அடக்கமும் எவ்வாறு பெற்றாள். இவ்வளவையும் அவள் யாங்கு கற்றனள்" என எண்ணி வியந்து ஏங்கினாள் அந் நற்றாய்.

"நிழல் ஆன்று அவிந்த நீர் இல் ஆர் இடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த
வெவ்வெம் கலுழி தவ்வெனக் குடிக்கிய
யாங்கு வல்லுநள் கொல்தானே? ஏந்திய
செம்பொன் புனைகலத்து அம் பொரிக் கலந்த
பாலும் பல என உண்ணாள்
கோல் அமை குறுந்தொடித் தளிர் அன்னோளே." [a]

## காடு கொடுமை அகன்று இனிய ஆகுக!

மகள் கண்ணீர் விட்டுக் கலங்குவதைத் தாய் உள்ளம் காணப் பொறுக்காது; மகள் போய்விட்டாள். வீட்டை

---

[a] குறுந்தொகை: 356. கயமனார்.

ஆன்று–அடங்கி; அவிந்த–அற்றுப்போன; கடுகுபு–விரைந்து; அறு–நீர் அற்ற; மறுகுபு–உலர்ந்து; வெவ்வெம் கலுழி–மிகவெப்பம் பொருந்திய கலங்கல்நீர்; தவ்வென–வ் எனும் ஒலி உண்டாக; குடிக்கிய–குடிக்க; யாங்கு வல்லுநள்–எவ்வாறு வலியளானாள்.

வீட்டு வெளியேறியதற்கு மகள் வருந்தாள்; அது அவளே விரும்பி மேற்கொண்டது. ஆனால், விரும்பிச் சென்றாளேனும் வழியின் கொடுமையினை அவளால் தாங்கிக் கொள்வது இயலாது. மலை வழியில் கிடக்கும் கற்கள் அவள் கால்களை உறுத்தி வருத்தும். தண்ணீர் வேட்கை அவட்குத் தளர்ச்சி அளிக்கும்; காயும் ஞாயிற்றின் கொடிய வெயிலை மறைக்கும் மர நிழல் காண மாட்டாது அவள் மேனி வாடும்; அவற்றைத் தாங்க மாட்டாது அவள் கண்ணீர் விட்டுக் கலங்குவள் என்ற எண்ணம் அத் தாயின் துயரை மிகுவித்தது. ஆனால், மகள் பின் சென்று, ஆங்கு அவள் படும் துயரை மாற்றுவது அவளால் இயலாது. என்றாலும், வறிதே இருக்க அவளால் முடியவில்லை. அதனால், இறைவனை நோக்கி இரு கைகளையும் கூப்பி வணங்கினாள்; "ஆண்டவனே! மகள், மழையும், மரநிழலும் அற்ற மலைவழியில் செல்கின்றாள்; கூரிய கற்கள் மலிந்த அக்காட்டு வழியில் கொடுமை உறுவள். கொண்டு செல்லும் இளைஞன், காளை போலும் ஆண்மை வாய்ந்தவனே; அவன் கையில், கொடுமை செய்வார் உயிர் போக்கும் நெடிய வேல் உளது என்பதும் உண்மையே; ஆனால், அதனால், அவளுக்குக் காட்டு விலங்குகளாலும், அவ் விலங்கு நிகர் கொடியோராலும் உண்டாகும் ஏதங்களைத் தான் போக்க இயலுமேயல்லது, இயற்கை அளிக்கும் கொடுமைகளைப் போக்குவது இயலாது; அக்கொடுமை போக்குவான் நீ ஒருவனே; ஆண்டவனே அவள் சென்ற வழியைக் கொடுமை அகன்று இனிமை உடையதாக மாற்றித் துணை புரிய வேண்டுகிறேன்; உன் அருளால், அவ்வழியில், ஞாயிறு தன் கொடுமை தோன்றக் காயாது மேகத்திடையே மறைந்து போகாதோ? மரங்கள் எல்லாம் தழைத்து நிறைந்த நிழலைத் தாராவோ? மலைக் கற்கள் உடைந்து பொடியாகி மணல் பரவாதா? மழை பெய்து, வழியெல்லாம் தண்ணீர் வழிந்து, தண்ணெனக் குளிராதா!" எனப் பலப்பல கூறி வேண்டிக் கொண்டாள்; என்னே, அத்தாய் அன்பு!

"ஞாயிறு காயாது, மரம் நிழல் பட்டு,
மலைமுதல் சிறுநெறி மணல்மிகத் தாஅய்த்

தண்மழை தலையின்றாக; நந்நீத்துச்
சுடர்வாய் நெடுவேல் காளையொடு
மடமா அரிவை போகிய சுரனே" ௨

## ஓடி விடுதல் உலகியல் போலும்:

தாயின் துயர் கண்டாள் செவிலி. பண்டு அத்தாயின் உயிர்த் தோழியாய்ப் பணியாற்றி, இன்று ஓடிப்போன அப் பெண்ணுக்குப் பாலும் சோறும் ஊட்டிப் பேணி வளர்த்து நல்லற நெறி காட்டி நல்லொழுக்க நிலையில் நிற்க வைத்த வள் அச்செவிலி, தன் மகளைக் காணாது புலம்பும் தாயின் துயர் நிலை கண்டு தானும் புலம்பினாள்; ஒருவாறு உளம் தேறினாள். இனிப் புலம்புவதால் பயனில்லை; நடப்பன நடந்து விட்டன; மேல் நிகழ வேண்டுவனவற்றை ஆராய்ந்து மேற் கொள்வதே அறிவுடைமை எனக் கருதினாள்; ஓடிப்போன மகளைத் தேடிக் கொணரத் துணிந்தாள்; அவ்விருவரும் சென்ற காட்டு வழியில் அவர்களைத் தேடிச் சென்றாள்; வழி யில் வருவாரை எல்லாம் அவர்கள் குறித்து வினவினாள்; அவ் வழியில் ஆணும் பெண்ணுமாய் கலந்து கலந்துசெல்வார்பலர் அவர்களைத் தொலைவில் காணும் போதெல்லாம் அவர்களைத் தன் மகளும் அவள் காதலனு மாகக் கருதி மகிழ்வாள்; அணுகி நோக்குங்கால், அவர்கள் வேறுதல் அறிந்து வருந்துவாள். இவ்வாறு பல முறை ஏமாற்றம் உற்றாள்; இறுதியில் ஓர் உண் மை புலனாயிற்று; வீட்டை விட்டுத் தன் காதலன் பின் ஓடிய வள் தன் மகள் ஒருத்திமட்டும் அல்லள்; அவள் போல் ஓடிய மகளிர் உலகில் அளவற்றோர் என்பதை அறிந்தாள்; அதனால்

---

௨ குறுந்தொகை: 378. கயமனார்.

நிழல்பட்டு– நிழல் உண்டாகி, தாஅய் - பரவப் பெற்று; தண் – குளிர்ந்த; தலையின்றாக – பெய்வதாக; நீத்து –பிரிந்து, சுரன் –காட்டுவழி; "சுடர் வாய் நெடுவேல் காளை" என்பது; அவனுக்கு உண்டாகும் இயற்கைத் துன்பங்களைப் போக்கு வது அவனால் இயலாது எனும் குறிப்பு.

அச்செயல் உலகோரால் ஒப்புக் கொள்ளப் பெற்று உலகெங்கும் காணலாகும் ஓர் உலகியல் நிகழ்ச்சி என உணர்ந்தாள்; வழியில் வருவார் போவார் அனைவரையும் ஊன்றி நோக்கி நோக்கி, அவள் கண்கள் ஒளி குன்றில; அவ்வளவும் ஆன பிறகு, அவளுக்கு அவ்வுண்மை புலனாயிற்று; புலனாகவே, மகளைத் தேடிச் செல்வது வீண் முயற்சி; இனி, அவள் விரும்பும் அவனுக்கு அவளை மணம் செய்து வைப்பதே மாண்புடைத்து எனக் கொண்டாள்; வீட்டில் உள்ளார்க்கு வேண்டும் வகையால் கூறி, வரைவை விரைவில் முடிப்பேன எனும் உறுதி பூண்டு வீடடைந்தாள்."

"காலே பரிதப்பினவே; கண்ணே
நோக்கி நோக்கி வாள் இழந்தனவே;
அகல் இரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற இவ்வுலகத்துப் பிறரே" [a]

## ஒன்று கூட்டிய ஊழே, நீ வாழி!

வீடு திரும்பிய செவிலி பெண்ணைப் பெற்றவர்க்குக் கூற வேண்டுவன கூறித், திருமணத்திற்கு இசையுமாறு செய்தாள். மணநாள் குறித்தாயிற்று; இரு பெரும் சுற்றத்தினரும் ஒன்று கலந்தனர்; திருமணம் இனிது முடிவுற்றது. மணத்திற்கு வந்திருந்தோர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர்; வாழ்த்திய பெரியோர்களில், அவ்விரு குடும்பத்தினரோடும் பல்லாண்டு காலமாகப் பழகிய சிலர் இருந்தனர். அவர்கள் வாழ்த்துரை வழங்க எழுந்திருந்ததும், அவர் மனக் கண்முன்

---

[a] குறுந்தொகை 44. வெள்ளி வீதியார்.

பரிதப்பின - நடை தளர்ந்தன; வாள் - ஒளி. இரு - பெரிய; விசும்பு - ஆகாயம்; மீனினும் - மீனைக் காட்டிலும்; மன்ற - உறுதியாக; பிறர் - இவளும் இவனும் போல் கூடி ஓடிப் போனவர்.

மணங்கொள்ளும் நம்பியும் நங்கையும் தெருவில் நடைதேர் உருட்டியும், மணல் வீடு கட்டியும் ஆடி மகிழ்ந்த அவ்விளமைக் காட்சி தோன்றி அவர்க்கு மகிழ்ச்சி ஊட்டிற்று. அம் மகிழ்ச்சியில் திளைத்துச் சிறிது மெய்ம்மறந்து இருந்துவிட்டுப் பின்னர் வாழ்த்தத் தொடங்கி, "ஐவேறு வகையாகப் பின்னி விடப்பட்டிருந்த இவள் அழகிய கூந்தலை இவன் பற்றி இழுப்பான்! இவன் தலைமுடியை இவள் கைப்பற்றி வளைத்து வலிப்பாள். தம் ஆட்டத்திற்கு இடையே சிறிது ஊடி இவர்கள் மேற்கொள்ளும் அச்சிறு சண்டையை, இருவரையும் பேணி வளர்க்கும் பொறுப்பேற்றுக்கொண்ட செவிலித்தாயர் இடையிட்டுப் போக்கி இன்புறுவர். தம் ஆட்டத்திற்கு இடையிடையே ஊடும் இயல்புடையவராய்க் காணப்பட்ட அவர்கள், ஆண்டு முதிர முதிர, ஒருங்கே பிணைப்புண்ட இருமலர்கள் போல், ஒருவர்க்கு ஒருவர் இன்றியமையாராய் ஒன்றுபட்டு விட்டனர்; ஆனால், அன்று அவர் சிறு சண்டைகளை முன்னின்று போக்கிய பெற்றோர், பிற்காலத்தில் அவர் திருமணத்திற்கு ஏனோ இசையாராயினர். பெற்றோர் இசைந்திலர் என்பதை அறிந்தும் இவர்கள் மணந்து மனையறம் மேற்கொள்ளத் துணிந்தனர். இளமையிலேயே இவ்வாறு போராடும் இவர்கள் எவ்வாறு மணந்து மனையறம் மேற்கொள்வாரோ என்ற எம் கவலை ஒழிந்தது; பின்னர், இவர் மணத்திற்கு ஒப்பாத இவர் பெற்றோர், இன்று அவர்க்கு மணம் செய்து மகிழக்கண்டு, பெற்றோர் பகையால், இளம் உள்ளங்கள் ஒன்றுபடுதல் இல்லாகிவிடுமோ என்ற அச்சமும் இப்போது ஒழிந்தது; இளமையில் இவர் உள்ளத்தில் தோன்றிய பகையுணர்ச்சியையும், இவர் பெற்றோர் உள்ளத்தில் இன்று தோன்றிய பகையுணர்ச்சியையும் ஒருங்கே போக்கி, இருவரையும் மணமக்களாக்கி மகிழவைத்த ஆற்றல் அவர் ஆகூழிற்கே ஆகும்; வாழ்க அவர் ஊழ்வினை" எனக் கூறி வாழ்த்தினர்.

> "இவன் இவள் ஐம்பால் பற்றவும், இவள் இவன்
> புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்,
> காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது

ஏதில் சிறுசெரு உறுப மன்னே;
நல்லை மன்ற அம்ம பாலே! மெல்லியல்
துணைமலர்ப் பிணையல் அன்ன இவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே." a

## கணவன் இனிது என உண்ணக் களிக்கும் இவள் உள்ளம் :

அவளும் அவனும் தனி வாழ்க்கை மேற்கொண்டனர்; பலரும் கண்டு பாராட்டும் வகையில், அவர் வாழ்க்கை சென்றுகொண்டிருந்தது; மகள் ஆற்றும் மனையற மாண்பை நேரில் கண்டு மகிழ விரும்பினாள் தாய்; அவ்வேட்கை மிகுதியால் மகள் மனைக்குச் சென்று சிலநாள் வாழ்ந்திருந்தாள். மகள் நடாத்தும் மனைவாழ்க்கையின் மாண்பு கண்டு மகிழ்ந்தாள்; கணவன் குறிப்பறிந்து நடந்துகொள்ளும் அவள் அறிவையும், மனைவியைப் பிரிந்து வாழ விரும்பாத அவன் அன்பையும் கண்டு களித்தாள்; சிலநாள் கழித்துத் தன்னூர் அடைந்தாள்; உறவினர் பலர் மகளின் மனையற மாண்பு குறித்து உசாவினர்; அவர்க்கு, ஆங்குத் தான் கண்ட மகள் இல்வாழ்க்கைச் சிறப்பை எடுத்துரைக்கத் தொடங்கினாள். "கணவன் விரும்பியுண்ணும் உணவு புளிக்குழம்பு என்பதைச் சென்று வாழத் தொடங்கிய சில நாட்களுக்குள்ளாகவே கண்டு கொண்டாள் நம் மகள். வீட்டில் பணிப் பெண்கள் பலர் இருப்பவும், அவன் சுவையறிந்து செய்யும் ஆற்றல் அவர்க்கு இராது என எண்ணிச் சோறாக்கும் பணியைத்

---

a குறுந்தொகை : 229. மோதாசனார்.

ஐம்பால்—ஐவகையான கூந்தல்; புன்தலை—சிறிய தலை; ஓரி—மயிர்; வாங்குநள் பரிய—வளைத்து இழுக்க; தவிர்ப்ப—இடைபுகுந்து தடுக்க; ஏதில்—பொருளற்ற; சிறுசெரு—சிறு சண்டை; உறுப—செய்வர்; நல்லை—நன்மை உடையாய்; மன்ற—நிச்சயமாக; பால்—ஊழ்; துணைமலர்—இரட்டை மலர்; பிணையல்—மாலை.

தானே மேற்கொண்டாள்; ஒருநாள் புளிக்குழம்பு செய்யத் தொடங்கினாள். அதற்கு வேண்டிய தயிரைத் தேர்ந்தெடுத்தாள்; பாறைபடு தயிர் எனப் போற்றுமாறு நன்கு இறுகியிருந்தது அத்தயிர்; அதைக் கைகளால் நன்கு பிசையத் தொடங்கினாள்; பிசைந்து கொண்டிருக்கும்போது மேலாடை நழுவிவிட்டது; அன்று அவள் கட்டியிருந்த ஆடை விலையுயர்ந்த ஆடை; மாசு போகக் கழுவப் பெற்ற கைகளால் மட்டுமே தொடக்கூடிய அருமை வாய்ந்தது; கணவன் விரும்பும் புளிக் குழம்பை விரைவில் ஆக்கி முடித்தல் வேண்டும் என்ற வேட்கை அவளுக்கு; அவ்வேட்கை மிகுதியால், ஆடையின் அருமையை மறந்தாள்; கை கறைப்பட்டுளது என்பதையும் மறந்தாள். தயிரைப் பிசைந்த கைகளினாலேயே, சரிந்த மேலாடையைச் சரிசெய்து கொண்டாள். குழம்பை அடுப்பில் ஏற்றினாள். அடுப்பருகே அமர்ந்தவள்; தாளிப்புப் புகை கண்ணுள் நுழையக் கண்ணீர் ஒழுகுவதையும் பொருட்படுத்தவில்லை; குழம்பைத் தாளித்து இறக்கினாள்; அதற்குள் கணவனும் வந்து சேர்ந்தான்; வாழை இலையை விரித்துப் போட்டு உணவு படைத்தாள்; அருகில் அமர்ந்து, ஊட்டினாள்; "புளிக் குழம்பு, நனிமிக நன்று! நனிமிக நன்று!!" எனப் பலமுறை பாராட்டிக் கொண்டே உண்டான்; அவன் பாராட்டுரைகளைக் கேட்கக்கேட்க அவள் அகம் மகிழ்ந்தது; அது முகமலர்ச்சியாய் வெளிப்பட்டது; அவள் வாய் சிறிதே முறுவலித்தது. அக்காட்சியைக் காணும் பேறு பெற்றேன் நான்" எனக் கூறிப் பெருமிதம் கொண்டாள்.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே." [1]

---

[1] குறுந்தொகை: 167. கூடலூர் கிழார்.

## வேந்தன் வினையாயினும் வெளியூரில் தங்கான்!

மகள் மனையற மாண்பு கூறி மகிழ்ந்தவள், அவள் கணவன் அவள் மாட்டுக் கொண்டுள்ள அன்பின் பெருமையினைப் பாராட்டத் தொடங்கினாள். "நம் மகளின் மனையற மாண்பிற்குப் பெரிதும் காரணமாயது, அவள்பால் அவள் கணவன் காட்டும் பேரன்பே; அவர் இருவர் உள்ளங்களும் அன்பால் ஒன்றுபட்டுவிட்டன; அவளை இமைப்பொழுது பிரிந்து வாழவும் அவன் விரும்புவதில்லை; மனைவியைத் தனியே விடுத்துப் பிரிந்து வெளியே செல்லவேண்டிய தேவை அவனுக்கு இல்லை; பொருள் வேண்டிப் பிரிய வேண்டிய இன்றியமையாமை அவனுக்கு இல்லை; வளம் கொழிக்கும் வீடு அவன் வீடு; அதனால் அவன் அவளை என்றும் பிரிவதில்லை; ஆனால், அரசியல் ஆர்வம் உடையவன் அவ்விளைஞன்; அதனால் அரச ஆணை மேற்கொண்டு ஒரோவொருகால், தேர் ஏறி வெளியூர்க்குச் செல்வன்; அரச ஆணை மேற்கொள்வது அறமாம் எனும் அறவுள்ளம் உடைமையால், அவன் பிரிந்து செல்லினும், சென்ற இடத்தில் ஒருநாளும் தங்கான்; எடுத்துச் சென்றவினை எவ்வளவு பெரிது ஆயினும், அதை விரைந்து முடித்துக் கொண்டு அன்றே வீடு வந்து சேர்வன்; மணமாகி இத்தனை நாளாகியும், ஒரு நாளும் அவன் தேர் வெளியூரில் தங்கியதில்லை; மனைவியைத் தனியே விடுத்து வெளியூரில் தங்க, அவன் அன்பு அவனை விடுவதில்லை. அத்துணை அன்புடையான் அவன்" எனக் கூறித் தன் மகள் மீது அவள் கணவன் கொண்டுள்ள அளப்பரிய அன்பு கண்டு அகம் மகிழ்ந்தாள்.

> "வேறூர்,
> வேந்து விடு தொழிலொடு செலினும்
> சேந்துவரல் அறியாது செம்மல் தேரே." 8

---

முளி தயிர்—சிவக்கக் காய்ந்து இறுகிய தயிர்; காந்தள்—காந்தள் மலர் போன்ற; கழுவுறு கலிங்கம்—கழுவிய கைகளால் கட்ட வேண்டிய ஆடை; உண் கண்—மைதீட்டிய கண்; குய்ப்

## 2. கற்பும் கடமையும்

உலகில் வாழும் உயிர்கள் பல வாயினும், அவற்றுள் உயர்திணை உயிர் எனப் புகழ்ந்து பாராட்டப் பெறுவது மக்கள் உயிர் ஒன்றே. பிற உயிர்கள் அறியாக், காதல் கடமை யுணர்வுகளை அறிந்து, அவற்றின் வழி வாழும் உயர்ந்த ஒழுக்க நெறியில் நிற்பதனாலேயே அது அவ்வாறு பாராட்டப் பெறுகிறது. காதலின் பெருமையைக், கடமையின் சிறப்பை உணர்ந்து வாழ்பவரே மக்கள். மக்களாய்ப் பிறந்தார் ஒவ்வொருவரிடத்திலும், அவ்வொழுக்க நெறி இழுக்காது நிற்றல் வேண்டும். ஒருவனும் ஒருத்தியும் உள்ளம் கலந்து ஒன்றுபட்டு வாழும் இல்வாழ்க்கை, காதற் பண்பு வாய்ந்து விளங்குதல் வேண்டும். அவ்வாழ்க்கை, காதல் மயமாய்க் காட்சி அளித்தல் வேண்டும்; வாழ்க்கை வேறு, காதல் வேறு என்ற வேறுபட்ட நிலை ஆங்கு இடம் பெறுதல் கூடாது; சொல், செயல் எதிலும் காதல்; இரவு பகல் எப்போழுதும் காதல்; இன்பத்திலும் காதல்; துனபத்திலும் காதல் என்ற நிலை வாய்த்தல் வேண்டும். கணவனையும், மனைவியையும் இறவாப் பேரின்பம் மல்கும் இன்ப உலகிற்கு ஈர்த்துச் செல்வதோடு காதலின் கடமை முடிந்துவிடுவதில்லை. அவர் வாழ்வில் இரண்டறக் கலந்து விளங்கும் காதல், அவர் உள்ளத்தில் கடமை யுணர்ச்சிக்கு வித்தூன்றி வளர்க்கும் விழுமிய துணையாதலும் வேண்டும். அவர் காதல் மரம், கடமை எனும் கனியினை ஈன்றும் கவினுறுதல் வேண்டும்; அவர் காதல் வாழ்வில் கடமையுணர்வு கருக்கொள்ளாதாயின், அக்காதல் பயனற்றுப் போம்; காதல்,

---

புகை—தாளிப்புப் புகை; துழந்து—துழாவி; அட்ட—ஆக்கிய; பாகர்—குழம்பு.

ª குறுந்தொகை; 242; குழல் தத்தன்.

வேறு: ஊர்—வேற்றூர்; செலினும்-உம்மை செல்லான் எனும்குறிப்புணர நின்றது; சேந்து-தங்கி; செம்மல்—தலைவன் தோ சேர்ந்துவரல் அறியாது என மாற்றுக.

அவர் வாழ்வின் பண்பாயின், கடமை அதன் பயனாதல் வேண்டும். "அன்பும் அறனும் உடைத்தாயின், இல் வாழ்க்கை பண்பும் பயனும் அது" என விதி வகுக்கும் வள்ளுவர் வாய்மொழியும் காண்க.

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தனித்தனியே நின்று ஆற்றும் கடமைகளால் உலகம், கருதிய பயனைப் பெற்றுவிடாது; அவர் இருவரும் கணவனும், மனைவியுமாய்க் கலந்து, ஒருவர்க்கு ஒருவர் துணையாய் நின்று கடனாற்றும் பொழுதே, உலகம் நிறை பயன்பெறும். இவ்வுண்மையை உணர்ந்தே, உலகியல், ஒருவனும் ஒருத்தியும் ஒன்று கூடி வாழும் காதலை உருவாக்கி அளித்துள்ளது; ஆகவே, கடமையை வளர்க்கக் காதல் வேண்டும்; காதல், கடமையை வளர்க்கும் விழுத் துணையாய் வாழ்தல் வேண்டும்; காதல் கடமைக்காகவே வாழ்தல் வேண்டும். கடமைக்குக் காதலே அன்றி காதலுக்குக் கடமை அன்று; கடமையை மறந்த காதல் காதலாகாது; காதல் கடமையை வளர்க்க வேண்டுமே யல்லது, அக்கடமை யுணர்வை அழிப்பதாதல் கூடாது.

எனக்காக, நான் வாழ என்பதினும், என் காதலைக் கொள்ளை கொண்ட இவருக்காக, இவர் இன்புற்று வாழ நான் கடமையாற்றுதல் வேண்டும் என்ற விருப்பம், ஒருவர் உள்ளத்தில் இடம் பெற்ற வழி, அவர் ஆற்றும் கடமையே நிறைந்த பயன் தரும். ஆகவேதான் கடமை நெறி நிற்பார் உள்ளத்தில் காதல் உணர்வு அரும்புதல் வேண்டும் எனப் பெரியோர்கள் விதி வகுத்துள்ளார்கள். இவ்வுணர்வு வாய்க்கப்பெற்றமையினாலேயே, மக்கள் உயிர் ஏனைய உயிர்களினும் சிறப்புடையதாக மதிக்கப் பெறுகிறது.

காதல் வேகத்தில், கடமையைக் கைவிடுவதோ, கடமை நெறி நிற்கும் கருத்தால் காதலை மறப்பதோ கூடாது. காதல் அற்ற வாழ்வு வாழ்வாகாது. அது வறண்ட பாலை வனம் போல் வளம் இழந்து போகும். காதல் அறியாதவரின் கடமையுணர்வு நாளடைவில் நலிந்து; நீங்கிவிடும். அதைப் போலவே, கடமையை மறந்தவர், தம் வாழ்வின் பயனும்

இன்பத்தை அடைதல் இயலாது; ஆகவே, காதல், கடமை களை இரு கைகளிலும் பற்றிக்கொண்டு ஒருங்கே அழைத்துச் செல்லும் உயர்வாழ்வினராதல் வேண்டும்; தான் இன்புற்று வாழ்தலோடு, பிறரும் இன்புற்று வாழப் பாடுபடுதலே வாழ்வின் பயன் என்பதை மறந்து, தாம் மட்டும் இன்புற்று வாழத் தலைப்படுவார்க்கும், உண்ணுவது, உறங்குவது, ஆணும் பெண்ணும் கூடி இனம் வளர்ப்பது என்பதல்லது வேறு விழுமிய வாழ்வறியா விலங்கினத்திற்கும் வேற்றுமை யின்றும்.

## அரிவையும் வருமோ?

இவ்வுண்மைகளை உணர்ந்தவன் நம் இளைஞன்; காதல் வேகத்தில் கடமையைச் சிறிதே மறந்திருந்த அவன், மணம் செய்துகொண்டு, மனையற வாழ்க்கையில் புகுந்ததும் உணர்வு பெற்றான்; இல்லற வாழக்கை பிறரை வாழ்விக்க வந்த பெரிய அற வாழ்க்கை; உலகில் வாழும் ஒவ்வொருவரும் உயர்நிலை அடைய உறுதுணை புரிய வந்தவன் இல்வாழ்வான்; "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை." உலகில் வாழும் ஒவ்வொருவரும் உணவும், உடையும் உறையுளும் பெற்றுப் பேரின்ப வாழ்வு வாழத் துணைபுரிய வேண்டியவன் இல்வாழ்வான்; அவ்வழி வாழ்ந்து, விழுமிய புகழ்பெற்று வாழ்வதே வாழ்வின் பயனும் என்ற உண்மைகளை உணர்ந்தான்.

புகழ் நிறைந்த வாழ்வு வாழ்தல் வேண்டும்; அப்புகழை அளிக்கவல்ல அரிய தொண்டாற்றுதல் வேண்டும் என உணர்ந்தவன், அதற்குப் பெருந்துணை புரியவல்லது பொருள் என்பதையும் உணர்ந்தான்; கடமைகளைக் குறைவறச் செய்ய கடமைகளைச் செய்து காதற்பயனை அடையத் துணைபுரிவது பொருள்; அறத்தை வாழ்விப்பது பொருள்; இன்பத்தை வளர்ப்பது பொருள்; காதல் உள்ளம் வாய்க்கப் பெற்று, அதன் காரணமாய்ப் பிற உயிர்களைப் பேணிக்

காக்க வேண்டும் எனும் கடமை யுணர்ச்சி வாய்க்கப் பெறு வாரின் விருப்பத்தை நிறைவேற்றித்தரும் வல்லமை பொருள் ஒன்றினுக்கே உண்டு; காதல் பெற்றெடுத்த கடமை உணர்வை, உரம் ஊட்டி வளர்ப்பது பொருள்; "அருள் என்னும் அன்பு ஈன்குழவி, பொருள் என்னும் செல்வச் செவி லியரல் உண்டு." என்ற உணர்வுடையனுயினன்.

பசியை ஒழிப்பது பொருள்; பிணியை அறுப்பது பொருள்; பகையை அழிப்பது பொருள் எனப் பொருளின் பெருமையை உணர்ந்த அவன், அப்பொருள், அரும்பாடுபடுவாரே அடைய லாகும்; இல்லற இன்பமே இறவா இன்பம் என எண்ணி, இல்லாளை இமைப்பொழுதும் பிரியா அடங்கி யிருப்பார் அப் பொருளை அடைதல் இயலாது. மனைவிதரும் இன்பமே இன் பம் என மதித்து, மனதை அவ்வின்பத்திற் பறிகொடுத்துக் கிடப்பார் மாண்புடையராதல் இயலாது; மக்களுக்குத் தொண்டாற்றி, மாயாப் பெரும் புகழ்பெற்று வாழக் கருது வார், மனைவி தரும் இன்பம் ஒன்றிலேயே மயங்கி விடுதல் கூடாது. "மனைவிழைவார் மாண்பயன் எய்தார்; வினைவிழை வார் வேண்டாப் பொருளும் அது." மனைவியைப் பிரிந்து போய், அவளும் தானும் நன்கு வாழவும், அவளும் தானும் கூடி உலகை நன்கு வாழ்விக்கவும் துணைபுரியும் பெரும் பொருள் ஈட்டி வருதல் வேண்டும். அக்கடமை யுணர்வால், தன் காதல் வாழ்விற்குச் சிறிதே தடை நேரினும் கேடில்லை; கடமையை எண்ணி அதைத் தாங்கிக் கொள்ளுதல் வேண் டும் எனத் துணிந்தான்.

உயிர்கள் இன்ப நாட்டம் உடைய; இன்ப நாட்டம் உலகத்து உயிர்கள் அனைத்திற்கும் ஒத்த இயல்பாயினும், புகழாசை மக்கள் உயிர் ஒன்றிற்கு மட்டுமே உரித்து; புகழாசை, இன்ப வேட்கையினும் ஆற்றல் வாய்ந்தது; தம் பெயர் உலகம் உள்ளளவும் நின்று வாழ வேண்டும் எனும் ஆசை, தாம் என்றும் இன்புற்று வாழ வேண்டும் எனும் ஆசையினும் ஆற்றல் வாய்ந்தது. புகழ் பெற,

ஒருவர், தம் இன்பத்தைக் குறைத்துக் கொள்ளவும் முன் வருவர்.

புகழ் பல வகையால் வரும் என்றாலும், அவற்றுள் வறியார்க்கு வழங்கி வாழ்வதால் பெறலாகும் புகழே சாலச் சிறந்தது. " ஈதல்; இசைபட வாழ்தல்; அது வல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என, ஈகை அளிக்கும் புகழையே புகழ் எனப் பாராட்டியுள்ளார் வள்ளுவப் பெருந்தகையார். ஆகவே, உலகில் வாழும் ஒவ்வொருவரும் இடையறா இன்ப வாழ்வினராதலும் வேண்டும்; இறந்தும் இறவாப் பெருநிலை பெறத் துணிபுரியும் புகழ் அளிக்கும் பெருங் கொடையாளராக வாழ்தலும் வேண்டும். அவ்வாழ்வு பெரும் பொருள் உடையார்க்கு மட்டுமே உண்டாம்; வறியார்க்கு அது வாய்க்காது. ஆகவே, அப்பொருளீட்டிவர இன்றே போதல் வேண்டும் எனத் துணிந்தான்; துணிந்து போதற்கான முயற்சிகளை மேற்கொள்ளத் தலைப்பட்டான்.

கடமை யுணர்வு வரப்பெற்ற அவன், காதலை வெறுக்கும் முதுமை வந்தடையப் பெற்றவனல்லன்; காதல் உணர்வு, அவன் உள்ளத்தில் பசுமையோடிக் கிடந்தது; அண்மையில் மணங் கொண்ட அவன் மனைவி பேரழகு கொண்டு விளங்கினாள். களவுக் காலத்தில் காண்பதற்கும் அரியளாய அவள் அருகில் இடை பிரியாதிருந்து இன்பம் நுகர வேண்டும் என்ற வேட்கை, அவன் கடமை யுணர்வு கண்டு கலங்கிற்று. அவளை விட்டுப் பிரிதல் அவனால் இயலாது; பொருள் தேடிப் போகாதிருப்பதும் பொருந்தாது. அவளையும் உடன்கொண்டு போகலாம் என்றால், அது உலகியல் அன்று; உடன் கொண்டு சென்றால், எப்பொழுதும் அவள் நினைவு ஒன்றே முன்நிற்கும், சென்ற வினையில் சிந்தனை செல்லாது; ஆதலின், உடன் கொண்டுபோவது முறையும் அன்று; அதனால் விட்டுப் பிரியவும் மனம் வாராது. உடன்கொண்டு செல்லவும் இயலாது நெடிது வருந்தினான். காதல், கடமை இரண்டையும் ஒப்ப மதித்து, இரண்டனுள் எதையும் கைவிடமாட்டாது கலங்

கும் அவன், "பொருள் இல்லாதவர்க்குப் பொருளீட்டும் முயற்சி இல்லாதவர்க்கு ஈத்துவர்க்கும் இன்பம் இல்லை என அறிந்து, அப் பொருளீட்டும் முயற்சியை தனிமிக மேற்கொண்டுள்ள என் நெஞ்சே! உன்னை ஒன்று கேட்கிறேன்; வினை மேற்கொண்டு செல்வுழி, வழித் துணையாக அவளும் உடன் வருவளோ? அவள் வர அருள் புரிவாயோ? அல்லது என்னை மட்டும் தனித்துப் போக்குவையோ? அதை எனக்கு உரையாய்" எனத் தன் நெஞ்சோடு கூறுவான் போல் கூறி நெடுந்துயர் உற்றான்.

> "ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல் எனச்
> செய்வினை கைம்மிக எண்ணுதி; அவ்வினைக்கு
> அம்மா அரிவையும் வருமோ?
> எம்மை உய்த்தியோ? உரைத்திசின் நெஞ்சே!" ௧

## அவள் கண்ணீர் என்னைத் தடுக்கிறதே!

காதல் இன்பம் கைகூடப் பெறுதோ என்ற கலக்கத்தால் அவ்வாறு கூறி வருந்தினானேனும், கடமை யுணர்வில் ஆழ்ந்து போன அவன் உளஉணர்வு, அவனைப் பொருள் தேடிப் போகத் தூண்டிற்று. அவனும் போகத் துணிந்தான். துணிந்தவன், தன் முடிவைக் காதலிக்கு உரைத்து, அவள் பால் விடை பெற்றுப் போக விரும்பினான். அவள் பால் சென்றான்; வாழ்க்கைக்கு வேண்டும் பெரும் பொருள் பெற்று மனைவியோடு கூடி, அப்பொருளால் பெறும் பேரின்பம் நுகர்தலே வாழ்வின் பயனும்; அது, மக்கள் உயிர்க்கு மட்டுமே ஏற்புடைய தொன்றாறு; அதை அறிந்து, அதன் வழிச் செல்லும் விலங்குகளும் உள என்பதை அவளுக்கு உணர்த்தி

---

௧ குறுந்தொகை: 63. உகாய்க்குடி கிழார்.

துய்த்தல்-இன்பம் நுகர்தல்; இல்லோர்-பொருள் இல்லாதவர், பொருள் ஈட்டும் முயற்சி இல்லாதவர்; கைம்மிக-மிகவும் அதிகமாக; அம்மா அரிவை-அழகியமாமை நிறம் பொருந்திய அவள்; உய்த்தியோ-அனுப்புவாயோ.

அவள் இசைவு பெறக் கருதினான். அக் கருத்தோடு அவளை அணுகியவன், அணிகள் பல அணிந்து அழகில் மிக்குத் தோன்றும் அவளைப் பாராட்டினான்; அப்பாராட்டு, அவள் அன்றேபோல் என்றும் அப் பெரு வாழ்வில் வாழ வேண்டும்; அதற்குத் துணைபுரியும் பெரும் பொருள் ஈட்டுவரத்தான் போதல் வேண்டும் என்ற அவன் வேட்கையை வெளிப் படுத்துவது போல் தோன்றிற்று. அவ்வாறு பாராட்டிய வன், "பெண்ணே! ஒரு கலைமான், தானும் தன் பிணையும் வயிறார உண்டு மகிழ்வதற்கு ஏற்ற ஓர் இடத்தைத் தேடிப் பிடித்தது. நீலச் சிறு மணிகளை நிரல்படக் கோத்து வரிசை வரிசையாக நால விட்டாற்போல், பசுமை மிகுதியால் கறுத்துத் தழைத்து வளர்ந்த அறுகம்புல் நிறைந்த அவ்விடத்தைக் கண்ணுற்றதும், தன் பிணையைக் கூட்டிக் கொண்டு ஆங்கு ஓடிற்று; அதனோடு கூடி, அறுகை வயிறார உண்டது; உண்ட மகிழ்ச்சி மிகுதியால், இரண்டும் துள்ளித் துள்ளிக் குதிக்கத் தொடங்கின. அவ்வாறு மானி னம் மகிழ்ந்தாடும் ஒரு காடு நம் ஊரை அடுத்துளது" எனக் கூறித் தன் கருத்தை ஒருவாறு வெளிப்படுத் தியவன், "பெண்ணே! அக்காட்டைக் கண்ட எனக்குப் பொருள் ஈட்டி வந்து, உன்னையும் மகிழ்வித்து, யானும் மகிழ வேண்டும் எனும் உணர்வு பிறந்தது; ஆகவே, காதலி! அக் காட்டைக் கடந்து போய்ப் பெரும் பொருள் ஈட்டி வரும் கருத்துடையேன் நான்; நான் சென்று வருங் காறும் வருந்தாது, ஆற்றியிருத்தல் உன்னால் ஆகுமோ?" என மெல்ல வினவினான்.

கணவன், தன்னை மகிழ்விக்க ஒரு காதற் காட்சியைக் காட்டுகிறான்; அக்காதற் காட்சியைக் கண்டவாறே மகிழ்ந்து சென்று வினைமுடித்து மீள்வோரின் காதல் வாழ்வைக் கூறுகிறான் என்ற நினைவால், அவன் கூறுவன வற்றை ஆர்வத்தோடு கேட்டு வந்த அப்பெண், "நான் சென்று வருகிறேன்; அதுகாறும் ஆற்றியிருத்தல் உன்னால் ஆகுமோ?" எனக் கூறக்கேட்டவுடனே, அவள் தன்னை உணர்ந்து கொண்டாள். கணவன், தன்னைத் தனியே விடுத்

துப் பிரிந்து போகத் துணிந்துவிட்டான். அதற்காகவே அவன் இத்துணையும் கூறினான் என்பதை அறிந்தாள்; அந்நிலையே, அவனைப் பிரிந்து பல்லாண்டு ஆனவள்போல் பெருந்துயர் கொண்டாள். அன்பும் ஆர்வமும் பெருக நின்று கேட்டிருந்த அவள்நிலை மாறிற்று; துன்ப உருவாயினாள்; துயர் அவளைச் சூழ்ந்துகொண்டது; தளர்ந்தது அவள் உடல்; கருவிழிகள் கண்ணீரால் மறைப்புண்டன; அழத்தொடங்கி விட்டாள் அவள். அவள் நிலையை அவன் கண்டான்; அவன் துணிவு எங்கோ பறந்தது; 'பிரிந்து போகிறேன்' என்று அவள் வாய்திறந்து சொல்லவில்லை. என்றாலும், அவள் கலக்கமும் கண்ணீரும் அதைச் செய்துவிட்டன; அவற்றைக் கண்ட பின்னரும் அவளைத் தனியே விடுத்துப் போகும் ஆற்றல் அவனுக்கு இல்லாது போயிற்று. அவன்செயல் அற்றான்; சிந்தை குழம்பியது; விரைந்து வெளியே சென்றான்; தெருவில் நின்றிருந்த தேரில் பூட்டியிருந்த குதிரைகளைக் கட்டவிழ்த்துவிட்டான்; தன் அறை அடைந்து அமைதி யிழந்து அமர்ந்தான்.

"மணி வார்ந்தன்ன மாக்கொடி அறுகை
பிணிகால் மென்கொம்பு பிணையொடும் ஆர்ந்த
மானேறு உகளும் கானம் பிற்பட
வினைநலம் படீஇ வருதும்; அவ்வரைத்
தாங்கல் ஒல்லுமோ பூங் கழையோய்! எனச்
சொல்லா முன்னர் நில்லாவாகி
நீர் விலங்கு அழுதல் ஆனா
தேர் விலங்கினவால் தெரிவை கண்ணே." [a]

---

[a] குறுந்தொகை 256.

மணி-நீலமணி; வார்ந்தன்ன-வரிசையாக வைத்தாற் போன்ற; மாக்கொடி-கரியகொடி; உகளும்-துள்ளி ஆடும்; படீஇ - உண்டாகப் பெற்று; அவ்வரை - அது வரை; ஒல்லுமோ-இயலுமோ, நீர்விலங்கு அழுதல் - நீர் நிறைந்த அழுகை; விலங்கின-தடுத்தன.

## பொருள் தேடிப் போயின் இளமையும் போமே!

"பொருள் ஈட்டி வந்து பேரறம் பல புரிந்து புகழ் நிறைந்த வாழ்வினராதலே வாழ்வின் பயனாம்; அப்பெரு வாழ்வை, உலகிற் பிறந்தார் ஒவ்வொருவரும் அடைதல் வேண்டும் என்பதெல்லாம் உண்மை; ஆனால் அப்பொருளை ஈட்டி வருவது அத்துணை எளிதில் நிகழ்ந்து விடாது; மேலும் அப்பொருள் ஊருக்கு அண்மையில் கிடைப்பதும் இல்லை. சேணாடுகளில் மட்டுமே அச்செல்வம் கிடைக்கும்; அந்நாடுகள் சேய்மைக்கண் இருப்பது மட்டுமன்று; அந்நாடுகளுக்கு இடையில் உள்ள வழிகள் தேரும் குதிரையும் தடையின்றி விரைந்தோடவல்ல தகுதியுடையவையுமல்ல.

காடுகளின் ஊடே நுழைந்தும், மலைகள் மீது ஊர்ந்தும் செல்கிறது அவ்வழி; அவ்வழியை விரைந்து கடத்தல் இயலாது. செல்லுமிடத்தில் பெரும் பொருளைக் குறுகிய காலத்தில் ஈட்டிவிடினும், அவ்வழியைக் கடந்து வரச் செல்லும் காலம் சென்றுவிடும். அதற்குள் இளமைகழிய முதுமை வந்தடையும். முதுமையுற்ற பின்னர், வாழ்வில் இன்பம் காணல் இயலாது. இன்ப நுகர்வின்றியே இளமையைக் கழிக்க வேண்டி நேரிடும். இளமை பயனற்றுப் போகும். இழந்த இளமையையும், அவ்விளமைக் காலத்து இன்பத்தையும், மீண்டும் பெறுதல் இயலாது. புகழையும், புகழ் விளைக்கும் பொருளையும், வாழ்வின் எந்தப் பருவத்தில் வேண்டுமாயினும் பெறுதல் இயலும்; இளமையில் பெற வேண்டினும் பெறலாம்; முதுமையில் பெறவேண்டினும் பெறலாம்; இன்பநுகர்வு அது போன்றதன்று; அதைத், தாம் வேண்டும் பருவத்தில் பெறுதல் இயலாது; இன்ப நுகர்விற்கு ஏற்ற பருவம் இளமைப் பருவம் ஒன்றே. இளமையை இன்ப நுகர்விற்குப் பயன் கொள்ளாது கொன்னே கழித்தவர் இன்பத்தை நுகர்தல் இயலாது; அவரளவில் இளமையும், இன்பமும் இறந்தனவே ஆம்.

"ஒருகால், மனைவி, இன்ப நுகர்வுக்கு ஏற்றவளல்லளாயின், கணவன், தன் இளமை உணர்ச்சிகளை அடக்கிக்

கொண்டு பொருள் தேடிப் போதலும் பொருந்தும்! ஆனால், என் மனைவி அத்தகைய குறைபாடுடையவளல்லள்; அவளும், அவள் அழகும் அன்பும், அவள் தரும் இன்பமும் மறத்தற்கரிய மாண்புடையவாகும். இவளை இமைப் பொழுது மறப்பதும் அரிதாம் என்றால், அத்தகையாளை விடுத்துப் பிரிந்துபோய், இளமை கழிய முதுமையடையும் வரை மறந்து வாழ்வது இயலாதே. அச்செயல் மனத்தாலும் நினைக்கவொண்ணாக் கொடுமையுடையதன்றோ.

"இவளைப் பிரிந்து போவதால் நான் வருந்துவது ஒரு புறம் கிடக்க, என்னைப் போகவிடுத்து இவள் படும் துயருக்கு எல்லை இராதே. காதல் துன்பம் அவளைப் பற்றி வருத்துமே. பிரிவுத் துயரால் புலம்பும் அவள், தன் அருகில் இருந்து ஆறுதல் உரைக்க நான் இல்லாக் கொடுமையை எண்ணி எண்ணி வாய்விட்டுப் புலம்புவளே. அக்கொடுமையை நான் எவ்வாறு தாங்கிக் கொள்வேன்? அவளை ஈண்டு விடுத்துச் சேணெடும் தூரம் சென்றுவிடுவதால் அவள் கொடுமை என் கண்ணிற்குப் புலனாகாது போய்விடாதே! செல்லும் வழியில், தன் காதற் சேவல், தன்னைத் தனியே விடுத்துப் போனமை யால், துயர் உற்றிருக்கும் நிலையில் புல்லூறு ஒன்று, தன்னைப் பற்றிக் கொன்று தின்னும் கருத்தோடு தன்னை நோக்கி விரைந்து பறந்துவரக் கண்ட வக்காப்பேடு, குழல் ஒலி போலும் தன் குரல் எடுத்துத், தன் காதற் சேவலைக் கூவிக் கூவி அழைக்கும் அக்கொடுங்காட்சி, வீட்டில் விடுத்துச் செல்லத் தனித்துக் கிடந்து துயர்வுறும் காதலி, பிரிவுத் துய ரால், தன் துயர் நிலைகண்டு அலர் கூறுவார்தம் கொடுஞ் சொற்களால் வருந்தி, என்னை நினைந்து புலம்பும் பொல்லாக் காட்சியை என் கண்முன் கொணர்ந்து காட்டி என்னைக் கலக்குமே; அக்கலக்கம் ஒழிந்து மீண்டும் கடமையை நினைந்து மேற்செல்வது இயலாதே. எடுத்துச் சென்ற வினையை இடையே கைவிட்டு வறிதே மீள நேரிடுமே; அது என் ஆண் மைக்கு அழகாகாதே; அதைக் காட்டிலும் போகாதிருப்பதே பெரிதும் நலமாம். கடமையுணர்வு மிகுதியால், காதலியின்

கலக்கம் கண்டு கலங்கும் நிலையை ஒருவாறு கைவிட்டு வினை மேற் செல்லத் தொடங்கின், மறத்தற்கரியளாய அவள் நலம் மீண்டும் மீண்டும் வந்து என்னை மருட்டுமே; அது மருட்டுந் தொறும் மருண்டு மயங்கி மனத்துயர் மிகுந்து, மீண்டும் கடமையுணர்வு உணர்த்த உள்ளம் உரம்பெற்று மேற் செல்லத் தொடங்கிச் செல்வதால், மீளச், சேணெடுங்காலம் செல்லுமே; அதுவரை என் இளமை, வாழாதே; இளமை கழிந்து போக, நான் முதுமை பெற்றுவிடுவனே; முதுமை யுற்ற என்றால், இன்பம் நுகர இயலாதே; என் இளமை, இன்ப நுகர்ச்சி பெறுமலே இறந்து ஒழிய வேண்டியது தானே!" எனப் பலப்பல எண்ணித் துயர் உற்றான்.

"வங்காக் கடந்த செங்கால் பேடை
எழால் உற வீழ்ந்தெனக் கணவற் காணாது
குழல்இசைக் குரல குறும்பல அகவும்
குன்றுகெழு சிறுநெறி அரிய என்னாது
மறப்பரும் காதலி ஒலிய
இறப்பல் என்பது ஈண்டு இளமைக்கு முடிவே." உ

அந்தோ அருளே! உனக்கு ஆரும் இல்லையோ?

பொருள் தேடிப் போய்விட்டால் காதலி கலங்குவள்; பிரிவுத் துயர்பொறுது அவள் உயிரிழந்து போதலும் கூடும்; மனையற மாண்பினைக் கருதி ஒரு கால் அவள் ஆற்றியிருப்பி னும், பொருள் ஈட்டி வருங்காறும் என் இளமை நில்லாது; இளமை கழிந்த பின்னர் வாழ்க்கையில் இன்பம் காணல் இயலாது; என் வாழ் நாள், இன்பம் காணாதே அழியவேண்டி யது தானே" என்ற எண்ணங்கள் அலைக்கழித்தமையால் பொருள் தேடிப் போகத் துணிந்தவன் சிறிதே தயங்கினான்.

---

உ குறுந்தொகை : 151. தூங்கலோரியார்.

வங்கா – ஒரு பறவை; கடந்த – தனித்திருந்த; எழால் – புல்லூறு எனும் பெரும்பறவை; குறும்பல – பலமுறை; கெழு– நிறைந்த; இறப்பல்–பிரிந்து செல்வேன்.

ஆனால் அத்தயக்கம் நெடிது நிற்கவில்லை; கடமையுணர்வு அவன் கலக்கத்தை அழித்துவிட்டது; அவனும் அவன் காதலியும் களித்து வாழ விரும்பும் அவன் காதல் உணர்வினும், 'என் வாழ்நாள் உலகெல்லாம் வாழத் துணைபுரியும் உயர்வுடையதாதல் வேண்டும்' என உணர்ந்த அவன் கடமையுணர்வு உரம்பெற்றுவிட்டது. அதனால் பொருள் ஈட்டி வரத் துணிந்து போதற்கு வேண்டும் ஏற்பாடுகளை விரைந்து மேற்கொள்ளத் தலைப்பட்டான்.

அதைக் கண்டு கொண்டாள் அவன் காதலி. அவன் போவது உறுதி; பொருளின் இன்றியமையாமை அவன் உள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்டது; பொருள் தேடிப் போகத் துணிந்த அவன் முடிவை மாற்றும் ஆற்றல் வேறு எதற்கும் இல்லை. அவனைப் போக விடுத்துத் தனித்துக் கிடந்து துயர் உறுவதல்லது தன்னால் செய்யக்கூடியது இல்லை என்பதை உணர்ந்து கொண்டாள். அவள் கலக்கம் பெரிதாயிற்று; அவள் கண்கள் குளமாயின. அந்நிலையில், ஆங்கு வந்த தோழியைக் காணவே அவர் துயர் மேலும் மிகுந்தது. "தோழி! காதலர், பொருள் ஈட்டிவரும் பணி மேற்கொண்டு புறநாடு போகத் துணிந்துவிட்டார்; இமைப்பொழுதும் பிரியாதிருந்து இன்பம் தரவேண்டிய இவ்விளமைப் பருவத்தில் பிரிந்து போகத் துணிந்துவிட்டார்; மழை மறந்து போனமையால் பசுமையிழந்து வறண்டுபோன பாலை நிலத்தில், மரங்கள் உலர்ந்துபோக, விலங்கினங்கள் வாழ்விழந்து போக தனிமையுணர்ச்சிகாட்டும்காட்டு வழியில் பழக்க மிகுதியால் அந்நிலையிலும் அப் பாலை நிலத்தைவிட்டுப் பிரிய மனமின்றி வாழும் காதலனும் காதலியுமாய்க் கூடிக் குலாவும் புறு இனங்கள், நன்கு முற்றி உலர்ந்த கள்ளிக் காய்கள் வெடிக்கும் ஒலி கேட்டு வெருண்டு, ஒன்றையொன்று மறந்து பிரிந்து பறந்தோடிப் போவது போலும் கொடுமை மிக்க காட்சிகளைக் கண்டுகொண்டே செல்லத் துணிந்துவிட்டார்.

"தோழி! பொருட்குறைபாடுற்றமையால் புகழ்பெற மாட்டாத் துயர்நிலை மிகவே, 'புகழ்தரும் பொருள்

ஈட்டி வரப்போகாது, மனைவியோடு மடிந்து கிடக்கின்றனனே' என ஊரார் உரைக்கும் அலர் உரைக்கு அஞ்சிக், காதலனும் காதலியுமாய்க் கலந்து வாழ்ந்த எம் வாழ்வு பாழாக, என்னைக் கைவிட்டுச் செல்லும் இவர், அக் காட்டு வழியில், காதற் சேவலைக் காண மாட்டாமையால், கலங்கும் பேட்டுப் புறவின் கொடிய துயர்நிலை, காதலனைக் காணாது கலங்கும் என் துயர் நிலையை நினைப்பூட்டும் என்பதை நினையாது, காதலை மறந்து, பெண்ணொருத்தி கண்ணீர்விட்டுக் கலங்கக் காணின், அவள் துயர்போக்கி ஆட்கொள்ளுதல் வேண்டும் எனும் அருள் உள்ளமும் இல்லாது போகத் துணிந்துவிட்டார்.

"தோழி! காதலியைக் கைவிடுதல் கூடாது என்பதை மறந்து, கண்ணீர்விட்டுக் கலங்குவார் யாரேயாயினும் அவர் துயரைத் துடைத்தல் வேண்டும் எனும் அருள் உள்ளமும் அற்று, அவரைப் போகத் தூண்டும் அத்துணை ஆற்றல் அப் பொருளுக்கு உண்டுபோலும்! தோழி! அவர் தேடிச் செல்லும் அப்பொருளே, உலகில் அழியாச் செல்வம்போலும்; அந்தோ! அழியா வரம் பெற்ற அருளை உலகில் ஆதரிப்பார் எவரும் இலர் போலும்! அழியும் பொருள் போற்றப் பெறுகிறது; அழியா அருள் புறக்கணிக்கப் பெறுகிறது; தோழி! என்னே இவ்வுலகியல்!" எனக் கூறி அருள் அழிவு கருதி அழுவாள் போல், தன் இன்ப வாழ்வின் இழப்பு குறித்துப் பெரிதும் வருந்தினாள்.

"பெயல்மழை துறந்த புலம்புறு கடத்துக்
கவைமுள் கள்ளிக் காய்விடு கடுநொடி
துதைமென் தூவித் துணைப்புறவு இரிக்கும்
அத்தம் அரிய என்னார் நத்துறந்து
பொருள்வயின் பிரிவாராயின், இவ்வுலகத்துப்
பொருளே மன்ற பொருளே;
அருளே மன்ற ஆரும் இல்லதுவே." a

a குறுந்தொகை 174. வெண்பூதி.
புலம்புறு - தனிமையுணர்ச்சிமிக்க; கடம் - காட்டுவழி;

## உரவோர் உரவோர் ஆகுக!

தன் கணவன் உலகெலாம் போற்றும் உயர் பேரறிவாளனாக விளங்க வேண்டும் எனும் ஆசை உடைய அவள், பொருள் தேடிப்போகும் அவன் போக்கால் அவ்வாசைக் கனவு அழிந்து போவதுகண்டு கண்ணீர் சொரிந்து கலங்கினாள். உள்ளம் அது விரும்பும் உணர்வுகள் அனைத்தினும் சென்று அலையாது, அவ்வுணர்வுகளுள் நல்லனவற்றின் பால் மட்டுமே செல்லுமாறு அவ்வுள்ளத்திற்கு அரண் இட்டுக் காப்பது அறிவு. "சென்றவிடத்தால் செலவிடாது, தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு" மெய், வாய், கண், மூக்கு, காது என்ற ஐம்பொறிகளின் உணர்வினை அடக்கி ஆளவல்ல உள்ளுரம் அவ்வறிவினுக்கு வாய்த்திருந்தமையால் அதற்கு உரம் எனும் ஒரு பெயரிட்டுப் போற்றினர் பெரியோர். அதனால் அவ்வறிவு வாய்க்கப் பெற்றவர்கள், உரவோர் எனவும் அழைக்கப்பெற்றனர். அவ்வரும்பெரும் பெயர் தன் கணவனுக்கும் வாய்க்க வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டியவர்களுள் அவளும் ஒருத்தி; அத்தகையாள், இன்று அவன் போக்கால் அது அழிந்துபோவது கண்டு கவலை கொண்டாள்.

புகழ் நிறைந்த வாழ்வினராதல் வேண்டும் என விரும்பி, அப்புகழ் பெறத் துணைபுரிய வல்லது பொருள் என உணர்ந்து அப்பொருள் ஈட்டிவரத் துணிந்த தன் கணவன், அப்பொருளீட்டும் வழி முறைகளை அறியாமை அறிந்து பெரிதும் கவலையுற்றாள். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள், பொருளீட்ட எண்ணுவார், அறவழியை மறத்தல் கூடாது; அன்பு நெறியில் பிறழ்தல் கூடாது. பொருள் அறத்தை வளர்க்கும்; இன்பத்தை அளிக்கும் என்றாலும், அறம்வளர்த்

---

கவை - இரண்டும் மூன்றுமாகக் கிளைத்த; விடு - வெடித்து விடுக்கும்; கடுநொடி-பேரொலி; துதை-நெருங்கிய; துணைப் புறவு-சேவலும் பேடுமாகிய புறாக்கள்; இரிக்கும்-விரட்டும்; அத்தம்-காட்டுவழி; மன்ற-உறுதியாக.

தலும், இன்பம் அளித்தலும், அது தீய நெறியில் ஈட்டப் படாது, நன்னெறியில் ஈட்டப்பட்ட விடத்து மட்டுமேயாம். தீதின்றி வந்தபொருளே அறம் ஈனும்; இன்பம் ஈனும்; அன்பை மறந்து, அருள் நெறியைக் கைவிட்டுப், பொருள் ஈட்டுவது ஒன்றே குறிக்கோளாய் நின்று ஈட்டிய பொருள், தன்னை ஈட்டியவனுக்குப் புகழாகிய பெரும்பயன் நல்காது; மாறாகப்பழி யாம் பெருங்கேட்டையே நல்கும்; அதனால் அறிவுடையோர், அன்பு மறந்து போக, அருள் அழிந்துபோக வரும் பொருளைப் பொருள் என மதியார்; அப்பொருளை, அவர்கள் தம் கைக ளால் தீண்டுவதும் செய்யார்; அத்தகைய உண்மையுணர்வு உற்ற உள்ளம் வாய்க்கப் பெற்றவரே உரவோர் என உயர்ந் தோரால் புகழ்ந்து பாராட்டப்பெறுவர்; அத்தகைய உயர்வு தன் கணவனுக்கு இல்லாகிப் போவது காணக் கலங்கினாள்.

புகழ் தரும் பொருளீட்டிவரத் துணிந்த கணவன், கலங் குவார் யாரே யாயினும், அவர் கலக்கத்திற்காம் காரணம் யாதே யாயினும், அவர் கலக்கத்தைப் போக்குவது உயர்ந் தோர் கடமையாம் என்ற அருள் உள்ளத்தையும் இழந்து விட்டான்; பிறர் கலக்கத்தைப் போக்காமை மட்டும் அன்று அவர் கலக்கத்திற்குத் தானே காரணமாம் என்பதை அறிந் தும் தன் பிழையினைப் போக்கிக் கொண்டிலன்; அம் மட்டோ! தன்னால் அன்பு செய்யப்பட வேண்டியவள், தன் பால் பேரன்பு கொண்டவள், தான் காட்டும் பேரன்பு ஒன் றையே நம்பி உயிர் வாழ்பவள் தன் காதலி என்பதை மறந்து, அவ்வன்பைமறுத்துப் போகத்துணிந்து விட்டான்; அம்மட்டோ; வாழ்க்கைத் துணையாய் வந்தவள் மனைவி; தனக்குத் துணையாய் அவளும், அவளுக்குத் துணையாய்த் தானும் விளங்க வேண்டிய நிலைமையுண்மையால் துணைவர் என அழைக்கப்பட்டவர் தாம் என்பதை அறவே மறந்து விட்டான்; தனக்குத் துணையாய் நின்று காக்கும் கடமையை கைவிட்டுப் போகத் துணிந்து விட்டான்; அதனால், சென்று சேர்த்து வரும் செல்வம், அன்பை அழித்து, அருளை ஒழித்து, அற நெறியைக் கைவிட்டுவரும் குற்றம் உடையதாதலை

மறந்து விட்டான்; இதை மறந்த அவனை அறிவுடை உலகம் பழிக்குமே என அஞ்சினாள்; அவ்வச்சம் அவள் கலக்கத்தை அதிகமாக்கிற்று.

அச்சம் அவள் அகத்தை அலைக்கழித்தமையால், "தோழி அருளையும் அறத்தையும் மறந்து மதியாது, அவற்றிற்கு மாறுபட்ட நெறி நின்று பொருளீட்டி வருவது அறிவுடைமையல்லவே; அதுவே அறிவுடைமையாம் என அவர் கருதுவாராயின், தோழி! அவ்வறிவினை அவர் ஒருவர் மட்டுமே அழுந்தப் பெறுவாராக; அந்த அறிவு நம்பால் பொருந்தாது ஒழிக; அத்தகைய அறிவு பெறு மடமை நிறைந்த மகளிராகவே நாம் வாழ்வோமாக" எனக் கூறி, "தோழி! அவர்பால் சென்று, 'அருளையும் அன்பையும் மறந்து, வாழ்க்கைத்துணை என வந்தவளைக் கைவிடுதல் கூடாது எனும் அறத்தை அறவே மறந்து பொருள் ஈட்டப் போவதே அறிவுடைமையாம் எனக்கொள்ளும் உன் முடிவினை ஏற்றுக்கொள்ள மாட்டா மடமை உடையேம் யாம்' என்பதை அறிவித்து வருக' என்ற தன் வேட்கையினை வெளிப்படுத்தி வருந்தி நின்றாள்.

" அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து
பொருள்வயின் பிரிவோர் உரவோராயினும்,
உரவோர் உரவோர் ஆக;
மடவம் ஆக, மடந்தை! நாமே" [a]

அழா அல் தோழி!

அப் பெண்ணின் உள்ள நிலையைத் தோழி உணர்ந்தாள்; கணவன் பிரிவால் மனைவிக்கு உளதாகும் துன்பம் எத்தகைத்து என்பதை உணர்ந்திருந்த அத் தோழி, உலகியல்பு

---

[a] குறுந்தொகை 1 20. கோப்பெருஞ் சோழன்.
உரவோர்–அறிவுடையோர்; ஆக–ஆகுக; மடவம்–அறிவு அற்றவரேம்,

யாது? கணவனுக்குரிய கடமை யாது? மனைவிக்குரிய கடமை யாது என்பதையும் கற்றிருந்தாள்; மணந்து மனையறம் மேற்கொண்ட ஓர் ஆண் மகன், கணவன் எனும் புது நிலையைப் பெற்றுவிடுவதால், அவனோர் ஆண்மகன் என்ற தகுதி அவனை விட்டு அகன்று விடுவதில்லை; கணவன் என்ற நிலையை எய்தினமையால், மனைவிக்கு உயிர் போன்றவனாகி, அவள் சிறிதும் துயர் உறுவாறு அவள் அருகில் இருந்து காக்க வேண்டிய ஒரு புதுக் கடமை அவனை வந்தடைகிறது என்பது உண்மை; அதனால், தான் பிறந்த ஆடவர் குலத்திற்கு உரிய செயலாற்றும் கடமை, செய்வதற்கு அரியன என எதைக் கண்டும் சிந்தை கலங்காது, எத்தகைய அரிய வினையையும் எளிதாக ஆற்றி முடிக்க வல்ல ஆண்மை அவனைவிட்டு அகன்றுவிடுதல் கூடாது; மகளிர் என்ற இயல்பால், ஆடவன் ஒருவனை மணந்து, அவன் துணை பெற்று, அவனை அண்டி வாழ வேண்டிய ஒரு பெண், மணந்து மனையறத் தலைவியாம் தகுதிபெற்று விடுவளாயின், அந்நிலையில், கணவன் இருப்பினும் இல்லாவிடினும், மனையைவிட்டு அகலாது, அம்மனைக்கண் வாழ்ந்து, விருந்தோம்பல் முதலாம் மனையற மாண்புகளை வழுவாது மேற்கொள்ள வேண்டியதொரு புதுக்கடமைக்கு உரியளாகின்றாள். அந்நிலையில், கணவன் அருகிருந்து காதல் இன்பம் காண்பதினும், மனைக்கண் இருந்து மனையற மாற்றும் மாண்புகளில் மகிழ்ச்சி காண்பதிலேயே அவள் சிந்தை செயல்படுதல் வேண்டும் என்ற உலகியல் உண்மைகளை, அத்தோழியின் உள்ளம் உணர்ந்திருந்தது. அம்மட்டோ? மனைவி மனையற மாண்புகளில் சிறந்து விளங்க வேண்டுமாயின், அவள் கணவன், காதல் இன்பம் நல்கும் கட்டிளங்காளையாதலோடு கடமை நெறியுணர்ந்து காரியம் ஆற்ற வல்ல ஆண்மையிற் சிறந்த ஆடவனாதலும் வேண்டும்; ஒரு நல்ல பெண்மணி, அத்தகைய ஆடவன் ஒருவனைக் கணவனாகப் பெறுவதில் மகிழ்ச்சி காண வேண்டும் என்பதையும் அத் தோழி உணர்ந்திருந்தாள்; உணர்ந்த அத்தோழி, தான் உணர்ந்த அவ்வுண்மைகளை. அப்பெண்ணுக்கும் அறிவித்து, அவளை தேற்ற வேண்டும் என எண்ணினாள்.

ஆனால், கணவன் பிரிந்து போகக் கருதியுள்ளான் என்பது அறிந்து கலங்கிக், கண்ணீர் சொரிந்து, கதறி அழுவாளிடத்தில், 'கணவன் பொருள் தேடிப் போவது நன்றே; அவனைப் போக விடுத்து வருந்தாது வாழ்வதே உனக்கு மாண்பாம்' எனக் கூறின் அவள் துயர் மேலும் அதிகமாம்; அதனால் அவள், உள்ளம் உடைந்து, உயிர் இழந்து போவள்; ஆகவே அந்நிலையில் அவளுக்கு அறிவுரை கூறல் ஆகாது; அவள் உள்ளம் விரும்பும் இனிய உரைகளை உரைத்து, அவை கேட்டு அது சிறிது சினம் ஆறியிருக்கும் சமயம் நோக்கியே உலகியல் நீதிகளை உரைத்தல் வேண்டும் எனும் மனவியல் அறிவும் வாய்த்திருந்தமையால், தோழி, தான் உரைக்கப் புகுந்த உண்மைகளை வெளிப்படையாக உரைக்க விரும்பவில்லை. மேலால் நோக்குவார்க்கு, ஆறுதல் அளிப்பன போல் தோன்றி, ஊன்றி, உரைகளின் உட்புகுந்து நோக்குவார்க்கு, உரைக்க விரும்பும் உலகியல் உண்மைகள் புலனாகி அறிவூட்ட வல்ல உரைகளை, அவற்றைக் கேட்கும் அப்பெண், கேட்ட அளவில் உணர்ந்துகொள்ளாது போயினும், கேட்ட சிறிது பொழுதிற்கெல்லாம் அவள் சிந்தனையைச் செயலாற்றத் தூண்டும் வகையில் உரைக்கத் துணிந்தாள்.

"பெண்ணே! பொருள் தேடிவரும் கருத்துடையராய்க் கணவர் பிரிந்து போய்விடுவரோ, என்று எண்ணிக் கலங்கிக் கண்ணீர் விடாதே; அவர் போகார்; அவர் போகார் என நான் உரைக்கக் காரணங்கள் நிறைய உள; பெண்ணே! ஆடவர்க்கு உயிர், அவர் மேற்கொள்ள வேண்டிய கடமைகளேயாகும்; இதை வேறு யாரும் கூறவில்லை; அவரே கூறினர் என்பது உண்மை; ஆனால், அவர் இவ்வாறு கூறியதனால், அவர் பிரிவது உறுதி என்று எண்ணிவிடாதே; ஆடவர்க்கு உயிர், என்றும் எக்காலத்தும் தம் கடனாற்றி நிற்பதே என்று கூறிய அவரே, வேறு ஓர் உண்மையையும் கூறியுள்ளார்; அதையும் நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும்; மணந்து மனையற வாழ்வு மிக்க மனைவியாம் தகுதி பெற்ற மகளிர்க்கு

உயிர், அவர் மணங்கொண்ட ஆடவரே ஆம் எனவும் அவர் கூறியுள்ளார்.

"பெண்ணே! கணவர் தன்னலம் கருதுவாரல்லர் உனக்கு உயிர் தாமே என்பதை உணர்ந்த அவர், உன் வாழ்வை அழித்துவிட்டு, நீ உயிரிழந்து போமாறு உன்னை விட்டுப் பிரிந்து போகார்; தமக்கு உயிர் என விளங்கும் வினையாற்றும் விருப்பத்தால், வினையாற்றித் தாம்மட்டும் வாழ விரும்பும் விருப்பத்தால்,உன் வாழ்வைப் பாழாக்குவாரல்லர்; பிறரை வாழ்விக்கத் தம் உயிரை இழக்கவும் துணியும் தண்ணளி நிறைந்த அவர், உன்னைவிட்டுப் பிரியாது, உன்னோடே வாழ்ந்து உன்னை வாழ்விப்பர்; அதனால் தம் உயிராம் தம் கடமைகளை மறக்கவும் அவர் துணிவர்; வினைமேற் சென்று விழுமியோன் எனப் பாராட்டும் உலகோர் பாராட்டை இழந்து, 'வினையாற்றும் வன்மை இழந்தவன்; ஆடவன் என அழைக்கும் தகுதி அற்றவன்' என உலகோர் பழிக்கும் பழியுரைகளை ஏற்று, நடைப் பிணமாய் வாழினும் வாழ்வரே யல்லது, உன்னைப் பிரிந்து, உன்னை உயிர் இழக்கச் செய்யார்! பிறரை வாழ்விக்கத் தாம் வாழ்விழக்கவும் தயங்காத் தறுகணாளராய அவர், அவர் மனைவியாகிய நீ மாண்டு போகப் பிரிந்து செல்லார்; இது உறுதி; ஆகவே பெண்ணே! நீ வருந்தாதே" எனக் கூறித் தேற்றினாள்.

"கணவன் செல்லான் கலங்காதே" எனக் கண்ணீர் துடைத்து உறுதி உரைப்பதுபோல் கூறிய தோழி, கணவனைக் குறிப்பிடுங்கால், 'நின் காதலன்' என்றோ, 'நின் அன்பன்' என்றோ கூறாமல், ஆளும் தன்மையுடையான்; கடமை ஆற்றப் பிறந்தவன் எனும் பொருள் தோற்றும் 'ஆடவர்' என்ற சொல்லால் வழங்கியதாலும், தன்னைக் குறிப்பிடுங்கால், 'மகளிர்' என வாளா கூறாது, கணவனோடு இருந்து காதல் இன்பம் துய்ப்பதுமட்டும் போதாது; மனையின்கண் இருந்து மனையறம் ஆற்றுவதே மணந்த மகளிர்க்கு மாண்பாம் என்பதை உணர்த்தும் வகையில், 'மனையுறை'

என்ற அடை கொடுத்து, 'மனையுறை மகளிர்' என வழங்கியதாலும், தோழியின் உள்ளம் உரைக்க விரும்பிய உலகியல் உண்மைகளை அப்பெண் உணர்ந்துகொண்டாள். அதனால், 'கணவர் செல்லார்; கலங்கற்க' என்ற சொல் கேட்டுக் கலக்கம் ஒழிந்த அவள் உள்ளம், தோழியின் உரைகளில் பொதிந்து கிடந்த உலகியல் உண்மைகளை உணர்ந்து கொண்டதால், பிரிவுத் துயர் தாங்கும் வன்மையும் பெற்றுத் திகழ்ந்தது. அதனால் அவன் போக, அவள் உள்ளம் விடை தந்தது. தன் கருத்து நிறைவேறக் கண்டு களித்தாள் தோழி.

> "வினையே ஆடவர்க்கு உயிரே; வாள்நுதல்
> மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என
> நமக்கு உரைத்தோரும் தாமே;
> அழாஅல் தோழி! அழுங்குவர் செலவே." [a]

## இனிதோ? பெரும!

'வினைமேற் செல்ல வேண்டிய இன்றியமையாமையினை உணர்ந்த உன் கணவன், மனைவியைப் பிரியாதிருக்க வேண்டிய இன்றியமையாமையினையும் உணர்ந்துள்ளான் ஆதலின் பிரியான்' எனத் தேறுதல் உரைப்பாள்போல், 'கடமை கருதி வினைமேற் செல்வது கணவன் கடமை; மனையறமாண்பு குறித்து மனையின்கண் இருத்தல் மனைவி கடமை, என உலகியல் உணர்த்தி அப்பெண்ணைத் தெளிவித்த தோழி அவளை விடுத்து இளைஞன்பால் சென்றாள்.

---

a குறுந்தொகை : 135. பாலைபாடிய பெருங்கடுங்கோ.

ஆடவர்க்கு உயிர் வினையே என மாற்றுக. வாள் நுதல்—ஒளிவீசும் நெற்றி. மனையுறை-மகளிர் என்ற அடைச்சிறப்பு உணர்க. அழாஅல்-அழுவதைக்கைவிடு; செலவு அழுங்குவர்; செலவு-பொருள்தேடிப் போவது; அழுங்குவர்-கைவிடுவர்,

உலகியலை நோக்கின், அவன் செல்வதே சிறந்தது ஆயினும், அவ்விருவரின் இளமை யுணர்வுகளையும், அவன் கடந்து செல்லவேண்டிய காட்டு வழியின் இயல்பையும் நோக்கின், அவன் அப்போது செல்லாதிருத்தலே சாலச் சிறந்ததாம் என உணர்ந்தாள்; அதனால் அவனை அணுகி, "தலைவ! எல்லாம் உணர்ந்த பெரியோன் நீ; உனக்கு அறிவுரை கூற வல்லார் இவ்வுலகில் ஒருவரும் இலர்; ஆயினும் நான் ஒன்று கேட்கிறேன்; அதற்கு விடையளித்துப் பின்னர் விடைபெற்று வினைமேற் செல்வாயாக; தலைவ! இவளைப் பிரிந்து வினைமேற் செல்லும் நீ, நீ கடந்து செல்ல வேண்டிய காட்டு வழியின் இயல்பினை உணர்வையோ? ஒரு மலைப்பசு மடமை புறம்தோன்ற நோக்குவதல்லது, உள்ளத்தே காதல் தோன்ற நோக்க அறியா இளமையுடைமையால், தன் முன் செழித்து வளர்ந்திருக்கும் அறுகம் புல்லை மேய்வதில் ஆர்வம் காட்டுவதல்லது, தன் அருகில் அழகிய காளை ஒன்று தன்னையே நோக்கி நிற்பதை உணராது மேய்ந்து திரிய, மக்கள், தம் முடிகளில், வளைத்து வனப்புறச் சூட்டிக்கொள்ளும் தலைமாலைபோல் தோற்றம் அளிக்கும் வளைந்த கோடுகளைக் கொண்ட அழகிய அம்மலை நாட்டுக் காளை, அப்பசுவின்மீது காதல் கொண்டு, அக்காதல் மிகுதியால், அப்பசு காதல் உணர்வு பெறுங் கன்னிப்பசு என்பதையும் அறிய மாட்டாது, தான் நிற்கும் உகாய்மரம் வெய்யிலின் வெப்பம் தணிக்கும் பெருநிழல் தாராதாகவும், அதன் புல்லிய நிழலில் நின்றவாறே, அப்பசுவை வைத்த கண் வாங்காது நோக்கி நிற்பது போலும் நிகழ்ச்சிகளை நிறையக் கொண்டது, நீ கடந்து செல்ல வேண்டிய அக்காட்டு வழி எனக் கூறக் கேட்டுளேன்; அன்ப! அக்காட்சிகளைக் காண நேரின், அதன் பின்னரும், அக்காட்டு வழியைக் கடத்தல் உன்னால் ஆகுமோ?

"அன்ப! அம்மலைப்பசு, தன் காதற்காளை தன்னை விட்டுப் பிரியாது வாழவேண்டும் எனும் காதல் உணர்வு அற்று, உணவுண்ணும் கடமையிலேயே கண்ணும் கருத்துமாய் உளது;

அது அவ்வாறு காதல் உணர்வு அற்றுக் கிடப்பதைக் கண்டும், அக் காளை, அதன்மீது காதல் கொண்டு கருத்திழந்து நிற்கிறது; காதல் வெறி கொண்டுவிட்டமையால், பெரு நிழல் தரும் மரங்களைத் தேடிச் செல்ல வேண்டும் என எண்ணுமல், அப்பசுவைக் கண்டு மகிழும் அண்மையில் கிடப்பது புல்லிய நிழல் தரும் உகாய் மரமேயாயினும், அதுவே போதும் என எண்ணி அமைதி காணுகிறது; அன்ப! அக்காட்டு விலங்குகளின் வாழ்க்கை முறையோடு முற்றிலும் முரண்பட்ட வாழ்க்கை முறைகளை வழித்துணையாகக் கொண்டுள்ளீர்கள் நீயும் நின் மனைவியும்; இவள், அக்காட்டுப் பசுபோல் காதல் உணர்வு அற்றுக் கிடக்கவில்லை; கணவன், இமைப்பொழுதும் தன்னை விட்டுப் பிரியாதிருக்க வேண்டும் என விரும்புகிறது இவள் காதல் வெறி; கணவன் பிரிவு முயற்சி அறிந்து பெரிதும் வருந்துகிருள்; நீ, அக்காட்டெருதுபோல் காதல் வெறி கொள்ளாது, கடமை வெறி மிகுந்து பிரிந்து போகத் துடித்துக் கொண்டுள்ளாய்; கடமையுணர்வு மிக்கமையால் காதலியோடு கலந்து வாழும் வாழ்வு வறுமை மிக்க வாழ்வேயாயினும், அதுவே இன்பம் கொழிக்கும் இனிய வாழ்வாம் என்பதை உணரமாட்டாது, வறுமையை வெறுத்துப் பெரும் பொருள் வேட்கை கொண்டு அலைகிருய்.

"அன்ப! இயற்கை முறைக்கு ஒவ்வாத, அம்முறையோடு முற்றிலும் முரண்பட்ட செயல் மேற்கொண்டு செல்லும் நீ, இடைவழியில், இயற்கை முறையின் இனிமையை அக்காட்டு விலங்குகளின் வாழ்க்கை முறை எடுத்துக்காட்டக் கருத்துட் கொண்டு கலங்குவை அல்லேயா? காதலைக் கைவிட்டுக் கடமை மேற்கொண்டு வந்தது, மடமையாம் என அறிந்து மனநொந்துயிர் கொள்வை அல்லேயா? அக்காட்சியைக் கண்டும், கண்டு உணர்வு பெற்ற பின்னரும், பொருள் தேடிப் போதல் உன்ருல் இயலுமோ? இயலுமாயினும் அது உலகியல் ஆமோ? உலகியலோடு ஒப்ப முடிந்ததாயினும் அதில் இன்பம் காணல் இயலுமோ? பெரும! எல்லாவற்றையும் எண்ணி முடிவு செய்க" எனக் கூறி, அவன் அந்நிலையில் பிரிந்து

போகாதிருப்பதே நன்றும் என்ற தன் விருப்பத்தை வெளிப் படுத்தினள்.

"கண்ணி மருப்பின் அண்ணல் நல் ஏறு
செங்கோல் பதவின் வார்குரல் கறிக்கும்
மடக்கண் வரையா நோக்கி வெய்துற்றுப்
புல்அரை உகாஅய் வரிநிழல் வதியும்
இன்னா அரும் சுரம் இறத்தல்
இனிதோ, பெரும! இன் துணைப் பிரிந்தே." [a]

கணவன் நட்பு கருகாது :

"எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு" என்ற குறள் நெறியை அறிந்தவன் அவ் விளைஞன். பொருள் ஈட்டிவரப் போகவேண்டும் என்ற எண்ணம் எழுந்த அந்நாள் முதலாக அவன் மனம் பட்ட பாட்டினை அவனே அறிவான். போவது போகாதிருப்பது ஆகிய இரு நிலைகளாலும் நேரவிருக்கும் இன்பதுன்பங்களின் இயல்புகளை, எல்லாக் கண்கொண்டும் அளந்து நோக்கிய பின்னரே அவன் போகத்துணிந்தான். அவன் மேற்கொண்ட அம்முடிவு ஆழ்ந்த ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டதாகும்; அதனால் தோழி கூறிய அறிவுரை அவன் செவிகளுள் புகவில்லை. போக்கைக் கைவிடாது போய் விட்டான்.

காதலன் போய்விட்டான் என்ற செய்தியைக் கேட்டாள் அப்பெண்; உணர்வும் உயிரும் இழந்தவள் போல் ஆகிவிட்

[a] குறுந்தொகை: 363: செல்லூர்க் கொற்றன்.
கண்ணி – தலைமாலை; மருப்பு – கொம்பு; அண்ணல் – சிறந்த; ஏறு – எருது; வரைஆ – மலைப்பசு; கோல் – தண்டு; பதவு – அறுகம்புல்; வார் – நீண்ட; குரல் – கொத்து; கறிக்கும் – கடித்துத் தின்னும்; வெய்துற்று – பெரு மூச்சுவிட்டு; புல் அரை – சிறிய அடிமரம்; இறத்தல் – கடந்து போதல்.

டாள். அவள் உடல் நலம் குன்றத் தொடங்கிவிட்டது; ஒளி வீசி அழகு தந்த அவள் மேனி, பசலை படர்ந்து பாழுற்றது; அப்பெண்ணின் இந்நிலை கண்டு தோழி பெரிதும் கலங்கினாள். "இவளை இவ்வாறு கலங்க விடுத்துச் சென்ற அவன் கொடுமையை என்னென்பேன்" என்பன போல்வன கூறி இளைஞனைப் பழிக்க முனைந்தது அவள் உள்ளம். பழிக்கத் தலைப்பட்டது அவள் வாய்.

இளைஞனைப் பழித்துரைக்கும் தோழியின் வன்சொற்கள் அப்பெண்ணின் காதுகளிலும் சென்று பட்டன. உடனே அவள் போக்கில் ஒரு மாறுதல் இடம் பெற்றது. "போனவ கணவன் எத்துணைதான் கொடியவனாயினும் அவன் என் கணவன்; அவனைப் பிறர் பழி கூறப் பார்த்திரேன்; பார்த்திருத்தல் பெண்மைக்கு அழகன்று" என உணர்ந்தாள்; அவ்வாறு உணர்ந்தவள், அவனைத் தோழி பழிப்பது தன்னால்; அவனைப் பிறர் பழிக்கத்தானே காரணம் என்பதையும் உணர்ந்தாள், நாணினாள். "காதலன் பிரிவைப் பொறுது நான் கலங்கினேன்; என் கலக்கமும் கண்ணீரும் கண்டமையால், அவற்றிற்குக் காரணமாயினான் அவன் எனக்கொண்டு, தோழி அவனைப் பழிக்கிறாள். ஆகவே கணவனைப் பிறர் பழிக்க நானே காரணமாயினேன்; அந்தோ! கணவன் புகழைக் காக்க வேண்டிய நானே அவன் பழிக்குக் காரணம் ஆயினேனே! என்னே என் அறியாமை!" என எண்ணிக் கலங்கினாள்.

சிறிது பொழுது சென்றது; அவள் சிந்தனை செயல் படத் தொடங்கிற்று; கலங்கிப் பயன் இல்லை; இத்தகைய இழி நிலைக்கு இனியும் இடம் கொடுத்தல் கூடாது; அவன் பிரிவால் தான் படும் துயரைப் பிறர் உணரக் காட்டிக் கொள்ளுதல் கூடாது. அது மட்டும் போதாது; அவனைப் பழிப்பார் அறிந்து நாணுமாறு அவன் பெருமையை அவர்கள் முன் நானே பாராட்டவும் வேண்டும் எனத் துணிந்தாள். துணிந்தவள், பசலை படர்ந்து பாழுற்ற தன் உடல்நிலை கண்டு உள்

ளாய் கலங்கி நிற்கும் தோழிபால் சென்றாள்; "தோழி! அவர் பிரிவால் என் மேனி பொலிவிழந்து போனது உண்மை; ஆனால், தோழி! என் மேனிதான் அவ்வாறு துயர் உறுகிறதே யல்லது, என் உள்ளத்தில் சிறிதும் துயர் இல்லை; நல்லுணர்வு வாய்க்கப் பெற்ற என் உள்ளம், அவன் நட்பின் பெருமையை அவன் அன்பின் ஆழத்தை நன்கு அறிந்துள்ளது; என் மேனி, அவன் பிரிவால் பொலிவிழந்து பசலை படர்ந்து போனது போல், அவன் நட்பு மங்காது, நம்மை மறவாது என்பதை அம்மனம் நன்கு அறிந்துளது; அதனால் அது கலங்காது" எனக் கூறிக் காதலன் நட்பின் நலத்தை நாவாரப் பாராட்டினாள்.

காதலன் நட்பைப் பாராட்டியதோடு அப்பெண்ணின் உள்ளம் அமைதியுற்றிலது; தோழியின் நாவை அடக்க அதுமட்டும் போதாது என உணர்ந்தாள். அதனால், பொருள் தேடிப்போன அவன் போக்கிற்குத் தன் உள்ளத்து இசைவும் உண்டு என்பதை அவள் உணருமாறு செய்தலும் வேண்டும் எனவும் உணர்ந்தாள். ஆனால், சிறிதுமுன் கணவன் பிரிவறிந்து கண்ணீர்விட்டுக் கலங்கி அழுதவளாதலின், அதை வெளிப்படையாக உரைக்கச் சிறிது தயங்கினாள். அதனால் தன் உள்ளக் கருத்தை உரைக்க ஒரு வழியைத் தேடினாள். காதலன் நாட்டுவளம் கூறுவதுபோல் தன் கருத்தினைக் கூறுதல் எளிதும் இனிமையுமாம் என உணர்ந்தாள். அதனால் மீண்டும் தோழிபால் சென்றாள்; அவள் வேண்டாமுன்பே "தோழி! நம் தலைவனுக்குரிய நாடு எத்துணை வளமிக்க நாடு என்பதை நீ அறிவையோ?" என வினவிவிட்டு, அதற்கு அவள் விடையேதும் தாராமுன், தானே மீண்டும் தொடங்கி, "தோழி! அவன் நாட்டில், மின்னியும் இடித்தும் பெருமழை பெய்வதால், ஆங்குப் பாய்ந்தோடும் ஆறுகளின் இரு கரைகளும் நிறைந்து வழியுமாறு வெள்ளம் பெருக்கெடுத்தோடக் கண்டவுடனே, அவ்வாறுகளின் கரைவாழ் மயில்கள், தம் உள்ளத்தே களிப்பு மிகுந்து தம் தோகைகளை விரித்து ஆடியும், தம் இனிய குரல் எடுத்துக் கூவியும் மகிழும்; அத்துணை வளம் மிகுந்தது அவன் நாடு," என அவன்

நாட்டு வளத்தை நாவாரப் புகழ்வதுபோல் "தோழி! அம்மயிலைப் போலவே நானும் காதலன் ஈட்டி வரும் பொருள் கண்டு மகிழ்ச்சி கொள்வேன்; ஆடிப்பாடி மனையற வாழ்வில் மகிழ்ச்சி காண்பேன்" என்பதைக் கூறுமல் கூறித் தன் உள்ளத் துயரை மறைத்து மாண்புற்றாள்.

> "கலி மழை கெழீஇய கான்யாற்று இகுகரை
> ஒலிநெடும் பீலி துயல்வர இயலி
> ஆடுமயில் அகவும் நாடன் நம்மொடு
> நயந்தனன் கொண்ட கேண்மை
> பயந்தக் காலும் பயப்பு ஒல்லாதே." a

அவர் பொய் வழங்கார்:

அப்பெண்ணின் மனப் போக்கினைக் கண்டு கொண்டாள் தோழி. அத்துணை உறுதி உள்ளம் அவளுக்கு வாய்த்திருப்பது நன்று எண்ணி உள்ளூர மகிழ்ந்தாள். ஆனால், இவ்வுறுதி கார்காலம் வரக்கண்ட பிறகும், அழியாது நிலைத்திருக்குமேல் நனிநன்று; அந்நிலையிலும் இவளுக்கு இவ்வுறுதி நிற்குமா என்பதைக் காணவேண்டும் என்று விரும்பினாள். அதனால் அவளோடு பேசிக்கொண்டே அழைத்துச் சென்று, அவளை ஒரு கொன்றை மரம் அருகே நிறுத்தினாள். கொன்றை கார்காலத்தில் மலரும் இயல்புடையது. அது அப்பொழுதுதான் மலரத் தொடங்கியிருந்தது. பசுமை மிகுதியால் கருநிறம் பெற்ற இலைகள் அடர்ந்திருக்க, அவ் விலைகளின் இடையிடையே, பொன்னிறப் புது மலர்கள்

---

a குறுந்தொகை: 264. கபிலர்.

கலிமழை - இடித்துப் பெய்யும் பெருமழை; கெழீஇய - நிறைந்த; இகுகரை - தாழ்ந்த கரை; ஒலி - தழைத்த; துயல்வர - அசைய; இயலி - நடந்து; கேண்மை - நட்பு; பயந்தக்காலும் - மேனி பசந்தாலும்; பயப்பு ஒல்லாது - குறையாது.

பூத்துக் குலுங்கக் காட்சியளித்தது அம்மரம். அம்மரத்திற்கு அணித்தாக அவளைக்கொண்டு நிறுத்திய தோழி, அம்மரத்தையும், அப்பெண்ணையும் மாறிமாறி நோக்கிநின்றாள்.

தோழியின் செயலைக் கண்ட அப்பெண்ணுக்கு, அது, "பெண்ணே! நீ ஒரு பேதை; கார்காலத்தில் மலரும் கொன்றை மலர்ந்துவிட்டது காண்; இயற்கை வகுத்த இயல்பில் சிறிதும் பிறழாது கொன்றை மலர்ந்துவிட்டது; ஆனால், கார்காலத்தில் வருவேன் என்று காலை வரைந்து கூறிய காலத்தில் காதலன் வந்திலன்; அத்துணைப் பொய்யனைவிட்ட அவன் நட்பை, உண்மை நட்பென நம்புகின்றனையே; என்னே நின் அறியாமை!" என்று தன்னை இடித்துரைப்பதுபோல் பட்டது. அது உண்மையே என்றாலும், அதை வெளியே காட்டிக்கொள்ள அவள் விரும்பவில்லை. காட்டிக்கொள்ளக் கூடாது என்று உறுதிபூண்டது அவள் உள்ளம். தன் உள்ளத்துயரை மறைக்கத் தோழி முன், காதலன் நட்பின் நலத்தைப் பாராட்டுவது மட்டும் போதாது. அவன் நட்பு அழியாப் பொருட்பாயின், அவன் வருவதாகக் குறித்துச் சென்ற கார்காலத்தில் அவரும் வந்து சேர்தல் வேண்டும். கார்காலக் காட்சிகளைக் காடு காட்டத் தொடங்கிவிட்டது. ஆனால், அவன் வருகையைக்காண அறிகுறி எதுவும் தோன்றவில்லை. அவ்வாறாகவும், தன் உரை பொய்யாகப் போவதைப் பொருட்படுத்தாத ஒருவன் காட்டும் நட்புமட்டும் உண்மை நட்பாகுமோ என்ற ஐயம் தோழிக்கு உண்டாக, அதனால் அவள் அவனைப் பழிப்பதற்கு அக்கார்காலக் காட்சிகளை துணை நிற்கும். ஆகவே, "கணவர் உரை பொய்யாகாது; அதை உணராது, அவர் உரை பொய்த்துவிட்டது என்பாரே அறிவிலாதாராவர்; ஆகவே அவர் உரை பொய்த்துவிட்டது என உலகமே வந்து கூறினும், அதை யான் ஏற்றுக் கொள்ளேன்;" என்று கூறியாவது தோழியின் வாயை அடக்குதல் வேண்டும் எனத் துணிந்தாள்.

அவ்வுள்ளுரம் உண்டாகவே, தோழியைப் பார்த்து, "தோழி! தழைத்துப் பூத்து நிற்கும் இக் கொன்றை மரம்,

பொதுவாகக் கார்கால வருகையை நினைவூட்டி, கணவனைப் பிரிந்திருக்கும் பெண்களை வருத்தும் என்றாலும், என் அளவில் அந்நிலையே எழவில்லை. மாறாக, நம்மூர்ச் செல்வக் குடியில் வந்த கன்னி மகளிர், கறுத்து அடர்ந்த தம் தலைமயிரின் இடையிடையே பொன்னரி மாலைகளை அணிந்து அழியா ஒளியமாய் நிற்கும் அழகிய காட்சியையே இக்கொன்றை நினைவூட்டுகிறது. தோழி! கொன்றை, கன்னி மகளிர் போல் காட்சியளிக்க இயலுமே யல்லது, உண்மையில் அக்கன்னி மகளிராகிவிடாது. அதுபோல், காடும் கொன்றையும், கார்காலக் கோலங்கொண்டு, கார் காலம் பிறந்துவிட்டது என்று பறை சாற்றினும், உண்மையில் இது கார்காலமாகாது. இது கார்காலமாயின், நம் காதலர் மீண்டு வந்திருத்தல் வேண்டும். அறிவும் ஒழுக்கமும் உடையவர் அவர்; அவர் உரை ஒருபோதும் பொய்த்துப் போகாது. காட்டிற்கும் கொன்றைக்கும் அறிவோ, ஒழுக்கமோ இல்லை; அவர் கார்காலத்தில் வந்துவிடுவேன் என்று கூறினர் அவ்வாறே அவர் கார்காலத்தில் வந்துவிடுவர்; பொய்யுரைத்தறியாத அவர் இன்னமும் வந்திலர்; ஆகவே, கார்காலம் இன்னமும் வந்திலது; அவர் வரும் காலமன்றோ கார்காலமாகும். அறிவும் ஒழுக்கமும் அற்ற காடும் கொன்றையும் மலர்ந்து விட்டதால், இது கார்காலம் ஆகிவிடாது. நாம் மலர்ந்துவிட்டதால் இது கார்காலம் என்று அவை கூறினும், காதலர் இயல்பை உள்ளவாறு உணர்ந்துள்ள நான், அதை ஏற்றுக் கொள்ளேன்; மகளிர் போல் காட்சி அளிக்கினும், மரம் மகளிராதல் இயலாதது போலவே, காடு, கார்காலம் என்று கூறினும், இது கார்காலமாகாது; ஆகவே கார்காலம் வந்துவிட்டதே; காதலர் வந்திலரே என்ற கவலையும் கண்ணீரும் எனக்கு இல்லை'' என்று கூறிவிட்டுக் கொன்றையைக் காணவும் விரும்பாது வீடு வந்து சேர்ந்தாள்.

''வண்டுபடத் ததைந்த கொடியிணர் இடை இடுபு
பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்
கதுப்பில் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்

காணம் கார் எனக் கூறினும்
யானோ தேறேன்; அவர்பொய் வழங்கலரே." [a]

பிணையைப் பிரிந்த கலையைக் கானார்:

கணவன் நட்பு கருகாது; காதன் பொய்யுரையான் என்றெல்லாம் கூறி உறுதியுடையாள் போல் காட்டிக் கொண்ட பிறகும், தோழி அடங்கினவளாகத் தோன்றவில்லை. அவன் அளித்துச் சென்ற வாக்குறுதியை அவள் நம்பினவளாகத் தோன்றவில்லை. "அவன் அன்பு ஆழமானது; அவன் உரை அழியா உறுதி வாய்ந்தது என்பதெல்லாம் உண்மையாகவே இருக்கட்டும்; ஆனால், அதைப்போலவே, அவன் கடமையுணர்வும் அசைக்கலாகா உரம் வாய்ந்த நாடும். கடமை நெறி நிற்கும் கடப்பாட்டாளன் அவன்; கடமை மேற்கொண்டிருக்கும் காலத்தில், மனைவியை நினைந்து கொள்ளுதல் கூடாது. 'மனைவிழைவார் மாண் பயன் எய்தார்; கிழவி நிலையே வினையிடத்து உரையார்' என்ற உலகியல் வழிநிற்பவன் அவன்; அதனால், காதலியின் நினைவு, அவனுக்கு ஆங்கு உண்டாகாது; அது உண்டானால் அல்லவோ, நட்பையும், நவின்று வந்த ஆணையையும் நினைந்து விரைந்து வருதல் இயலும்; அந்நினைவுதான் அவனுக்கு உண்டாகாதே; அந்நினைவை அவனுக்கு ஊட்டுவாரும் ஆங்கு ஒருவரும் இலரே; உண்மை நிலை இதுவாகவும், கணவன் நட்பு கருகாது, காதலன் பொய்யுரையான் என்று நம்பி இப்பேதைப் பெண் ஏமாறுகின்றனளே! இத்தகையாளை எவ்வாறு பேணிக்காப்பேன்" என்றெல்லாம் எண்ணி இடருறுவாள்போல் தோன்றினாள் தோழி.

---

[a] குறுந்தொகை 21. ஓதலாந்தையார்.

படை-மொய்க்கும்படி; துதைந்து-அடர்ந்து; கொடி இணர்-நீண்ட மலர்க் கொத்து; புனை-செய்த; இழை-அணி (ஒருவகைத் தலையணி) கதுப்பில்-கூந்தல்போல்; தேறேன்-ஏற்றுக்கொள்ளேன்; வழங்கலர்-கூறார்; கொன்றைக் கானம்-கொன்றை மரத்தை உடைய காடு.

தோழியின் இம்மனக் குறிப்பை, முகக் குறிப்பால் கண்டு கொண்ட அப்பெண் தோழியை அருகில் அழைத்து, "தோழி! நம் நாட்டில், கொன்றை, பொன்னிறப் புதுமலர்களை மலர்ந்து காட்டுவது போலவே, நம் காதலர் போயிருக்கும் நாட்டிலும், கொன்றை பொன்னிற மலர்களைப் பூக்கும். அம்மலர்களை நம் காதலர் காண்பர்; அம்மலர்க் காட்சி, அவருக்கு மகிழ்ச்சியைத் தாராது; மாறாக, அம்மலர்களின் பொன்னிறம், கணவர் பிரிவால், காதலியர் மேனியில் படர்ந்து பாழ்விளைக்கும் பசலையை நினைவூட்டும்; அந்நினைவு வரப்பெற்ற பின்னர், அவர் ஒரு நாழிகையும் ஆங்கு நில்லார். மேலும், காயா மரங்களைக் காண்பர்; கார் காலம் தொடங்குவதற்கு முன் கடுங்கோடையால் இலை உதிர்ந்து கவின் இழந்து காட்சி அளித்த அது, கார்காலத்துப் புதுமழை பெற்றதும், நீலநிற மலர்களால் நிறைந்து, மயிலின் கழுத்துப் போல் மின்னும்; அக்காட்சியைக் காண்பர்; அது, தான் பிரிந்து வந்துவிட்டமையால், இன்பத்தை இழந்துவிட்ட அழகிழந்த நம் கோலத்தைக் காட்டி, அவரைக் கலங்கச் செய்யும்; உடனே விரைந் தோடிவந்து, தன் அன்பு மழையை ஆரப்பெய்து, நம்மை அழகின் திருவுருவாக ஆக்கத் தூண்டித் துரத்தும். அம்மட்டோ! ஆங்கு, எங்குச் சென்றாலும், புல்மேயச் சென்றாலும், நீர் குடிக்கச் சென்றாலும், காட்டிற்குச் சென்றாலும், கானாற்றிற்குச் சென்றாலும்; உறங்கினும், ஓடினும் தம் பிணைகளை இமைப்பொழுதும் விட்டுப் பிரியாத கலைமான் கூட்டங்களைக் காண்பரே யல்லது, பிணை வருந்த அதைத் தனியே விடுத்துப் பிரிந்து வந்து அலைந்து திரியும் கலையினைக் காணார்; உடனே, 'ஆறறிவு வாய்க்கப் பெறாத, இவ்வேழை உயிர்கள் அறிந்திருக்கும், பிறிவறியா இப்பெருவாழ்வின் உண்மையை நான் அறியாது போனேனே; என்னே என் அறியாமை!' என்று எண்ணித் தன் அறியாமைக்கு வருந்தி, அது துடைக்கத் துடித்தோடி வந்து சேர்வர்; ஆகவே, நம்மை அவருக்கு நினைவூட்டி ஈண்டுவரத் தூண்டும் நல்லதுணை ஆங்கு இல்லை என்று எண்ணாதே; அத்தகைய நல்ல துணைகள், ஒன்றல்ல, இரண்

டல்ல; எண்ணிலாதன ஆங்கு உள; இவ்வுண்மையை நான் அறிந்துளேன் ஆதலின், அவர் விரைவில் வீடு திரும்புவர் என்பதில் எனக்கு மாறு நம்பிக்கை உளது" என்று கூறி உறுதியுடையாள்போல் நடிக்கும் தன் நாடகத்தை நன்கு நடத்திக் காட்டினாள்.

"சென்ற நாட்ட கொன்றை அம் பசு வீ,
நம் போல் பசக்கும் காலைத், தம்போல்
சிறுதலைப் பிணையில் தீர்ந்த நெறிக் கோட்டு
இரலை மானையும் காண்பர் கொல் நமரே?
புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயில் எருத்தில் தோன்றும்
கான வைப்பின் புன்புலத்தானே." a

## கடமையின் சிறப்பைக் களிற்றினிற் கண்டார்:

"கணவன் நட்புக் குன்றாது என்பதை என் உள்ளம் அறியும்; அதனால் என் உடல் பசந்து காட்டினும், என் உள்ளம் கவலை கொள்ளாது" எனக் கூறித் தோழியின் கவலையைப் போக்கிய அப்பெண்ணின் உள்ளத்தில் புதியதொரு கவலை புகுந்துகொண்டது; அவள் உள்ளத்தில் நிலைபெற்று நின்ற கணவன் நட்பின் பெருமை, அவன், அவள்பால் கொண்டுள்ள அன்பின் பெருமையை-காதற் சிறப்பை நினைவூட்டிவிட்டது; அந்நினைவு அவளைப் பெரிதும் அலைக்கழிக்கத் தொடங்கிற்று.

---

a குறுந்தொகை 1 ஔவையார்.

நாட்ட-நாட்டில் உள்ள; அம்-அழகிய; பசுவீ—புதுமலர்; பசக்கும்-பொன்போல் மலரும்; பிணையில் தீர்ந்த—பெண் மானைப் பிரிந்த; கோட்டு-கொம்பினை உடைய; இரலை-ஆண் மான்; காண்பர் கொல்-காண்பரோ; காணார். புல்லென்—உலர்ந்து போன; பூக்கெழு-மலரால் நிறைந்த; சினை—கிளை; எருத்தில்-கழுத்துப்போல்; கானவைப்பு—காட்டிடம்; புன்புலம்—மழைவளம் அற்ற நிலம்;

அவன் தன்மீது கொண்டுள்ள காதல் நிலத்தினும் பெரிது, வானினும் உயர்ந்தது, ஆழ்கடலினும் ஆழம் உடைத்து என்பதை அறிந்த அவள் உள்ளம் பெரிதும் அலைப்புண்டது. அவன் தன்மீது கொண்டுள்ள பெருங்காதல், அவனைப், பொருள் தேடிப்போன முயற்சியை இடையே கைவிட்டு வறிதே மீளச்செய்துவிடுமோ என்ற அச்சம் அவள் உள்ளத்தில் குடி புகுந்துகொண்டது. "அவ்வாறு மீண்டுவிட்டால் அவன் ஆண்மை என்னும்; அவன் கடமை என்னும்; உலகம் அவனை எள்ளி நகைக்குமே; பிறர் பழிக்க வாழும் வாழ்வும் ஒரு வாழ்வாமா? பழியொடுபட்ட பெருவாழ்வு வாழ்வதினும் வாழ்விழந்து போதலே விழுமியதன்றோ? அவ்வாறு அவன் பழியுடையனாதலை நான் எவ்வாறு தாங்கிக்கொள்வேன்; அதுவும் அவன் பழியுடையனாதற்கு, அவன் என்பால் கொண்ட காதலே காரணமாதலைக் கண்டும் நான் எவ்வாறு உயிர் வாழ்வேன்" என எண்ணி எண்ணித் துயர் உற்றாள்.

அவள் உள்ளம் படும் பாட்டினைத் தோழி உணர்ந்தாள். இளைஞன், அவன் மனைவிமீது கொண்டுள்ள காதலினும், கடமை மீது கொண்டுள்ள காதல் ஆற்றல் மிகுந்தது என்பதை அத்தோழி அறிந்திருந்தாள். அதனால் அதைக்கூறி அவளைத் தேற்றத் துணிந்தாள். "பெண்ணே! உன் கணவர் தமக்குரிய கடமை இது என்பதை நன்கு அறிந்தவர்; அறிந்ததோடு நில்லாது அக்கடமையைக் குறைவற நிறைவேற்றுதல் வேண்டும் என்பதில் அசையா உறுதியும் உடையவர்; அம்மட்டோ! கடமையை உணர்ந்து, அதை நிறைவேற்றப் போவதற்கு முன்னர்த், தம் முயற்சிக்கு முட்டுக்கட்டைகளாய் நின்று தடைசெய்யும் காதலின் ஆற்றல், கடந்து செல்லவேண்டிய காட்டு வழியின் கொடுமை, இவற்றுலாம் தடைகளைக் கடந்து போய்ப் பொருளீட்டிவரத் தமக்கு வேண்டிய உள் உரம் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்த பின்னரே அவர் வினைமேற் செல்லத் துணிந்தார்; ஆதலின், வினைக்காது, அவர் வறிதே மீளார்; ஒரோவொருகால், காதல் வெறி வெற்றிகொள்ள, கடமையை இடைவழியில் கைவிட்டு மீளக் கருதுவாராயின், அந்நிலையில், காதலால் மறைப்புண்ட

கடமையின் சிறப்பை அவருக்கு உணர்த்தவல்ல காட்சிகள் சில அவர் கண்முன் தோன்றி அவர் தடுமாற்றத்தைப் போக்கிவிடும்; கடமையுணர்வூட்டும் காட்சிகள் அவர் செல்லும் வழியில் நிறைய உள. அவற்றைக் காண அவர் தவறார்; பெண்ணே! அவரைக் காட்டுவழியில் கண்டுவந்த சிலர், அவர் ஆங்குக்கண்ட காட்சியொன்றை எனக்குக் கூறினார்கள். காட்டுவழியைக் கடந்து சென்றுகொண்டிருந்த நம் தலைவர், இடைவழியில் ஒரு பெரிய யானைக் கூட்டம் தம் எதிரே வருவதைக் கண்டாராம்; அக்கூட்டம் தம்மை அணுகியக்கால், அவ்யானைகள் உணவு கண்டு பல நாள் ஆயின; அதனால் பசிநோய் படுத்தும் துன்பத்தால் தளர்ந்துள்ளன; நடக்கும் ஆற்றலையும் இழந்து தள்ளாடித் தள்ளாடித் தளர்கின்றன என்பதைக் கண்டு அவற்றின் நிலைக்கு இரங்கிக் கண்ணீர் விட்டாராம்; அவ்வாறு கலங்கி நின்ற அவர், அந்த யானைக் கூட்டத்தினிடையே, அவற்றிற்குத் தலைமை தாங்கிச் செல்லும் ஒரு பெரிய களிறு இருப்பதையும் கண்டாராம். நனிமிக நீண்ட அதன் கோடுகள், அதன் ஆண்மையைப் புலப்படுத்தினவாம். அதன் பார்வையில் ஓர் உறுதி தென்பட்டதாம். அவர் அதன் வடிவழகைப் பார்த்து வியந்து கொண்டிருக்கையில், அது, வழியில் வானுறவளர்ந்து நின்ற யாமரம் ஒன்றை அணுகிற்றாம்; வயிரம் பாய்ந்து வன்மையுற்றுக் கிடந்ததாம் அம்மரம்; தன் இனம்படும் பசிக்கொடுமை, அம்மரத்தின் வன்மைகண்டு அஞ்சுவதைத் தடுத்துவிட்டது போலும்! அக்களிறு தன் ஆற்றல் அனைத்தையும் கொண்டு, அம்மரத்தின் அடியைத் தன்கோடுகளால் பலமுறை குத்திற்றாம்; கோடுகளின் கூர்மைக்கு ஆற்றாது அம்மரம் அடியற்றுச் சாய்ந்ததாம்; சாய்ந்து வீழ்ந்த அம்மரத்தின் பெரிய கிளைகளைத் தன் நீண்ட துதிக்கையால் முறித்துக் கோடுகளுக்கிடையே தாங்கிக் கொணர்ந்து, பசித்துயர் பொறுக்க மாட்டாமையால், தன்பின் விரைந்து வரவும் மாட்டாது மெல்ல மெல்லத் தளர்நடையிட்டு நகர்ந்துவரும் அவ்யானைகளுக்கு அளித்து, அவை அம்மரவுணவு உண்டு

மகிழக்கண்டு அதுவும் மகிழ்ந்ததாம். அக்காட்சியை, பெண்ணே! அவரும் கண்டாராம்.

தன்னினும் அறிவில் குறைந்த ஓர் உயிர், தன் இனத்தின் பசித்துயர் போக்கித் துணைபுரிதல் தன் கடன் என உணர்ந்து, அக்கடமையை வழுவாது ஆற்றியதைக் கண்ட நம் காதலர், தம் கடமையில் தவறுவரோ! அவர், அக்களிறு நினைவூட்டிய கடமையுணர்வே, தம் கண் முன்னே நின்று காட்சி தர, காட்டைக் கடிதின் கடந்துசென்று, விரைந்து வினை முடித்துக்கொண்டு வீடு திரும்புவர்; ஆகவே, காதல் வெறியால் கடமையைக் கைவிடுவரோ என்ற கவலை உனக்கு வேண்டாம்" எனக் கூறித் தேற்றினாள்.

"பொத்துஇல் காழ, அத்த யாஅத்துப்
பொரியரை முழுமுதல் உருவக் குத்தி
மறங்கெழு தடக்கையின் வாங்கி, உயங்குநடைச்
சிறுகண் பெருநிரை உறுபசி தீர்க்கும்
தடமருப்பு யானை கண்டனர், தோழி!
தங்கடன் இறீஇயர் எண்ணி, இடந்தொறும்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம் வெங்காதலர் சென்ற ஆறே." a

---

a குறுந்தொகை: 255. கடுகு பெருந்தேவனார்.

பொத்துஇல்-புரை இல்லாத; காழ-வயிரம் பாய்ந்த; அத்த-வழியின்கண் உள்ள; யாத்து-யாமரத்தின்; முதல்-அடிமரம்; உயங்கு-வருந்திய; இறீஇயர்-நிறைவேற்றும் பொருட்டு; இடந்தொறும்-வாய்க்கும் இடந் தோறும்; காதலர் கண்டனர் என மாற்றுக.

யாண்டுளர் கொல்லோ!

வினை முடிந்த பின்னரே—வினையில் வெற்றி கண்ட பின்னரே—மனையறம் இனிது நடைபெறுவதற்கு வேண்டிய மாநிதியை ஈட்டிய பின்னரே கணவன் வீடுதிரும்புதல் வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டிய அப்பெண், அவன் மேற்கொண்ட பணியில் பன்னெடும் நாட்களைப் பாழாக்கி விடுதல் கூடாது; வினையை விரைந்து முடித்துக்கொண்டு வீடடைதல் வேண்டும் என்பதிலும் ஆர்வம் காட்டினுள்; வருவேன் என வாக்களித்துச் சென்ற நாளிற்கு முன்பாகவே வந்து சேர்தல் வேண்டும் என விரும்பினுள். ஆதலால் அவன் வருகையை ஒவ்வொரு நாளிலும் எதிர்நோக்கினுள்; நாளைக் காலை வந்துவிடுவர் எனும் நினைவோடு கண்மூடுவாள்; பொழுது விடிந்ததும் விடியாததுமாய் வாயிற்கண் சென்று வழிநோக்கி நிற்பாள்; காலையும் கழிந்துவிடும்; அவன் வாரான்; அவள் வருத்தம் மிகும்; "காலையில் வந்திலர்; ஆயினும் மாலையில் அவர் வருகை தவருது" எனத் தேறி மனைபுகுவள்; பகல்கழிவைப் பார்த்துக் கொண்டேயிருப்பள்; மாலை வந்துற்றதும் மனைப்புறம் போயிருந்து அவன் வருகையை எதிர்நோக்குவள்; மாலை கழியும்; இரவும் வந்து சேரும்; அவன் வாரான்; மீண்டும் மனம்வருத்தத்தில் ஆழும்; வரய்மட்டும் "இன்று வந்திலர்; நாளைக்காலை நில்லார்" என உரைக்கும்; அந்நம்பிக்கையோடு உட்செல்வள்; இவ்வாறு நாட்கள் கழிந்துகொண்டே போயின; அவன் குறித்துச் சென்ற நாளும் கழிந்துவிட்டது; அவன் வந்திலன்; அவள் கவலை மிகுந்தது; துன்பம், அவளைத் துணையெனப் பற்றிக்கொண்டது; அந்நிலையில், அவள் கண்முன் தோன்றும் சில காட்சிகள், கடமையை எண்ணிக் கணவன் பிரிவுத் துயரை ஒருவாறு தாங்கிக்கொள்ள நினைக்கும் நினைப்பை அழித்துப் பிரிந்துறை வாழ்வால் வந்தடையும் துயரைத் தூண்டி மேலும் வளர்க்கத் துணை புரிந்தன.

அவள் மனையில், பேடையும் சேவலுமாகி இருபுருக்கள் இறப்பில் கூடுகட்டி வாழ்ந்திருந்தன; பிரிவறியாப்

பேரின்ப வாழ்வு பெற்று வாழ்ந்த அவற்றுள் ஆண்புறு, தன் பெடை தன்னை விட்டுச் சிறிது பொழுது பிரிய நேரினும்—சிறிது தூரம் பிரிந்து செல்லக் காணினும் பொறுக்காது; அச்சிறு பிரிவையும் அதனுல் தாங்கிக்கொள்ள இயலாது போலும்! அதனுல் அவ்வாறு பிரிய நேரின் உடனே பலகால் கூவிக் கூவி அழைத்து, அதை நெருங்க அடைந்து பேரின்பம் காணத் துடிக்கும்; புறுக்களின் இவ்வின்ப வாழ்க்கை, அவள் இன்ப வேட்கையைத் தூண்டிவிட்டு அவளைத் துயர்க்கு உள்ளாக்கிற்று; அவள் பெரிதும் வருந்தினுள். "பேட்டினைப் பிரிய விரும்பாது அதன் பின் திரிந்து பேரின்பம் நுகரும் இச்சேவற் புறுவின் சிறந்த காதல் உணர்வு என் கணவர்பால் வாய்க்கவில்லையே" என எண்ணி வருந்தினுள்; சிறிது கழித்து, "அவர்மீது குறை கூறிப் பயன் இல்லை; பொருள் தேடிப்போயிருக்கும் அவருக்கு, ஆங்கே காதல் நினைவூட்டுவார் எவரும் இலர்; எவ்வுயிரும் இல்லை. அவர் கண்முன் காதல் களியாட்டம் புரிந்து, அவர் கருத்தில் காதல் வெறியூட்டவல்ல நிகழ்ச்சி எதுவும் ஆங்கு நிகழ்வதில்லை. மாருக, கடமையின் சிறப்பை எடுத்துக் காட்டவல்ல நிகழ்ச்சிகள் அல்லவோ, ஆங்கு நிறைய நிகழ்கின்றன. தனக்கும் தன் பெடைக்கும் வேண்டும் ஊன் உணவு பெறும் உறுதி பூண்டமையால், பெடையைக் கூட்டில் விடுத்துத் தனியே பறந்துவந்து, தான் விரும்பும் ஊன் எங்கேனும் கிடைக்காதா என்ற ஏக்கம் நிறைந்த கண்களால் அம்மலைநாடு அனைத்தையும் உற்று நோக்குமாறு, உயர்ந்த ஞெமை மரத்தின் உச்சிக் கிளைகளில் உட்கார்ந்திருக்கும் சேவற்பருந்தின் காட்சியன்றே, ஆங்கு அவர் கண்களில் படுகிறது; அதைக் காணும் அவர், அக் காட்சி, மாநிதி சேர்க்கும் நினைவால் மனைவியைப் பிரிந்து வந்து, காட்டுவழியைத் தனித்துக் கடக்கும் தன் செயல் சாலவும் பொருந்தும் என்பதற்குச் சான்று பகர்வதாக அல்லவோ அவர் கருதுவர்; அக்கருத்துடையார் உள்ளத்தில் காதல் உணர்வு எங்கே எழப்போகிறது? அவர் எங்கே

காலத்தில் வந்து என் கண்ணீரைத் துடைக்கப் போகிருர்'' என எண்ணிக் கலக்கமுற்ருள்.

காட்டுவழி, பெடையும் சேவலும் பிரியாது வாழும் துணைப் பறவைகளைப் பெருது, ஊன் தேடி அலையும் தனிப் பறவை ஒன்றைமட்டும் பெற்றிருப்பதே கணவன் விரைந்து மீளாமைக்குக் காரணமாம் எனக் கூறி, கணவன் செயலில் குறை காணுள்போல் கூறிஞளாயினும், துணையொடு வாழும் பறவைகளைப் பாராட்டியும், ஊன் தேடித் திரியும் ஒற்றைப் பருந்தைப் பழித்தும் உரைக்கும் அவள் உள்ளம், மனையில் மனைவியோடிருந்து மகிழ்ந்து வாழ்வாரே மாண்புடையவர்; அவளை வருந்த விடுத்துத் தனித்துப் போய்ப் பொருள் தேடித் திரிவார் பாராட்டத் தக்க பண் புடையாரல்லர்; பழிக்கத் தக்கார் எனக் கூருமல் கூறி, அவன் குறைகண்டு கலங்கிற்று.

கலங்கிய தன் உள்ளத்தை, தன் அண்மையில் இருக்கும் தோழிக்குத் திறந்து காட்டிக் கண்ணீர் சொரிந்தாள்.

''வைகல் வைகல் வைகவும் வாரார்;
எல்லா எல்லை எல்லையும் தோன்ருர்;
யாண்டுளர் கொல்லோ ? தோழி! ஈண்டு இவர்
சொல்லிய பருவமோ இதுவே; பல்லூழ்
புன்புறப் பெடையொடு பயிரி இன்புறவு
இமைக்கண் ஏதாகின்ருே? ஞெமைத்தலை
ஊன் நசைஇ ஒரு பருந்து இருக்கு
வான் உயர் பிறங்கல் மலை இறந்தோரே.'' [a]

---

[a] குறுந்தொகை: 285, பூதத் தேவஞர்.

வைகல்-நாள்தோறும்; வைகல்—விடியற்காலம்; வைகவும் நீங்கவும்; எல்லை-பகற்காலத்தின்; எல்லை—எல்லையாகிய இரவு; பல்லூழ்-பலமுறை; பயிரி-கூவி அழைத்து; இமைக் கண்—இமைப்பொழுதில் ஞெமைத்தலை-ஞெமை மரத்து உச்சிக் கண்; நசைஇ-விரும்பி; இறந்தோர்—கடந்து செல்வோர் .

கண்டு சிரிக்கிறதே கார் :

காதலன் வருகையை எதிர்நோக்கி மனைப்புறத்தே காத்துக் கிடந்தாள் அப்பெண். அந்நிலையில் கார் காலத்து மழைத்துளி அவள் மேனியில் வீழ்ந்து தெறித்தது. கார் காலம் வந்திலது; ஆகவே காதலர் வந்திலர்; அது வந்ததும் வந்துவிடுவர் என்ற எண்ணத்தால் ஓரளவு உயிர் காத்து வந்தாள் அவள். இப்போது கார்காலத்து மழைத்துளி அவள் மேனியில் படவே, அந்நம்பிக்கையும் அழிந்துவிட்டது. அந்நம்பிக்கை இழந்து போன பின்னரும் உயிர் வாழ்ந்திருக்கும் தன் நிலை கண்டு உலகமே சிரிப்பதுபோல் தோன்றிற்று அவளுக்கு. கலைமான், பருக்கைக் கற்கள் படிந்த பள்ளங்களில் தேங்கி நிற்கும் கார் காலத்து மழைநீரின் தெளிவைக் குடித்துக் களைதீர்ந்து, தன் உயிர்க்கு இன்பம் ஊட்டும் பெண் மானோடு, காட்டிலும், காட்டாற்றங்கரையிலும் துள்ளி விளையாடுமாறு, கார்காலம் வந்துவிட்டது. காட்டு விலங்குகள், இவ்வாறு, தம் அன்புத் துணைகளோடு இன்ப வாழ்வு பெற்று வாழ்தற்காம் காலம் வாய்க்கவும், நாட்டில் வாழும் நல்லோர்க்கு அவ்வுணர்வு வாய்க்கவில்லையே; வீட்டில் விட்டுவந்த காதலியர், கார்காலக் காட்சிகளைக் கண்டு கண்ணீர் சொரிவரே; விரைந்து வீடடைந்து அவர்க்கு வற்றாப் பேரின்பத்தை வாரி வழங்கவேண்டுமே என்ற உணர்வு கணவன்மார்க்கு வாய்க்கவில்லை; அவர்கள் அத்துணைக் கொடியராதலை அறிந்தும், இறந்துபோக எண்ணாது, அவர்கள் வருகைக்காக ஏங்கி, வருந்தி வாழ்கின்ற இப்பேதைப் பெண்களை என்னென்பது என்று, பொதுவாகப் பெண்குலம் முழுமையுமே எள்ளி நகைப்பதுபோல் தோன்றும் அக்கார்காலம், "பெண்ணே! காட்டு விலங்குகள் கரைகாணாப் பேரின்பவாழ்வில் மிதக்கும் இக்காலத்திலும் வாராத—வரவேண்டும் என்ற கருத்திராத—காதலன் வரவை எதிர்நோக்கி, அவ்வேகத்தால் ஆகும் வருத்தத்தைத் தாங்கிக்கொள்வதற்காகவே, நீ இன்னமும் உயிர்கொண்டு வாழ்கின்றனை போலும்" என்று, தன்னை நேர் நின்று எள்ளி நகைப்பதுபோல் தோன்றவே,

அக்கார்காலக் காட்சிகளைக் காணவும் நாணித் தலை தாழ்த்திக்கொண்டாள்.

தன்னைக் காண நாணித் தலைவணங்கிக்கொண்ட அவளை, அக்கார்காலம், அந்நிலையோடு விட்டிலது; கொடுமை மிக்க அது, அவளை மேலும் எள்ளி நகைக்க எண்ணிவிட்டது போலும்; மேலும், அதற்கு, அவள் மனையின் முன்புறத்தில், நாள்தோறும் நீர் வார்த்து அவள் வளர்த்த முல்லைக்கொடியைத் துணையாகக் கொள்ளவும் திட்டமிட்டது. உடனே, அம்முல்லைக் கொடி நிறைய மெல்லிய அரும்புகளை மலரச் செய்துவிட்டது. அவ்வளவே; முல்லை மணம் மெல்லப் படர்ந்து, அம்மங்கை நல்லாளின் மனதைத் தொட்டு விட்டது. கார்காலத்து மழைதான் வந்து வாட்டுகிறது என்றால், அதற்கு இம்முல்லையும் துணைபுரிகிறதே; அதுவும் நாமே வளர்த்த முல்லை துணைபுரிகிறதே; இக்கொடுமையை யாரிடம் கூறி நோவேன் என்ற எண்ணம் எழ, மெல்லத் தலை தூக்கி முல்லைக்கொடியை நோக்கினாள். "பெண்ணே! என் இளமைப் பருவத்தில், நாள்தோறும் நீர் வார்த்து என்னைப் பேணி வளர்த்தவள் நீதான்; ஆனால், மலர்கள் என்ற இம்மா நிதியை நான் பெற, இன்று துணைபுரிவது இக்கார் காலத்து மழையே; ஆகவே, இப்போது, நான் உன் நலனில் நாட்டம் கொள்வது இயலாது; கார்ப்பருவத்திற்குத் துணைபுரிவதே, இப்போதைய என் கடனும்; உலகியல் முறையும் அதுவே; வேண்டுமானால் நீயே எண்ணிப் பார்; உன் இளமை எழில் அளித்த இணையிலா நலத்தை நுகர்ந்து இன்புற்றார் உன் கணவர்; அது ஒரு காலம்; இப்போது அவருக்குப் பொருள் வளத்தின்பால் ஆசை உண்டாகிவிட்டது; அவர்க்கு இப்போது தேவை அது ஒன்றே; ஆகவே, அவர் உன்னை மறந்து, சேணெடும் தூரம் சென்றுவிட்டார்; இக்கார்காலத்தில், உன்னை ஓர் இமைப்பொழுதும் பிரியாது, உன் அண்மையிலேயே வாழ வேண்டிய அவர், எங்குள்ளாரோ? அறிந்து கொள்ளவும் முடியாத இடத்திற்குப் போய்விட்டார்; இது தான் உலகியல். இதை நீ உணர்ந்து கொள்ளவேண்டும்;

காலம் மாறக் கருத்தும் மாறும்; இதை உணர்ந்து உள்ளம் தேறியிருப்பதே உயர்ந்தோர்க்கு அழகு; அதைவிடுத்து, நான், இன்றும் உன் துணையாதல் வேண்டும் என்பதோ, உன் காதலர், இப்போதும் உன் அருகில் இருக்கவேண்டும் என்பதோ அறிவுடைமையாகாது; உன்னால் வளர்த்துவிடப்பட்ட எனக்குள்ள இவ்வறிவு தானும், உனக்கு உண்டாகவில்லையே; என்னே நின் பேதைமை!" என்று கூறி நகைப்பதுபோல் தோன்றவே; நாணத்தால், அவள் தலைமீண்டும் தாழ்ந்துவிட்டது. தோழியை அழைத்துக் கார்காலத்து மழைநீரும் முல்லை மலரும் செய்யும் கொடுமையைக் கூறிக் கலங்கினள்.

"வன்பரல் தெள் அறல் பருகிய இரலை, தன்
இன்புறு துணையோடு மறுவந்து உகளத்,
தான் வந்தன்றே தளிதரு தண்கார்;
வாராது உறையுநர் வரல் நசைஇ
வருந்தி நொந்து உறைய இருந்திரோ எனவே." a

"இளமை பாரார் வளம் நசைஇச் சென்றோர்;
இவணும் வாரார்; எவணரோ? எனப்
பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுறை இலங்கு எயிறுக
நகுமே, தோழி! நறும் தண்காரே." b

---

a குறுந்தொகை : 65. கோவூர் கிழார்.

பரல் – பருக்கைக் கற்கள்; தெள் அறல்–தெளிந்த நீர்; இரலை – ஆண்மான்; மறுவந்து – மகிழ்ச்சியால் அலைந்து; உகள – துள்ளி விளையாட; நசைஇ– விரும்பி; உறைய–வாழ; இருந்திரோ – உயிர் வாழ்கின்றனையோ; தளி – மழைத்துளி.

b குறுந்தொகை: 126. ஒக்கூர் மாசாத்தியார்.

வளம் – செல்வம்; நசைஇ– விரும்பி; இவண் – இவ்விடம் அல்லது இக்காலம்; எவணரோ – எவ்விடத்தில் உள்ளாரோ; பெயல் – மழை; புறம் தந்த–வளர்த்து விட்ட; தொகு – நிறைந்த; முகை–அரும்புகள்; இலங்கு–விளங்கு; எயிறுக– பற்களாக.

கார் அன்று; களைக உன் துயர்:

பொருள் தேடிப் போன இளைஞன், மீண்டுவரக் குறித்த காலம் கார்காலமாம் என்பதைத் தோழி அறிவாள்; அக்கார் காலமும் வந்துவிட்டது; கார்காலத்துக் கருமுகில்களைக் கண்டு மயில்கள் தம் தோகைகளை விரித்து ஆங்காங்கே ஆடி மகிழ்ந்தன. கார் காலத்தில் மலரும் இயல்புடைய பிடா மலர்கள் மலர்ந்து மணம் வீசின. மயில்களின் நடனத்தைக் கண்டு, பிடாவின் நறுமணத்தை நுகர்ந்து இது கார்காலம் என்பதை அப்பெண் அறிந்துகொண்டாள். அதனால் அப் பருவத் தொடக்கத்தில் திரும்பிவிடுவதாகக் கூறிச் சென்ற கணவன்வாராமை கண்டு வருந்தினாள். அவன் வந்து இன்பம் தந்திலனே எனும் ஏக்கத்தினும், புதிய ஒரு துயரம் அவளைப் பற்றிக் கொண்டது. வழங்கிய வாக்குறுதியினின்றும் வழுவி னரைத் தெய்வம் வருத்தும் என்பதில் அசையா நம்பிக்கை உடையவள் அப்பெண்; கணவன் 'கார்காலத்தில் வந்துவிடு வேன்; கலங்காதே' என உறுதி உரைத்துச் சென்றிருந்தான். அக்கார்காலம் வந்துவிட்டது; அவன் வந்திலன்; அவன் வாக்குப் பொய்த்துவிட்டது; இப்பிழையால் அவனுக்கு யாதுகேடு நேருமோ என்ற எண்ணமே அவளைப் பெரிதும் அலைக்கழித்தது.

இதை உணர்ந்தாள் அவள் தோழி; இந்நிலையில் கணவன் உரை பொய்யாகவில்லை; ஆகவே அவனுக்கு எவ் விதக் கேடும் நேராது என்பதை அவள் உள்ளம் உணரும் வகையில் காட்டினாலல்லது அவள் துயர் குறையாது என் பதை உணர்ந்தாள்; ஆனால், அதற்கு அவளால் என்ன செய்யமுடியும். கார்காலம் தொடங்கிவிட்டது என்பதிலோ, கணவன் வாக்குப் பொய்த்துவிட்டது என்பதிலோ சிறிதும் ஐயம் இல்லை; ஆயினும் அவள் மனம் சோர்ந்துவிடவில்லை. அவன் சொல் பொய்யாகவில்லை என்பதை எவ்வாறு நிலை நாட்டுவது எனச் சிந்திக்கத் தொடங்கினாள்; சிந்தனையின் முடிவில் 'துன்பத்தில் பாவம் இல்லை; துணிந்து ஒரு பொய் கூறு; பொய்ம்மையும் வாய்மையிடத்த, புரை தீர்ந்த நன்மை

பயக்கும் எனின்' எனக் கூறி ஒரு வழி காட்டிற்று அவள் உள்ளம்.

அவ்வுள்ளத்தின் உறுதுணைகொண்டு, அப்பெண்ணை அணுகினாள்; "பெண்ணே! கணவன் உரைத்த சூள் பொய்த்துவிட்டதே; அப்பிழையால் அவன் பெருங்கேட்டிற்கு உள்ளாக நேருமே என எண்ணிக் கலங்குகிறது உன் உள்ளம்; அக்கலக்கத்திற்கு இப்போது இடமே இல்லை. பெண்ணே! கார்காலம் இன்னமும் தொடங்கவே இல்லை. 'பெய்யும் மழை, ஆடும்மயில், மணக்கும் பிடா இவை அக்காலம் தொடங்கிவிட்டது என்பதை உணர்த்துகின்றனவே; இவற்றைக் கண்டும் கார்காலம் தொடங்கவில்லை எனக் கூறுகின்றனையே என்னே நின் அறியாமை? அவற்றை நீ கண்டிலையோ? அல்லது அவற்றைக் காணும் ஆற்றலை உன் கண்ணொளி இழந்துவிட்டதோ' என்றெல்லாம் கேட்க எண்ணுகிறது உன் உள் உள்ளம்; அதை நான் அறிவேன்; உன் நினைப்பில் பிழையில்லை என்பதும் எனக்குத் தெரியும்; அதைப் போலவே, நான் கூறியதிலும் பிழையில்லை; உன் கண்கள் கார்காலக் காட்சியைத்தான் காணுகின்றன; அது உண்மை; ஆனால் அக்காட்சி நிகழ்ந்தது எவ்வாறு என்பதை உன் உணர்வு அறியாது' அதை நான் அறிவேன்; கூறுகிறேன் கேள். கடந்த ஆண்டு கார்காலத்தின்போது, நிறைய நீர் குடித்து எழுந்த மேகத்தினிடத்தில், அந்த ஆண்டில் பெய்தது போக, அப்பருவ முடிவில் சிறிது நீர் நின்றுவிட்டது; அந்நீரை, இதுகாறும் சுமந்து திரிந்தது அம்மேகம். இப்போது கார் காலம் தொடங்கப் போகிறது; அக்காலத்தில் பெரு மழை பெய்வதற்கு வேண்டிய நீரால் தன்னை நிறைத்துக் கொள்ளவேண்டும் என நினைத்தது அம்மேகம்; அந்நினைவோடு கடல் நீரை நோக்கிப் புறப்பட்ட அது போகும் வழியில் தன்பால் உள்ள அப்பழைய நீரைப் பெய்து ஒழித்துவிட எண்ணிற்று; அவ்வாறே பெய்துவிட்டது. அம்மழைதான் இப்பொழுது நீ கண்ட மழை; ஆனால் இம்மழை வந்தவகை, மயில்களுக்குத் தெரியாது. மழை பெய்யும் காலமெல்லாம்

கார்காலம் எனக் கருதும் மடமையுடையன அம்மயில்கள்; அதனால் இதையும் கார்காலம் என்றே கருதிவிட்டன; அவ்வறியாமையால் தோகைவிரித்து ஆடவும் தொடங்கிவிட்டன; மயில்கள் ஆடக்கண்ட பிடாவும் மலரத் தொடங்கி விட்டது; தன்னினும் மிக்க அறிவு வாய்ந்த மயிலே கார் காலம் என மயங்கிவிட்டது என்றால், பிடா மயங்கியதில் வியப்பில்லையன்றோ? ஆகவே, இவை யனைத்தும் மயிலின் மடமையின் விளைவே யல்லது வேறு இல்லை; உன் கணவன் உரை ஒருபோதும் பொய்த்ததில்லை; இப்போதும் பொய்க்க வில்லை ;இனிப் பொய்க்கப் போவதும் இல்லை, இது கார் காலம் அன்று; வாக்களித்தவாறே அவர் கார்காலத்தில் வந்து சேருவர்; கலங்காதே'' என்று கூறி அவள் கவலையை மாற்றிக் கண்ணீரைத் துடைத்தாள்.

''மடவ, வாழி! மஞ்ஞை மாயினம்;
காலமாரி பெய்தென, அதன் எதிர்
ஆலலும் ஆலின; பிடவும் பூத்தன;
கார் அன்று இகுளை! தீர்க நின்படரே:
கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய உகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்கு குரல் கேட்டே.'' a

## காணும் காட்சிகள் கனவோ?

கார்காலம் தொடங்கிவிட்டது என்பதை இயற்கை நிகழ்ச்சிகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன; அங்ஙன மாகவும், தோழி, இது கார்காலம் அன்று; மயில்களின் அறியாமையின் விளைவு எனக் கூறுகிறாள்; என்னே அவள் அறி

---

a குறுந்தொகை ; 251 இடைக்காலனார்.

பெய்தென-பெய்ததாகக் கருதி; ஆலல-ஆடி மகிழ்தல்; படர்-துன்பம்; கழிந்த மாரி-கடந்துபோன கார்காலம்; உகுத்தரும்-சொரியும்; நொதுமல்-கார்காலத்திற்கு உரியதல்லாத.

யாமை; தன் மடமையை மயில்கள்மீது ஏற்றிக்கூறும் இவள் மனப்போக்கினை என்னென்பேன் என எண்ணி நகைத்தாள் அப்பெண்.

புதுமழை பெய்தல், மயிலினம் ஆடுதல், பிடா மலர்தல் இவற்றோடு நின்றிருந்தால் தோழி கூறுவது ஒருகால் உண்மையாகவும் இருக்கலாம்; ஆனால் இயற்கை நிகழ்ச்சிகள் அவற்றோடு நின்றுவிட வில்லையே; கொன்றை மலர்ந்து விட்டது; செல்வர் வீட்டுச் சிறுர்களின் சின்னஞ் சிறு கால்களில், தவளையின் வாய்போல் திறந்த வாயுடையவாய், பொன்னால் பண்ணிப் பூட்டப்பெறும் கிண்கிணியணி போலும் வடிவும் வண்ணமும் வாய்ந்த அக்கொன்றை மலர்க் காட்சிகள் கண்களைப் பறிக்கின்றனவே; அக் கொன்றையோடு நிற்கவில்லையே; குருந்த மரம் வேறு கொத்துக் கொத்தாய் மலர்ந்துமணக்கிறதே; ஆடும்காற்றால் அலைப்புண்டு அசையும் அம்மலர்க் காட்சிகள் அழகை அள்ளி அள்ளிச் சொரிகின்றனவே; இவற்றையும் அம்மயில்களின் அறியாமையின் விளைவு எனக் கொள்வது அறிவுடைமை ஆமோ? ஆகாது.

ஆகவே, கார்காலம் பிறந்துவிட்டது என்பதை உறுதியாக உணர்ந்துகொண்டாள் அப்பெண்; தான் முன் கண்ட கார்காலக் காட்சிகள், தோழி கூறியவாறு மயிலினத்தின் மடமையின் விளைவுதாமோ என்ற ஐயம் அகன்றுவிட்டது; அதனால் "கார்காலம் தொடங்கவில்லை; கலங்காதே; கணவன் உரை பொய்யாகாது; கவலை கொள்ளாதே" எனக் கூறிய தோழியைக் கூட்டிக்கொண்டு தோட்டத்திற்குச் சென்றாள். ஆங்கு மலர்ந்து மணம் வீசும் கொன்றை குருந்துகளைக் காட்டினாள். அம்மலர்களின் வடிவழகை, அவற்றின் மண நலத்தை, அவை காற்றால் அலைப்புண்டு ஆடி அசைவதை அவள் கண்ணும் கருத்தும் உணருமாறு காட்டினாள்; காட்டிவிட்டு "தோழி! இவற்றைக் கண்டும் கார்காலம் இன்னமும் தோன்றவில்லை என்று கருதுகின்றனையோ? இவையும் அம்மயிலின் மடமையின் விளைவுதாமோ? கார்காலம்

அன்று என்ற உன் பிடிவாதம் இவற்றைக் கண்டும் அகல வில்லையாயின், இப்போது நம் முன் நாம் காணும் இக்காட்சி கள் எல்லாம் கனவுதாமோ? கொன்றை மலர்வதும் குருந்து மணப்பதும் கனவில் நிகழ்வனதாமோ? தோழி! ஏன் உன் வாயடைத்துப் போய்விட்டது? இப்போதாவது கூறு! கணவன் கூறிச் சென்ற கார்காலம் இன்னமும் பிறக்க வில்லையோ?" எனக் கண்களில் நீர் கலங்கிக் கேள்விமேல் கேள்விகளாகக் கேட்டுக் கலங்கிக் கருத்திழந்தாள்.

"செல்வச் சிறுஅர் சீறடிப் பொலிந்த
தவளை வாய பொலம் செய் கிண்கிணிக்
காசின் அன்ன போது ஈன் கொன்றை
குருந்தோடு அலம் வரும் பெருந் தண் காலையும்
கார் அன்று என்றி யாயின்
கனவோ மற்று இது? வினவுவல் யானே." a

## துயர் தரும் மாலை அவர் சென்ற நாட்டில் இல்லையோ?

ஒரு நாள் மாலை வழக்கம்போல், காதலன் வருகையை எதிர்நோக்கி மனையின் முன்வாயிலை அடைந்து காத்திருந் தாள்; அந்நிலையில் கணவன் மீது சென்றிருந்த அவள் கருத்தைக் கவரும் நிகழ்ச்சியொன்று ஆங்கு நிகழ்ந்தது; கணவன் வாராமையால் தான் உற்ற கலக்கத்தையும் மறந்து அந்நிகழ்ச்சியைக் கண்ணுற்று நின்றாள். அவள் வீட்டின் இறப்பில் கூடு கட்டி வாழ்ந்திருந்தது ஒரு குருவி; காலையில் மலர்ந்து மாலையில் வாடிய ஆம்பல் பூவின் புற இதழ் போலும் நிறமும் உருவமும் வாய்ந்து காண்பதற்கு அழ

---

a குறுந்தொகை: 148. இளங்கீரந்தையார்.

சீறடி-சிறிய கால்கள்; பொலிந்த-விளங்கிய; தவளை வாய-தவளையின் வாய் போலும் வாயை உடைய; பொலம்-பொன்; காசு-அணி; போது-மலரும் பருவத்தை உடைய அரும்பு; ஈன்-அரும்பு விட்ட; அலம் வரும்-அசையும்.

யாகத் தோன்றிற்று அதன் மேனி; அது தன் கூட்டை விட்டுப் பறந்து வந்து தெருவை அடைந்தது; அதைத் தொடர்ந்து அதன் பேடும், அதன் குஞ்சுகளும் பறந்து வந்து தெருவை அடைந்தன; தெருவில் மனைகளின் முன்புறத்தில் மகளிர் காய விட்டுக் காத்துக் கிடக்கும் பல்வேறு வகையான உணவுப் பண்டங்களில் படிந்து வயிறுர உண்டன; உண்டு உடற்பசி நீங்கிய பின்னர், அவை, ஊர் மக்கள் ஒன்று கூடி ஆடியும் பாடியும் மகிழும் மன்றத்தை அடைந்தனர்; ஆங்கே குவியல் குவியலாகக் கொட்டி வைத்துள்ள எருக்குப் பைகளைக் குடைந்து குடைந்து ஆடி மகிழ்ந்தன; அந்நிலையில் மாலை மறைய இருள் பரவத் தொடங்கிவிட்டது. உடனே அனைத்தும் ஒன்று கூடித் தம் கூட்டினை அடைந்து மகிழ்ந்தன.

அழகிய இக்காட்சியை அவள் கண்டாள்; சிறிது பொழுது தன் கவலையை மறந்து மகிழ்ந்தாள்; அக்காட்சி முடிவு அவளை மீண்டும் துயரக்கடலில் தள்ளிவிட்டது; அக் குருவிகளின் இன்ப விளையாட்டைக் காண்பதில் தன் துன்பத்தை மறந்திருந்த அவள், அவை கூடுகளை அடைந்து மறைந்து போனதும் தன் நினைவு வரப்பெற்றாள்; அந்நிலையில் காதலனைக் காணுக் கலக்கத்தோடு மற்றொரு கலக்கமும் சேர்ந்து கொண்டு அவளைத் துன்புறுத்தத் தலைப்பட்டது.

"இக்குருவி இனத்தைப்போல் காதலனோடு பிரியாது வாழ்ந்து, அறிவறிந்த மக்களைப்பெறும் அரும் பெரும் பேறு பெற்று, அம்மக்களோடும் ஒக்கலோடும் மகிழ்ந்து வாழும் வாழ்வு எனக்கும் வாய்க்காதா" என எண்ணி ஏங்கிற்று அவள் உள்ளம். ஏக்கம் மிக்க அவள் தன் தோழியை அணுகினாள்; தெருவில் தான் கண்ட அவ்வின்பக் காட்சியை அவளுக்குக் கூறினாள்; அக்காட்சியைக் கண்டு தன் உள்ளத்தில் எழுந்த இன்ப வேட்கையை எடுத்து இயம்பினாள்; பின்னர், "தோழி! இவைபோலும் எண்ணற்ற ஆசைகளைக் கிளப்பிவிடும் இவைபோலும் மாலைக் காட்சிகள் நம் கணவர் சென்ற நாட்டில் நிகழாவோ? அவற்றை அவர் காணாரோ?

கண்டிருப்பாராயின் அவரும் என்னைப்போல் அவ்வின்ப வாழ்விற்கு ஏங்கி, இந்நேரம் இவண் வந்து அடைந்திருப்பரே; அல்லது, அவற்றைக் கண்டும், அவர் கடமையுள்ளம் கலங்கவில்லையோ? அதனால் அவர் வருகை தடைபட்டுளதோ? தோழி! வாய் திறந்து எனக்கு விளங்கக் கூறு" எனத் தன் உள்ளக் குமுறலை அவள் உணரக் காட்டிக் கலங்கி நின்றாள்.

"ஆம்பல் பூவின் சாம்பல் அன்ன
கூம்பிய சிறகர் மனைஉறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி, மன்றத்து
எருவின் நுண்தாது குடைவன ஆடி
இல்இறைப் பள்ளித் தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்று கொல்? தோழி! அவர் சென்ற நாட்டே." a

## என் அழகு எனக்கும் ஆகாது; என்னைக்கும் உதவாது கொல்?

கணவன் வாக்களித்துச் சென்ற காலம் கடந்து போகவும் வந்திலனே என்ற ஏக்கத்தால் எழுந்த வருத்தம் அப்பெண்ணின் மனத்தைப்பற்றி வருத்த வருத்த, அவள் மேனியும் தன் பொலிவிழந்து பசக்கத் தொடங்கிவிட்டது; நல்ல செம்பொன்னால் செதுக்கி வைத்த சிலைமீது மாலை ஞாயிற்று மஞ்சள் வெயில் வீழ்ந்தாற்போல் பேரொளி வீசும் பெருங் கவின் மிக்கது அவள் மேனி; அந்த அழகே அவளுக்கு, அவனைக் கணவனாகக் கொண்டு தந்து துணைபுரிந்தது. அவன்

---

a குறுந்தொகை: 46, மாமலாடனார்.

சாம்பல்—வாடியமலர்; கூம்பிய—குவிந்த; முன்றில்—மனைமுற்றம்; உணங்கல்—உலரவிட்ட உணவுப் பொருள்கள்; தாது—பொடி; குடைவன—குடைந்து; இல்இறை—வீட்டு இறப்பு; பள்ளி—கூடு; புன்கண்—துன்பம் மிக்க; புலம்பு—தனிமையுணர்வு.

அவள் மேனியின் அம்மாமைக் கவினைக் கண்டே அவள்மீது காதல் கொண்டான்; அவளைக் காதலித்த பின்னர், அவளோடு பழகியபோது, அவள் அகநலம், அவள் மேனி காட்டும் புறநலத்தினும் சிறந்தது என்பதை அறிந்து, அவள் மீது பேரன்பு காட்டினான். என்றாலும், அவளைக் காதலிக்க அவள்மீது ஆசை கொள்ளத் துணைபுரிந்தது-தூண்டியது அம் மாமைக்கவினே ஆகும். இவ்வாறு அவனை மணந்து மாண் புறப் பெருந்துணை புரிந்தது அவ்வழகே யாதல் அறிந்து, அதனிடத்தில் அவள் பேரன்பு காட்டினாள்; அதைப் பேணிக் காப்பதில் பேரார்வம் காட்டினாள்; அவ்வழகு பெற்றுள்ள மையால் பெருமிதம் கொண்டது அவள் உள்ளம். அம் மட்டோ! கணவன் கண்களுக்கு அவன் அவளைக் காணும் பொழுதெல்லாம், விருந்தளித்து அவன் உள்ளத்தில் இன்பம் ஊற்றெடுத்துப் பாயச் செய்தது அவள் அழகு. அவளை விட்டு இமைப் பொழுதும் பிரியவிடாது அவனைக் கட்டிப் போட்டுக் களியாட்டம் ஆட்டியது அவள் அழகு.

இவ்வாறு தனக்கும் தன் கணவனுக்கும் ஒருசேர இன்பம் ஊட்டி உற்றதுணையாய் விளங்கிய அப்பேரழகு இப்போது அழியத் தொடங்கிவிட்டது; கணவன் பிரிவால் அவள் கருத்தில் எழுந்த கலக்கம், மெல்ல மெல்ல, அவள் மேனியையும் பற்றிக்கொண்டது. அம்மேனியின் மாந்தளிர் போலும் மாமை நிறம் மெல்ல மெல்ல மங்கிவிடத் தூய கண்ணாடிமீது வாய்வைத்து ஊதிய வழி ஆவிபடர்ந்து அழகிழந்து காட்டும் அவ்வாடியின் தோற்றம்போல், அவள் உடல் ஒளி இழந்து தோன்றிற்று. பசலைபடர்ந்து அவ்வழகை அழித்துவிட்டது. செம்மை கலந்த பொன்னிறம் போன்று சிறப்பளித்த அவள் மேனி, வெண்பசும் பொன்போல் வெளுத்துவிட்டது. அன்று தனக்கும் பெருமை அளித்து, தன் காதலனுக்கும் இன்பம் ஊட்டிய அது, இன்று இருவர்க்கும் உதவாது பசலையால் பாழுற்றதைக் கண்டு கலங்கினாள். தான் ஈன்ற கன்றிற்கும் வயிறுாற அளித்து, தன்னைப் பேணிக் காப்பவர்களின் கறவைக் கலம் நிறைந்து வழியுமாறு சுரந்தும் பயன்பட வேண்டிய ஓர்

ஆவின் இனிய சுவை மிக்க பால் அந்நிலைக்கு மாறாக, தன் கன்றாலும் உண்ணப் பெறாமல், தன்னை உடையாரின் கறவை கலத்தை நிறைப்பதும் செய்யாமல், வறிதே மண்ணில் சிந்திச் சீரழிவதுபோல் ஆகிவிட்டதே என் மாமைக்கவின் என எண்ணிக் கலங்கினாள்;

> "கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது
> நல் ஆன் தீம்பால் நிலத்து உக்காங்கு,
> எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது
> பசலை உணீஇயர் வேண்டும்
> திதலை அல்குல் என் மாமைக் கவினே." a

நின் துயர் கேட்பின் நீடலர் :

அப்பெண் படும் துயரைத் தோழி பார்த்தாள்; அவள் வாழ்வில் எவ்விதக் குறைவும் இல்லை. இனிய வாழ்விற்கு வேண்டும் அத்தனையும் ஆங்கு உள. மெல்லிய நூல்கொண்டு தொடுத்த மலர்ச் சரங்கள் அவள் மஞ்சத்திற் கிடந்து அழகு செய்கின்றன; மலர்ப் படுக்கையில்தான் அவள் பள்ளி கொள்கிறாள்; ஆயினும் அவளால் உறங்க முடியவில்லை; நெருப்பின் மீதும் நெருஞ்சி முள் மீதும் வீழ்ந்தாற்போல் துயில் இன்றித் துடிக்கிறாள்; அவள் அழகு அத்தனையும் அழிந்துவிட்டது; அவளைப் பார்க்கவே இவளால் முடியவில்லை. அவளைத் தேற்ற அவள் எதை எதையோ கூறிப் பார்த்தாள்; அவள் கூறிய எதுவும் அவள் கவலையை—கண்ணீரைப் போக்கவில்லை. ஆயினும் அவள் தன் முயற்சியைக் கைவிடவில்லை.

கணவன் பிரிந்து போயிருப்பது சிறந்த பணி குறித்து. கணவன் சிறந்தது மேற்கொண்டு செல்வதில் பெருமை கொள்ள வேண்டுவது மனைவியின் கடமை; அக்கடமையுணர்

---

a குறுந்தொகை : 27. கொல்லன் அழிசி.

உக்காங்கு—சிந்திவீணானது போல். என்னை—என் தலைவன்; உணீஇயர்—உண்ண; வேண்டும்—விரும்பும்.

வால் அவள் தன் துயரை அடக்கிக் கொள்ளுதல் வேண்டும்; அந்நிலையில் அவள் துயர் கொண்டால், அவள் துயர்ப்படுகிறாள் என்பதைப் போயிருக்கும் கணவன் கேட்டுவிட்டால், அவன் சென்ற வினையைச் சிரழிய விடுத்து வந்துவிடுவன்; அதனால் உண்டாம் பழி அவளையே சாரும்; அதனால் அவள் துயர் கேட்டு, அவன்வறிதே வந்துவிடாதிருத்தற் பொருட்டு அவள் தன் துயரைப் பிறர் உணராவாறு அடக்கிக்கொள்ளுதல் வேண்டும்; அதுவே அறிவுடைமை என்பதை அவள் உணருமாறு எடுத்துக் கூறின், அவள், தான் துயர்படுவதால் தனக்கும் தன் கணவனுக்கும் நேரும் கேட்டிற்கு அஞ்சி அடங்கியிருப்பள் என எண்ணினாள்; அதனால் அக்கருத்து அவள் உள்ளத்தில் ஆழப் பதியுமாறு கூற விரும்பினாள்; ஆனால் அந்நிலையில் தான் கூறும்சொற்கள் அறிவுரை வழங்குவன்போல் தோன்றின், கருதிய பயன் விளையாது ஆதலின், அவளுக்கு ஆறுதல் உரைப்பனபோல் அவை தோன்றுதல் வேண்டும் என விரும்பினாள்.

அணையிற் கிடந்து அழுது மடிவாள் அருகிற் சென்று, "பெண்ணே பஞ்சணையிற் கிடந்தும் துஞ்சுதல் ஒழிந்து நீ நாள்தோறும் துயர் உறுகின்றனை; உன்னை இவ்வாறு துயர் உறவிடுத்துவாளா இருந்து விடும் வன்னெஞ்சர் அல்லர் உன் கணவர். அவர் சிறந்த ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவே சென்றுள்ளார் என்பது உண்மை. ஆனால் அவர் உன்னை மறந்து விடுவாரல்லர்; உன்னை மடியவிடுவாரல்லர்; நீ படும் துயர் அவருக்குத் தெரியாது; கணவன் சிறந்த பணி மேற்கொண்டு சென்றுளான் என்ற நினைப்பால் சிந்தை களித்திருப்பாள் மனைவி எனும் நினைவால், அவர் மேற்கொண்டு சென்றுள்ள பணியில் கருத்தைச் செலுத்தியுள்ளார். அதற்கு மாறாக, நீ துயர் உறுகிறாய்; அதை அவர் அறிந்தால், அதை யாரேனும் அவர்பால் சென்று உரைத்தால், கேட்ட அக்கணமே தாம் செய்யும் வினையை, அது எத்துணைச் சிறந்த பயனைத் தருவதாயினும் கைவிட்டு, ஆங்கு கணப் பொழுதும் நில்லாது இவண் விரைந்துவந்து சேர்வர்; ஆகவே பெண்ணே!

நீ சிறிதும் கவலைப்படாதே; வேண்டுமாயின் உன் துயரை அவர் அறியுமாறு கூறவல்ல தூது ஒன்றை அனுப்பி வைப்போம்" எனக் கூறினாள்.

தேறுதல்போல் கூறிய தோழியின் சொற்களைச் செவிமடுத்த அப்பெண், அச்சொற்களில் பொதிந்து கிடந்த தோழியின் அறிவுரையைக் கண்டாள்; தான் துயர்படுவதால் நேரவிருக்கும் கேட்டினை உணர்ந்தது அவள் உள்ளம். மந்திரத்திற்குக் கட்டுப்பட்டு அடங்கும் பாம்புபோல், அவள் துயர்ஒழிந்து அடங்கி அமைதியுற்றாள்.

"கேளா ராகுவர் தோழி! கேட்பின்
விழுமிது கழிவ தாயினும், நெகிழ்நூல்
பூச்சேர் அணையில் பெருங்கவின் தொலைந்தநின்
நாள்துயர் கெடப்பின் நீடலர் மாதோ." [a]

நெஞ்சு விரைகிறது; நான் வருந்துகிறேன்:

இப்பெண்ணின் நிலை இது. இனிப்பொருள் தேடிப் போயிருக்கும் அவள் கணவன் நிலையினைக் காண்போம். "விரைவில் வந்துவிடுகிறேன்; வருந்தாதே" என்று கூறி வந்திருந்தான் அவன். வந்தவன் பொருளீட்டும் முயற்சியில் முழுக்க முழுக்க ஆழ்ந்துவிட்டான்; ஒரு வினையை மேற்கொண்டவர் அதே நினைவாய் இருந்து முடித்தல்வேண்டும்; செயல் ஒன்றும் சிந்தை ஒன்றுமாக இருப்பின், மேற்கொண்ட செயல் செவ்வனே முடிவதோ, விரைவில் முற்றுப் பெறுவதோ இயலாது; அதனால் அவன் சிந்தையும் செயலும் அவன் மேற்கொண்டு வந்த வினையிலேயே ஒரு சேரச் சென்று

---

[a] குறுந்தொகை : 253. பூங்கண்ணனார்.

விழுமிது-சிறந்தபயன்; கழிவதாயினும்-கெடுவதாயினும்; நெகிழ்நூல்—மெல்லிய நூல்; நாள்துயர்— நாள்தோறும் படும் துயர்; நீடலர்-தாங்கரார்.

விட்டன; மனைவியின் நினைப்பு முற்றும் மறந்துவிட்டது. மேலும் மனைவியை நினைந்துகொண்டால், அவள் எழில், இளமை, காதல், கண்ணீர் அனைத்தும் தோன்றி அவனைக் கலங்கச் செய்துவிடும்; கலங்கிய சிந்தையோடு செயல்படுவது இயலாது; வினையும் முற்றுப்பெறாது; விரைவில் வீடு திரும்புவதும் இயலாது; ஆதலின் அவன் சிந்தை அவளை நினைக்க அறவே மறுத்துவிட்டது; அவன் காதல் உணர்ச்சியையும் கடமை உணர்வையும் உணர்ந்து, அவனோடு வந்திருந்த உற்றார் உறவினர்களும், அவன் மனைவிபடும் பிரிவுத் துயர் பற்றி, அவன்பால் ஏதும் அறிவித்திலர்; அறிவித்தல் கூடாது என்பதை அறநெறியாகக் கொண்டனர்; "கிழவி நிலையே வினையிடத்து உரையார்" என்ற ஆன்றோர் விதிக்கு மதிப்புத் தந்தனர்; இதனால் காதலியின் கவலையையோ, அவள் கண்ணீரையோ, அவளுக்குத் தான் வாக்களித்து வந்ததையோ அவன் கருதினானல்லன்; அவற்றுள் எதுவும் அவன் கருத்தில் எழவில்லை; கடமை ஒன்றே அவன் கண்முன் நின்றது.

கடமையைக் குறைவற நிறைவேற்றி, மேற்கொண்டு வந்த வினையில் வெற்றி கண்டுவிட்டான்; விரும்பி வந்த பெரும் பொருளைச் சேர்த்துவிட்டான்; வெற்றி அவனுக்குப் பெருமிதம் அளித்தது; வெற்றிக் களிப்பில் ஆழ்ந்தது அவன் உள்ளம். ஆனால் அவ்வின்ப உணர்வு சிறிது பொழுதே; "ஈங்கு நான் பெறும் இவ்வின்பத்தை உடன் இருந்து நுகர என் மனைவி என் அருகில் இல்லையே என்ற எண்ணம் எழுந்தது; அவ்வளவே; அவன் மகிழ்ச்சி எங்கோ சென்று மறைந்துவிட்டது; மனைவியின் பேரழகு; அவள் தன்பால் கொண்டுள்ள கரைகடந்த காதல்; தனக்கு விடைகூறி வழியனுப்பிய பொழுது அவள் விழிக்கடையில் தோன்றிய கண்ணீர்த் துளி; அக்கண்ணீர் காட்டிய அவள் அகத்துயர்; அவளுக்குத் தான் குறித்து வந்த காலம்; அக்காலம் கடந்துவிட்டதைக் கடமையுணர்வால் தான் மறந்துபோனது ஆகிய இவை ஒன்றன்பின் ஒன்றாக வந்து, அவன் அகக்கண் முன் தோன்றி அவனைத் துன்பத்திற்குள்ளாக்கின. தன்னைப் பிரிந்தமையால் அவள் படும்பாடு; வாக்களித்தவாறு வந்து சேர்வான் எனும் நினை

வால், அவள் தன் வருகையை எதிர் நோக்கி நிற்கும் நிலை; வாராமையால் வந்த ஏமாற்றம் அவளைப் படுத்தும்பாடு; இவற்றை எண்ணிப் பரிர்த்தான்; அவன் உள்ளம் நெகிழ்ந்தது. காற்று இயக்க மெல்ல ஆடி அசையும் மூங்கிலைப் போன்ற வடிவும் வனப்பும் வாய்ந்த அவள் தோள்கள், மான் போல் மருண்டு மருண்டு நோக்கும் கள்ளமில்லாக் கண்கள் இவை அவன் கண் முன் தோன்றிக் களி நடம் புரிந்தன; காதல் உணர்வு ஊற்றெடுத்துப் பாயத் தொடங்கிவிட்டது; அவள் அழகின் திருவுருவைக் கண்டு களித்த அவன், குறித்த காலம் கடந்து போகவும் காதலன் வந்திலனே என்ற எண்ணம் வருத்த இருவிழியும் நீர் சோர நிற்கும் நிலையினை நினைந்துகொண்டான்; அவள் உள்ளம் எத்துணை மென்மை வாய்ந்தது என்பதை உணர்ந்தவன் அவன்; துயர் பெருகின் அதை அவளால் தாங்கிக் கொள்வது இயலாது. அவள் உயிரிழந்து போயினும் போவாள் என உணர்த்திற்று அவன் உள்ளம்; அதற்குமேல் அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. இன்றே ஊர் அடைதல்வேண்டும்; அவளை இப்பொழுதே கண்டு கண்ணீரைத் துடைத்தல்வேண்டும் எனத் துடித்தான்; அத்துடிப்பு மிகுதியால் தான் எங்கிருக்கிறான்; அவள் எங்கிருக்கிறாள்; தனக்கும் அவளுக்கும் இடையே உள்ள வழியின் தொலைவு எவ்வளவு என்ற எதையும் எண்ணிப்பாராத அவன் அவளிருக்கும் ஊர் நோக்கிப் புறப்படத் தொடங்கியதும், தன் உள்ளம் விரையினும், அவளை விரைவில் அடைதல் இயலாது என்பதை உணர்ந்தான். அவள் இருக்கும் ஊர் நனி மிகச் சேய்மைக்கண் உளது; செல்லும் வழியும் தேர் விரைந்து ஓடுமாறு செம்மைப்பட்டிருக்கவில்லை. அது காடுகளையும் மலைகளையும் காட்டாறுகளையும் இடையிடையே கொண்டு கடத்தற்கு அருமை வாய்ந்து காட்சி அளிக்கிறது; நேரிய வழியே யாயினும் நெடுநாட்கள் கழிந்த பின்னரே சென்று சேரும் சேய்மைக் கண் உள்ள அவ்வூரை, இத்தகைய கொடுமையும் அருமையும் வாய்ந்த காட்டு வழியை, நனி மிகக் குறுகிய காலத்தில் கடந்து, தான் நினைக்குமாறு விரைவில் அடைதல் இயலாது என்பதை அறிந்தான்,

ஊர் நனி மிகச் சேய்மைக்கண் உளது, இடைவழி எளிதிற் கடக்கலாகா எண்ணற்ற இடையூறுகளைக் கொண்டுளது என்பதை அறிந்தும் அவன் உள்ளம் ஊர் அடைய விரைந்தது. "என்னைச் சிறிது பொழுதும் பிரிந்து அறியாள்; இப்போது நெடுங்காலம் பிரிந்திருந்துவிட்டாள்; இதுகாறும் அவள் உயிர் வாழ்ந்திருந்ததே அரிது; தனித்துறை வாழ்வை அவள் மேலும் தரியாள்; காட்டு வழியை மெல்லக் கடந்து சென்றால் அவளைக் காண்பது இயலாது போம்; நான் என் செய்வேன்! நனி மிக நீண்ட இப்பெருவழியை-எளிதில் கடக்கலாகா இடையூறு மலிந்த இக்கொடுவழியை எவ்வாறேனும் கடத்தல் வேண்டும்; எவ்வாறு கடப்பேன்; இப்போதே கடத்தல் வேண்டும்; எவ்வாறு கடப்பேன்? அவளை இன்றே அடைதல் வேண்டும்; அது எவ்வாறு இயலும்" என்றெல்லாம் எண்ணி எண்ணி இடர்ப்பட்டது அவன் உள்ளம்.

இளைஞன் தன் உள்ளத்துடிப்பு உணர்ந்து வருந்தினான். அதன் விரைவு கண்டு மருண்டான்; வழியின் அருமை கண்டு மருண்டு நிற்பான் விழியில் பட்டது ஒரு காட்சி. உழவன் ஒருவன் தன் சிறு நிலத்தை ஒற்றை ஏர் கொண்டு உழுது கொண்டிருந்தான்; அந்நிலம் ஒன்றையே நம்பி உயிர் வாழும் பொருள் வளம் உடையவன்போல் தோன்றினான் அவன்; அதனால், அதைப் பயிரிட்டுப் பயன் பெறுதற்கு வேண்டும் மழையின் வருகையை எதிர்நோக்கி இருந்துளான்; பல நாட்களாகப் பெய்யாது ஏமாற்றி வந்த மழை அப்போதுதான் பெய்து ஓய்ந்துளது; ஈரம் புலர்வதற்குமுன்பே உழுதொழிலை முடித்துவிட வேண்டும்; ஆனால் அவனிடம் உள்ளதோ ஒரே ஒரு ஏர்; ஏர் பூட்டி உழத் தொடங்கியதும் வெயிலின் வெப்பம் வாட்டுவதை உணர்ந்தான்; அதனால் நிலத்து ஈரமும் சிறிது சிறிதாகப் புலர்ந்து நிலம் உழும் பக்குவம் குறைந்து போவதைக் கண்டான்; "அந்தோ! பெய்யாது மழை பெய்து அளித்த ஈரத்தைக் காயும் வெயில் கொண்டுவிடும் போல் உளதே; ஈரம் உள்ளபோதே இவ்வளவு நிலத்தையும் உழு

தாக வேண்டுமே; என்னிடம் இருப்பது இவ்வொரு ஏர் தானே; இதைக்கொண்டு இவ்வளவு நிலத்தையும் எப்போது உழுது முடிப்பேன்? நான் உழுது ஏறும்வரை ஈரம்காத்திராது போலத் தோன்றுகிறதே; அந்தோ!, என் செய்வேன்'' என அவன் உள்ளம் துடிக்கும் துடிப்பு, அவன் கைத்துடிப்பில் காணப்பட்டது; "பெய்யாத மழை பெய்துளது; இனிப் பெய்யும் என எதிர்நோக்குவது இயலாது; என்னிடம் உள்ளதோ ஒரு ஏர்; உழவேண்டிய நிலமோ பெரிது; உழக் கூடிய காலமோ குறைவு; என்றாலும் உழுது முடித்தாக வேண்டும்'' என உள்ளம் துடிக்க, அவன் கைகள் ஏரில் பூட்டிய இரு எருதுகளையும் ஒட்டு ஒட்டென விரைந்தோட்டிக்கொண்டிருந்தன.

"காதலியைக் காணவேண்டும்; அதுவும் இன்றே காண வேண்டும்; காலம் கடந்தால் அவளை உயிரோடு காண்பதே இயலாதுபோம்; கடத்தற்கரிய இவ்வழியை-மிக நீண்டு கிடக்கும் இந்நீள்வழியைக் கடந்து சென்று காணவேண்டும்; இப்பெருவழியை என் தேர் எப்படிக் கடக்குமோ அறியேன். இப்போதே கடந்து சென்று காதலியைக் காணவேண்டும்'' எனத் துடிக்கும் தன் நெஞ்சின் துடிப்பிற்கும் எல்லா "நிலத்தையும் உழுதாக வேண்டும்; ஈரம் புலர்வதற்குமுன் இன்றே உழுதாக வேண்டும்; என்னிடம் உள்ளது ஒரு ஏரேயாயினும் உழுது முடித்தல் வேண்டும்'' எனத் துடிக்கும் ஓரேர் உழவனின் உள்ளத் துடிப்பிற்கும் உள்ள ஒருமைப்பாட்டினை உணர்ந்தான்; அவ்வுள்ளத்தின் துடிப்புக் கண்டு, அதுபடும் துயர்கண்டு அவன் கலங்கினான்; செயலிழந்து வருந்தினான்; செய்வது அறியமாட்டாது துன்புற்றுத் துடித்தான்.

"ஆடுஅமை புரையும் வனப்பின், பணைத்தோள்,
பேரமர்க் கண்ணி இருந்த ஊரே,
நெடுஞ்சேண் ஆரிடை அதுவே! நெஞ்சே!
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து

ஓர் ஏர் உழவன் போலப்
பெருவிதுப்பு உற்றன்ருல்; நேர கோ யானே."[a]

## புதுவழிப் படுத்த மதியுடை வலவோய்!

தேரில் அமர்ந்திருக்கும் இளைஞனின் உள்ளத் துடிப்பை உணர்ந்தான் தேர்ப்பாகன்; இளைஞன் குடும்பத்தோடு பல்லாண்டு காலமாக வாழ்ந்து பழகியவன் அவன்; இளைஞன் தன் காதலியை முதன் முதலாகக் கண்ட காலத்திலும், மணம் நிகழ்வதற்குமுன், அவளைக் காண மறைந்து மறைந்து சென்ற காலங்களிலும், அவனுக்குத் தேரோட்டியவன் அவன். அதனால் இளைஞனுக்கும் அவன் மனைவிக்கும் உள்ள அன்புப் பிணைப்பு எத்தகையது என்பதை அவன் அறிந்திருந்தான்; இளைஞனுக்கு விடையளித்து வழி அனுப்பியபோது அவள் பட்ட பாட்டினையும், அவளை விடுத்துவந்த இளைஞன், வழியில் அவள் நினைவால் பட்ட பாட்டினையும் அவன் கண்டிருந்தான். அதனால் அவனை விரைவில் கொண்டுபோய் வீடு சேர்க்கவேண்டியது தன் கடமை என உணர்ந்தான்.

அவன் ஓட்டும் தேர் நல்ல உறுதி வாய்ந்திருந்தது; எத்தகைய நிலத்தில் ஓடினும் இடையற்றுப் போகாது அது;

---

[a] குறுந்தொகை: 131. ஓரேர் உழவனர் – தலைவியைக் காணத் துடிக்கும் தலைவன் உள்ளத் துடிப்பிற்கு ஓரேர் உழவன் உள்ளத்துடிப்பை உவமைகாட்டிய சிறப்பால் புலவர்க்கு வழங்கிய சிறப்புப் பெயர் இது.

அமை-மூங்கில்; புரையும்–ஒக்கும்; அமர்க்கண்ணி–மருண்டு நோக்கும் கண்கள்; ஆரிடை–அரிய இடத்தில்; பட்ட-உண்டான; செவ்வி-பக்குவமான; புனம்-நிலம்; விதுப்பு-விரைவு; உற்றன்று–அடைந்தது; ஆல்- அசை; நெஞ்சு விதுப்புற்றன்று; யான் நோகு என மாற்றுக.

அதைப்போலவே, அத்தேரில் பூட்டிய குதிரைகளும் இயல்பாகவே விரைந்தோட வல்லவை; தாற்று முள் கொண்டு தாக்கவேண்டிய இன்றியமையாமை அவற்றிற்கு இதுகாறும் நேர்ந்ததில்லை. அத்துணை விரைவுடையன; அம்மட்டோ! எத்துணை நெடுந் தொலைவாயினும் சோர்வுறாது சென்று சேர வல்ல வன்மையும் வாய்ந்தன; இதை அவன் அறிவான்; என்றாலும் நேரிய வழியில் சென்றால், ஊர் அடைய நெடு நாட்களாகும்; அத்துணைச் சேய்மைக்கண் உளது அவர்கள் ஊர்; அவ்வழியில் தேரைச் செலுத்தினால், தேர் எவ்வளவுதான் விரைந்தோடினாலும், கணவன் வருகையை எதிர் நோக்கி எதிர் நோக்கி, ஏமாந்து, அவ்வேமாற்றத்தால் உயிரிழந்து போவாளைக் காப்பதோ, அவள் உடலைக் காண்பதோ இயலாது என்பதை உணர்ந்தான். உணர்ந்தும், உரிய காலத்தில் அவள் உயிரிழந்துபோவதற்கு முன்பு ஊர் சென்று, அவள் உயிரைக் காத்தல் வேண்டும் எனத் துணிந்தான்.

தேர் ஓடுமாறு சிறிதே செப்பம் செய்யப்பெற்ற நேர்வழி மலைகளைச் சுற்றிக்கொண்டும், காடுகளை வளைத்துக்கொண்டும், காட்டாறுகளை எளிதில் கடக்கலாம், இனிய இடங்களைத் தேடிக்கொண்டும் செல்வதால் நனி மிக நீண்டுளது; அவ்வழியில் சென்றால் விரைவில் ஊர் சேர்தல் இயலாது; ஆகவே, அவ்வழி மேற்கொள்வதை மறுத்தது அவன் மனம்; மலைகள் மீது ஏறியும், காடுகளின் ஊடே நுழைந்தும், காட்டாற்று வெள்ளத்தில் பாய்ந்தும் ஓடினால் ஊர் அணித்தாகும்; உரிய காலத்தில் ஊர் அடைந்து அவளைக் காக்கலாம் எனக் கருதினான். தேரையும் குதிரைகளையும் ஒருமுறை நோக்கினான்; அவை அப்புது வழியில் பாய்ந்தோடுவதற்கேற்ற உறுதியும் உரமும் வாய்ந்து விளங்குவதைக் கண்டான்; உடனே தேரைத் திருப்பிவிட்டான்; செம்மைப்பட்ட வழியை விடுத்துக் கரடு முரடான மேட்டு நிலத்தில் உருண்டோடிற்றுத் தேர்; கல்லையும் மண்ணையும், காட்டாற்று வெள்ளத்தையும் பிளந்துகொண்டு விரைந்தது; அவ்வளவுதான்; கணப்பொழுதில், தேர் தலைவியின் வீட்டு வாயிலில் வந்து நின்றது.

காதலியின், கண்ணீர் சொரியும் கலங்கிய முகத்தைக் காணமாட்டாது கலங்கிய உள்ளத்தால் உணர்விழந்து போன இளைஞன், தேர் ஓட்டம் நிற்கவே கண்விழித்து நோக்கினான். மனையையும், அம்மனை வாயிலில் தன் வரவை எதிர்நோக்கி நிற்கும் மனைவியையும் கண்ணெதிரே கண்டான்; எப்படி வந்து சேர்ந்தோம் என வியந்தான்; அவ் வியப்புணர்ச்சியோடு தேர் வந்த வழியைத் திரும்பி நோக்கினான்; புது வழி புலப்பட்டது அவன் கண்களில். கல்லும் கட்டாந்தரையும் பிளந்து போகப் புழுதிப் படலம் படர்ந்து தோன்றும் அப்புது வழியைக் கண்டான்; தேரை விட்டுக் குதித்தான்; தன் வருகைக்காகத் தவம் கிடக்கும் மனைவியை மறந்து, குதிரைகளின் வார் பிடித்து நிற்கும் தேர்ப்பாகனைத் தழுவிக்கொண்டான். "அன்புடைப்பாக! என் உள்ளம் அறிந்து—என் உள்ளத் துடிப்பை உணர்ந்து புது வழி கண்டு விரைந்து வந்து ஈங்கு நிறுத்தியது நின் தேரை அன்று. நான் வாராமையால் வருந்தி, இழந்து போன என் காதலியின் உயிரை அன்றே நீ எனக்குத் தந்தனை; உன் அன்பை என்னென்பேன்! உன் அறிவை எவ்வாறு புகழ்வேன்!" எனக் கூறிப் பாகனை நாவாரப் பாராட்டி, அவன் நெடிது வாழ வாழ்த்தினான். அக்காட்சியைக் கண்டாள் அவள்; அவள் கவலை ஒழிந்தது. களிப்புக் கடலில் ஆழ்ந்துபோனாள்.

> "சேயாறு செல்லா மாயின் இடர் இன்று
> களைகலம் காமம் பெருந்தோட்கு என்று
> நன்று புரிந்து எண்ணிய மனத்தை யாகி
> முரம்பு கண்ணுடைய ஏகிக், கரம்பைப்
> புதுவழிப் படுத்த மதியுடை வலவோய்!
> இன்று தந்தனை தேரோ?
> நோய் உழந்து உறைவியை நல்க லானே." *

---

* குறுந்தொகை : 400. பேயனார்.

சேயாறு-நெடுந்தூரம்; இடர் இன்று-துன்பம் இல்லாமல்; களைகலம்-போக்கமாட்டோம்; பெருந்தோட்கு-பெருந்

வானமே பெருமழை பெய்து வாழ்க

இளைஞன் வாழ்க்கைக்கு வேண்டும் வற்றாப் பெரும் பொருளோடு வந்துவிட்டான்; இனி அவனுக்கும் அவளுக்கும் எவ்விதக் குறைபாடும் இல்லை; இயல்பாகவே அறவுள்ளம் வாய்க்கப்பெற்றவர்கள் அவர்கள். இப்போது தங்கள் இல்லற வாழ்க்கை இனிது நடைபெறுவதற்கு-வருவிருந்து ஓம்பும் வாழ்க்கை நெறியில் வாட்டம் இன்றிச் செல்வதற்கு வேண்டிய பெரும்பொருள் வந்து சேர்ந்துவிட்டது. அதனால் இன்ப நுகர்விற்கு இருந்த பொருள்வயின் பிரிதலாகிய ஒரு தடையும் இல்லாமல் போய்விடவே, அவர்கள் இன்ப வுலகில் இடையூறின்றி உலாவினர்.

இவ்வாறு அறம் பொருள் இன்பம் என்ற மூன்றனுலும் நிறைந்த பெருவாழ்வு பெற்றமையால் அவர்கள் பெருமிதம் கொண்டனர்; அவன் வீடு திரும்பிய அன்று அவள் கணவன் வந்துவிட்டான் என்ற மகிழ்ச்சியால் அதுகாறும் வாரி முடிக்காத தன் கூந்தலைக் கண்டோர் வியக்குமாறு முடித்துக் கொண்டாள். குவளை மலர்களைக் கொய்து வந்து கொத்துக் கொத்தாகச் சூடிக்கொண்டாள்; அழகையும் அரிய மணத்தையும் அள்ளிச் சொரிந்தது அவள் கூந்தல்; இரவு வந்தது. இருவரும் பள்ளி புக்கனர்; பஞ்சணையை வெறுத்து, அவள் கூந்தலில் தலை வைத்து உறங்குவதில் இணையிலா இன்பம் கண்டான் இளைஞன்.

இருவர் உள்ளமும் நிறைந்திருந்தன; அதற்கு மேலாக அன்றைய அவள் தோற்றம் அவனை இன்ப உலகிற்கே

---

தோளுடைய மனைவிக்கு; புரிந்து—விரும்பி; முரம்பு—மேட்டு நிலம்; கன்ன உடைய—பிளவுண்டுபோக; கரம்பை-கரம்பு நிலத்தில்; தேரோதந்தனை எனமாற்று; உறைவினைய—வாழ்பவளை.

ஈர்த்துச் சென்றது; அவ்வின்ப உணர்வில் தன்னை மறந்தான்; இவ்வின்ப வாழ்க்கை என்றும் நிலை பெறுதல் வேண்டும் என விரும்பினான்; அவ்விருப்பம் மேலும் வளர்ந்தது; தான் வாழ வேண்டுமாயின்; தன்னைச் சூழ உள்ளார் அனைவரும் வாழ வேண்டும்; அனைத்துயிரும் வாழவேண்டும்; சுற்றியிருப்போர் துன்பச் சேற்றில் சிக்கிச் சீரழியும்போது தான்மட்டும் இன்புற்று வாழ்தல் இயலாது; ஆகவே அவர்களும் வாழ வேண்டும்; தன்னைப்போலவே அவர்களும் வினையில் வெற்றிகண்டு தத்தம் காதல் மனைவியரோடு களித்து வாழ வேண்டும் என விரும்பினான்; 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என வாழ்த்திற்று அவன் வாய்.

உலகம் வாழ வேண்டும் என விரும்பிய அவன், அவ்வுலகம் வாழவேண்டின், அவ்வுலகில் மழைக் குறைபாடு உண்டாதல் கூடாது; வானம் வழங்கா நாட்டில் வளத்தினைக் காண்பது இயலாது. நாட்டின் நல்வாழ்விற்குப் பெருந்துணை புரிய வல்லது வான் வழங்கும் மழையே என உணர்ந்தான். உடனே மனைவியோடும் வெளிவந்து வானை நோக்கினான்; இரு கைகூப்பி நின்றான்; "எடுத்துச் சென்ற வினையை இனிதே முடித்துவிட்டு ஈண்டு வந்து இவளோடு இன்புற்று வாழ்கிறேன் நான்; நானும் இவளும், இவ்வாறு கடமையைச் செய்து காதல் உலகில் களித்துத் திரியப் பெருந்துணை புரிந்தோய் நீயே; இவ்வாறு எமக்குத் துணைபுரிந்த நீ, இவ்வுலகில் உள்ள அனைவரும் அனைத்துயிரும் இன்புற்று வாழவும் துணை புரிதல் வேண்டும்; ஆகவே வானமே! 'உலகில் சூழ்ந்துள்ள இருள் நீங்கி ஒளி வீசுமாறு மின்னி, முரசு முழங்கினாற்போல் பல முறை இடித்து, தண்ணெனக் குளிர்ந்த நீர்த்துளிகள் தாரை தாரையாக" வீழுமாறு பெய்து வளம் கொழித்து வாழ்விப்பாயாக என வணங்கி வேண்டிக்கொண்டான். வழங்குக வான், வாழ்க அவன் உள்ளம்.

"தாழ் இருள் துமிய மின்னித் தண்ணென
வீழ்உறை இனிய சிதறி, ஊழின்
கடிப்பு இகு முரசின் முழங்கி இடித்து இடித்துப்
பெய்து இனி வாழியோ பெரு வான்! யாமே

செய்வினை முடித்த செம்மல் உள்ளமோடு
இவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தாள் நாண்மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல்லணை யேமே.'' ௨

இளைஞனும் இளையாளும் மேற்கொண்ட இல்லறம் இடையூறின்றி இனிதே இயங்கிக்கொண்டிருந்தது. மனையற மாண்புகளிற் சிறந்து, மனையறத்தின் மங்கலமாய் விளங்கினாள் அவள். அவனும் இல்லறத் தலைவியின் நல்ல துணைவனாய் இருந்து இன்புற்றான். இவ்வின்பச் சூழ்நிலையில் அவர் இல்லற வாழ்க்கை சில ஆண்டுகளைக் கடந்தது. வாழ்க்கைப் பயனாய் மகன் ஒருவன் வந்து பிறந்தான்; அவள் தாயானாள்; அவன் தந்தையானான்.

மகன் பிறந்த பின்னர், பண்டுபோல் இன்புற்று வாழ்தல் இருவர்க்கும் இயலாது போயிற்று; மகனின் மழலை மொழியில் ஒரு புது இன்பம் கண்டு களித்தார்கள். எனினும் அவர் உள்ளத்தில் நிறைவு இல்லை. வருவிருந்தோம்பும் வாழ்க்கைப் பெரும் பணியால், இயல்பாகவே மனையை விட்டுப் புறஞ்செல்ல மாட்டா நிலைபெற்ற அவள், இப்போது பிறந்த மகனைப் பேணிக்காக்கும் பொறுப்பும் சேர்ந்து விட்டமையால், மனையை விட்டுச் சிறிது பொழுது செல்வதும் இயலாததாயிற்று. விருந்தோம்பல், பிறந்த மகனைப் பேணுதல், ஒழிந்த சில நேரங்களில் மகனின் பிள்ளை விளை

௨ குறுந்தொகை: 270. பாண்டியன் பன்னாடு தந்தான்

தாழ்-படர்ந்த; துயிய-கெட; வீழ்-பெய்கிற; உறை-மழைத்துளி; சிதறி-பெய்து; கடிப்பு-முரசடிக்கும் கோல்; இகு-அடிக்கப்பெறும்; செம்மல்-சிறந்த; இவளின்-இவளோடு; மேவினமாகி-அடைந்து; அணை-தலையணை,

யாட்டில் தன்னை மறந்து மகிழ்தல் ஆகிய இவற்றிலேயே அவள் உள்ளம் சென்றுவிட்டமையால், அவள், கணவன் தரும் இன்பத்திற்காக ஏங்கி நிற்கும் நிலை குறைந்துவிட்டது.

இளைஞன் நிலை அவ்வாறு ஆகிவிடவில்லை. இன்பம் நுகர் வேட்கை அவன் உள்ளத்தில் அடங்கிவிடவில்லை. மனையறத் திற்கு அவன் ஆற்றவேண்டிய கடமை எதுவும் அவனுக்கு இப்போது இல்லை. அது மனையறத்திற்கு வேண்டும் மாநிதியை ஈட்டித் தந்துவிட்ட அப்போதே முடிந்து விட்டது. ஆற்றவேண்டிய கடமை இல்லாது போகவே, அவன் உள்ளம் காதல் உணர்வில் ஆழப் பதிந்துவிட்டது; ஆனல் அவ்வின்பத்தை மனைவிபால் எதிர் நோக்குதல், மகப்பேறுற்றுத் தாயாம் தகுதி பெற்றிருக்கும் அந்நிலையில் இயலாததாயிற்று. மனைவியைப்போல் தன் மனத்தில் எழும் வேட்கையை அடக்கிக்கொள்வதும் அவனல் இயலவில்லை. மனைவிபோல், அவன் வீட்டினுள்ளேயே அடங்கியிருப்பவன் அல்லன்; உண்ணுவது உறங்குவது ஒழிந்த காலமெல்லாம் அவன் மனைப் புறத்திலேயே வாழவேண்டியவனவன். ஆங்கு, அவன் கண்டும் கேட்டும் மகிழும் ஆடல் பாடல்கள் போலும் இன்ப உணர்வினைத் தூண்டும் நிகழ்ச்சிகள், அவன் இன்பம் நுகர் வேட்கையை வளர்த்தன. அதனல் அவன் வேட்கை முன்னினும் பெருகிற்று; வேட்கையோ வரம்பு காணமாட்டாது வளர்ந்துளது; ஆனல் இன்ப நுகர்வை மனைவிபால் எதிர்பார்த்தலோ இயலாது; அது அறமும் அன்று; அது பிறந்த மகனின் சிறந்த வாழ்வைச் சீரழித்துவிடும்; இந்நிலையில் அவன் செய்வதறியாது திகைத்தான்; இன்பம் நுகர்வேட்கையே அவன் உள்ளத்தில் தலைதூக்கி நின்றமையால் அவன் அறிவு சிறிது செயலற்றுக் கிடந்தது. அதனல் அறியாது பிழை புரிந்துவிட்டான்; பரத்தையர் சேரியில், தன் பண்பாட்டிற்கு ஒத்த ஒருத்திபால் காதல் கொண்டு கருத்திழந்து போனன். அவள் தொடர்பு கொண்டு அவள் மனையிலேயே நிலையாக வாழத் தொடங்கிவிட்டான்,

## மனையோள் மடமையாள் புலக்கும்!

கணவன் பரத்தையர் தொடர்பு கொண்டுவிட்டான் எனக்கேட்டு அவன் மனைவி கலங்கினாள். தன்னை மறந்து, தன் மகனை மறந்து பரத்தையர் பின் திரிகிறான் என்பதை அறிந்ததும் அவள் அவன்பால் குறை கண்டிலள். தான் தாய்மையுற்றிருக்கும் அந்நிலையில் பரத்தை அவனைத் தன் ஆடல் பாடல்களால் மயக்கித் தன்வயத்தனாக்கிக்கொண்டாள். அவனை ஒழுக்கங்கெட்டவனாக மாற்றிவிட்டாள். அழகிய ஓர் இளம்பெண் தன் பெண் தன்மையை மறந்து, காமவெறியூட்டவல்ல ஆடல் பாடல்களைப் பலரும் கூடியிருக்கும் ஊர் மன்றத்தில் ஆடியும் பாடியும் காட்டினால் மனைவி மகவீன்று கிடப்பதால் காதல் இன்பம் துய்க்க மாட்டாது கலங்கியிருக்கும் நிலையில், மனம் திரிந்து மாண்பிழந்து போதல் எத்தகைய ஆடவர்க்கும் இயல்பாம் எனப் பழியைப் பரத்தையின் மீதே ஏற்றி, அவளைப் பழித்தும் இழித்தும் பேசத் தொடங்கினாள். இளைஞன் மனைவி இவ்வாறு பழித்துரைப்பதைச் சிலர் சென்று அப் பரத்தைக்கு அறிவித்தனர்; அது கேட்டு அவள் துயருற்றாள்.

பரத்தையர் குடியில் பிறந்தவளே எனினும் அவள் பிறர் பழிக்க வாழ்பவள் அல்லள்; ஏனைச் சேரிப் பரத்தையர் போல், பார்ப்பவர் நகைக்கப் பாடித்திரிபவளும் அல்லள்; இளைஞனை அவள் அதற்கு முன் அறியாள்; அவனைத் தேடிச் சென்று, அவன் அறிவைக் கெடுத்து அவனைக் கைப்பற்றிக் கொண்டவள் அல்லள்; மாறாக, அவள் அழகில், அவள் ஆடல் பாடல்களில் மயங்கி அவனே அவளைத்தேடி, அவள் சேரி புகுந்து, அவளோடு தொடர்பு கொண்டான்; பரத்தையர் குடியில் பிறந்துவிட்டோமே என்ற எண்ணம் உள்ளத்தை வருத்துவதால், அவள் தான் வாழும் சேரியை விட்டு வெளிச்செல்லவும் நாணி அங்கேயே அடங்கி வாழ்கிறாள். அவள் அத்தகையளாகவும், இளைஞன் மனைவி, தன்னைப் பழிப்பது கேட்டு வருந்தினாள். அவளுக்கு உண்மையை உணர்த்தித், தன் தவறின்மையைப் புலப்

படுத்த விரும்பினாள். அதற்கு ஏற்ற காலத்தை எதிர் நோக்கியிருந்தாள்.

தமிழ் நாட்டுத் தலைசிறந்த நகரங்களுள் குன்றூரும் ஒன்று. கீழ்க் கடலைச் சார்ந்து விளங்கிய கடற்கரை நகரங்களுள் ஒன்றாகிய அக்குன்றூர், வேளிர் என்ற குறுநிலத் தலைவரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அந்நகரில் ஆண்டு தோறும் நடைபெறும் கடலாடு விழா, பழந்தமிழ்ப் பெருவிழாக்களுள் நனிமிகப் பாராட்டற்குரியது. அவ்வாண்டு நடைபெற்ற விழாவிற்கு அப்பரத்தை தன் தோழியர் சிலரோடு சென்றிருந்தாள். விழா நிகழ்ச்சிகளைக் கண்டு களித்து வருபவள் கடற்கரைக்கு அணித்தாக, ஓர் அழகிய பொய்கையும் அப்பொய்கைக்கரையில் வானுற வளர்ந்திருந்த ஒரு மாமரத்தையும் கண்டு ஆங்குச் சென்று, அம்மரத்து நிழலில் சிறிது அமர்ந்து இளைப்பாறினாள். வேனிற்காலம் அது. மரம் நிறைய, சுவைமிகு கனிகள் கொத்துக் கொத்தாகக் காய்த்துக் காட்சி அளித்தன. கனிக் காட்சியைக் கண்டு களித்திருக்குங்கால் பொய்கையை நோக்கி நனிமிக நீண்டு வளர்ந்து, அப்பொய்கை நீரில் படுமாறு தாழ்ந்திருந்த கிளையில் பழுத்திருந்த கனிகளில் ஒன்று காம்பற்றுக் குளத்து நீரில் விழுந்தது. வீழ்ந்த ஒலி கேட்டு அப்பக்கம் திரும்பியவள், அக்கனியைக் குளத்தில் வாழும் வாளைமீன் ஒன்று விரைந்தோடி வந்து வாயாறக் கவ்வி விழுங்குவதைக் கண்டாள்; குளக்கரையில் தான் காணும் அக்காட்சிக்கும், தன் வாழ்க்கை நிகழ்ச்சிக்கும் ஒருமைப்பாடு இருக்க உணர்ந்தாள்; அவ்வுணர்வால் அவள் உள்ளம் ஒரு சிறிது அமைதி பெற்றது.

அப்போது தன்னைப்போலவே அவ்விழாக்காணும் கருத்துடையவளாய்த் தன் காதலன் மனைவியின் உயிர்த் தோழியர் சிலரும் வந்திருப்பதைக் கண்டாள். தன் உள்ளத் தூய்மையை, தன்மீது தவறு இல்லை என்பதை அவர்கள் வழியாக அப்பெண்ணுக்கு அறிவிக்க இதுவே ஏற்ற சமயம் என எண்ணினாள். அப்பெண்கள் அருகில் அவர் அறியாவாறு

சென்று தங்கினாள்; அவர்கள் வருகையை அறியாதாள் போல, தான் கூறும் ஒவ்வொரு சொல்லும் அவர்களுக்குத் தெளிவாகக் கேட்கும் வரையில் தன் உடன் வந்திருக்கும் தன் தோழியிடம் சில கூறத் தொடங்கினாள்.

தொடங்கியவள், இளைஞன் மனைவி உலகியல் அறியாதவள்; ஆடவர் உள்ளத்தை அறிந்துகொள்ளும் வாய்ப்பு அவளுக்கு இல்லை என்றும், எப்பொழுதும் இல்லறப் பணியே நினைவாய் இருப்பதால், அவள் வீட்டைவிட்டு வெளியே சென்று வெளிவுலக நிகழ்ச்சிகளை அறிந்திலள். அறிந்திருந்தால், தவறு செய்தவர் யாவர் என்பதை அறியாது வீணே தன்னைப் பழித்திராள் எனத் தன் உள்ளம் கருதுகிறது என்பதை அத்தோழியர்க்கு உணர்த்த விரும்பினாள். அதனால் அவளைக் குறிப்பிடுங்கால், மனையோள், அதாவது மனையிலேயே அடங்கிக் கிடப்பவள் என்ற குறியீட்டுப் பெயரால் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசத் தொடங்கினாள்.

"தோழி! நம் அன்பர், நம் சேரிக்கு வந்து, நம்பின் திரிகிறார் என்பதையோ நாம் அவரை அடைந்து இன்புறுகின்றோம் என்பதையோ நாம் மறுக்கவில்லை. ஆனால் அதற்காக நம்மீது வருந்துவதில் பயன் இல்லை. நாமேதும் பிழை செய்யவில்லை; இது அவள் செய்த பிழையின் விளைவு; ஆனால் அவள் அதை உணர்ந்திலள். உணர்ந்துகொள்ளும் அறிவு அவளுக்கு வாய்க்கவில்லை; அதனால் அவள் நம்மைப் பழிக்கிறாள்; நம் மீது சினம் கொள்கிறாள். உண்மையில் பிழை நம்முடையதாயின், பிழை புரிந்தோர் நாமாயின், தோழி! இதோ நம் முன் கிடந்து அலைவீசும் இக்கடலில் வாழும் அணங்கு நம்மை வருத்தி அழிக்கட்டும். தோழி! அவரைத் தேடி அலைந்து, அவர்மீது காதல் வலை வீசி, அவரை மயக்கி நம்பால் ஈர்த்துக் கொள்ளும் கொடுமையை நாம் புரியவில்லை. நம் சேரிக்கு வரும் வாய்ப்பு அவருக்கு எவ்வாறோ கிடைத்துவிட்டது. தன்னைவிட்டு அகலாவாறு அவனைக் காத்துக்கொள்ளமாட்டாது, பரத்தையர் சேரி சென்று திரியுமாறு அவரை விட்டு

விட்டாள்; பரத்தையர் சேரிக்கு வந்த அவர், நம்மைக் கண்டு நம்மீது காதல் கொண்டு, நம் மனை வந்து சேர்ந்தார்; வலியவந்து சேர்ந்தவரை ஏற்றுக்கொண்டோம் நாம். இதில் நம்மீது என்ன தவறு உளது?

"தோழி நம் வாழ்வின் சூழ்நிலையும் அத்தகையதாகி விட்டது. பரத்தையர் சேரியைக் கடந்து ஊரினுள் தடையின்றி உலாவி, நாம் விரும்பும் ஆடவரை மணந்து வாழும் வாழ்க்கை உரிமையை, இவ்வுலகியல் நமக்கு அளிக்க மறுத்து விட்டது. அதனால், வாழ்க்கைத்துணை பெற்று வாழத் துடிக்கும் நாம் நம் சேரிக்கு வலிய வந்து சேர்வோரையாவது ஏற்று இன்புறும் இழிநிலைக்கு உள்ளாகிவிட்டோம்; ஊரில் இத்தகைய சேரிகள் உள என்பதை உணர்ந்த ஊர்ப்பெண்கள், தம் கணவன்மாரைச் சேரிப்பக்கம் செல்லாவாறு விழிப்பாயிருந்து காத்துக்கொள்ளுதல் வேண்டும்; அதில் அவர்கள் தவறிவிட்டார்கள்; காப்பற்றுப் போன ஆடவர்கள், நம் வலையில் வந்து வலிய வீழ்கிறார்கள். வாழ்க்கைப்பசிகொண்டு அலையும் நாம் அவர்களை வயப்படுத்திக்கொள்கிறோம்; ஆக, இதில் நம்மீது ஏது தவறு? தவறு இல்லையாகவும், அவள் நம்மைச் சினப்பதில் யாது பயன்?

"தோழி! இதோ பார்; குளம் இருக்கிறது; குளத்து நீரில் வாளைகள் வாழ்கின்றன; குளக்கரையில் வைத்து வளர்க்கப்பட்டுள்ளது இம்மாமரம்; மாமரக் கிளைகளில் ஒன்று, குளத்து நீரில் படியுமாறு நீண்டு வளர்ந்துளது. அக் கிளைகளில் பழுத்த கனிகளில் ஒன்று குளத்தில் காம்பற்று வீழ்ந்துவிட்டது; அதைக் குளத்தில் வாழும் வாளை மீன் ஒன்று தன் பசி வேட்கையால் விரைந்தோடி வந்து வாயிற் கவ்வி விழுங்கிவிட்டது; தோழி! வாளை வாழிடம் விட்டு வெளிப்பட்டுக் கரையேறிச் சென்று கனிகளைப் பறித்துத் தின்னவில்லை. அவ்வாய்ப்பு அவ்வாளைக்கு மட்டுமில்லாமல், அதன் இனம் அனைத்திற்குமே மறுக்கப்பட்டுள்ளது. மரத்தின் கிளை வாளை வாழும் குளம் நோக்கி வளர்ந்து விட்டது;

அக்கிளையில் இருந்த கனி, தானே காம்பற்றுக் குளத்து நீரில் வீழ்ந்துவிட்டது; தன் வாழிடத்தில் வந்து வீழ்ந்ததை வாளை தின்றுவிட்டது; இதில் வாளையைப் பழிப்பதில் பயன் உண்டோ? மாமரத்தை வாளை வாழும் நீர் நிலைக்கரையில் வளரவிட்டது ஒரு தவறு; அம்மரத்தின் கிளைகளில் ஒன்று நீர் நிலை நோக்கி நீளத் தொடங்கிய போதே, அதைக் கரை நோக்கி மடக்கி விடாது விட்டது இன்னொரு தவறு, அக்கிளையில் கனிகள் பழுக்கத் தொடங்கியதும், அவற்றை அருகிருந்து பக்குவம் அறிந்து பறித்துக் கொள்ளாது விட்டது பிறிதொரு தவறு; இவ்வாறு தவறு மேல் தவறு செய்துவிட்டுப் பின்னர், வலியச் சென்று பறித்து உண்ணாது, வாயில் வந்து வீழ்வது போல், தன் வாழிடத்தில் வீழ்ந்த கனியை உண்ட வாளையைப் பழித்தால், அவ்வாறு பழிக்கும் அம்மரத்திற்கு உரியோர்க்கு அறிவுண்டென யாரேனும் கருதுவரோ? அவர் அறியாமை கண்டு நகைப்பதல்லது, அவ்வாளைதான் அது குறித்து வருந்துமோ?

"தோழி! வாளை விழுங்கிவிட்டது என் மரத்து மாங்கனியை என வருந்துவார்க்கும், பரத்தை என் கணவனை வயமாக்கிக்கொண்டாளே என அப்பெண் வருந்துவதற்கும் ஏதேனும் வேறுபாடு உண்டோ? தோழி! அவள் நம்மை புலப்பதுகண்டு நாம் வருந்தத் தேவையில்லை. அறியாமையால் அவள் அவ்வாறு பழிக்கிறாள். வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக் கிடந்து கிடந்து அவள் அவ்வாறு ஆகிவிட்டாள்; ஆகவே அவளைக் குறைகூறுவதில் பயன் இல்லை. அவள் நினைப்பதுபோல், நாம் நெஞ்சாரப் பிழை புரிந்திருந்தால், நம் கண்முன் நின்று களிநடம் புரியும் இக்கடற்கன்னி நம்மைக் கெடுத்து அழிக்கட்டும்," என இவ்வாறு கூறி முடித்தாள்.

"கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூல் மடநாகு
துணர்த்தேக் கொக்கின் தீம்பழம் கதூஉம்
தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்க் குணாது
தண்பெரும் பவ்வம் அணங்குக; தோழி!

மனையோள் மடமையிற் புலக்கும்;
அனையேம் மகிழ்நற்கு யாம் ஆயினம் எனினே.”[1]

இன்னாக்கிளவி எவனோ தோழி!

பெண்கள், தம் கணவன்மார் அன்பு அவ்வளவும் தமக்கே உரிமையுடைத்து; அதைப் பகிர்ந்துகொள்ளும் உரிமை வேறு எத்தகையவர்க்கும் இருத்தல் கூடாது என எண்ணுவர் கணவன்மார் காட்டும் அன்பில் சிறிது குறையினும் அவர்மனம் கலங்கிவிடும். தம் கணவன்மார், தம்மை மறந்துவிட்டு, தம்போலும் பிறமகளிர்பால் அதிலும் பரத்தையர்பால் அன்புகொண்டுள்ளனர் என்பதை அறிவராயின் அந்நிலையில் அவரால் உயிர்தாங்கி வாழ்தல் இயலுமோ? அத்தகைய மாண்புமிகு குடியில் வந்தவள் அப்பெண். கணவன் அன்பு ஒன்றையே நம்பி உயிர்வாழ்பவள் அவள்; எந்த அன்பை நம்பி, பிறந்த ஊரை, பெற்ற தாய் தந்தையரை, வளங்கொழிக்கும் வாழ்வை மறந்து வந்துள்ளாளோ, அந்த அன்பு அவளுக்கு இல்லாது போயிற்று; அதை வேறு ஒருத்தி தனதாக்கிக்கொண்டாள் என்றால், அந்நிலை உண்டான பின்னரும் அவளால் உயிர்வாழ்ந்திருத்தல் இயலுமோ? கணவன் ஒழுக்கக் கேட்டால் உண்டான கலக்கம் அவளை நிலைகலங்கச் செய்துவிட்டது. இரவு பகல் எப்பொழுதும் அதே நினைவாய் இருந்து நைந்து உருகினாள். மனையறக் கடமைகளில் தன்னை மறந்திருப்பது போக எஞ்சியுள்ள நேரங்களில் எல்லாம், அவள் அதையே நினைந்து நினைந்து வருந்தினாள்.

அவள் நிலையைக் கண்டாள் தோழி. அவள் கவலையைப் போக்க அவள் ஏதேதோ கூறினாள். அதையும் அவள் ஏற்றுக்

---

[1] குறுந்தொகை; 164. மாங்குடி மருதனார்.

யாம் மகிழ்நற்கு அனையேம் ஆயினும் எனின் பவ்வம் அணங்குக என மாற்றுக. கணை—பருத்த; கமஞ்சூல்—நிறைந்த கரு; துணர்—கொத்து; தேக்கொக்கு—மாமரம்; கதூஉம்—கவ்வும்; தொன்று முதிர்—தொன்மை மிக்க; பவ்வம்—கடல்; ஈண்டுக் கடல் தெய்வம்; அணங்குக—வருந்துக.

கொள்ளவில்லை. துடிதுடித்துத் துன்புற்றது அவள் உள்ளம். இவ்வாறே விட்டுவிட்டால், மனத்துயர் மிகுந்து மாண்டுவிடு வாளோ என அஞ்சினாள் தோழி. எவ்வாறாயினும் அவள் மனக்கவலையை மறக்கடிக்கச் செய்யவேண்டும் என உறுதி பூண்டாள். தன் நயமொழிகள் பயன் தராதுபோன அந் நிலையில், பண்டு கையாண்ட ஒருமுறை அவள் நினைவிற்கு வந் தது. பொருள் தேடிப்போன கணவன் விரைவில் வாராமை கண்டு வருந்தியிருக்குங்கால், தான் எவ்வளவு கூறியும் துயர் மறந்து வாழமறுத்தவள், "இவளை இவ்வாறு வருந்தவிட்டுப் போன அவனும் ஓர் ஆண்மகனா? அறிவுடைப் பெருமகனா?" என அவனைப் பழிக்கவே, தன் கணவனைத் தன்முன் பிறர் பழிக்கத்தானே காரணம் ஆயினமை அறிந்து வெட்கித் துயர் ஒழிந்தநிலை அவள் நினைவிற்கு வந்தது. வரவே மீண் டும் அம்முறையையே கையாளக் கருதினாள். உடனே அவன் உயர்வையும், தன் தாழ்வையும் மறந்து, "ஒழுக்கக்கேடன்; உள்ளத்தில் தூய்மை இல்லாதவன்; காதலியை மறந்து கண்ட பெண்களின் பின் திரியும் காமுகன்" என்றெல்லாம் அவனைப் பழிக்கத் தொடங்கினாள்.

கணவன் செயல் நினைந்து கலங்கியிருப்பவள் காதுகளுள் தோழியின் சுடு சொற்கள் சென்று தைத்தன. அவள் உள் ளுணர்வு விழிப்புணர்ச்சி கொண்டது. "என் கணவனைப் பிறர் பழிக்குமாறு செய்துவிட்டேனே; என்னே என் அறியாமை! கணவன் புகழே கருத்தாய் நிற்பதன்றோ கற்பு டையாளுக்குக் கவின் அளிக்கும். அதை நான் மறந்தேனே; அவனை நானே பழிகூறினேன்; அதனால் அவனைப் பழித்தல் பிறர்க்கும் எளிதாயிற்று; என் கற்பின் திறம் இருந்தவாறு என்னே!" என எண்ணிக் கலங்கினாள். கணவன் கைவிட் டான் எனக் கொண்டு கலங்கிய தன் மனக்கலக்கத்தை மறந் தாள். மனையறக் கடமைகளில் மனத்தைச் செல்லவிட் டாள். இளைஞனைப் பழிப்பதைத் தோழி, அந்நிலையிலும் கைவிட்டிலள். அவள் மனத்துயர் முற்றும் மறைய வேண்டும். அதுகாறும் அவனைப் பழித்துக் கொண்டே

பிருத்தல் வேண்டும் எனும் கருத்தால், அவனைப் பழிப்பதைத் தொடர்ந்து மேற்கொண்டிருந்தாள்.

அதை அப்பெண்ணால் தாங்கிக்கொள்ள முடியவில்லை; தோழியைக் கடிந்து அழைத்தாள். “தோழி! நாம், தம் ஆடல் பாடல்களால் ஆடவரை மயக்கித் திரிவதல்லது மனையறக் கடமை எதுவும் இல்லாப்பரத்தை மகளிர் போன்றவர் அல்லம்; நமக்குரிய மனையறக் கடமைகளோ மிகப்பல. பெற்ற மக்களைப் பேணி வளர்த்தல், மனைநோக்கி வரும் விருந்தினர்களை வரவேற்று வழிபடுதல் போலும் கடமைகளால் நம் கை ஓய்வதில்லை. உள்ள பொழுது நமக்கு இவற்றிற்கே போதவில்லை. அவ்வாறாகவும், நீ அவற்றையெல்லாம் விட்டுவிட்டு வீணே, “அவள் அப்படி; இவள் இப்படி,” என்பனபோலும் பயனில் சொற்களைச் சொல்லித் திரிகின்றனை; ஆண்டு முதிர்ந்தும் உனக்கு அறிவு வரவில்லையே; உன் மடமையை என்னென்பேன்? தோழி! நமக்குரிய இல்லறக் கடமைகளை இழுக்கற ஆற்றிப் புகழ்பெறுவதல்லது பிறரைப் பழி கூறிக்கொண்டிருத்தலா நமக்கு அழகு?” எனக் கூறி அவள் வாயடைத்தாள்.

தோழியின் சுடுசொல் கேட்டுக் கொதித்தெழுந்த அவள் மனம், தோழியை அவ்வாறு கடிந்துகொண்ட பின்னரும் அமைதியுற்றிலது. தன் கண்முன் நிகழும் ஒரு நிகழ்ச்சியை அவளுக்குக் காட்டினாள். கறுத்து நீண்ட கொம்புகளையுடைய ஒரு பெண்ணெருமை, தன்னை ஓம்பும் உழவன் தாம்பால் பிணித்து வைத்துள்ள தன் கன்றை விட்டு அகலாது, அதன் அருகில் கிடந்தவாறே, அதற்கு அணித்தாக உள்ள புல்லை மேய்ந்து கொண்டிருந்தது. “தோழி! இக்காட்சி உன் உள்ளத்தில் ஆழப் பதிக” எனக் கூறுவாள்போல் அதைக் காட்டு முகத்தான், “தோழி! அப்பெண்ணெருமை, தான் பெற்ற தன் குழவிக் கன்றைப் பாலூட்டி வளர்க்கவேண்டுவது தன் கடமை; அதன் பசி போக்கும் பாலைப் பெரும் அளவில் சுரக்க வேண்டும்; அதற்கு நிறையப் புல் தின்ன வேண்டும் என நினைந்து, அதே நினைவாய்ப் புல்லை நிறைய

மேய்கிறது. அந்நினைவால், அது தன் நலத்தை—காளையின் திரிந்து களித்து வாழும் வாழ்வை—மறந்துவிட்டது; கன்றைக் காக்க வேண்டும் என்ற கடமையுணர்ச்சியே அதன் கண்முன் நிற்கிறது. தோழி! பிறர் நலம் பேணும் ஆர்வத்தில் தன்னலம் மறந்து கடனாற்றும் உணர்ச்சி எருமை போலும் உயிரினங்களிடத்திலும் இருப்பதைக் காணும் நான் மட்டும் அவ்வுணர்ச்சி கொள்ளாதிருப்பேனோ? மனையறக் கடமைகளை மறந்து, கணவன் தரும் இன்பத்திற்காக ஏங்கி நிற்பேனோ? நில்லேன்; மக்களைப் பேணியும், மனையறக் கடமைகளை ஆற்றியும் பெறும் புகழை குறிக்கோளாய் இருப்பேன்; இதை அறியாது, நீ, பயனில் சொல் பாராட்டிப் பேதமையுறுகின்றனை" என்ற தன் உள்ளத் துணிவைக் கூறுமல் கூறி வெளியிட்டாள்.

அவள் சினந்துகொண்டாளாயினும், 'நான் கருதிய கருத்து நிறைவேறிவிட்டது; என் கடமையைத் தவறின்றி முடித்துவிட்டேன்' எனும் அமைதியால் தோழி உள்ளுக்குள்ளே நகைத்துக்கொண்டாள்.

"இது மற்று எவனோ தோழி! துனியிடை
இன்னர் என்னும் இன்னுக் கிளவி?
இருமருப்பு எருமை ஈன்றணிக் காரான்
உழவன் யாத்த குழவியின் அகலாது
பாஅல் பைம்பயிர் ஆரும் ஊரன்
திருமனைப் பலகடம் பூண்ட
பெருமுது பெண்டிரேம் ஆகிய நமக்கே." a

---

a குறுந்தொகை : 181, கிளிமங்கலம் கிழார்.

துனியிடை - ஊடற் காலத்தில்; இன்னர்-இத்தகையர்; கிளவி – சொல்; இருமருப்பு-கரிய கொம்பு; காரான்–பெண்ணெருமை; யாத்த–காட்டிய; பாஅல்–பக்கத்தில் உள்ள; ஆரும்–உண்ணும்; கடம்–கடமைகள்.

## இளைஞன் இனியனாதல் நின் அளவில் மட்டுமோ?

கணவனின் தகாவொழுக்கத்தால் உள்ளத்தில் துயர் மிகினும், தன் துயர் அறிந்து ஊரார் அவனைப் பழிப்பதற்கு அஞ்சி, அதைத் தன் அகத்தே அடக்கி அவள் வாழ்ந்திருந்தாள். நாட்கள் சில கழிந்தன. பரத்தை வீடு போயிருந்த இளைஞன் உள்ளம், அப்பரத்தை தரும் இன்பத்தில் வெறுப்புற்றமையாலும், மனையில் மனைவி மனவேறுபாடுற்றனள் என்ற செய்தியை அறிந்தமையாலும் வீட்டிற்கு வர விரும்பினான் அவன். ஆனால் தகாவொழுக்கம் மேற்கொண்டு அவன் செய்த தவறு அவன் உள்ளத்தை உறுத்திற்று! என் தவறு கண்டு அவள் எவ்வளவு வருந்தியிருப்பள்; என்பால் அவள் வெறுப்புற்றிருப்பள் என்ற எண்ணம் எழவே, அவன் நெஞ்சு, மனைபுகுந்து மனைவியைக் காண நடுங்கிற்று. அதனால் ஆண்டுச் செல்வதன் முன் அவள் நலத்திலும் தன் நலத்திலும் ஒருங்கே ஆர்வம் காட்டும் சிலரை அவள்பால் அனுப்பி அவள் சினத்தைப் போக்குதல் நலமாம் என எண்ணினான்; பாணன் ஒருவனை அழைத்து மனைவிபால் தூது அனுப்பினான்.

இளைஞன் மனை புகுந்த பாணன், ஆங்கு அப்பெண்ணின் நிலையினைக் கண்டான்; கணவன்பால் கொண்டுள்ள சினத்தின் கடுமையை அவள் முகத்தோற்றத்தில் கண்டு அவளை அணுக அஞ்சினான். அதனால் அவள் தோழிபால் மெல்லச் சென்றான். வந்த செய்தியைக் கூறினான். மனைவியை மறந்து பரத்தை பின் திரியும் இளைஞன் கொடுஞ்செயலை எடுத்துக் காட்டி இடித்துரைத்தாள் அவள். அது கேட்ட பாணன், "தோழி! இளைஞன் நீங்கள் கருதுமாறு கொடியவனல்லன்; இவ்வூர் வாழ் மக்கள் அனைவரினும் அவன் இனிமைப் பண்பை நனி மிகப் பெற்றுளான்; அவன் உள்ளம் என்றும் இனியவே எண்ணும்; அவன் நாக்கு என்றும் இனியவே கூறும்; எப்பொழுதும் அவன் இனியவே செய்வன்; இவ்வாறு எல்லோர்க்கும் இனியனாய அவன், இவளிடத்து மட்டும் அன்பு குறைந்து விடுவனோ? தோழி, இவள் பால் அவன் காட்டும் அன்பிற்கு அளவு காணல் அரிதினும் அரிதாம். அத்துணைப் பேரன்பு

கொண்டுள்ளான் அவன்; ஆதலின் அவனை வெறுத்து ஒதுக்குவது அழகன்று" எனக் கூறினன்.

பரத்தை பின் திரியும் ஒருவனுக்கு, மனைவிபால் எந்த அளவு அன்பு இருக்கும் என்பதையும், மனைவியை வருந்த விடுத்து வேடிக்கை பார்க்கும் ஒருவன்பால் இனிமைப் பண்பு எந்த அளவு பொருந்தியிருக்கும் என்பதையும் அறிந்திருக்கும் தன்முன், பாணன், இளைஞனைப் பாராட்டுவதைக் கேட்ட தோழி நகைத்தாள். இளைஞன் இனியனும் அல்லன்; அன்புடையவனும் ஆகாது என்பதை அப்பாணனுக்கு விளங்க உரைத்து அவனை விரட்ட விரும்பினள். ஆனல் அதை வெளிப்படைச் சொற்களால் கூறுவது முறையாகாது என உணர்ந்தாள்; அதனால், "பாண! சூல்முதிர்ந்து கருவுயிர்க்கும் காலத்தை எதிர்நோக்கிப் பெடைக்குருவி காத்திருக்க, தந்தையாம் தகுதி தனக்கு வாய்க்கப் போகிறது என்ற நினைவால் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கத் துள்ளு நடை போடும் சேவற்குருவி, தன் காதற்பெடை கருவுயிர்த்தற்கு ஏற்ப இனிமையுடையதாமாறு தன் கூட்டினை மாற்றி அமைக்க விரும்பிக், கூட்டினை மெத்தெனை ஆக்க உதவுவது கரும்பின் வெண்ணிறப் பூக்களே என அறிந்து, அக்கரும்பு விளைந்து கிடக்கும் கழனிக்கு விரைந்து சென்று, ஆங்குத் தேன் நிறைந்த தேனடைகள் பல, கருப்பங்கழிகளில் கட்டப் பெற்றிருப்பதைக் கண்டும், அதன்பால் கருத்தினைச் செலுத்தாது, அக்கரும்பின் வெண்ணிறப் பூக்களையே வாயால் கோதிக் கவ்விச் செல்லும் காட்சிச் செல்வம் மிக்கது உன் தலைவனுக்குரிய நாடு" என இளைஞன் நாட்டுவளத்தைப் பாராட்டுவாள்போல் பாராட்டி, "பாண! தித்திக்கும் தேனடைகளைக் கண்டும் அதன்பால் கருத்தினைச் செலுத்தாது, தன் பெடைக்குருவி கருவுயிர்த்தற்கேற்ற இனிய இடம் அமைக்க உதவும், கரும்பின் மணமில்லா மலரைக் கொய்வதிலேயே கருத்தினைச் செலுத்தும் பேரன்பு வாய்ந்த குருவி வாழும் ஊரில் வாழ்ந்தும், உன் தலைவனுக்கு அவ்வன்புள்ளம் வாய்க்கவில்லையே; மனைவி விரும்புவதை

அவள்வாய்திறந்து கேளாதமுன்னரே கொடுத்து இன்புறுத்த வேண்டிய இளைஞன், அவளை வருந்த விடுத்துப் பரத்தை யைத் தேடிச் சென்றுவிட்டான். அத்தகையானைப் பேரன் புடையவன் எனப் பாராட்டுகின்றனை நீ; குருவி, இனிமை பயக்கும் தேனடை இருக்க அதை விடுத்து, மணம் தருவதும் இல்லாத மலரைக் கொய்வதை மட்டும் காண்பவர், அது அவ்வாறு செய்வதற்குக் காரணமான, அக்குருவிகளின் வாழ்க்கை வளத்தை அறியமாட்டாமையால், அச்சேவற் குருவியைப் பின்பற்றி, மனையின்கண் இருந்து இல்லறம்நம்பி இனிமை பயக்கும் இல்லாள் இருக்க, அவளை மறந்து, தன் பால் அன்போ, தன் உள்ளத்தில் கற்புணர்ச்சியோ இல்லாத கீழ்மைக் குணத்தளாய பரத்தையின்பின் திரியும் அறிவற் றுப் போவர்; அத்தகையாருள் உன் தலைவனும் ஒருவன்; அவன்பால், பிறர் கண்டு பாராட்டத்தக்க பண்புகள் எங்கே இருக்கப் போகின்றன?" எனக் கூறுமல் கூறி இளைஞனைப் பழித்தாள்.

"யாரினும் இனியன்; பேரன் பினனே;
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூல்முதிர் பேடைக்கு ஈன்இல் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறு வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணன் வாயே." ௨

---

௨ குறுந்தொகை: 85. வடம வண்ணக்கண் தாமோ தரன்.

பாணன்வாயே இனியன் அன்பினன் என மாற்றுக. ஈன்இல்-கருவுயிர்த்தற்கு ஏற்றஇடம்; இழைஇயர்-அமைக் கும்பொருட்டு; தேம்-தேன் அடைகள்; பொதிகொண்ட- கட்டப்பெற்ற; தீம்கழை-இனியகோல்; நாறு-மணக்காத; கொழுதும்-கோதி எடுக்கும்.

குறிப்பு மொழிகளால், இளைஞனின் குறைகளைச் சுட்டிக் காட்டிய தோழி, பின்னர், "பாண! உன் தலைவன் பண்பு இத்தகையதாகவும், நீ மட்டும் 'இளைஞன் எல்லோர்க்கும் இனியன்; எவர் மாட்டும் அன்புடையன்' எனப் புகழ்ந்து பாராட்டுகின்றனை; இளைஞன் இனியனாதலும், அன்புடையனாதலும் உன் வாயளவில் மட்டுமே காணப்படுவதுபோலும்" என எள்ளி நகைத்து அவன் வேண்டுகோளை மறுத்து, அவனைப் போக்கினாள்.

## நின் இன்றி வாழும் வகை அறியேம் ஐய!

பாணன் தூது பயனற்றுப் போய்விட்டமை கண்ட இளைஞன், இனி நேரில் நாமே செல்வது நலமாம் எனத் துணிந்தான். அவ்வாறே வந்து வீட்டிற்குள் புகுந்தான். அப்போது, அவன் மனைவி அகமனையிடத்தே இருந்தாள். மனைக்குள் புகுந்து விட்டானேனும், மனைவியைக் காண நடுங்கிற்று, மாசற்றுப் போன அவன் நெஞ்சு; அதனால் மனை புகாது, தோழியின் துணைநாடி அவள்பால் சென்றான். பணிந்த மொழிகளால் தன் பிழைகளை ஒப்புக்கொண்டு அவற்றையெல்லாம் மன்னித்து ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொண்டான்; பாணன் வழி விடுத்த அவன் வேண்டுகோளை மறுத்த துணிவு, தோழிக்கு, இளைஞன் நேரில் வந்து நின்று வேண்டியபோது உண்டாகவில்லை.

கணவன் மனைவியர்க்கிடையே பிறக்கும் ஊடலின் இயல்பினைத் தெளிய உணர்ந்தவள் அத்தோழி. கணவன் மனைவிமீது கொள்ளும் சிறு சினமோ, மனைவி கணவன்மீது கொள்ளும் சிறு சினமோ சிறிது பொழுதே இடம் பெறுதல் வேண்டும். அது சிறிது நீளினும், வேறுபாட்டுணர்வு அவர் உள்ளத்தில் வளர்ந்து பெருகிவிடும்; அந்நிலை உண்டாயின், அவர் இருவரும் கூடி வாழ்தல் அறவே இல்லாகிவிடும்; ஆகவே, அச்சினத்தை வளரவிடாது, ஒருவர்க்கு ஒருவர் தாழ்ந்து போதல் வேண்டும். தோழி, காதலர்களின் இம்மன இயல்பினை உணர்ந்திருந்ததனால், பரத்தையர் உறவால்

கணவன் மனைவியர்க்கிடையே உண்டாயுள்ள இவ்வெறுப் புணர்ச்சியை வளரவிடுவது கூடாது; இருவரும் மீண்டும் ஒன்றுகூடி ஒருமனப்பட்டு வாழத் துணைபுரிதல் வேண்டும்; அவர்கள் அக்கூட்டம்பற்றிக் கருத்தின்றி இருப்பினும், அதை முன்னின்று முயன்று முடிக்கவேண்டிய தான், அவர்கள் தாமாகவே ஒன்றுபடும் அந்நிலைக்கு வரும்பொழுது, அதற் குத் தடையாய் இருத்தல் கூடாது; பிழை உணர்ந்து போக் கிய பாணன் தூது பயனற்றுப் போனதைக்கண்டே கலங்கி யிருப்பவன், நேரில் வந்து வணங்கி நிற்கும் இப்போதும் மறுத்து ஒதுக்கப்பெற்றால் மனம் நொந்துபோவன்; அதனால் இப்பிரிவு நிலையாகவே நிலைத்துவிடின் என்னும் என்றெல் லாம் எண்ணி அஞ்சினாள்; மேலும், முன்னொருகால் பிழை புரிந்தவர், பின்னர்த் தம் பிழை உணர்ந்து வருந்திப் பொறுத்தருளுமாறு வேண்டுவராயின், அப் பிழைகளைப் பொறுத்து அவரை ஏற்றுக்கொள்வதே மாண்புமிகு பெரி யோர்க்கு மாட்சியாம் எனக் கூறிற்று அவள் உள்ளம். அதனால் இளைஞனை ஏற்றுக்கொள்வதே நலமாம் எனத் துணிந்தாள்.

இளைஞனை ஏற்றுக்கொள்ள இசைந்தாளேனும் தோழி உள்ளம், அவன் கொடுமையால் தாம் உற்ற துயரை மறக்க வில்லை. ஆடவர் கொடுமையே செய்யினும், அவரையே நம்பி வாழவேண்டுமாறு அமைந்துபோன பெண்களின் வாழ்க்கை நிலையை நினைந்து வருந்திற்று; அதனால் அவனை ஏற்றுக் கொள்ளும் அந்நிலையிலும் வருந்தும் தம் உள்ளத்தை அவ னுக்கு விளங்க உணர்த்தி, அறிவூட்டி, இனியேனும் இத் தகைய பிழைகள் நிகழாவாறு நின்று காப்பாயாக எனக் குறிப்பாகவேனும் அவனுக்குக் கூறி அறிவூட்ட வேண்டும் எனத் துணிந்தாள்.

வாயில் வேண்டி வந்து நிற்பவனை வரவேற்று மனை யகத்தே கொண்டு சென்றாள்; பின்னர் அவனை வணங்கி நின்று, "தலைவ! எல்லாம் உணர்ந்த பெரியோன் நீ; நீயே பிழை புரிந்துவிட்டாய்; உன் பிழைபட்ட வாழ்வால் நாங்கள்

பெரிதும் வருந்தினோம்; வாடிவிட்டோம்; ஆனால் எங்களை வருந்தவிட்ட உன்னை வருத்தும் உரிமை எமக்கு இல்லை. எங்களுக்குத் துயர்தந்த உன்னைவிட்டுப் பிரிந்துபோய்த் தனித்து வாழும் உரிமை எங்களுக்குத் தரப்பட்டிலது; நீ கொடுமை மேல் கொடுமை புரியினும் நாங்கள் உன் காலடியில் வீழ்ந்து கிடக்கவேண்டியவராகிவிட்டோம்; கொடுமையே புரியும் கணவனை அண்டி வாழ்தல் அல்லது, அவனைவிடுத்துத் தனித்து வாழும் உரிமை மனைவிக்கு இல்லை. அதனால் பரத்தையர்மீது காதல் கொண்டு, எம்மைக் கடுந்துயர்க்கு உள்ளாக்கிய உன்னை ஏற்றுக்கொள்ள வேண்டுவது எங்களுக்குக் கடமையாகிவிட்டது.

“அன்ப! நீ இல்லாக்குறையால் உண்டான மனக் கவலையை ஒரு சிறிது மறக்கவேண்டி, நின் வயல்களைச் சுற்றி வரும் வழக்கம் மேற்கொண்டோம்; ஆங்கு நாங்கள் கண்ட காட்சியே, எமக்குக் கணவன் பிழையே புரியினும் அவன் காலடியில் வீழ்ந்துகிடவுங்கள் என அறிவுரை வழங்கிற்று; நன்செய் நிலங்களைச் சுற்றிவரும் வழக்கமுடைய நாங்கள், ஒருநாள் அந்நிலங்களில் மலர்ந்து மணக்கும் நெய்தல் மலர்களின் அழகு மிகு தோற்றத்தைக் கண்டும், அவற்றினின்றும் எழுந்து வீசிய நலம் மிகு நறுமணத்தை நுகர்ந்தும் களித்துத் திரும்பினோம்; சின்னாள் கழித்து ஆங்கு ஒரு நாள் சென்றோம்; அப்போது நாங்கள் கண்ட காட்சி, எம்மைக் கண்ணீர்விட்டுக் கலங்கப் பண்ணி விட்டது. மணம் வீசி மகிழ்ச்சி தந்த அம்மலர்கள், வயல் ஓர வரப்புகளில் பறித்துப்போடப்பெற்று, வருவார் போவோரால் மிதிப்புண்டு அழிந்துபோன காட்சியைக் கண்டு கலங்கிவிட்டன எம் கண்கள். வயல்களில் புகுந்து களை களையும் உழவர், அவற்றைக் களைந்து அழித்துவிட்டனர் என அறிந்து வருந்தினோம்; இனி, நிலம் நெய்தல் மலர்ந்து மணக்காது எனும் மனக்குறையோடு வீடு திரும்பினோம். இன்று காலை மீண்டும் ஒருமுறை அவ்வயற்பக்கம் சென்றிருந்தோம். ஆங்கு நாங்கள் கண்டது எங்களை வியப்புக் கடலில் வீழ்த்தி விட்டது. அந்த நிலத்தில் நெய்தல் மலர்கள் மீண்டும் மலர்ந்து மணப்பதைக் கண்

டோம்; எந்த நிலத்திலின்றும் தாங்கள் அகற்றி அழிக்கப் பெற்றனவோ, அந்த நிலத்திலேயே மீண்டும் மலர்ந்து மணம் நாறும் இந்நெய்தல் மலர்களின் மானங்கெட்ட செயலை என் னென்பது என எண்ணி, அம்மலர்களை எளியவாறே வீடு வந்து சேர்ந்தோம்.

"அன்ப! நெய்தலின் செயல்கண்டு பிறந்த நகைப் புணர்ச்சி எங்கள் நினைவை விட்டு இன்னமும் நீங்கவில்லை. அந்நிலையில் நீ வந்து நிற்கின்றாய்; உன்னை ஏற்றுக்கொள்ளத் துடிக்கிறது எங்கள் பெண் உள்ளம். அழகாலும் அறிவாலும் ஊரார் போற்ற வாழ்ந்தவளின் அழகும் அறிவும் பாழாக மாறு அவளை வெறுத்து ஒதுக்கிவிட்டுத் திரிந்தாய் நீ; வெறுத்துவிட்டுப் பலநாள் மறந்திருந்த நீ மீண்டும் வந்த வுடனே, உன்னை வரவேற்கத் துடிக்கிறது எங்கள் பெண் உள் ளம்; அவ்வாறு வாழவேண்டிய நிலையில் பெண்களை வைத்து விட்டது இவ்வுலகியல். நெய்தலின் செயல் கண்டு நகைத் தோமே நாங்கள். இப்போது இம்மங்கையர் குலத்தின் மானம் கெட்ட செயல் கண்டு என் செய்ய வல்லேம்; அந் நெய்தலைவிட நாங்கள் எந்த அளவில் உயர்ந்துவிட்டோம், கொடுமை செய்துவிட்டார்கள் என அறியும் அறிவு அந்நெய் தலுக்கு இல்லை. அதனால், மீண்டும் மலர்ந்த அதன் செயல் கண்டு நகைப்பது பொருந்தாது; அஃது ஒருவாறு அமைதியும் உடைத்து. ஆனால் எங்கள் நிலை அத்தகையதல்லவே, பிழை புரிந்து விட்டாய் நீ என்பதை அறிகிறோம்; அதற்காக வருந் துகிறோம்; இருந்தும் உன்னை ஏற்றுக்கொள்ளத் துடிக்கிறதே இப்பெண்ணுள்ளம்; இதை என்னென்பேம்" எனப் பெண் களின் பற்றுக்கோடற்ற வாழ்க்கையின் அவல நிலையை எடுத்துக் காட்டி, அத்தகையாரை வருந்தவிடுவது அவர்களை வாழ்விக்க வந்த ஆடவர்க்கு அறிவுடைமையாகாது என் பதை அறிவுறுத்தினாள்.

"கைவினை மாக்கள் தம் செய்வினை முடிமார்
அரும்பு உண மலர்ந்த வாசம் கீழ்ப்பட
நீடின வரம்பின் வாடிய விடினும்

கொடியரே நிலம் பெயர்ந்து உறைவேம் என்றாது
பெயர்த்தும் கடிந்த செறுவில் பூக்கும்
நின்ஊர் நெய்தல் அனையேம்; பெரும!
நீ எமக்கு இன்னாதன பல செய்யினும்
நின்னின்று அமைதல் வல்லா மாறே.” [a]

## அன்பு அன்று இருந்தது; இன்று இல்லை

இளைஞனுக்கு இசைவு தந்த தோழி, அவனை வாயிற்புறத்திலேயே இருக்குமாறு பணித்துவிட்டு உள்ளே சென்றாள். தன்பால் கொண்ட அன்பை மறந்து தூர்த்தவொழுக்கம் மேற்கொண்டு திரியும் கணவன் கொடுமையை நினைந்து கண்ணீர் சொரிந்து கலங்கிக் கிடப்பவள் அருகிற்சென்று அமர்ந்தாள். இளைஞன் வந்து வாயில் வேண்டி நிற்பதையும், அவன் வேண்டுகோளைத் தான் ஏற்றுக்கொள்ள நேர்ந்ததையும் எடுத்துக் கூறி, “பெண்ணே! இளைஞன் பிழை புரிந்து, சில நாள் பிரிந்திருந்தானாயினும், அவன் உன்பால் கொண்டுள்ள அன்பு சிறிதும் குறைந்திலது; மேலும் அவன்பால் நீயும் பேரன்பு கொண்டுள்ளனை; ஆகவே அவனை ஏற்றுக்கொள்வதே அறிவுடைமையாகும்” என நயமாகக் கூறினாள்.

கணவன் என்பால் கொண்டுள்ள அன்பு குறைந்திலது என்ற தோழியின் சொற்கள் அப்பெண்ணின் சிந்தனையைக் கிளறிவிட்டது. அவன் தன்னை முதன் முதலாகக் கண்டு காதல் கொண்ட காலத்தில், அவன் தன்பால் கொண்டிருந்த

---

[a] குறுந்தொகை : 309. உறையூர்ச் சல்லியன்குமாரன்

கைவினை மாக்கள்-தொழில் புரியும் உழவர்; முடிமார்-முடித்தற் பொருட்டு; நீடின-நீண்ட; பெயர்ந்து-நீங்கி; பெயர்த்தும்-மீண்டும்; கடிந்த-களைந்து நீக்கப்பெற்ற; செறுவில்-வயலில்; வல்லாமாறு-வன்மை இல்லாமையால்; வல்லாமாறு நெய்தல் அனையேம் என மாற்றுக.

அன்பின் பெருமை அவள் நினைவிற்கு வந்தது. அன்று, அவள், தந்தை நாட்டில் வாழ்ந்திருந்தாள். அந்த ஊருக்கும், இன்று வாழும் இளைஞன் ஊருக்கும் இடையே எவ்வளவோ தொலைவு; பல மலைகளையும், பல காடுகளையும் இடையிலே கொண்டு நனி மிக நீண்டிருந்தது அவ்வழி; வழி நீண்டுளதே என்பதை நினைத்துப் பாராமல், மலைகளைக் கடந்தும், காடுகளின் ஊடே நுழைந்தும், காட்டாறுகளை நீந்தியும் செல்ல வேண்டுமே என எண்ணிக் கலங்காமல் இடைவழியில் உண்டாம் இடையூறு கண்டு அஞ்சாமல், இரவென்றும் பகலென்றும் பாராமல் வந்து, தன்னைக் கண்ட அவன் அன்பின் பெருமை அவள் நினைவிற்கு வந்தது. அன்று அத்தனை இடையூறுகள் இருக்கவும், அவற்றையெல்லாம் மதியாது வந்து எப்பொழுதும் தன்னையே சுற்றிச்சுற்றி வளைய வந்து கொண்டிருந்தவன் இன்று தன்னை அறவே மறந்து திரிவதை, அன்று அவன் காட்டிய அன்பு இன்று இல்லாமையை எண்ணி நெடுமூச்செறிந்தாள். அவள் கண்கள் ஆறுகப் பெருகின. அன்று அவன் காட்டிய பேரன்பையும், இன்று அவன்பால் காணலாம் அன்பின்மையையும் அறிந்த தோழி, "அவன் அன்பு குறைந்திலது; அவன்பால் நீயும் அன்புடையை; ஆகவே அவனை ஏற்றுக்கொள்" எனக் கூறுகின்றனளே; என்னே இவள் பேதைமை! என எண்ணிற்று அவள் நெஞ்சு.

வாயில் வேண்டி நிற்கும் தோழியின் முகத்தை நோக்கினாள்; "தோழி! அவர்பால் நான் அன்பு கொண்டிருந்தது உண்மை; அது பண்டு; இன்று அது அழிந்துவிட்டது. தோழி! இன்று நாங்கள் இருவரும் ஒரு மனையில் வாழ்கிறோம். எங்கள் இருவர்க்கும் இடையே இருந்து, ஒருவரையொருவர் காணவொட்டாது தடுப்பவர் எவரும் இல்லை; அவரும் நானும் ஓர் ஊரிலே வாழ்கிறோம்; களவுக் காலம்போல் மலைகள் இடையிட்டுக் கிடக்கும் தொலை நாடுகளுக்குப் போய்விடவில்லை; காடுகள் இடையிட்டுக் கிடப்பதால் ஒன்று ஒன்றிற்குப் புலனாகாத வெளியூரில் சென்று

வாழவில்லை; இந்த ஊரிலேயே வாழ்கிறார்; இத்துணை அண்மையில் வாழ்ந்தும், அவர் என்னைக்கண்டு எத்தனையோ நாட்கள் ஆயின. ஒரோவொருகால் கண்டு, அவரை நானே அணுகினும், தவவொழுக்கம் மேற்கொண்டு தூய்மையுற்றுக் கிடக்கும் பெரியோர்கள் தம்மை நெருங்கிய விடத்து, தகாவொழுக்கத்தால் தூய்மை கெட்டுத் திரிபவர், அப்பெரியோர்களின் தூய்மையையும், தங்கள் தூய்மை கெட்ட தன்மையையும் நினைந்து, தங்களை அவர்கள் அணுகுவதற்கு அஞ்சி, அவர்கள் அணுகினும் தாங்களாகவே அவரின் விலகி அப்பாற் செல்வதுபோல், அவர் என்னை விடுத்து அகன்று அகன்று வாழ்கிறார்; தோழி! அவருக்கு என்பால் அன்பு குறைந்துவிட்டது; பண்டு, பேரன்பு காட்டினார்; அதனால் நானும் அவர்பால் தலையாய அன்பு காட்டினேன்; இன்று அவருக்கு என்பால் அன்பு அறவே இல்லை; இந்நிலையில் அவர்பால் அன்பு கொள்ள என் உள்ளம் எவ்வாறு இசையும்" எனக்கூறி அவள் வேண்டுகோளை மறுத்துவிட்டாள். மறுத்ததோடு, தனக்குத் தவவொழுக்கம் மேற்கொண்ட பெரியோரையும், இளைஞனுக்கு ஒழுக்கம் கெட்ட சிறியோரையும் உவமை கூறும் முகத்தான் இளைஞன் ஒழுக்கக்கேட்டைக் குறிப்பால் கண்டிக்கவும் துணிந்தது அவள் உள்ளம்.

"மலையிடை இட்ட நாட்டரும் அல்லர்;
மரம் தலை தோன்றா ஊரரும் அல்லர்;
கண்ணிற் காண நண்ணுவழி இருந்தும்
கடவுள் நண்ணிய பாலோர் போல
ஒரீஇ ஒழுகும் என்னைக்குப்
பரியலென்; மன்யான்; பண்டு ஒருகாலே." a

---

a குறுந்தொகை: 203. நெடும்பல்லியத்தனார்.

நண்ணுவழி–அண்மையில்; கடவுள்–முனிவர்; ஒரீஇ–நீங்கி; என்னை–என் தலைவன்; பரியலென்–அன்பு கொண்டிருந்தேன்; மன்–அது இப்போது கழிந்தது.

நீ யாகியர் என் கணவனே :

"தோழி! அவர்பால் பேரன்பு கொண்டிருந்தேன்; அது ஒரு காலத்தில். இன்று அது இல்லை" என அப்பெண் கூறியது கணவன்பால் அன்பின்மையால் அன்று, அவன் தன்னை மறந்து திரிகின்றனனே என்ற வெறுப்புணர்ச்சியால் என்பதை அறிந்தவள் அத் தோழியாதலின், "கணவன் வந்து வாயிற்கண் நிற்கின்றான்; அவன் குற்றம் கடிந்து ஏற்றுக்கொள்வது உன் கடன்" என்றதன் அறிவுரையை ஏற்க மறுத்தவள், அவனை நேரில் செல்வனாயின் ஏற்றுக் கொள்வள் எனத் துணிந்தாள். அதனால் அவளை விடுத்து இளைஞன்பால் சென்று "அன்ப! நின் மனைவி என் வேண்டு கோளை மறுத்துவிட்டாள்; என்றாலும், உன்னை நேரிற் காணின் அவள் சிந்தை குளிர்ந்துவிடும்; ஆகவே நீயே சென்று காண்க" எனக்கூறி இளைஞனை, அப்பெண்ணின்பால் அனுப்பினாள். அவனும் அவ்வாறே சென்று, அவள்முன் நின்றான்.

வந்து நிற்பானைக் கண்டாள் அப்பெண்; அவ்வளவே. அவன்பால் அவள் கொண்டிருந்த கோபம் அவ்வளவும் அறவே மறைந்துவிட்டது. அவன் செய்த குற்றம் கொடுமை அவ்வளவையும் மறந்துவிட்டாள். அவன் செய்த கொடுமை களுள் எதுவும், அவள் மனத்திரையில் எழவில்லை. தன்னை மறந்து திரிந்தது, பரத்தையர் உறவு கொண்டு வாழ்ந்தது, அதனால் இரவு பகலாகத் தான் துயர் உற்றுக் கிடந்தது இவற்றுள் எதையும் அவள் எண்ணிப் பார்த்திலள். மாறாக, அவன் பெருமை, பேரழகு, அவன் தன்பால் கொண்டுள்ள பேரன்பு, அப்பேரன்புத் தொடர்பால் தோன்றும் பேரின்பம் ஆகிய இவையே அவள் அகத்தில் நிறைந்து வழிந்தன. அத னால், வந்தால் தன் வான் துயர் காட்டி வாய் வலிக்குமளவும் வசைபாடி விரட்டத் துணிந்து அவன் வருகையை எதிர் நோக்கியிருந்தவள், வாயடைத்துப் போனாள். அவன் உருவம் அவள் கண்ணிற் பட்டவுடனே அவள் அகம் மலர்ந்து விட்டது; அவ்வகமலர்ச்சி முகத்தின் வழிக் காட்சி அளிக்க எதிர்சென்று வணங்கி வரவேற்றாள்.

இருவரும் பள்ளிபுக்கனர்; இருவர் வேட்கையும் ஒருவாறு தீர்ந்தது. வேட்கை தீர்ந்த அவள் உள்ளத்தில், அறிவு மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறிக்கொண்டது. அதனால் அவன் செய்த குற்றம் அவள் நினைவிற்கு வந்தது. குற்றம் புரிந் தாரைக் கொடுமை செய்யாது விடுதல் கொடுங்கோலாட் சிக்குக் கால்கோள்விழா எடுத்தல் போன்றதாம் என்றது அறிவு. அதனால் ஒழுக்க வரம்புமீறிய அவன் கொடுஞ் செயலையும், அதனால்தான் உற்ற துயரையும் அவனுக்கு எடுத்துக்காட்டி, அத்தகைய கேடு இனியும் நேராவாறு நின்று காப்பாயாக என்பதை அவனுக்கு அறிவுறுத்தல் வேண்டும் என விரும்பினாள். விரும்பியவள், தான் செய்த குற்றத்தை எண்ணி இயல்பாகவே வருந்தியிருக்கும் அவன் உள்ளம், அக்குற்றத்தைப் பிறர் எடுத்துக்காட்டி இடித் துரைத்த வழி மேலும் துயர் உறும் என அறிந்து, அறிவுறுக்க விரும்பிய அறிவுரையை, அவன் உள்ளம் நோகாவாறு, பணிந்த மொழிகளால் இனிமையுறக் கூற விரும்பினாள்.

"உலகில், உயர்ந்த பண்புகளில்—மக்கட் பிறவிக்கு உரிய என விதித்த ஒழுக்க நெறிகளில்-வழுவாது நிற்கும் ஒரு சிலர் வாழ்வதினாலேயே உலகியல் நடைபெறுகிறது. அவ்வொரு சிலரும் அவ்வொழுக்க வரம்பை மீறி வழுக்கிவிடுவராயின், உலகியல், அழிந்துவிடும், அதைப்போல் உன் அன்புத்தளை என்னை வளைத்துக் கிடப்பதினாலேயே நான் வாழ்கிறேன். அத்தளை சிறிது அறுந்துவிடினும் நான் வாழ்விழந்து போய் விடுவேன்" எனக் கூற விரும்பினாள். ஆனால் சொல்லும் முறை கற்ற அவள் நல் உள்ளம் அதை அவ்வாறே கூறாது, நீலமணியின் நிறத்தைத் தோற்கடிக்குமாறு கறுத்துத் தோன்றும் கடல் நீரையும், கடற்கரையில் மலர்ந்து மணக் கும் கழிமுள்ளிச் செடியையும் கொண்ட அவன் நாட்டு வளத்தை நாவாரப் பாராட்டி அப்பாராட்டின் வழியே, "அன்ப! கடல் நீர் தன் எல்லைக்குள் நிலை பெயராது நிற்பதி னாலேயே அது ஆழம் மிக்கு அழகிய நீல நிறம் பெற்றுப் பாராட்டப்பெறுகிறது. அதனாலேயே அதன் கரையில்

கழிமுள்ளிச் செடிகளும் மலர்ந்து மணம் நாறுகின்றன. மாறாக, கடல் நீர் தன் எல்லை கடந்து கரைநோக்கிப் பாய்ந்துவிடுமாயின், அதன் நீல நிறமும் நில்லாது மறைந்து போம்; கடல் நீர் எனும் பெயரும் அதற்கு இல்லாகிவிடும்; கரையையோ, அக்கரையில் கழிமுள்ளிச் செடியையோ காண்பதும் இல்லாகிவிடும்; அதைப்போலவே, நீ நின் ஒழுக்க வரம்பை மதியாது போனால் நீயும் மாண்பிழந்து போவாய்; நானும் மாண்டு போவேன்" என்பதைக் கூறாமல் கூறி அறிவுறுத்தினாள்.

இவ்வாறு குறிப்பு மொழிகளால் கணவன் குற்றங்களை எடுத்துக் காட்டி இடித்துரைத்தவள், அவன் உள்ளம் பிற பரத்தையர் போலும் பிறமகளிர் பின்சென்று திரிந்ததையும் அவருள் சிறந்தாள் ஒருத்தியை மணக்கத்துணியுமளவு அவன் உள்ளம் அறிவிழந்து போனதையும், அந்நிலையிலும், அவன் அன்பு ஒன்றையே நம்பித் தான் உயிர் வாழ்ந்திருந்த உயர்வையும் எடுத்துக் கூறி இடித்துரைக்க விரும்பினாள்.

அதனால், அவன் நாட்டு நலனைப் பாராட்டியவள், மீண்டும் சொல்லெடுத்து, "அன்ப! நானும் நீயும் ஒருவரையொருவர் நேரில் கண்டு காதல் கொண்டு வாழ்கிறோம் இப்பிறப்பில். இப்பிறப்பிலேயே 'பெண்ணே! நினை இமைப்பொழுதும் பிரியேன்; பிரியின் உயிர் தரியேன்; அறன் அல்லாதன செய்த அறக் கொடியவனும் ஆவேன்' என ஆணையிட்டு என் அன்பைக் கொண்டு இப்பிறவியிலேயே நீ பிற மகளிர்க்கு மணவாளனாகவும் மனந் துணிந்து விட்டனை. உன் உள்ளம் பிற மகளிர்க்கு இடம் அளித்து விட்டது அன்ப! அத்தகைய தவற்றினை என்பால் காண்பது இயலாது; இப்பிறவியில் மட்டும் அன்று; நின் கொடுமையால் நெடிது வாழமாட்டாது மாண்டு மறுமையுற்றால்—அது உறுதி. அம்மறுமையிலும் என் மனநிலை மாறாது. என் மனம் அம்மறுமையிலும் உன்னையே என் கணவனாகக் கொள்ளும்; உன்னைத் தவிர்த்து வேறு எத்தகையவர்க்கும் அது இடம் தராது. இது உறுதி அன்ப! இப்பிறவியில் நீ தவறிவிட்டாய்; அத்தவற்றினை நினைந்து வருந்தி வாழ்விழக்

கவும் துணிந்துவிட்டது என் உள்ளம். இப்பிறவியில் பெற முடியாத ஒன்றை, அது வரும் பிறவியிலாயினும் பெற்றுப் பேரின்பம் பெற விரும்புகிறது; அது வாய்க்க நீ அருள் புரிவாயாக; இப்பிறவியில் பிழை புரிந்ததுபோல், வரும் பிறவியிலும் புரிந்துவிடாது அப்பிறவியிலாவது நீ, என் ஒருத்திக்கே கணவனாக வந்து வாய்ப்பாயாக; ஐயை! கணவனாக வந்து வாய்ப்பது மட்டும் போதாது; கருத்தொருமித்த கணவனாகவும் வேண்டும்; உன் உள்ளத்தில் இடம் பெறுவாள்-உன் நெஞ்சைத் தனக்கே உரித்தாகப் பெறுவாள்-நான் ஒருத்தியே ஆதல் வேண்டும்; அத்தகைய பெரும்பேறு எனக்கு வாய்க்குமாறு நீ பேரருள் புரிதல் வேண்டும்'' என வேண்டிக்கொள்ளும் முகத்தான் அவன் செய்த பெரும் பிழையையும், கணவன் தவறினான் என அறிந்தும் அவன் அன்பைப் பெறத்துடிக்கும் தன் உள்ளத்தின் பேரொழுக்க நிலையையும் தெளிவாக உணர்த்தி அவனைத் தெருட்டினாள்.

தவறு செய்த தன் மகனைக் கடுஞ்சொல் வழங்கிக் கண்டித்து நல்லோன் ஆக்குவதைத் தன் தலையாய கடமையாகக் கொண்ட தாய்போல், கணவன் தவற்றினை, அவன் உள்ளம் உணர்ந்து திருந்துமாறு அன்பு கலந்த வன்சொல்

"அணில் பல் லன்ன கொங்கு முதிர் முண்டகத்து
மணிக் கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப!
இம்மை மாறி மறுமை ஆயினும்
நீ ஆகியர் என் கணவனை;
யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே." [a]

---

[a] குறுந்தொகை: 49. அம்மூவனார்.

கொங்கு-மகரந்தம்; முண்டகம்-முள்ளிச்செடி; மணி-நீலமணி; கேழ்-நிறம்; மாநீர் - கடல்; சேர்ப்ப - கடற்கரைத் தலைவ. ஆகியர் - ஆகுக; நேர்பவள் - ஒத்தவள்; நீ என் கணவனே ஆகுக; நெஞ்சு நேர்பவள் யானே ஆகுக என ஏகாரத்தை ஈரிடத்தும் கொண்டு கூட்டுக.

கவும் துணிந்துவிட்டது என் உள்ளம். இப்பிறவியில் பெற முடியாத ஒன்றை, அது வரும் பிறவியிலாயினும் பெற்றுப் பேரின்பம் பெற விரும்புகிறது; அது வாய்க்க நீ அருள் புரிவாயாக; இப்பிறவியில் பிழை புரிந்ததுபோல், வரும் பிறவியிலும் புரிந்துவிடாது அப்பிறவியிலாவது நீ, என் ஒருத்திக்கே கணவனாக வந்து வாய்ப்பாயாக; ஐய! கணவனாக வந்து வாய்ப்பது மட்டும் போதாது; கருத்தொருமித்த கணவனாகவும் வேண்டும்; உன் உள்ளத்தில் இடம் பெறுவாள்-உன் நெஞ்சைத் தனக்கே உரித்தாகப் பெறுவாள்-நான் ஒருத்தியே ஆதல் வேண்டும்; அத்தகைய பெரும்பேறு எனக்கு வாய்க்குமாறு நீ பேரருள் புரிதல் வேண்டும்'' என வேண்டிக்கொள்ளும் முகத்தான் அவன் செய்த பெரும் பிழையையும், கணவன் தவறுடையன் என அறிந்தும் அவன் அன்பைப் பெறத்துடிக்கும் தன் உள்ளத்தின் பேரொழுக்க நிலையையும் தெளிவாக உணர்த்தி அவனைத் தெருட்டினாள்.

தவறு செய்த தன் மகனைக் கடுஞ்சொல் வழங்கிக் கண்டித்து நல்லோன் ஆக்குவதைத் தன் தலையாய கடமையாகக் கொண்ட தாய்போல், கணவன் தவற்றினை, அவன் உள்ளம் உணர்ந்து திருந்துமாறு அன்பு கலந்த வன்சொல்

"அணில் பல் லன்ன கொங்கு முதிர் முண்டகத்து
மணிக் கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப!
இம்மை மாறி மறுமை ஆயினும்
நீ ஆகியர் என் கணவனை;
யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே." [a]

---

[a] குறுந்தொகை: 49. அம்மூவனார்.

கொங்கு-மகரந்தம்; முண்டகம்-முள்ளிச்செடி; மணி-நீலமணி; கேழ்-நிறம்; மாநீர் - கடல்; சேர்ப்ப - கடற்கரைத் தலைவ. ஆகியர் - ஆகுக; நேர்பவள் - ஒத்தவள்; நீ என் கணவனே ஆகுக! நெஞ்சு நேர்பவள் யானே ஆகுக என ஏகாரத்தை ஈரிடத்தும் கொண்டு கூட்குக.

யாக அணைத்துக்கொண்டிருப்பதால் அக்கணவன் முன்னிலையில் சென்று நிற்க அஞ்சிற்று. அதனால் அவன் புறத்தே சென்றாள்; இன்ப உணர்வைத் தட்டி எழுப்புமாறு அவன் தோளைத் தழுவி நின்றாள். அந்நிலையில் அவர்கள் மெய் மறந்து போயினர்.

கணவனும் மனைவியும் நிலாமுற்றத்திற்குச் சென்றுள்ளனர் என்பதை அறியாமையாலோ, அல்லது அறிந்தும், ஆங்கு அவர்க்கு ஆற்ற வேண்டிய சில பணிகள் இருந்தமையாலோ, ஆங்கு வந்த தோழியும், அவளைத் தொடர்ந்து வந்த பாணனும் அவ்வின்பக் காட்சியைக் கண்டனர். "பிழை புரிந்த கணவன் தன் பிழையுணர்ந்துகொண்டான்; ஆகவே அவன் பிழை பொறுத்து ஏற்றுக்கொள்வதே பண்புடைமையாம்" எனத் தாங்கள் பலகால் அறிவுரை கூறவும் ஏற்றுக் கொள்ள மறுத்து மனத்துயரில் மூழ்கிக் கிடந்தவள், இன்று இளைஞனைத் தழுவி நிற்கும் இக்காட்சியை என்னென்போம்; இத்தகைய பேரன்புடையாளைப் பிரியத் துணிந்த வன்னெஞ்ச வாய்த்தவன் இவன், இப்போதாவது தன் பிழை ஒழிந்து வந்து சேர்ந்தனனே; இவ்விருவரும் பண்டுபோல் மீண்டும் இன்புற்று வாழும் இவ்வின்பக் காட்சியைக் காண நம் உள்ளம் எவ்வளவு துடித்தது; நாம் அதற்கு எத்துணைப் பாடுபட்டோம்; அது இன்று வாய்த்தது; பண்புமிக்க பெரு வாழ்வு பெற்றுவிட்டனர் இவர்கள்; வாழ்க இவ்வின்பச் சூழ்நிலை" எனத் தம் உள்ளம் வாழ்த்த, விழித்த விழி இமைக்காது சிறிது இருந்து நோக்கி இன்புற்றனர்.

"கண்டிசின் பாண! பண்புடைத்து அம்ம;
மாலை விரிந்த பசுவெண் ணிலவில்,
குறுங்கால் கட்டில் நறும் பூஞ்சேக்கைப்
பள்ளி யானையின் உயிர்த்தனன், நசையின்
புதல்வன் தழீஇயினன் விறலவன்;
புதல்வன்தாய் அவன்புறம் கவைஇயினளே" [a]

---

[a] குறுந்தொகை : 359. பேயனார்.

## புகழ் நாணுவார் பழிக்கப் பொறுப்பரோ?

காதலனும் காதலியும் மகிழ்ந்து நிற்கும் அக்காட்சியைக் கண்டு, கணவன் பிழையே புரியினும், அவனைக் கடிந்துரைத்துக் கலங்க விடாது கட்டித் தழுவும் அவள் கற்பின் கடவுட்டன்மையை உணர்ந்து அத்தோழி மகிழ்ந்தாள். மகிழ்ந்த அப்பெண்ணின் திறம் கண்டு மகிழ்ந்தவாறே மீண்டும் அத்தோழி உள்ளம், 'பார்த்தவர் அனைவரும் வியந்து பாராட்டிய என் பேரழகைப் பாழாக்கியவன்; இறுகச் செறித்த என் கைவளைகள் தாமே கழன்று ஓடுமாறு என் தோள்களை மெலிவித்தவன்' என்றெல்லாம் கணவனின் கொடுமை கூறிக் கண்ணீர்விட்டுக் கலங்கி அழுத இவள்—'நயந்து மணந்து கொண்டவளை நலியப் பண்ணிய நனிமிகக் கொடியோனுடைய இவன் நாடு, இவன் கொடுமையால் நலம் இழந்து அழிந்துவிடவில்லையே! மலை வளம் போலும் பல்வகை வளங்கள் அவன் நாட்டிலும் மண்டிக் கிடக்கின்றனவே! என்னே இவ் வியற்கையின் இயல்பு!" என அவனைப் பழி தூற்றிக் கிடந்த இவள்—'பரத்தைபால் கொண்ட புதிய உறவு புளித்துப் போய்ப் பழையபடியே மீண்டும் இவண் வரும் நிலை ஒருகால் வாய்க்குமாயின், வருவான் முகத்தையும் பாரேன்; வந்த வழியே திரும்பிச் செல்லுமாறு துரத்தியடிப்பேன்' என்றெல்லாம் வஞ்சினம் உரைத்த இவள் கணவனைக் கண்டதுமே கண் ஒளி காட்ட, முகம் மலர எதிர் சென்று வரவேற்று வாயினித்து நிற்கும் நிலையை என்னென்பது" என எண்ணி எண்ணி வியப்புக் கடலில் வீழ்ந்தது. "என்ன பெண் இவள்; இத்தகையாளுக்கு ஏன் அத்தனை வீறாப்பு? நான் அப்போது கூறிய ஆறுதல் உரை எதையும் ஏற்க மறுத்தனளே; அறிவுரை வழங்கி அடங்கியிருக்குமாறு கூறிய என்னை அவ்வப்

---

கண்டிசின்—காண்பாயாக; சேக்கை—படுக்கை; உயிர்த்தனன்—பெருமூச்சு விட்டான்; நசையின்—விருப்பத்தால்; விறலவன்—வெற்றிச் செல்வம் மிக்கவன்; முயங்கினள்—தழுவினள்.

"அறியாதவள், காதல் நோயின் கொடுமையைக் காணாத வள்' என்றெல்லாம் பழித்தாளே. அப்போது அத்துணை வெறுப்புள்ளம் கொண்டு விளங்கியவள், வந்த கணவன் முன் நின்று அவன் கொடுமையை எடுத்துக்கூற ஒரு முறையாவது வாய் திறக்க வேண்டுமே; அதுதானே இல்லை. ஆகட்டும் காலையில், அவள் இருவகை ஒழுக்கத்தையும் எடுத்துக் கூறி எள்ளி நகையாடுவேன்" என்ற எண்ணங்கள் எழ இறங்கிச் சென்றாள்.

பொழுது புலர்ந்தது; கணவன் மீண்டு வந்து விட்டான் என்ற இன்ப நினைவுகளால் எழுந்த அகமலர்ச்சியால் பெற்ற முகப்பொலிவோடு மனைப்புறத்தே வந்து நின்ற அப்பெண்ணைத் தோழி அணுகினாள். "பெண்ணே பரத்தையர் உறவால் ஒழுக்கங் கெட்டுத் திரிந்தவன் உன் கணவன்; அந்நினைவால் நீ உடலும் உள்ளமும் நனிமிகத் தளர்ந்துவிட்டாய் என அறிந்தும், வந்து அன்பு காட்ட நினையாது அப்பரத்தையர், இல்லத்திலேயே அறிவு மயங்கி வீழ்ந்து கிடந்தவன் உன் கணவன்; அத்தகைய கொடியவனை இவன், இன்று வந்தால், வந்தவனை வாயிற் புறத்திலேயே நிற்க வைத்து, வழுக்கி வீழ்ந்த அவன் ஒழுக்க கேட்டை ஊரார் அறியப் பண்ணி அவனை அலைக்கழிக்க வேண்டாவோ? அவனை வாயிற் புறத்தில் கண்டாயோ இல்லையோ, இன்முகம் காட்டி அவனை வரவேற்று வழிபாடாற்ற முற்பட்டுவிட்டனையே; அவன் கொடுமை குறித்த வார்த்தை ஒன்றுகூட வெளிப்பட்டிலதே; என்னே உன் பேதைமை!" எனக் கூறி எள்ளி நகையாடினாள்.

எள்ளிக் கூறிய தோழியின் சொற்களைக் கேட்டாள் அப்பெண்; ஆனால் அதுகுறித்து அவள் சிறிதும் கவலை கொண்டிலள். கணவன் தகாதவொழுக்கம் கண்டு தன்னினும் மிகுதியாகக் கலங்கியவள் இத்தோழி; அவன் அவ்வொழுக்கக்கேட்டினின்றும் மீளத் தன்னால் ஆன அனைத்தையும் செய்து தோற்றுச் சோர்ந்தவள் இவள்; அதனால்தான் உற்றதுயரைத் தன்னோடு ஒருங்கிருந்து அடைந்தவள்; தன்

துயர் தீர்த்துத் தன்னை வாழ்விக்கும் வழிகாண மாட்டாமையால் விழிநீர் சோர வருந்தியவள்; அதனால் இளைஞனைப் பழிக்கவும், அவன் கொடுமை கண்டு நாணாது அவனை ஏற்றுக் கொண்ட தன்னைக் கடிந்துரைக்கவும் இவளுக்கு உரிமை உண்டு என உணர்ந்ததால், அப்பெண் வன்சொல் வழங்கிய அத்தோழிபால் சினங்கொண்டிலள். அதனால், தன்னைக் கடிந்துரைத்த தோழியை அன்போடு தழுவிக்கொண்டாள். “தோழி! என் அறியாமை கண்டு வருந்தாதே; என் காதலன் உள்ளம் எத்துணை மென்மைவாய்ந்தது என்பதை நீ அறியாய்; அதை அறிவேன்; சான்றாண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் அவர் சிறந்த உள்ளம், தன்னைப் பிறர் பாராட்டக் காணின், அப்பாராட்டுரை அவர் வாயினின்றும் வெளிப் படுவதற்கு முன்பே நாணித் தலை கவிழ்ந்துவிடும், அத்துணை மென்மை வாய்ந்தது அவர் நல் உள்ளம். என்னை ஊரும் உலகமும் ஒருங்கே பாராட்டாதா என எவரும் விரும்பும் இயல்புடையதாய் பாராட்டினைக் கேட்கவும் நாணுவர் என்றால், அவரை, அவர் முன்னர், அவரை மணந்துகொண்ட மனைவியே பழிதூற்றுவளாயின், அவ்வுள்ளம் உடைந்து, அவர் உயிரிழந்து போகாரோ? தோழி! இந்நிலையை ஆராய்ந்து பார்; என்பால் கொண்ட அன்பின் மிகுதியால் நீ அதை எண்ணிப் பார்த்திலை; அதனால் அது உனக்குப் புலனாகவில்லை; அதை நான் உணர்ந்திருந்ததினாலேயே, அகத்தில் துயர் துடிக்கினும், முகம் மலர வரவேற்றுப் புகழ்ந்து பாராட்டிப் பேரின்பம் அளித்தேன். ஆகவே, என்செயல் கண்டு எள்ளி நகையாடுவதோ, என் அறியாமை கண்டு வருந்துவதோ வேண்டாம்; என் கற்பு நெறி வாழ, வாழ்த்தி வழித்துணை புரிவாயாக” என வேண்டிக்கொண்டாள். அவளும் வாழ்த்தினாள்! அவர்கள் வாழ்க்கையும் வனப்பும் வளமும் பெற்று விளங்கிற்று. வாழ்க அவர் வளமார் வாழ்க்கை.

“நெடிய திரண்ட தோள்வளை ஞெகிழ்த்த
கொடியன் ஆகிய குன்றுகெழு நாடன்

வருவதோர் காலை இன்முகம் திரியாது
கடவுட் கற்பின் அவன் எதிர் பேணி,
மடவை; மன்ற; நீ எனக் கடவுபு
துனியல்; வாழி தோழி! சான்றோர்
புகழும் முன்னர் நாணுப
பழியாங்கு நல்பவோ? காணுங்காலே." a

a குறுந்தொகை : 252. கிடங்கிற்குலபதி நக்கண்ணனார்.

ஒருசிழ்த்த—அழலப்பண்ணிய; குன்றுகெழு—மலைவளம் பொருந்திய; கற்பின்— கற்பினால்; மன்ற—உறுதியாக; கடவுபு—கடுஞ்சொல் கூறி; துனியல் —வருந்தாதே; நல்பவோ; பொறுப்பரோ? காணுங்கால்—ஆராய்ந்து நோக்கினால்.

(முற்றும்)